16-4-2007

தமிழ்நாடு ... பகம் 29 ... சென்னை-600 008 எழும்பூர்

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 219-254

**தகவல் கோரல்—**

(அ) திருச்செந்தூர் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் யாகங்கள் நடத்தக் கட்டுப்பாடு மற்றும் வழிபாட்டுக் கட்டண உயர்வு 255-261

திரு அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் 255-257,261

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் 258-261

(ஆ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு 268-270

(இ) உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரா. விசுவநாதன், சி.வி. சண்முகம் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல் 270-279, 337-347

**கவன ஈர்ப்பு—**

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், கதவம்பட்டி கிராமத்தில் காலரா நோயால் பெண் இறந்தது 261-268

**அறிவிப்புகள்—**

(அ) கவன ஈர்ப்பைப் பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளுதல் 268

1103
09-01-08

வெளியீடு : 29-8-2007 Issued : 29-8-2007

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
29
சென்னை-600 008
எழும்பூர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES OFFICIAL REPORT

DIGITIZED

திங்கட்கிழமை, ஏப்ரல் 16, 2007—தொகுதி 28—எண் 2

**Monday the 16th April, 2007—Volume 28—No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

227656

பக்கங்கள்

**4. அறிவிப்புகள்**—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு காமன்வெல்த் பாராளுமன்ற சங்கப் பொதுக் குழுக் கூட்டம் — 268

(இ) பேரவை அலுவலில் மாற்றம் — 411-412

**5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 24 —சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 41 — வருவாய்த் துறை — 280-337, 347-411, 412-429

(இ) கோரிக்கை எண் 51 — இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

* மாண்புமிகு திரு. இ. பெரியசாமி — 280,297-298, 320,347-348, 353,357, 412-426

* திரு. கோ. அரி — 292,307, 348-360

* திரு. கூ.ந. சேகரன் — 360, 364-365

திரு. மா. தண்டபாணி — 297,311,324, 374-385

திரு. வீ.ஏ.டி. கலியவரதன் — 385-393

திரு. வே. மாரிமுத்து — 288,318,330, 394-397



பக்கங்கள்

**5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

திரு. தி. இராமசாமி — 334,397-401

திரு. கு. செல்வம் — 401-405

* திருமதி டி. யசோதா — 355,405-411

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 430

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 3, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 16, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை*
*ஆராய்வான் செய்க வினை."*

*வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்.*

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா எண் 61. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

**61—**

### துணை மின் நிலையம்

***488—திரு. டி. செங்குட்டுவன்:**

*மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனபள்ளி, மகாராஜாகடை, இராயகோட்டை மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் மிகவும் குறைவான*

மின்னழுத்தம் உள்ளதால், உயர் மின்னழுத்தம் கொண்ட துணை மின் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனபள்ளி, மகாராஜாகடை, இராயகோட்டை மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் நிலவிவரும் குறைந்த மின்னழுத்தத்தைப் போக்க 1. சின்னகொத்தூர் 2. மேக்கலசின்னம்பள்ளி ஆகிய பகுதிகளில் 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், 11-வது ஐந்தாண்டு பெருந்திட்டக் காலப் பகுதியில் மேற்சொன்ன துணை மின் நிலையங்கள் அமைத்திட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனபள்ளி, மகாராஜாகடை, இராயகோட்டை பகுதிகளில் குறைந்த மின்னழுத்தத்தின் காரணமாக விவசாயிகள் படுகின்ற இன்னல்களை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு சென்ற காரணத்தினால் அந்தப் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான உத்தரவுகளை வழங்கினார்கள். அதற்குண்டான நிலங்களையெல்லாம் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை அழைத்துச்சென்று, அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான இடத்தையெல்லாம் தேர்வு செய்து, அந்தத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. பணி எப்போது முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து நேரிலே என்னிடத்திலே பேசியிருக்கிறார். நிலங்கள் ஒப்[illegible] காரணத்தால், மே மாதம் முதல் வாரத்திலே

227656



அந்தப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்படும். அதற்கிடையில் அந்தப் பகுதியில் மின்னழுத்தத் தாழ்வு ஏற்படக்கூடாது என்பதற்காக இப்போது புதியதாக இராயகோட்டைப் பகுதிக்கு அருகில் உள்ள உத்தனபள்ளியில் ஏற்கெனவே அமைந்துள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை, 8 கோடியே 42 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் 110/33-11 கி.வோ. துணை மின் நிலையமாக அமைப்பதற்கான திட்டம் ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டு 2006-2007-லிருந்து அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப் :**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட குழித்துறையில் துணை மின் நிலையம் அமைக்க சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், இதுவரையிலும் அந்தப் பணி தொடங்கப்படவில்லை. தற்போது அதற்குரிய நில ஆர்ஜிதப் பணி முடிவுற்றதாக அறிகிறேன். அதுபோல நடைக்காவிலும் கடந்த பட்ஜெட்மூலமாக ஒரு துணை மின் நிலையம் அறிவிக்கப்பட்டது. அந்தப் பணியும் இன்னும் தொடங்கப்படவில்லை. ஆகவே, இந்த இரண்டு துணை மின் நிலையங்களை அமைக்கும் பணிகளும் உடனே தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெல்லாம் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு மின் வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடங்களில் எல்லாம் கிட்டத்தட்ட 325 துணை மின் நிலையங்கள் இந்த ஆட்சியிலே அமைப்பதற்காக திட்டம் தீட்டப்பட்டு, அதற்கான நிதியும் இப்போது தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருக்கிறது. எனவே, அந்தப் பணிகள் உடனடியாகத் தொடங்கப்படும்.

அதைச் சரி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்திலே இருக்கக்கூடிய மின்சாரத் தட்டுப்பாடு குறித்து இந்த அரசாங்கம் நன்றாக அறியும். அந்தப் பிரச்சினையைப் போக்குவதற்காக, இன்று காலையிலேகூட சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்திலே ஒரு மணி நேரம் பேசி, உடனடியாக சிவகங்கை மாவட்டத்தின்மீது கவனம் செலுத்த வேண்டுமென்றும், தேவையான அளவிற்கு துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறேன். இன்றுமுதல் தட்டுப்பாடு இல்லாத மின்சாரம் கிடைப்பதற்கு மின் வாரிய அதிகாரிகள் குறிப்பாக, Member (Distribution) அவர்கள், நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முகையூர் தொகுதியில் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்றது. அதுவும் மணலூர்பேட்டைப் பகுதியில் அதிக மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்றது. எனவே, மணலூர்பேட்டையில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகின்ற காரணத்தினாலேயே அங்கெல்லாம் துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மின் தட்டுப்பாடு ஏன் ஏற்படுகிறது என்றால், பல இடங்களில் புதிய transformers பொருத்தப்படவில்லை. அதனாலே, மின் தட்டுப்பாடு சில இடங்களில் அரை மணி நேரம் வரையிலே ஏற்படுகிறது. அதை இன்னும் ஓரிரு நாட்களிலேகூட சரி செய்து, மின் தட்டுப்பாடே இல்லாத அளவிற்கு கொண்டு வருவதற்கு மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. நான் ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டதைப்போல மார்ச் 15 ஆம் தேதியிலிருந்து மே மாதம்



15 ஆம் தேதி வரையில் நமக்கு காற்றாலைகள்மூலமாகக் கிடைக்க வேண்டிய மின்சாரம் கிடைக்காத காரணத்தினால்தான், இந்தத் தட்டுப்பாடுகூட இருக்கிறது. இப்பொழுது ஓரளவுக்கு காற்று வீச ஆரம்பித்திருக்கிறது. ஐந்து மாவட்டங்களில் மழையும் பெய்ய ஆரம்பித்திருக்கிறது. இந்தத் தட்டுப்பாடு இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக முழுமையாக நீங்கிவிடும். அது நீங்கியதற்குப் பிறகு எங்கேயாவது துணை மின் நிலையம் அவசியம் என்று கருதினால், அங்கே மின்சார வாரியம், துணை மின் நிலையத்தை அமைத்துத் தரும்.

முற்பகல் 9–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**62—**

## வேளாண்மைப் பல்கலைக்கழகம்

***5685—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறையில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆடுதுறையில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான நடவடிக்கை இல்லை. ஆனால், ஆடுதுறையில் வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர், அண்ணன் கோ.சி. மணி அவர்கள் ஒரு வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றதா என்று பல்கலைக்கழகத்திடம் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. சாதகமான பதில் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி, அவர்கள் கருத்தைப் பெற்று அதன்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று இந்தத் துறை கருதிக்கொண்டிருக்கிறது.

[2007 ஏப்ரல் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.*

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்தை நம்பி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். தற்பொழுது படித்த இளைஞர்களின் நலன் கருதி, திருவிடைமருதூர் தொகுதியில், ஆடுதுறையில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு முன்வருமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) கேள்வி கேட்டு, அதற்குத்தான் பதில் சொல்லிவிட்டாரே?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மூலக் கேள்விக்குத்தான் நான் பதில் சொன்னேன். வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லை. ஆனால், ஆடுதுறையில் வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதுபற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**63—**

## கால்வாய்த் திட்டம்

***1621—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*58 ஆம் கிராமக் கால்வாய்த் திட்டத்தை விரைவில் முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2006–2007 ஆம் ஆண்டு இத்திட்டப் பணிகளுக்காக ரூபாய் 20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டிற்குள் திட்டப் பணிகளை முடிக்கும் வகையில், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2007 ஏப்ரல் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.*

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகேயுள்ள வைகை அணை 1958-ல் கட்டப்பட்டது. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு பாசன வசதிக்காகவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காகவும் அந்த அணை கட்டப்பட்டது. அந்த அணை கட்டப்பட்டபொழுது, உசிலம்பட்டி தாலுகாவில் சில கிராமங்களும், வத்தலகுண்டு தாலுகாவிலேயுள்ள, நிலக்கோட்டை தாலுகாவிலேயுள்ள சில கிராமங்களும் வைகை அணையின்மூலமாகப் பாசனம் பெற இயலவில்லை. அதற்காக 1996 ஆம் ஆண்டு ரூபாய் 37 கோடி செலவில் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் நிறைவேறவில்லை. அதை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியை ஒட்டியிருக்கின்ற சீர்மரபின மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியினுடைய மேம்பாட்டிற்காக 1996 ஆம் ஆண்டு ஆட்சியிலே அமர்ந்த கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொடுத்தார்கள். வைகை அணையிலே மிகையாக வருகிற நீரை, கால்வாய் வெட்டி, அதன்மூலமாக 29 கண்மாய்களில் நிரப்பி, நிலக்கோட்டை பகுதியிலே இரண்டு கண்மாய்களைப் புதிதாக உருவாக்கி அந்தப் பகுதிக்கும் நீரைக் கொடுத்து, 29 கண்மாய்களில் தண்ணீர் நிரப்பி, வறண்ட பகுதியை வளமாக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்தத் திட்டத்தை உருவாக்கினார்கள். அது உருவாக்கப்பட்டு, 1991 ஆம் ஆண்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரிய பிறகு, வேலைகள் நடக்க ஆரம்பித்தது. பிறகு, கழக ஆட்சி இல்லை. ஐந்து ஆண்டுகாலம் இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் கழக ஆட்சி வந்த பிறகுதான், கலைஞர் அவர்கள் இப்பொழுது மீண்டும் 20 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆனால், இடையிலே R.E. (Revised Estimate) கேட்டு அங்கிருந்து கருத்துரு அனுப்பப்பட்டது.

[2007 ஏப்ரல் 16

காரணம், திட்டத்தை உருவாக்குகின்றபோது சில இடங்களில் எதிர்பாராத காரணத்தினால் அதனுடைய செலவிலே மிகைத் தொகை வரும். அவற்றுக்கு எல்லாம் திருத்திய மதிப்பீடு அனுப்பப்படும். அப்படித் திருத்திய மதிப்பீட்டை 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அனுப்பினார்கள். ஏன் காலதாமதம் என்று கேட்டாரே அதற்காகச் சொல்கிறேன். 2002 ஆம் ஆண்டு ஜனவரியில் அனுப்பப்பட்ட திருத்திய மதிப்பீட்டுக்கு 2006 மார்ச்சில்தான் ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனவேதான், அதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. மதுரையிலே நிருபர்கள் கூட்டத்திலேகூட முதல்வரைக் கேட்டார்கள், எப்பொழுது முடியும் என்று. அப்போதுதான் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே, தனிக் கவனம் செலுத்தி 2008–க்குள் இந்தத் திட்டத்தை முடிக்க அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 58 ஆம் கிராமக் கால்வாய்த் திட்டமும், 18 ஆம் கால்வாய்த் திட்டமும் விரைவில் நிறைவேறினால், முல்லைபெரியாறு தண்ணீரைச் சேமித்து வைப்பதற்கு இது பெரும் உதவியாக இருக்கும். நான் கேள்விப்பட்டவரைக்கும் இந்தக் காலதாமதத்திற்கு முக்கியமான காரணம், நில இழப்பீட்டாளர்களுக்கு உரிய தொகை கிடைக்காமல், தற்போதுள்ள மார்கெட் வேல்யூ அதிகமாக இருப்பதால் மேலும் கையகப்படுத்த வேண்டிய நிலங்களைக் கையகப்படுத்த முடியாமல் போனதுதான். அதைப்போல, தொடர்ந்து அங்கு பணியாற்றும் அதிகாரிகளின் மெத்தனப் போக்கும் ஒரு காரணம். அதேபோல, வட மாநிலங்களில் ஒரு மரம் வெட்டப்பட்டால் 6 ஆயிரம் முதல் 22 ஆயிரம் ரூபாய் வரைக்கும் இழப்பீடுகளைத் தருகின்ற வேளையில், தமிழ்நாட்டில் தென்னை மரங்களுக்கு வெறும் 500 ரூபாய்தான் தருகின்றார்கள். இவையெல்லாம் அந்தக் காலதாமதத்திற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். துணைக் கேள்வி என்ன உண்டோ அதைக் கேளுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** கேள்விக்கு வந்துவிட்டேன். இந்தக் காரணங்களால் காலதாமதம் ஆகின்றது. ஆகவே, இந்தக் காலதாமதத்திற்கு நீங்கள் காரணம் கண்டறிந்து இந்தத் திட்டத்தை



2007 ஏப்ரல் 16]

2008–க்குள் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமாக நான் இதற்கு விளக்கமான ஒரு விடையைத் தர வேண்டும். இது கேள்வி நேரம். ஏன் காலதாமதம் என்கிறார். அதற்குத்தான் நான் தெரிவித்திருந்தேன். நில எடுப்பில் அல்லது போடுகிற அந்தப் பிளானில் மாறுதல் இருந்தால் இவற்றுக்கெல்லாம் பணம் அதிகம் ஆகும். ஆண்டுக்காண்டு Schedule of Rates-ல் increase வரும். ஆகையினால்தான், அவற்றுக்கெல்லாம் சேர்த்துத்தான் Revised Estimate கேட்பார்கள். அரசாங்கம் உடனுக்குடன் Revised Estimate கொடுத்துக்கொண்டிருந்தால் பணிகள் வேகமாக நடக்கும். 2002–ல் கேட்டதற்கு 2006–ல் நான்கு வருடம் கழித்து Revised Estimate நிதி கொடுத்தால் பணி அப்படியேதான் நான்கு வருடங்கள் தேங்கி இருக்கும். இதெல்லாம் என்னுடைய இலாகா மானியத்திலே பேசியபோது கேட்டிருந்தால் தெரியும்.

அவர் சொன்னார், 18 ஆம் கால்வாய்த் திட்டத்தைப்பற்றி. அதுவும் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தீட்டியது. பைரவனாறு அணைக்கட்டிலிருந்து நீர் எடுத்து கம்பத்திற்கு மேற்கே போய், உத்தமபாளையத்தைத் தாண்டிச் சென்று பிறகு அப்படியே கோம்பைக்குப் போய், பண்ணைபுரத்திற்குப் போய், பிறகு அதைக்கொண்டுபோய் பெட்டிபுரத்திலே சேர்க்க வேண்டும். அந்தத் திட்டத்தை முதல்வர் எதற்காகக் கொண்டு வந்தார்? அந்தப் பகுதி மிகவும் வறட்சியானது என்பதால் கொண்டு வந்தார். அங்கே நில எடுப்பிலே சில தகராறுகள் இருந்தன. வளர்ந்து வந்த 58 மரங்களை— அதுவும் தானாக வளர்ந்த மரங்கள்; யாரும் வைத்த மரங்கள் அல்ல— அந்த 58 மரங்களை எடுக்கக்கூடாது என்று வனத் துறையினர், உச்ச நீதிமன்றம் வரையிலே சென்று, இன்று வழக்கு அங்கே இருந்துகொண்டிருக்கிறது. அதை விரைவுபடுத்தவில்லை. ஆகையினாலே, இப்படிப் பல சங்கடங்கள் உருவான காரணத்தால்தான் இந்த இரண்டு திட்டங்களும் நொண்டிக் கொண்டு இருக்கின்றன. முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த இரண்டு திட்டங்களிலும் தனிக் கவனம் செலுத்தும்படி, எனக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, இதில் தனிக் கவனம் செலுத்தி எவ்வளவு விரைவாக இந்தத் திட்டங்களை முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதிக்குட்பட்ட 18 ஆம் கால்வாய்த் திட்டத்திற்காக அந்த மரங்களை வெட்டுவதற்கு Empowered Committee மூலமாக கடந்த மூன்றாம் தேதி, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கியும் அங்கே தற்போது வேலையைப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள் தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 18 ஆம் கால்வாய்த் திட்டத்தை விரைவாக முடிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மரம் எடுப்பது ஒன்று. நில உரிமையாளர்கள் எடுக்கக்கூடாது என்கிறார்கள். பொதுப் பணித் துறையிலே இருக்கிற பெரிய சங்கடமே இதுதான். எங்கள் ஊருக்குத் திட்டம் வேண்டும்; கால்வாய் வேண்டும் என்கிறார்கள். கால்வாய் கொடுத்த உடனே, எங்கள் ஊரிலே கால்வாய் வெட்டக்கூடாது, எங்களுடைய நிலத்தை வெட்டக்கூடாது என்கிறார்கள். எதிர்ப்பு தெரிவிக்கிறார்களே என்று கால்வாயைக் கொஞ்சம் திருப்பி வெட்டிக் கொண்டு போனால், estimate அதிகமாகிறது. அடுத்த ஊர்க்காரர்கள் எங்கள் ஊரிலே வெட்டக் கூடாது என்கிறார்கள். ஆகையினாலே, இதிலேயே காலதாமதம் ஆகிவிடுகின்றது. எனவே, பொதுப் பணித் துறை நினைப்பது என்னவென்றால், இனிமேல் வனத் துறையினுடைய objection இல்லாமல், யாரும் நிலம் கொடுக்க objection செய்யவில்லை என்றால்தான் பணியை எடுக்கலாம். அப்போதுதான் வேலை வேகமாக முடியும். இப்போதுகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே கன்னடியன் கால்வாயிலிருந்து நீர் கொண்டுவர ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஏராளமான நிலங்களை எடுக்க வேண்டியிருக்கும். அதைத்தான் அன்றைக்கே சொன்னேன். அந்தத் தொகுதிக்குட்பட்ட எம்.எல்.ஏ.-க்கள் அந்த நிலங்களை வாங்கிக் கொடுத்தால்தான் குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தப் பணிகள் செய்யப்படும். எனவே, இதில் சட்டமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 58 ஆம் கிராமக் கால்வாய்த் திட்டம் 2008-க்குள் வெட்டி முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வைகை அணையிலிருந்து புதிதாகக் கால்வாய் வெட்டும் அந்த 58 ஆம் கால்வாய்த் திட்டம் பல ஆண்டுக் காலமாக நடந்துகொண்டிருக்கிறது. 58 ஆம் கால்வாய் வெட்டி அமைத்தால் மட்டும் அந்தப் பகுதிக்கு தண்ணீர் போய்ச் சேராது. அங்கே இருக்கின்ற வைகை அணையையும் ஆழப்படுத்தி தூர் வாரினால்தான் அந்தப் பகுதிக்கும், மதுரை மாவட்டத்திற்கும் தண்ணீர் போய்ச்சேரும். ஆகையால், இந்த ஆண்டு வைகை அணையைத் தூர் வாரி அரசு ஆழப்படுத்துமா என்று தங்கள்மூலமாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையினுடைய நீர் அளவு 71 அடி என்றால், அதற்கு மேலேதான் மதகு வைத்து தண்ணீர் எடுக்கிறோம். வைகை அணை நிரம்பி, மிகையாக வெளியிலே போகிற நீரைத்தான் தனியாக ஒரு மதகு வைத்து அதிலிருந்து எடுத்துக்கொள்கிறோம். ஆகையினால், silt form ஆவதற்கும், மேலே தண்ணீர் வருவதற்கும் சம்பந்தம் இல்லை. Silt வாரப்படுமா என்று கேட்கிறார். பெரும்பகுதி அணையிலே மதகை அடியிலே திறக்கிறபோது வருகிற மண், அதோடு அடித்துக்கொண்டுதான் வேகமாகப் போகும். ஆகையினாலே, அணைப் பகுதியிலே இருக்கிற மண்ணை எடுக்க ஆரம்பித்தால், அதில் ஒரு அணை கட்டலாம். எப்பொழுதுமே அணையினுடைய தத்துவமே, ஆற்றுப் போக்கில் இருக்கிற மதகைத் திறந்தால் அடியிலே படிந்திருக்கிற வண்டல் மண் அதோடு சேர்ந்து போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**64—** [2007 ஏப்ரல் 16

## ஒலி—ஒளிக் காட்சி

***20902—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் சுற்றுலாத் துறை சார்பாக நந்தவனத்தில் பூங்கா அமைக்கவும், ஆயிரம்கால் மண்டபத்தில் ஒலி—ஒளிக் காட்சி அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் சுற்றுலாத் துறையின் பராமரிப்பில் இல்லை. எனவே, அருள்மிகு நெல்லையப்பர் ஆலய வளாகத்தில் பூங்கா அமைக்கும் திட்டமும், ஒலி—ஒளிக் காட்சி அமைக்கும் திட்டமும் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மாலைராஜா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரில் சுப்பையார் குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது. கடந்த ஆட்சியில் சுற்றுலாத் துறையின் சார்பில் அங்கே படகு விடுவதாகச் சொல்லி அதற்காக நிதி ஒதுக்கி எந்தப் பணியும் செய்யாமல் அரைகுறையாக விட்டுச் சென்றுவிட்டார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தக்கூடிய அந்தக் குளத்தில் தற்போது சுற்றுலாத் துறையின் சார்பாக அங்கே அந்தப் பணிகள் நடைபெறுவதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எந்த அளவில் இருக்கிறது? எப்பொழுது அந்தப் பணிகள் முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர்மூலம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 16]

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று எண்ணி, அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அங்கு மட்டுமல்ல, அனைத்துப் பகுதிகளிலும் கடந்த காலத்தில், முந்தைய அரசாங்கம் இதுபோன்ற நிதிகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதற்குச் சான்றாக, நெல்லை மாவட்டத்தின் பல்வேறு பணிகள் குறித்து அவர்கள் முறையாக மத்திய அரசாங்கத்திற்கு Utilisation Certificate கொடுக்காத காரணத்தால், நிதிகள் திருப்பி அனுப்பப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதுபோன்று இல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த சுப்பையார் குளத்தில் எதிர்பார்க்கக்கூடிய பணிகளை சுற்றுலாத் துறையின்மூலமாக நிச்சயமாக நிறைவேற்றித் தருவோம் என்று கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

**திரு. அ. சின்னசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி, கைலாசகிரி ஊராட்சியிலுள்ள சுப்பிரமணியசாமி மலைக் கோயிலுக்கும், மிட்டாளம் ஊராட்சியிலுள்ள ஊட்லு பகுதியிலே இருக்கின்ற கோயில்களுக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு மாதமும் வந்து செல்கின்றார்கள். இந்த மக்களுடைய பயனைக் கருதி, இந்தப் பகுதியிலே பயணியர் விடுதியும், பூங்காக்களும் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணியர் விடுதியைப் பொறுத்தமட்டிலும், இந்தத் துறையின் சார்பாக புதிதாகக் கட்ட வேண்டுமென்ற குறிக்கோள் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தைக் கருத்தில்கொண்டு, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களிடத்திலே கேட்டு நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்திலே ஒலி—ஒளிக் காட்சி அமைக்கப்படும் என அரசு அறிவித்து பல ஆண்டுகளாகி இருக்கிறது. இதுவரையிலே அது ஆரம்பிக்கப்படவில்லை. இந்த ஆண்டு நம்முடைய சுற்றுலாத் துறை, ஒலி—ஒளிக் காட்சி அமைக்க முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்திலுள்ள புராதன நினைவுச் சின்னங்களைப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகள் அவற்றின் வரலாற்றுச் சிறப்புகளைச் சரியாக அறிந்துகொள்ளும் வகையில் பதிவு செய்து ஒலிபரப்பப்படும் ஒலி வழிகாட்டி (Audio Guide) வசதியை எல்காட் நிறுவனம்மூலம் அமைக்க சுற்றுலாத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

*முற்பகல் 9—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**65—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***5854—திரு. த.அ. மேகநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, நாகரசம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தில் நாகரசம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே ஒரு



ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், அக்கிராமத்தில் மேலும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகரசம்பட்டி கிராமத்தில் போதிய டாக்டர்கள் இல்லை எனவும், போதிய நர்ஸ்கள் இல்லை எனவும், போதிய கட்டட வசதி இல்லை எனவும் அப்பகுதி பொது மக்கள் கூறி வருகிறார்கள். எனவே, அங்கு எத்தனை டாக்டர்கள், நர்ஸ்கள் செயல்படுகிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகரசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது இரண்டு டாக்டர்கள், ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர்; செவிலியர்கள் 3 பேர், ANM ஒருவர், மருந்தாளுநர் ஒருவர், அடிப்படை ஊழியர்கள் இருவர் என இத்தனை பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர், upgraded PHC—ஐக் கேட்கிறார் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிறைய சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக, அந்தச் சுகாதார நிலையங்கள் எல்லாம் துணை சுகாதார நிலையங்களாக இருந்து வருகின்றன. அதுவும் கிராமப்புறங்களில் இயங்கி வருகின்றன. எனவே, அதனை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கு அரசிடம் ஏதாவது உத்தேசம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியதைப்போல, upgraded PHC கேட்கிறார்கள். அரசு தகுந்த முறையில் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று அரசு கொள்கை முடிவாக வைத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அந்தவகையிலே, எங்களுடைய மேட்டூர் தொகுதியிலே, 30,000–க்கும் மேற்பட்ட மக்கள்தொகை உள்ள பகுதிகளில் இரண்டு இடங்களில் அமைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதில் ஒன்று, வனவாசி பேரூராட்சி. அது நெசவாளர்கள் நிறைந்த பகுதி, சுற்றிலும் உள்ள கிராமங்களிலே விவசாயிகள் வாழக்கூடிய பகுதி. ஆகவே, அதற்குப் பொருத்தமான தகுதிகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தாலே, அந்த வனவாசிப் பகுதியிலே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா? இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையமும் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறது; அதை அரசு நடைமுறைப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற P.H.C-கள், 15 வருட காலத்திற்கு முன்பாக எடுத்த சென்சஸ்படி அமைந்த P.H.C-கள். இப்போது இருக்கிற கணக்கு 15 வருடத்திற்கு முந்தைய கணக்கு. இப்போது 2001 சென்சஸ்படி மத்திய அரசாங்கத்திடம் 178 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 900 துணை சுகாதார நிலையங்கள் வேண்டுமென்று கேட்கிறோம். இந்த population 30,000 என்ற விதி வரும்போது, பழைய population–ஐவிட, இப்போது population நெருக்கம் வருகிற நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல இயற்கையாகவே சுகாதார நிலையம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி கிடைத்தவுடன் தகுந்த முறையிலே பரிசீலித்து, வேண்டியதைச் செய்து கொடுப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.





**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கோதநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் மிகப் பழமையான ஆரம்ப சுகாதார நிலையம். 5 ஏக்கர் நிலப்பரப்பில் இருக்கிறது. சுற்றுச்சுவர் இல்லாமல், கட்டடங்கள் எல்லாம் பாழடைந்து மருத்துவச் சிகிச்சை எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் புனரமைத்து, சிறப்பாக இயங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் நிறைய ஆரம்ப சுகாதார நிலையங்கள் பழுதடைந்தும், compound wall இல்லாமல் இருப்பது அரசினுடைய கவனத்தில் இருக்கிறது. அதற்கு வேண்டிய நிதியைப் பெறுவதற்கு வேண்டிய முயற்சியை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். நிதியாதாரம் கிடைத்தவுடனே இந்தப் பணிகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் சேம்பள்ளி பஞ்சாயத்து பகுதியில் ஏறத்தாழ 40,000 மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மருத்துவத்திற்கு வரவேண்டுமென்றால், குடியாத்தத்திற்கு ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் வந்து சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இருக்கிறது. அதன்காரணத்தினால் சேம்பள்ளிப் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித்தர அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் கவனத்திலே, அப்படிப்பட்ட திட்டம் இல்லை. எதிர்காலத்திலே கனிவுடன் பரிசீலிக்கப்படும்.

[2007 ஏப்ரல் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு. கே.எல். இளவழகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**66—**

## கோயிலைப் புதுப்பித்தல்

***6188—திரு. கே.எல். இளவழகன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், கலவை கிராமத்திலுள்ள ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், கலவை கிராமத்தில் இருக்கக்கூடிய அருள்மிகு திருகளீசுவரர் மற்றும் சுந்தரேசுவரர் திருக்கோயிலின் திருப்பணி செய்திட, உத்தேசமாக ரூ.10.50 இலட்சம் தேவைப்படும் நிலையில், இத்திருக்கோயிலில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், இத்திருப்பணியினை உபயதாரர்மூலம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதிக்குட்பட்ட கலவை கிராமத்தில் இருக்கின்ற ஈஸ்வரன் கோயில் மிகவும் பழமையான கோயிலாகும். சோழர் காலத்துக் கல்வெட்டுகளைக் கொண்ட கோயிலாகும். நவாப் காலத்திற்கு முன்பே அமைந்த பழமையான இக்கோயில், தற்பொழுது மிகவும் பாழடைந்து கிடக்கின்றது. இதை உடனடியாக போர்க்கால அடிப்படையில் புதுப்பித்து, திருப்பணி செய்ய அரசு முன்வருமா? இத்திருக்கோயிலில் கடந்த 8-11-1999 அன்று மூன்று சிலைகள் திருட்டுப் போயின. இதுசம்பந்தமாகக் கலவை காவல் நிலையத்தில் வழக்குகூட நிலுவையில் இருக்கிறது. எனவே, தற்பொழுது இருக்கின்ற [illegible]



2007 ஏப்ரல் 16]

சிலைகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிக்கு நிதி ஒதுக்கியதற்காக என் சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், ஊதியூரிலுள்ள உத்தண்ட வேலாயுதசாமி கோயில் திருப்பணிகள் உபயதாரர்களால் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தக் கோயில் காங்கேயம் சிவன்மலை முருகன் கோயிலின் வரம்பிற்குட்பட்டது. அங்கு நிறைய நிதி இருக்கின்றது. அரசின் நிதியுதவியும் இதற்கு அளிக்கப்படுமா? இதுகுறித்து அமைச்சரிடம் கடிதம்கூட எழுதிக் கொடுத்திருக்கின்றேன். எனவே, அங்கே திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், திருப்பணிகளை விரைவாகச் செய்து முடிக்க, நிதியுதவி அளிக்கப்படுமா என்பதை அமைச்சரிடத்தில் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த கோயிலாகும். இந்தக் கோயிலுக்கு தற்போது சேலம் மாவட்டமின்றி, அத்துணை மாவட்டங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை புரிகின்றார்கள். இந்தக் கோயிலுக்கு மதில்சுவர் இல்லை. எனவே, சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு, உள்ளே பக்தர்கள் அமர்வதற்கும், தங்குவதற்கும் ஏதுவாக ஒரு கட்டடம் கட்டித்தர இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 தினங்களுக்கு முன்னர், மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற அந்தத் திருக்கோயிலுக்கு, சேலம் மாநகருக்கு. நான் சென்று வந்தேன். அங்கு பல்வேறு திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வணிக வளாகம், அந்த ஆலயத்தினுடைய அலுவலகம் போன்றவையெல்லாம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் சொல்வதைப் போன்று மதில்சுவர் மட்டுமல்ல, தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பெரிய கோயில்கள், சிறிய கோயில்கள் என்று 40 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. திருப்பணிகள் எல்லாம் செய்து, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு செய்யவேண்டுமென்ற நியதி ஏற்கெனவே இருந்துகொண்டிருக்கின்றது. பல ஆண்டுக் காலமாக திருப்பணிகளே செய்யாத கோயில்களுக்கு உடனடியாகத் திருப்பணிக் குழுக்கள் அமைத்து, திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல கடந்தகால திராவிட முன்னேற்றக்





கழகத்தினுடைய ஆட்சியைப்போல, தற்போது ஆட்சிப் பொறுப்பேற்ற 13–5–2006 முதல் இந்த ஓராண்டு காலத்திற்குள் மட்டும் ஏறத்தாழ 733 கோயில்களுக்கு திருப்பணி நடைபெற்று குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இடையிலே ஏற்படுகின்ற ஆட்சியும் இதுபோன்று வேகம் காட்டியிருந்தால் இதுபோன்ற தேக்க நிலை இருந்திருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, உரிய நேரத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற வேண்டிய திருப்பணிக் குடமுழுக்குகள் நடத்துவதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி, திருவானைக்காவல், ஜம்புகேஸ்வரர் கோயிலுக்குத் தங்கத் தேர் செய்யக்கூடிய அந்தப் பணி எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் தொடங்கப்பட்டது. தேர்தலுக்குப் பிறகு இந்தப் பணி இப்போது தேக்க நிலையிலேயே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கலவை கிராமத்திலுள்ள கோயிலைப் புதுப்பிப்பது பற்றியது.

**திரு. மு. பரஞ்ஜோதி:** முடித்துக்கொள்கிறேன். அந்தக் கோயிலுக்கு தங்கத் தேர் செய்யக்கூடிய பணியினை இந்த அரசு விரைவாக முடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கத் தேர் செய்கின்ற பணி தொடங்கப்பட்டது என்று ஆரம்பத்திலே சொன்னார். பிறகு முடிக்கப்படுமா என்று கேள்வியைக் கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாக வினா எழுப்பினால் உரிய பதிலைத் தருவதற்கு நானும் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 16

67—

## கட்டட வசதி

***19358—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், மதகனேரி, கோலியான்குளம் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், மதகனேரி, கோலியான்குளம் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி 8–ன்கீழ் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியத்திலுள்ள மதகனேரி, கோலியான்குளம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலுள்ள நடுநிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன்மூலம் கட்டப்பட்ட பழைய கட்டடங்கள். அவை பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தினால்தான் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவற்றையெல்லாம் சீர் செய்வதற்கு உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்போது 135 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி அவற்றைச் சரி செய்வதற்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகின்றேன். தமிழ்நாட்டில் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்



2007 ஏப்ரல் 16]

பள்ளியாகவும் தரம் உயர்த்தும்போது புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் ஆணை வழங்கி, அதற்கான நிதியையும் வழங்கி, அந்த அடிப்படையில் வரும் காலத்தில் தரம் உயர்த்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். கடந்த ஆண்டு 9 ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட இரண்டு பள்ளிகளிலும் இந்த ஆண்டு 10 ஆம் வகுப்பு ஆரம்பிக்க இருக்கிறார்கள். இந்த இரண்டு பள்ளிகளில், கோலியான்குளத்திற்கு சர்வ சிக்ஷா அபியான் – அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் இரண்டு வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மதகனேரிக்கு இடத்தை நாங்கள் தேர்வு செய்து தந்திருக்கிறோம். அந்த இடத்தில் புதிதாகக் கட்டடங்கள் கட்டித் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டடங்கள் கட்டுகிறபோது ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்குவதிலே அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. காரணம், அங்கே இருக்கக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டுதான் ஒவ்வொரு முறையும் அத்தகைய தரம் உயர்த்தக்கூடிய பணியினை மேற்கொண்டிருக்கிறோம். எனவே, போதுமான இட வசதி அந்தப் பள்ளிகளிலே இருக்கும் என்று சொன்னால் முன்னுரிமை அடிப்படையிலே அங்கே கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல மதகனேரியைப் பொறுத்தமட்டில் ஆதீனத்திற்குச் சொந்தமான 4 ஏக்கர் நிலத்தை இப்போது பள்ளிக் கட்டடத்திற்காகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலம் நம்முடைய கல்வித் துறைக்குக் கிடைத்தவுடன் அந்த இடத்திலே கட்டடம் கட்டுவதற்கு அரசு முழு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராயபுரம் தொகுதியில் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகள் அதிகமாக உள்ளன. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. எனவே, இப்போது ஒதுக்கப்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து இந்த அரசு

[2007 ஏப்ரல் 16

உதவி பெறும் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது மிகவும் அவசியம். அரசாணை மக்களுக்காகத்தான் போடப்படுகிறது. எனவே, அதைக் கருத்தில் கொண்டு அரசாணையினைப் பிரத்தியேகமாகத் திருத்த, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து இந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்து அரசாணையைத் திருத்துவதற்கு அரசு வழிவகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் சொல்வதைப்போல இந்தக் கோரிக்கை தொடர்ந்து பல சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் வருகிறது. தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே இருக்கக்கூடிய அரசு நிதியுதவி பெறக்கூடிய பள்ளிகள், குறிப்பாக சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகள் ஆகிய பள்ளிகளுக்குக்கூட இந்த நிலைமை இருப்பதை நாங்கள் கண்கூடாக கண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட பல முறை என்னிடத்திலே பேசுகிறபோது இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் கலந்து பேசி இது குறித்து எந்த வகையிலே அரசு ஆவன செய்ய முடியும் என்பதை நிச்சயமாகப் பரிசீலிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகரத்திலே, வக்கணம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கே ஆதி திராவிட மாணவர்களும், பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் என 1,000 மாணவர்களுக்குமேல் படிக்கிறார்கள். 14 கட்டடங்கள் அங்கே இல்லாமல் அவர்களுக்கெல்லாம் மரத்தடியிலே வகுப்பறைகள் நடக்கின்றன. தொடர்ந்து 10 ஆம் வகுப்பிலே 100 சதவிகிதத் தேர்ச்சி விழுக்காட்டைக் காட்டுகிறார்கள். எனவே, முன்னுரிமை அடிப்படையிலே நபார்டு திட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறு



2007 ஏப்ரல் 16]

நிதி மூலமாகவோ அந்த 14 கட்டடங்களையும் இந்த ஆண்டே கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு பகுதி–8 திட்டத்தின்கீழ் மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய அந்தப் பள்ளிக்கு முன்னுரிமை நிச்சயமாக அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**68—**

### சத்துணவு மையம்

***6944—திரு. ஆர். சின்னசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, உக்கடம், ஜி.எம். நகரில் சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி, உக்கடம் ஜி.எம். நகரில் சத்துணவு மையம் அமைக்க வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர், உக்கடம் பகுதியில் ஜி.எம். நகரிலே சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருந்தேன். அமைத்துத் தரவேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், அந்தப் பகுதி

சிறுபான்மையின மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. குழந்தைகள் பள்ளிக்குச் செல்கிற இடம் தூரமாக இருக்கிற காரணத்தினாலே, அந்தப் பகுதியிலே சத்துணவு மையம் அமைத்துத் தரப்படுமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஜித் காலனி, காந்தி நகர், ஜி.எம். நகர் இவை மூன்றும் கோவை மாநகராட்சியின் ஒரே பகுதியிலே அமைந்துள்ளன. மூன்று இடங்களிலும் உள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் மஜித் காலனி, காந்தி நகர் என்று இரண்டு மையங்கள் செயல்படுகின்றன. இந்த இரண்டு மையங்களும் மாநகராட்சியின் ஒரே கட்டடத்தில் இயங்குகின்றன. இதற்காக மாதம் ரூ. 100/– வாடகை செலுத்தப்படுகிறது. ஜி.எம். நகரிலிருந்து மஜித் காலனிக்கு வரும் குழந்தைகள் அதிகபட்சம் ஒரு பர்லாங் தூரம் மட்டும் வரவேண்டிய சூழ்நிலையே உள்ளது. இந்த இரு மையங்களும் தொடங்கப்பட்ட நாள் முதல் இதே கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஜி.எம். நகருக்கு ஒரு மையத்தை மாற்ற வேண்டுமென்றால் அங்கே கட்டடம் இல்லை. ஜி.எம். நகரில் புதிதாக மையம் தொடங்க வேண்டும் என்றால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் கட்டடம் கட்டித் தரும்பட்சத்தில் அங்கு மையத்தை மாற்றிச் செயல்படுத்த இவ்வரசு வழி வகுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரு அங்கன்வாடி மையமாவது அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அரசு ஊழியர்களுக்குச் சலுகைகளை இந்த அரசு வாரி வழங்கி இருக்கிறது. சத்துணவு அமைப்பாளர்களுக்குப் போதுமான சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. வழங்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மூலக் கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் தொடர்பில்லை என்றாலும் இக்கேள்விக்கு நான் பதிலளிக்க விரும்புகின்றேன். சத்துணவு அமைப்பாளர்கள், உதவியாளர்கள் இந்த இரு பணியாளர்களுக்கும் இந்தியாவிலேயே தமிழக அரசுதான் நமது தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய சீரிய தலைமையில், அதிக அளவில் சம்பளம் தருகிறது என்று உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஊதியம் ரூபாய் 2,516 வழங்கப்படுகிறது. குஜராத்தில் ரூபாய் 1,500; பஞ்சாப்பில் ரூபாய் 900 என்ற அளவில் மிகவும் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சத்துணவு அமைப்பாளர்களுக்கும், குழந்தைகள் மைய அமைப்பாளர்களுக்கும் அதிக அளவில் சம்பளம் தரப்படுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

முற்பகல் 10–15

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை மேலும் பலப்படுத்துகிற வகையில் வாரத்தில் 3 முட்டைகள் வழங்குவதோடு, சமையலுக்கான gas அடுப்புகூட ஒரு பகுதி வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது மிகச் சிறப்பானது. சத்துணவு செய்யக்கூடிய சமையல் கூடங்கள், பெரும் பகுதியான இடங்களிலே மிகவும் பழுதடைந்து இருக்கின்றன, பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன. பல இடங்களிலே சமையல் செய்கிற நேரங்களில் பல்லிகள்கூட விழுந்து, குழந்தைகள் வாந்தி, மயக்கம் என்கிற செய்திகள் எல்லாம் வருகிற காரணத்தினால், பாதுகாப்பான சத்துணவு சமையல் கூடங்களை உருவாக்குவதற்கு ஒரு சிறப்பு நிதி ஒதுக்கி, படிப்படியாக அந்தச் சத்துணவு மையங்கள் புதுப்பிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர் கூறியவாறு கடந்த வருடம், ரூபாய் ஒன்றரை கோடி செலவில் 750 புதிய மையங்கள், முதல் முறையாக ஒரு pilot scheme–ஆகத் தொடங்கப்பட்டு, இவ்வருடமும் உள்ளாட்சித் துறை வாயிலாக ரூபாய் ஒன்றரை கோடியும், எங்கள் துறை வாயிலாக ரூபாய் ஒன்றரை கோடியும் என சுமார் ரூபாய்

[2007 ஏப்ரல் 16

3 கோடி அளவில் மீண்டும் இந்தச் சத்துணவுக் கூடங்களை modernise செய்து, புகையில்லாத சமையல் அறைகளாக மாற்றுவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்துவருகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**69—**

## கால்நடை மருத்துவமனை

***8950—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, மேல்சீசமங்கலம், குத்தனூர் ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி, மேல்சீசமங்கலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆணைக்கேற்ப அரசாணை எண் 172, நாள் 19–9–2006–ன்படி தற்போது ஒரு கிளை நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், செய்யாறு தொகுதி, குத்தனூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசுத் தரப்பில் தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலே நான் எழுப்பினேன். அரசாங்கம் எத்தனை விரைவாகச் செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இந்தக் கூட்டத்தொடருக்குள்ளாக மேல்சீசமங்கலத்தில் ஒரு கிளை மையம்



2007 ஏப்ரல் 16]

வந்துவிட்டது என்பதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திறப்பு விழாவிற்கு நானும் சென்றிருந்தேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. குத்தனூர் என்ற கிராமத்திலே கிட்டத்தட்ட 15 ஆயிரம் கால்நடைகள் இருக்கின்றன. அந்தக் கால்நடைகளுக்கு வியாதிகள் வருமேயானால், கிட்டத்தட்ட எட்டு கிலோ மீட்டர் தள்ளித்தான் ஒரு மருத்துவமனை இருக்கின்றது. அங்கு சென்றுதான் குணமாக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. கால்நடை என்று பெயர் வைத்ததற்காகவே அதிக தூரம் நடக்க விடாமல், சற்றுப் பக்கத்திலேயே இன்னொரு மருத்துவமனை, குத்தனூர் பகுதியிலே இருந்தால் சற்று உதவிகரமாக இருக்குமென்ற எண்ணத்தோடுதான் இந்த வினாவினை எழுப்புகின்றேன். எனவே, குத்தனூர் கிராமத்திற்கும் ஒரு கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கை இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதியில் தாளியாம்பட்டி, கீழசக்கரக்கோட்டை, கவரப்பட்டி ஆகிய பகுதிகளில் கால்நடை மருத்துவமனை கட்டும் திட்டம் பற்றி அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கேட்கிறாரா அல்லது புதிய மருத்துவமனை அமைக்கக் கேட்கிறாரா என்ற விவரம் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனி வினா எழுப்பினால் உரிய விவரத்துடன் பதில் அளிக்க இயலும்.

[2007 ஏப்ரல் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியத்தில் சேப்ளாப்பட்டி, டி. மேலப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அந்தப் பகுதியிலே ஒரு கால்நடை கிளை மருத்துவமனை, அதாவது பகுதி நேர கால்நடைக் காப்பகம் வேண்டுமென்று அந்த மக்கள் கோரி வருகிறார்கள். அதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியிலே அமைந்திருக்கிற அலியாலமங்கலம் கிராமத்திலே கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின்போதே கேட்கப்பட்ட கேள்விக்கு உடனடியாக பரிசீலனை செய்யப்படும் என்ற ஒரு பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே அங்கே உடனடியாக, அலியாலமங்கலம் கிராமத்திலே கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கலசப்பாக்கம் தொகுதி உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு ஆய்வு செய்து, உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு இருப்பின் அந்தப் பகுதியில் புதிய மருத்துவமனை அல்ல, கால்நடை கிளை நிலையமோ அல்லது மருந்தகமோ தொடங்க இந்த அரசு பரிசீலிக்கும்.



2007 ஏப்ரல் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**70—**

## குளிர்சாதனக் கிடங்கு

***8645—திரு. டி. மூர்த்தி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, கோவளத்தில் மீன் சேகரிப்பு மற்றும் பதப்படுத்தும் குளிர்சாதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் சட்டப் பேரவைத் தொகுதி கோவளத்தில், மீன் சேகரிப்பு மற்றும் பதப்படுத்தும் குளிர்சாதனக் கிடங்கு அமைப்பது குறித்த திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதியில் அமைந்துள்ள கோவளம் பகுதி, மிக முக்கியமான மீன்பிடிப் பகுதியாகும். இப்பகுதியில் வசிக்கும் அனைத்து இன மக்களும் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு வேறு வேலை எதுவும் செய்யத் தெரியாது. எனவே, அவர்கள் அங்கு பிடிக்கும் மீன்களை, வெளியிலே எடுத்துச் சென்றுதான் விற்க வேண்டிய நிலைமை உள்ளது. இதனால் காலதாமதம் மற்றும் பண விரயம் ஏற்படுகிறது. மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழையெளிய மக்கள் வெளியூர் சென்று அவர்கள் பிடித்த மீன்களை விற்பனை செய்ய, வாகன வசதி ஏதும் இல்லை. எனவே, கோவளம் பகுதியில், மீன் சேகரிப்பு மற்றும் பதப்படுத்தும்

குளிர்சாதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவளம் சென்னைக்கு அருகே உள்ள ஒரு கடற்கரைக் கிராமம். கோவளம் கடற்கரையில் பிடிக்கப்படும் அனைத்து வகை மீன்களும், குளிர்பதனப் பெட்டியில் வைக்கப்பட்டு, அருகில் உள்ள அனைத்து மீன் விற்பனை நிலையங்களுக்கும் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், கோவளத்திற்கு அருகில் உள்ள சென்னை, காஞ்சிபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதியில், தனியார் மீன்கள் பதப்படுத்தும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்கள் மூலமாக பதப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, தற்போது திருப்போரூர் தொகுதியில் உள்ள கோவளத்தில், மீன்கள் பதப்படுத்தும் குளிர்சாதனக் கிடங்கு அமைப்பதற்கான சாத்தியக்கூறு எதும் இல்லாததால், இதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாகக் கோவளம் என்ற மீன்பிடிப் பகுதியில் அனைத்து ரக மீன்களும் அதிக அளவில் எளிதாகக் கிடைக்கின்ற காரணத்தினால், அப்பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15 நாட்களுக்கு முன்பாக, நம்முடைய நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களுடைய தலைமையிலே, சுனாமி மறுவாழ்வு சம்பந்தமாக ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதிலே எங்கெல்லாம் மீனவர்களுக்கு, மீன்பிடித் தூண்டில் வளைவுகள் தேவைப்படுமோ அங்கெல்லாம், மீன்பிடித் தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட வேண்டும் என்று நம்முடைய நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கோவளம் பகுதியில், தூண்டில் வளைவுகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால் அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் கடைகளிலே புத்தம் புதிய மீன்கள் கிடைப்பது இல்லை. Launch கடலுக்குப்போய் ஒரு வாரம், 10 நாட்கள் பொறுத்து மீன்கள் எல்லாம் பிடித்து, Cold storage-ல் வைத்து சென்னைக்கு எடுத்துக்கொண்டு வந்து விநியோகம் செய்கின்ற அந்த நிலையைத் தவிர்த்து, புத்தம் புதிய மீன்கள் மக்களுக்குக் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவுவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தினமும் புதிய மீன்கள் உடனுக்குடன் கிடைக்கின்ற பகுதிகள் இருக்கின்றன. குறிப்பாக நம்முடைய நாகப்பட்டினம், கடலூர், சென்னை மீன்பிடித் துறைமுகங்களில் விசைப் படகுகள் மூலமாக மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்கள், இதுபோன்று ice box–ல் மீன் வைத்து ஒரு வாரமோ அல்லது 10 நாட்களோ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் பதப்படுத்தி எடுத்து வருகின்ற நிலை இருக்கின்றது. கட்டு மரங்களில், fibre boat–களில் மீன்பிடித் தொழில் செய்கின்றவர்கள் அன்றாடம் மீன் பிடித்து வருகிறார்கள். அந்த மீன்களை வாங்கிப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரி எல்லையிலிருந்து நாகை எல்லை வரை கடலூர் மாவட்டத்தின் கடலோர கிராமங்களில் நூற்றுக்கணக்கான கிராம மீனவ மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். அப்படி அவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு அதிக மீன்களைப் பிடித்துவந்து விற்பனை ஆகாத போது, அது வீணாகக் கருவாடாக மாறுகின்றது. அதன்மூலமாக அவர்களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். அதனால் மாவட்டத்தின்

தலைநகரம் என்பதால், கடலோர கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளில் அந்த மீன்களை பத்திரமாகப் பாதுகாத்து அதிக விலைக்கு விற்பதற்கு ஏதுவாக கடலூரில் நவீன ரக குளிர்சாதனக் கிடங்கு அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை பேரூராட்சி, கிள்ளை பேரூராட்சிப் பகுதிகள் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளாகும். அந்தப் பகுதியில் வசிக்கும் மீனவ சமுதாய மக்கள் பயன்பெறும் பொருட்டு, பரங்கிப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட அண்ணன்கோயில், கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட முடசலோடைப் பகுதியில் மீன் குளிர்ப் பதனக் கிடங்கு அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் அளித்தேன். அதே பதில்தான் மாண்புமிகு புவனகிரி சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கும் பொருந்தும். அந்த வகையிலே அந்தப் பகுதியிலே மீன் பிடிப்பு எந்த அளவுக்கு இருக்கின்றது என்பதைக் குறித்து அரசு நிச்சயமாக பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### (அ) திருச்செந்தூர் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் யாகங்கள் நடத்தக் கட்டுப்பாடு மற்றும் வழிபாட்டுக் கட்டண உயர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருச்செந்தூர் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். திருச்செந்தூர் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் உட்பிரகாரத்தில் ஹோமங்கள், யாகங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது மற்றும் இறை வழிபாட்டிற்குக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. பி.கே. சேகர்பாபு ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாகப் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலிலே யாகங்கள், ஹோமங்கள் செய்வது தடை செய்யப்பட்டிருக்கின்றது. திருச்செந்தூர் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் எந்தக் காலத்தில் துவக்கப்பட்டதோ அந்தக் காலத்திலிருந்து அதன் உட்பிரகாரத்தில் இந்த ஹோமங்கள், யாகங்கள் எல்லாம் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ** சூரனை சம்ஹாரம் செய்த ஸ்தலமாக இந்தத் திருச்செந்தூர் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலைச் சொல்வார்கள். சூரனை வதம் செய்வதற்கு முன்னால் முருகப்பெருமானே அந்தத் திருக்கோயிலில் 5 நாட்கள் யாகங்கள் வளர்த்து, அந்த யாகத்தின் மூலம் இந்தச் சூரனை வதம் செய்ததாக **. அந்த வகையிலே இந்தத் திருத்தலத்திலே சுவாமி கும்பிடுவதற்காக பக்தர்கள் வருகின்றபோது தாங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று விரும்புகிற கோரிக்கையை நிறைவேற்றவேண்டி யாகங்களை, ஹோமங்களை நடத்துகிறார்கள். அதுபோல, தாங்கள் நினைத்த காரியம் நடந்துவிட்டது என்பதற்காக யாகங்கள், ஹோமங்களை அந்தத் திருக்கோயிலிலே நடத்தி வருகின்றனர். இதனால் கோயில் மாசுபடுகிறது, அதனால் இதை மாற்ற வேண்டுமென்ற வகையில், இவற்றைத் தடுத்திருக்கின்றார்கள். கோயில் மாசுபடுகின்ற சாத்தியக்கூறே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அங்கே இல்லை. ஒரு சில வருட காலத்திற்கு முன்னால் மத்தியப் பிரதேசம் போபாலில் ஒரு சம்பவம் நடைபெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ராதாகிருஷ்ணன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** அந்தச் சம்பவத்திலே பல பேர் மரணம் அடைந்தார்கள். பல பேர் கண் இழந்தார்கள், கால் இழந்தார்கள். ஆனால், 5 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மட்டும் அதிலே பாதிக்கப்படவில்லை. அவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டது. ஏனென்று சொன்னால், அந்த 5 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பிராமணர் சமுதாயத்தைச் சேர்ந்த அவர்கள், யாகங்கள் செய்ததால், அந்த யாகமும் விஷத்தை முறியடிக்கக்கூடிய மூலிகைக் கலந்திருக்கக்கூடிய யாகமாக நடந்த காரணத்தால், அந்த விஷத்தையும் முறியடித்தது ** இன்னும் சொல்லப்போனால், திருச்செந்தூரில் சுனாமிப் பேரலை தாக்கிய நேரத்தில்கூட அந்தத் திருக்கோயிலிலிருந்து தூரத்திற்குச் சென்றது அலைகள் ** அங்கே யாகங்கள் வளர்க்கப்படுகின்றன என்ற காரணத்தால். ஆகவே, இன்றைக்கு அந்த யாகங்களைச் செய்கின்றவர்களும் . . .

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலேயோ அல்லது அதைத் தொடர்ந்து எழுப்பப்படும் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலேயோ உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை எல்லாம் சொற்பொழிவு ஆற்றுவதுபோலவோ, சட்டமன்ற விவாதத்திலே பேசுவதுபோலவோ பேசக்கூடாது. இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் புராணக் கதைகளை வரலாறு என்று சொல்கிறபோது, அது நேற்று நடந்ததுபோல, அண்மையிலே நடந்ததுபோல, காலத்தோடு ஒட்டி சொல்லப்படுகிற ஒரு செய்திபோன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. எனவே, புராணச் செய்திகளை வரலாறு என்று இந்த அவையில் பதிவு செய்வதை அருள்கூர்ந்து பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று குறிப்பிட்டதை எல்லாம் எடுத்துவிடுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி என்பது தற்போது வந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள். அதாவது, பிரகாரத்தில் ஹோமங்கள் வளர்க்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள், அதுதானே உங்கள் கேள்வி? (குறுக்கீடு) அதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே கோயில் மாசுபடுகின்றது என்று சொல்கிறார்கள். அந்தக் கோயில் மாசுபடுகின்றது என்று சொன்னால், கருங்கற்களால் செய்யப்பட்ட அந்தக் கோயில் எப்படி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள், சீக்கிரம். (குறுக்கீடு) புராணத்தை எல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதற்கு நேரம் இல்லை.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** இதுபோன்ற திருக்கோயில்களை கருங்கற்களால் கட்டியிருக்கிறார்கள். அங்கே நேரடியாகச் சென்று பார்த்தால் அந்தக் கருங்கற்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. ஏதோ அந்த பக்தர்கள் மனம் புண்பட வேண்டும் என்ற வகையிலும், அங்கே இருக்கின்ற திரிசுதந்திரர்கள் குடும்பங்கள் பாதிக்கப்பட வேண்டும் என்ற வகையிலும் ஒரு பதற்றமான சூழ்நிலையை அந்தத் விதிகளின்மூலமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, 10 ரூபாய் சிறப்புக் கட்டணமாக இருந்ததை, 10 மடங்கு உயர்த்தி 100 ரூபாய் என்று உயர்த்தியிருக்கின்றார்கள், ஏழையெளியவர்கள் அந்தத் திருக்கோயிலில் தாங்கள் விதைத்து அறுவடை செய்த பொருட்களை வைத்து வணங்கிச் செல்கின்ற வரலாறுகள் இன்றைக்கும் காலத்தால் அழிக்கப்படாத வரலாறாக இருக்கின்றன. இப்போது கட்டணம் 10 ரூபாயிலிருந்து 10 மடங்காகக் கூட்டப்பட்டிருக்கின்றது என்பதால், அங்கே இருக்கின்ற பக்தர்கள், அங்கே இருக்கின்ற பூசாரிகள், இந்துக்கள் அத்தனை பேரும் மனம் புண்படுகின்ற இந்தச் செயலால் பதற்றத்தோடு இருக்கின்றார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன பெரிய புராணக் கதையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார் அவர்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கே நடைபெறக்கூடிய யாகங்களுக்கு எந்தவிதத் தடையும் விதிக்கவில்லை. இடமாற்றம்தான் செய்யப்பட்டுள்ளது. வழக்கத்திற்கு மாறாக இடமாற்றம் செய்து அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள் குறுகிய காலத்திற்கு. அந்த இடத்தை மாற்றி மீண்டும் பழைய இடத்திலேயே யாகங்கள் செய்யச் சொல்லி அறங்காவலர் குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இரண்டாவதாக, கட்டண உயர்வு என்பது இல்லை. 100 ரூபாய் என்பது ஒரு சிறப்புக் கட்டணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 10 ரூபாய் கட்டணத்தை 100 ரூபாயாக உயர்த்தவில்லை. 10 ரூபாய் கட்டணம் செலுத்தி வழிபாடு செய்பவர்களுக்கு அந்த ஏற்பாடுகள் தொடர்ந்து நீடிக்கின்றன. அதேநேரத்தில், அங்கே அமர்ந்து வழிபடுவதற்கு 100 ரூபாய் கட்டணம் ஒன்றை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே, 10 ரூபாய் கட்டணத்தை 100 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள் என்று கூறுவதும் தவறு. அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே நிகழவில்லை.

இத்திருக்கோயில் அறுபடை வீடுகளில் ஒன்றாகவும், மிகச் சிறப்பு வாய்ந்த பிரார்த்தனைத் தலமாகவும் உள்ளதால் நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் இங்கு வந்து தரிசனம் செய்து செல்கின்றனர். திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களில் சிலர் தங்களது குடும்ப நலனுக்காக தங்களது சொந்த முறையில் திருக்கோயிலுக்கு வெளியே உள்ள வள்ளிக் குகை அருகில் பல்வேறு வகையான ஹோமங்களையும், யாகங்களையும் செய்து வந்தனர். திருக்கோயில் சார்பான ஒரு சில ஹோமங்கள் மற்றும் யாகங்கள் மட்டும் திருக்கோயிலுக்குள் முதல் பிரகாரத்தில் நடத்தப்பட்டு வந்தன. கடந்த சில வருடங்களாக திருக்கோயிலுக்குள்ளேயே முதல் பிரகாரத்திலும் 108 மகாதேவர் சன்னதி அருகிலும் இந்தத் தனிப்பட்ட முறையிலான ஹோமங்களும், யாகங்களும் நடத்தப்படுகின்றன. இவ்வாறு ஹோமங்களையும், யாகங்களையும் திருக்கோயிலில் உள்ள திரிசுதந்திரர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் நடத்துகின்றனர். அண்மைக் காலமாக திருக்கோயிலுக்குள் நடத்தப்படும் இவ்வகையான ஹோமங்கள் மற்றும்



யாகங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்து வருகின்றது. இந்த ஹோமங்கள், யாகங்கள் ஆகியவற்றிலிருந்து எழும் தீ, புகை முதலியவற்றின் காரணமாக திருக்கோயிலின் மேற்கூரை மற்றும் கருங்கல் தளக் கற்களில் புகை படிந்து மாசுபட்டுக் காணப்படுகின்றது. தீயினால் ஏற்படும் அதிக வெப்பம் காரணமாக மேற்கூரையிலுள்ள கருங்கல் தளக் கற்களில் விரிசல் ஏற்படும் அபாய நிலையும் உள்ளது.

முற்பகல் 10–35

திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் பின்புறம் முழுவதும் இந்த ஹோமம், யாகம் நடத்துபவர்கள் உட்கார்ந்து நெரிசல் ஏற்படுத்தும் நிலையில், திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள், தங்கள் தரிசனத்தின் ஒரு பகுதியாக, முதல் பிரகாரத்தைச் சுற்றிவருவது, இந்த யாகங்கள் மற்றும் ஹோமங்களின் காரணமாக இயலாமல் போகிறது. எனவே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, திருக்கோயிலின் கட்டுமானப் பாதுகாப்பு, பக்தர்கள் திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் இடையூறின்றி வலம் வந்து அமைதியுடன் தரிசனம் செய்வது ஆகியவற்றைக் கருத்திலேகொண்டு திருக்கோயில் முதல் பிரகாரத்திலும், 108 மகாதேவர் சன்னதியிலும் தனிப்பட்ட முறையிலான ஹோமங்கள் மற்றும் யாகங்கள் செய்வதைத் தடை செய்ய அறங்காவலர் குழு முடிவு செய்தது.

அதே நேரத்தில் பக்தர்களின் நலனையும், திரிசுதந்திரர்களின் நலனையும் கருத்திலேகொண்டு, இத்தகைய ஹோமங்கள் மற்றும் யாகங்களை திருக்கோயிலை ஒட்டியுள்ள கந்தசஷ்டி மண்டபத்தில் நல்ல முறையில் நடத்திக்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து தரவும் அறங்காவலர் குழு முடிவு செய்துள்ளது. மேலும், எதிர்காலத்தில் முழு வசதியுடன்கூடிய யாகசாலை மண்டபம் ஒன்றைப் புதிதாகக் கட்டித்தரவும் அறங்காவலர் குழு திட்டமிட்டுள்ளது. திருக்கோயிலுக்குள் திருக்கோயில் சார்பில் திருவிழாக் காலங்கள் மற்ற முக்கிய நிகழ்ச்சிகளின்போது செய்யப்படும் யாகங்கள் மற்றும் ஹோமங்கள் இதனால் பாதிக்கப்படாது. இந்த ஏற்பாட்டை பொதுமக்களும், பக்தர்களும் வரவேற்றுள்ளனர்.

அடுத்ததாக, இத்திருக்கோயிலில் இலவச தரிசனம் செய்பவர்கள் ஒரு வரிசையிலும், கட்டணம் செலுத்தி தரிசனம் செய்பவர்களும், பிரமுகர்களும் மற்றொரு வரிசையிலும் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறு ஒரு வரிசையில் செல்லும் சிறப்புக் கட்டணம் செலுத்துபவர்களும், முக்கியப் பிரமுகர்களும் கருவறைக்கு முன்பாக உள்ள இடத்தில் அமர்ந்து தரிசனம் செய்ய

விரும்புகின்றனர். இவர்களுக்கு அர்ச்சனை செய்து வைக்கும் பொறுப்பு திரிசுதந்திரர்களுக்கு உள்ளதால், அவர்களும் இதை ஊக்குவிக்கின்றனர். சிறப்பு அனுமதிக்கான தற்போதைய கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூபாய் 10 ஆகும். சிறப்புக் கட்டணம் செலுத்தி அதிக அளவில் வருபவர்களில் ஒரு சிலரை உட்கார வைத்து தரிசனம் செய்ய ஏற்பாடு செய்தும். மற்றவர்களை வரிசையிலேயே நடத்தி தரிசனம் செய்து அனுப்புவதுமான பாரபட்சம் இருப்பதாக ஒரு புகார் உள்ளது. இதனால் தரிசனம் செய்யும் பக்தர்களிடையே நெருக்கடியும் நெரிசலும் ஏற்படுகிறது. எனவே, உட்கார்ந்து தரிசனம் செய்வதற்கு என்றே ஒரு சிறு இடத்தை ஒதுக்கி, அதற்கு நபர் ஒருவருக்கு ரூபாய் 100 கட்டணம் வசூலிக்கலாம் என்றும், இதனால் இதர பக்தர்கள் வரிசையில் சீராகவும், வேகமாகவும் சென்று அமைதியாக தரிசனம் செய்ய இயலும் எனவும் அறங்காவலர் குழு கருதுகிறது. இந்தப் புதிய கட்டணத்தை இந்த மாதம் முதல் அமல் செய்திட குழு உத்தேசித்தது. இவ்வாறு உட்கார்ந்து தரிசனம் செய்வதற்குச் சிறப்புக் கட்டணம் வசூலிப்பது என்ற முடிவினால் திரிசுதந்திரர்களுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு இல்லை. அவர்கள் செய்யும் அர்ச்சனைகளின் எண்ணிக்கைக்கேற்ப அவர்களுக்கு வழங்கும் பங்குத் தொகையில் எவ்வித மாற்றமும் இல்லை.

இத்திருக்கோயிலில் தற்போது நடைமுறையிலுள்ள இதர கட்டணங்கள் எதுவும் உயர்த்தப்படவில்லை. ரூபாய் 10 கட்டண தரிசனம் மற்றும் இலவச தரிசனம் ஆகியவற்றில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

இத்திருக்கோயிலின் பிரகாரத்தில் ஹோமங்கள் மற்றும் யாகங்கள் செய்வதைத் தடைசெய்துள்ளதும், உட்கார்ந்து தரிசனம் செய்வதற்குப் புதிய கட்டணத்தை ஏற்படுத்தியதும் திருக்கோயிலின் அறங்காவலர் குழுவின் முடிவின்படிதான் என்பதையும், அரசு இதில் எந்தவிதத் தலையீடும் செய்யவில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திருக்கோயிலிலுள்ள திரிசுதந்திரர்களின் சார்பாக அவர்களின் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து முறையிட்டார்கள். அதுபற்றி நேரில் விசாரித்து ஓர் அறிக்கை தரும்படி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அதுவரை, உட்கார்ந்து தரிசனம் செய்வதற்கான 100 ரூபாய் சிறப்புக் கட்டணம் வசூலிப்பதை செயல்படுத்த வேண்டாம் என்று திருக்கோயில் நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் ஹோமங்களும், யாகங்களும் நடத்துவது அறங்காவலர் குழுவின்



முடிவின்படி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இது திருக்கோயிலின் கட்டுமானத்திற்கும், பக்தர்களின் நலனுக்கும் சம்பந்தப்பட்டது என்பதால், ஆணையர் அவர்களுடைய அறிக்கை பெறப்பட்ட பின்பு இந்த ஹோமங்களும், யாகங்களும் திருக்கோயில் வளாகத்திற்குள்ளேயே நடத்தப்படுவது குறித்தும், 100 ரூபாய் சிறப்புக் கட்டணம் வசூலிப்பது குறித்தும் முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) என்ன, ராதாகிருஷ்ணன் சொல்லுங்கள். தெளிவான பதிலை, அவ்வளவு விவரமாக அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் இல்லையா?

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் காலமாக யாகங்கள், ஹோமங்கள் நடந்து வந்தன. இப்போதுதான் பக்தர்களுக்கு அது இடைஞ்சலாக இருக்கும் என்று அறங்காவலர் குழு முடிவு செய்தது என்று சொன்னால், இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். ஆகவே, இந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தெளிவான அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். கோயிலினுடைய அந்தப் புனிதத் தன்மையைக் காப்பாற்ற வேண்டும், அந்தக் கோயிலினுடைய கட்டடத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக வேண்டித்தான் அப்படிச் செய்திருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10–40*

## 3. கவன ஈர்ப்பு

### அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், கதவம்பட்டி கிராமத்தில் காலரா நோயால் பெண் இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ந. சுப்ரமணியன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ந. சுப்ரமணியன்.

***திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 26-3-2007 அன்று எனது தொகுதியில், கதவம்பட்டி என்ற கிராமத்தில் காலரா நோய் ஏற்பட்டு -- இந்த விவர அறிக்கை கொடுத்துள்ளார்கள். இந்த விவர அறிக்கையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். . :

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கவனத்தை ஈர்க்கிறேன் என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ந. சுப்ரமணியன்:** "புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் கதவம்பட்டி கிராமத்தில் காலரா நோய் பரவி ஓர் ஆதி திராவிடப் பெண் இறந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

## அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், கதவம்பட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சார்ந்த 7 நபர்கள், பழைய ரசம் மற்றும் முட்டைக் கோசு கலந்து சாப்பிட்டதால் உணவு ஒவ்வாமை ஏற்பட்டு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டுள்ளது. நீர் மாசுபட்டதால் தொற்று ஏற்பட்டு இந்நிகழ்வு ஏற்படவில்லை என்பது களப் பணியாளர்கள் அடங்கிய மருத்துவக் குழுவால் கண்டறியப்பட்டுள்ளது.

பாதிப்பு ஏற்பட்ட கதவம்பட்டி கிராமத்தின் விவரம்:

| | | |
|---|---|---|
| மொத்த மக்கட்தொகை | : | 612 (ஆண்கள் 300, பெண்கள் 312) |
| மொத்த வீடுகள் | : | 86 |
| மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி | : | 1 |
| கிணறு | : | 1 |

வயிற்றுப் போக்கு ஏற்பட்ட விவரம்:

பாதிப்புகள்-9 (ஆண் 1, பெண்கள் 8)





இறப்பு-1 (பெண்) திருமதி தங்கை, வயது 60, கணவர் பெயர் திரு. ஆறுமுகம்.

பாதிப்பு ஏற்பட்ட நாட்கள் 26, 27 மற்றும் 29-3-2007

### பாதிப்பு விவரம்

கதவம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்த 7 நபர்களுக்கு உணவு ஒவ்வாமையின் காரணமாக வாந்தியுடன்கூடிய வயிற்றுப்போக்கின் அறிகுறியுடன் நோய்ப்பட்டனர்.

திரு. ஆறுமுகத்தின் மனைவி, திருமதி தங்கை (வயது 60) 26-3-2007 அன்று காலை வாந்தியுடன்கூடிய வயிற்றுப்போக்கின் அறிகுறியுடன் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 26-3-2007 இரவே சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். 27-3-2007 அன்று திரு. ஆறுமுகம் (வயது 65) வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு அறிகுறியுடன் புதுக்கோட்டை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதே குடும்பத்தைச் சார்ந்த இராமலிங்கத்தின் மகள் (முத்துலட்சுமி (வயது 12) வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு அறிகுறியுடன் 27-3-2007 அன்று புதுக்கோட்டை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

29-3-2007 அன்று பரம்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவக் குழுவால் அக்குடும்பத்தின் மற்ற நபர்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வயிற்றுப்போக்கிற்கான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அக்கிராமத்தைச் சேர்ந்த மூக்காயி மற்றும் சொர்ணலட்சுமி பீதியின் காரணமாக 29-3-2007 அன்று பரம்பூர் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் புதுக்கோட்டை மாவட்ட தலைமை மருத்துவமனையில் பரிந்துரையுடன் அனுமதிக்கப்பட்டனர்.

31-3-2007 அன்று புதுக்கோட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற கதவம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் நலமுடன் வீடு திரும்பினர். தற்சமயம் பாதிப்புகள் ஏதுமில்லை.

### அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்

கதவம்பட்டி கிராமத்தில் பாதிப்பு ஏற்பட்டவுடன் மாவட்ட சுகாதாரத் துணை இயக்குநரின் மேற்பார்வையில் மாவட்ட கண்காணிப்புக் குழு,

பகுதி கண்காணிப்புக் குழு மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த இரண்டு மருத்துவர்கள் தலைமையில் 37 களப் பணியாளர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு கிராமம் முழுக்க தீவிர கண்காணிப்புப் பணியில் களப் பணியாளர்கள் ஈடுபட்டனர். இறந்தவரின் (திருமதி தங்கை) குடும்பத்தைச் சார்ந்த ஆறு நபர்களுக்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே சிகிச்சை அளித்தனர். மேலும், மருத்துவக் குழுவினால் அக்கிராம மக்களுக்குச் சுகாதார நலக் கல்வி போதிக்கப்பட்டது. மருத்துவக் குழு அக்கிராமத்திலுள்ள வீடுகள் மற்றும் சுற்றுப்புறத்தை பிளீச்சிங் பவுடர் மற்றும் பினாயில் கொண்டு கிருமி நாசினம் செய்யப்பட்டது. அக்கிராமத்திலுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், கிணறும் குளோரினேஷன் செய்யப்பட்டது. தற்சமயம் பரம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த இரண்டு மருத்துவர்கள் தலைமையில் சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் மூன்று கிராம சுகாதாரச் செவிலியர்கள் கொண்ட மருத்துவக் குழு அக்கிராமத்தில் முகாமிட்டு கிராமம் முழுக்கக் கண்காணித்து வருகின்றது. மேலும், அக்கிராமத்தில் பாதிப்பு ஏதுமில்லை.

தீவிர மேல் சிகிச்சைக்குப் பின் பாதிக்கப்பட்ட அனைவரும் நலமுடன் வீடு திரும்பியுள்ளனர்.

29-03-2007-க்குப் பிறகு நிகழ்வுகள் ஏதும் இல்லை. தீவிர கண்காணிப்புப் பணியால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தேவையான அளவு உப்பு சர்க்கரைக் கரைசல் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. உடனடி நடவடிக்கையாக பொதுமக்களே தயார் செய்து உபயோகிக்க போதிய நலக் கல்வி போதிக்கப்பட்டுள்ளது. மேலும், தேவையான மருந்து மாத்திரைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

**காலரா நோய் அறிகுறியில்லை**

**அகில உலக சுகாதார நிறுவனத்தின் வரையறையின்படி**

*(1)* இதுவரை காலரா இல்லாப் பகுதியில் 5 வயது அல்லது அதற்கும் மேற்பட்ட வயதில் ஒருவர் தீவிர நீரிழப்பு நிலையிலோ அல்லது தீவிர தண்ணீரான பேதியாலோ மரணம் அடைந்தால் காலரா நோய் பாதிப்பு என உறுதி செய்யப்படும்.

*(2)* காலரா கொள்ளை நோயாக இருக்கும் தருணத்தில், 5 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதில் ஒருவர் வாந்தியுடனோ, வாந்தி





இல்லாமலோ தீவிர வயிற்றுப்போக்கால் அவதிப்பட்டால் காலரா நோய் என உறுதி செய்யலாம்.

*(3)* விப்ரியோ காலரா 01 – மலத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டால், காலரா நோய் உறுதி செய்யப்படுகிறது.

கதவம்பட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தில் நடந்த நிகழ்வு உணவு ஒவ்வாமையால் வாந்தி மற்றும் தீவிர வயிற்றுப்போக்காலே இந்நிகழ்வு ஏற்பட்டுள்ளது. இந்நிகழ்வு காலரா நோயினால் ஏற்படவில்லை.

தமிழ்நாடு முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து நோய் முன் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, தீவிர கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்ரமணியன், இப்போது விவர அறிக்கையில் உள்ளதைப்பற்றி கேளுங்கள்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். அதில் ஒரே குடும்பத்தைச் சார்ந்த எட்டு நபர்களுக்கு காலரா நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. நான்கு குடும்பங்களைச் சார்ந்தவர்கள். ஒரே இனத்தைச் சார்ந்தவர்களும் அல்ல. அதில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த சொர்ணம்மாள் என்பவரும் அடங்குவார். காலத்தே உரிய மருத்துவ உதவி செய்திருந்தால் நிச்சயமாக அந்த ஏழை விவசாயி, ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த தங்காள் என்ற அப்பாவி தமிழ்ப் பெண்ணை காப்பாற்றியிருக்கலாம். சிகிச்சை உரிய நேரத்தில் அளிக்கப்படவில்லை. இதேபோன்று எங்கள் பகுதியில் கடந்த தீபாவளிக்கு முதல் நாள் அன்று மேலூர் பகுதியைச் சார்ந்த 26 நபர்களுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் வைத்து அவர்களைக் காப்பாற்றுவதற்குப் போராடினார்கள். இதுபோன்று அடிக்கடி எனது பகுதியில் வயிற்றுப்போக்கு, வாந்தி ஏற்படுகிறது. அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய மருத்துவர்களும் இல்லை, மருந்துகளும் இல்லை. அதேபோன்று கதவம்பட்டியிலிருந்து 16 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள இலுப்பூர் பொது மருத்துவமனையிலும் நான்கு மருத்துவர்கள் இருந்தும், அவர்கள் உரிய நேரத்தில் வருவதில்லை. இன்றுகூட இந்த விவாதம் வருவதால் தொலைபேசிமூலம் நான் கேட்டேன். காலை 8-30 மணி வரை நான்கு மருத்துவர்களும் ஆஸ்பத்திரிக்கு வரவில்லை. அங்கு நான்கு

மருத்துவர்கள் இருந்தும் யாரும் இரவு நேரத்தில் தங்கி சிகிச்சை கொடுப்பதும் இல்லை. போதிய செவிலியர்களும் இல்லை. போதிய மருத்துவர்களும் இல்லை. அங்கு அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் X-ray எடுக்கமுடியவில்லை. X-ray எடுப்பதற்கு புதுக்கோட்டைக்கு அனுப்பிவிடுகிறார்கள். Scan வசதியும் இல்லை. பாம்பூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் டாக்டரும், செவிலியரும் ஒழுங்காக ஆஸ்பத்திரிக்கு வருவது கிடையாது, இந்த இரண்டு மருத்துவமனைகளுக்கும் போதிய மருத்துவர்களும், மருந்துகளும் உடனடியாக வழங்க வேண்டும். வருமுன் காப்போம் திட்டம் என்று சொல்கிறீர்கள். இதுபோல் காலத்தே அவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்திருந்தால் நிச்சயமாக ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த அந்த தங்கை என்ற அந்த 60 வயது அப்பாவிப் பெண்ணைக் காப்பாற்றியிருக்கலாம். இது குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட நபர்கள் மொத்தம் ஒன்பது பேர். அதிலே இறந்தவர் தங்கை என்ற 60 வயதுப் பெண்மணி. அவர்கள் காலராவால் இறக்கவில்லை. Food poisoning தான் நடந்திருக்கிறது. Food poisoning நடந்தவுடனேயே அவர்கள் மற்றும் அவர்கள் பக்கத்தில் உள்ள வீட்டைச் சார்ந்தவர்கள் எல்லாம் இலுப்பூர் அரசு மருத்துவமனைக்குப் போய் இருக்கிறார்கள். ஒரு நபர், தங்கை மட்டும் அங்கு இறந்திருக்கிறார். மீதம் உள்ள அத்தனை பேர்களையும் புதுக்கோட்டை மருத்துவமனைக்கு அனுப்பி அவர்களுடைய உயிர் காக்கப்பட்டு ஊருக்குத் திருப்பி அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். வேறு எந்தவிதமான பிரச்சினையும் இப்போது அங்கு இல்லை. அது காலரா அல்ல. Food poisoning தான். அதற்கு வேண்டிய டெஸ்ட் எல்லாம் எடுத்து அந்த ரிப்போர்ட் எல்லாம் சேர்த்து அனுப்பியிருக்கிறார்கள். இருந்தாலும் இதுபோன்ற நிகழ்வுகள் வருகின்ற நேரத்தில், இன்னும் வேகமாக நாங்கள் பணியாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பொதுவாக அரசு மருத்துவமனையிலே உடம்பு மிகவும் சரியில்லை, கொஞ்சம் serious-ஆக இருக்கும் என்று சொன்னால், Headquarters மருத்துவமனைக்கு அனுப்புவதுதான் வழக்கம். ஆகவே, அந்த



அடிப்படையிலே புதுக்கோட்டைக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஒரு நபர் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் இறந்திருக்கிறார்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, food poisoning என்றாலும், அடிக்கடி இதேமாதிரி அந்தப் பகுதியிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் அதைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். போதிய மருந்தும், மருத்துவர்களும் அந்த மருத்துவமனைகளுக்கெல்லாம் அவசியம் அளிக்கப்பட வேண்டும். மேலும், இறந்த அந்த தங்கை என்பவரின் குடும்பத்திற்கு நிவாரண உதவிகள் உடனடியாக அளிக்கப்பட வேண்டும். சிறப்பு மருத்துவ முகாம் ஒன்று அந்தப் பகுதியிலே நடத்தி, உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். மேலும், இதேபோன்று விராலிமலை மற்றும் இலுப்பூரிலுள்ள . . . ,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு subject–ஐப்பற்றி மட்டும் கேளுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ந. சுப்ரமணியன்:** பொது மருத்துவமனைகளிலும் இதேபோன்று . . . *(குறுக்கீடு)* என்னுடைய தொகுதிதான். அதனால் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விராலிமலை உங்கள் தொகுதியிலா வருகிறது? *(குறுக்கீடுகள்)* சரி, சொல்லுங்கள்.

**திரு. ந. சுப்ரமணியன்:** போதிய மருந்துகளும், மருத்துவர்களும் இல்லாமல் அடிக்கடி இதுபோன்று உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. இதனைத் தடுத்திட நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்துகளே இல்லை என்று சொல்வது தவறான செய்தி. மருந்து ஸ்டாக் பற்றி தினசரி எங்களுக்கு கணக்கு கொடுத்துவிடுவார்கள். ஆகவே, மருந்து இல்லாமல் இருக்காது. Food poisoning ஏற்பட்ட நேரத்திலே, கொஞ்சம் காலதாமதமாக

மருத்துவமனைக்கு வந்திருப்பார். ஆகவே, இறப்பு ஏற்பட்டிருக்கிறது. மீதி அத்தனை பேருக்குமே food poisoning சரி செய்யப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மருத்துவர்களைச் சரியான நேரத்திற்கு வர வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறோம். இந்த அரசாங்கம், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஏறத்தாழ 95 சதவிகிதம் அளவிற்கு மருத்துவப் பணியிடங்களை நிரப்பி இருக்கிறது. இன்னும் மருத்துவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளை கவனமாக இந்த அரசாங்கம் வழங்கும்.

## 4. அறிவிப்புகள்

### (அ) கவன ஈர்ப்பைப் பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து அடுத்த கவன ஈர்ப்பு குறித்து ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு, அமைச்சர் இல்லை என்பதால் பிறிதொரு நாள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### (ஆ) தமிழ்நாடு காமன்வெல்த் பாராளுமன்ற சங்கப் பொதுக் குழுக் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் இன்று 16-4-2007 மாலை 4-00 மணிக்கு தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாவது தளத்தில், மாநாட்டுக் கூட்ட மண்டபத்தில் நடைபெற உள்ளது. அப்பொதுக் குழுக் கூட்டத்தில், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், என்ன சொல்லுங்கள்.





**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 13-4-2007 அன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் வெளிநடப்பு செய்ததற்குப் பிறகு, நீங்கள் ஓர் அறிவிப்பைச் சட்டமன்றத்திலே அறிவித்தீர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் மட்டும்தான் நாளையிலிருந்து பேச முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, அதிலே நீங்கள் முடிவு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை தொடங்கிய நாளிலிருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின் பேரிலேயும், தங்களோடு கலந்து பேசிய வகையிலேயும், பிரதான எதிர்க் கட்சிக்கு ஒவ்வொரு மானியத்தின்போதும் இரண்டு உறுப்பினர்கள் பேசுவதற்கு நாம் வாய்ப்பு அளித்துதான் வந்தோம். இன்னும் சொல்லப் போனால், 13-4-2007 அன்று அதிமுகவைச் சேர்ந்த ஆ. அருண்மொழிதேவன் என்ற உறுப்பினர் 25 நிமிடங்கள் பேசியிருக்கிறார். திரு. ஞா. செந்தமிழன், 15 நிமிடங்கள் பேசியிருக்கிறார். ஆக, அதிமுகவைப் பொறுத்தவரையிலே 40 நிமிடங்கள் அன்றையதினம் பேசியிருக்கிறார்கள். இவ்வளவு நேரம் பேசியதற்குப் பிறகு, அவர்கள் வெளிநடப்பு செய்வதைப்பற்றி கவலையில்லை. ஆட்சியின்மீது குறை சொல்லலாம் அல்லது தனிப்பட்ட அமைச்சர்மீது குறை சொல்லலாம். ஆனால், எங்களுக்கு நேரம் ஒதுக்கவில்லை என்று சொல்லி வெளியேறுவது என்பது முறையல்ல. ஏற்கெனவே, அவர்களுடைய கட்சித் தலைவர் அவர்கள்கூட, 1-1/2 மணி நேரம், 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் தேதி, திங்கட்கிழமை, கிட்டத்தட்ட 435 ஆவது பக்கத்திலிருந்து 506 பக்கம் வரையில் பேசிவிட்டு, 1-1/2 மணி நேரம் பேசி விட்டு, வெளியே போய், தி.மு.க. ஆட்சியிலே எங்களுக்குப் பேசுவதற்கு நேரமே கொடுப்பதில்லை என்று சொல்லிவிட்டுப் போனார்கள். இப்படித் திட்டமிட்டு, இந்த ஆட்சியில் அ.தி.மு.க.காரர்களுக்குப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை என்ற ஒரு பிரச்சாரம் நடைபெறுகின்ற காரணத்தினால்தான், அதைத் தடுப்பதற்காக அன்றையதினம் நானே எழுந்து, இப்படி ஒரு தவறான பிரச்சாரம் செய்கின்ற காரணத்தினாலே, இனிமேல் ஒவ்வொரு கட்சிக்கும்

ஓர் உறுப்பினர்தான் பேச தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேனே தவிர, வாய்ப்பு கொடுக்கக்கூடாது என்பது அல்ல. (குறுக்கீடு)

முற்பகல் 10–50

## (இ) உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரா. விசுவநாதன், சி.வி. சண்முகம் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ. பன்னீர் செல்வம், சொல்லுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த 5–4–2007 அன்று சட்டப் பேரவையில் இரு தரப்பிலும் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடியும்வரை தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டதாக மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்கி இருக்கின்றீர்கள். கடந்த 10 நாட்களாக அந்த நான்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கின்றார்கள். நான், அந்தப் பிரச்சினைக்குள்ளே செல்லவில்லை. ஏனென்று சொன்னால், இரு தரப்பிலும் பிரச்சினை இருந்தது, அமளி இருந்தது. நாங்கள் உணர்ச்சிவசப்பட்டதற்குக் காரணம் இருந்தது. இருந்தாலும் பெயர் சொல்ல வேண்டும், மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும் என்று பாடி மறைந்தும் மறையாப் புகழ் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை விமர்சித்துப் பேசியதன் அடிப்படையில்தான் உணர்ச்சிவசப்படவேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தது. அந்தப் பகுதியிலும் மாண்புமிகு அமைச்சர்கள் உட்பட அனைத்து உறுப்பினர்களும் உணர்ச்சிவசப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், தண்டனை எங்களுக்கு மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கின்றது. 10 தினங்களாக, அந்த 4 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஜனநாயகக் கடமைகளை ஆற்ற முடியாத நிலை இன்றைக்குவரை நீடித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையை மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எத்தனையோ நாள் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால், 5 ஆம் தேதி நடைபெற்ற சம்பவம், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கே தெரியும், சில நேரங்களிலே இடத்தை விட்டு இடம் வந்து, சபாநாயகர் பக்கத்திலேகூட உட்கார்ந்து கொண்டு, நின்று கொண்டு அவரிடத்திலேகூட வாதாடுகிறீர்கள். அதைக்கூட பெரிதுபடுத்தவில்லை. ஆனால், எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர், அவரோடு சேர்ந்து சில பேர், கையிலே செருப்பைத் தூக்கிக்கொண்டு ஆளுங்கட்சிக்காரர்களை நோக்கி வருவது என்பது முறைதானா? இதற்கு முன்னாலே எப்பொழுதாவது இந்தச் சட்டமன்றத்திலே இப்படி நடந்திருக்கிறதா? இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் பேரவைத் தலைவர் வேறு வழி இல்லாமல் நடவடிக்கை எடுத்தாரே தவிர, யாரையும் இந்த அவையிலிருந்து நீக்கி வைக்க வேண்டும் என்று சபாநாயகருக்கும் எண்ணம் இல்லை, ஆளுங்கட்சியைச் சேர்ந்த எங்களுக்கும் அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் வருத்தம் தெரிவித்தால் அதைப்பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பரிசீலிக்கலாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்தில், ஏதோ ஒரு தரப்பிலிருந்து, அதாவது எங்கள் தரப்பிலிருந்துதான் அந்தச் செயல் செய்யப்பட்டதாகச் சொல்கின்றார்கள். ஆனால், ஆளுங்கட்சித் தரப்பிலே இருந்து எம்மாதிரியான செயல்கள் நடைபெற்றது என்பதை நாங்களும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டுதான் இருந்தோம். ஆனால், தீர்ப்பு வழங்கப்பட்டது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த சப்ஜெக்ட்டுக்குள்ளே போகாதீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும் என்று மட்டும் கேளுங்கள். Don't enter into that field. உங்களுக்கு என்ன வேண்டும் என்று மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** முடித்துவிடுகிறேன். அதற்காகத்தான், நான் பிரதிவாதங்களுக்கு உள்ளே செல்லவேண்டாம் என்று முன்னாலேயே சொன்னேன். முன்பே சொல்லிவிட்டுத்தான் நான்

எங்களுடைய கோரிக்கையைச் சொன்னேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரதிவாதத்திற்கு உள்ளே போனதால் நானும் என்னுடைய பதிலைச் சொல்லவேண்டிய கடமை ஏற்பட்டது. ஆகவே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உணர்ச்சிவசப்பட வேண்டாம்: நாங்கள் உணர்ச்சிவசப்பட்டோம் என்கிறீர்கள். உணர்ச்சிவசப்படுவது எல்லாம் சபையிலேகூடாது. வெளியிலே போய் செய்துகொள்ள வேண்டும். (கூச்சல்–குழப்பம்) சொல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கடந்த 5 ஆம் தேதி நடைபெற்ற சம்பவம் குறித்துச் சொன்னார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை ஆற்றுவதை, அவர்கள் உரிமையை நிலைநாட்டுவதை இந்த அவையிலே யாருமே அநேகமாக மறுப்பதில்லை. ஆனாலும், அவர்கள் வந்து இந்த அவையிலே கடமையாற்ற வேண்டும் என்று, சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலே எல்லோருக்குமே அந்தக் கருத்து இருக்கத்தான் செய்யும். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், 5 ஆம் தேதி நடைபெற்ற சம்பவத்தைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். அதிலே அவர்கள் உணர்ச்சிவசப்பட்ட கருத்துகளைப்பற்றிச் சொல்லுகிறார். நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அ.தி.மு.க. உறுப்பினர்கள் கருத்துகளைச் சொல்லும்போது துணைத் தலைவரோ அல்லது கொறடாவோ அல்லது மற்ற முன்னணி, முக்கிய மூத்த உறுப்பினர்களோ அவர்கள் கருத்துகளைப் பதிவு செய்வது அல்லது அவர்கள் இந்த ஆட்சியைப் பற்றி எதிர்த்துச் சொல்வது அல்லது எதிர்க்கட்சிகளை விமர்சனம் செய்வது, அதெல்லாம்கூட ஒன்றும் பிரச்சினைக்குரியதாக நாங்கள் கருதவில்லை. ஆனால், ஒட்டுமொத்தமாக எழுந்து கூச்சலிடுவதும், குழப்பம் விளைவிப்பதும், சபாநாயகர் இருக்கைக்கு அருகில் வருவதும், சைகைகள்மூலமாக வேறுவிதமாக மனதைப் புண்படுத்துவதும், இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. உட்கார்ந்துகொண்டே பல செய்திகளைச் சொல்வது அல்லது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோது, (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் பேசுகிறபோது அவர்களைக் கிண்டல் செய்வது, கேலி செய்வது என்கிற முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். (குறுக்கீடுகள்)



*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக் கொண்டிருக்கிறார் இல்லையா? நீங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. செங்கோட்டையன் நான் சொல்வதைக் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதோ, இப்பொழுதே தெரிந்துகொள்ளலாம் உதாரணத்திற்கு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களிடம் இருக்கக்கூடிய குறைபாட்டை நான் சொல்கிறேன். கேளுங்கள். ஒட்டுமொத்தமாக இப்படி 60 உறுப்பினர்களும் எழுந்து நிற்பது: ஒட்டுமொத்தமாகக் கத்துவது; இவையெல்லாம் நல்ல முறையில்லை. (குறுக்கீடுகள்) அது நல்ல பழக்கமில்லை. உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு கொடுக்கிறேன்; Supplementary Questions எத்தனையோ கேட்பதற்கு உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். அத்தனையும் நான் கொடுத்தும், அதிக நேரம் ஒதுக்கியும் நீங்கள் பேசிவிட்டு, கடைசியிலே, 'நேரம் ஒதுக்கவில்லை, நேரம் ஒதுக்கவில்லை' என்று ஆவலாதி சொல்லிவிட்டுப்போகிறீர்கள்; கோஷம் போட்டுக்கொண்டு போகிறீர்கள்; உட்கார்ந்துகொண்டு பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) அவை மரபை அடிக்கடி மீறக்கூடியதே இந்த எதிர்க்கட்சிதான். அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியான காரியங்கள் நடைபெறக் கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பமாகவும் மற்றவர்களுடைய எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது என்பதுதான் என் கருத்து. இந்த அவையில் ஒரு கண்ணியமான முறையிலே, பிரச்சினையில்லாத முறையிலே உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை, எதிர் கருத்துகளை வலுவாகப் பதிவு செய்வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது என்றுதான் நான் நம்புகிறேன், கருதுகிறேன். அந்த வகையிலே செயல்படுத்துவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமேயொழிய, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிற இந்தக் கருத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதற்காகத்தான் நான் எழுந்தேனே தவிர, நான் குற்றம் சுமத்துவதற்காக எழவில்லை.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறபொழுது, இரண்டு பேருக்கும் சமமாகத் தண்டனை

வழங்கவில்லை என்று சொல்கிறார். பிரச்சினை எப்படி வந்தது, ஏன் வந்தது என்பதையெல்லாம், அன்றைக்கு ஆய்வு செய்துதான் தாங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். ஆகவே, அண்ணா அவர்களுடைய கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, மறப்போம், மன்னிப்போம் என்ற அடிப்படையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமே தவிர, திரும்பப் பிரச்சினையைத் திசை திருப்பி, அதன்மீது ஒரு தீர்வு சொல்ல முடியாமல் இருப்பது என்பது நல்லதாக எனக்குப் படவில்லை, ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அன்று நடந்த சம்பவங்களைப் பற்றிய கருத்தைச் சொல்லி, அதன்மீது தீர்வு காண்பதற்கான வகையிலே அவர் உடன்பட்டு, அந்த விஷயங்களை இங்கே சொன்னால் அதன்மீது மறுபரிசீலனை செய்து, அவர்களை அழைப்பதைப் "பற்றி தாங்கள் சிந்திக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி, பேசுங்கள்.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆம் தேதி அன்று இந்தச் சபையிலே நடைபெற்ற அந்த நிகழ்வு யாரும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு மோசமான நிகழ்ச்சி என்பதிலே மாறுபட்ட கருத்தில்லை. கடந்த 5 ஆம் தேதியிலிருந்து அந்த நிகழ்ச்சிக்கு சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய 4 உறுப்பினர்கள் இந்தச் சபை நடவடிக்கையில் பங்கெடுக்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டு, இன்றைக்கு அவர்கள் வெளியே நிற்கிறார்கள். அவர்கள் செய்த இந்தத் தவறை உணர்வதற்கு இந்தத் தண்டனைக் காலம் அவர்களுக்கு நிச்சயமாகப் பயன்பட்டு இருக்கும் என்று நானும் கருதுகிறேன். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிய மனதுபடைத்து பல்வேறு செய்திகளை அறிவித்து வரக்கூடியவர்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்த அதனுடைய துணைத் தலைவர் அவர்கள் 'இனிமேல் இந்த அவையில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காது' என்ற உறுதியைத் தந்தால் நீங்கள் அதைப் பரிசீலித்து (குறுக்கீடுகள்) பரிசீலித்து (குறுக்கீடுகள்) அவர்களுடைய தண்டனையைத் திரும்பப் பெற்று, சபை நடவடிக்கைகளிலே பங்கெடுப்பதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மன்னிப்பு கேட்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) சபையிலே எப்போது பார்த்தாலும் செருப்பைத் தூக்கிக் கொண்டிருந்தால் சபை எப்படி நடக்கும்? (குறுக்கீடுகள்) இனிமேல் அப்படிப்பட்ட நிகழ்வு



நடக்காது என்று அவர்கள் உறுதியளித்தால் நீங்கள் இந்தத் தண்டனையை விலக்கிக்கொண்டு, அவர்கள் சபை நடவடிக்கையிலே பங்கெடுக்க அனுமதிக்க பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வினுடைய நான்கு சட்டப் பேரவை உறுப்பினர்கள் 5 ஆம் தேதியன்று சட்டப் பேரவையிலே நடந்துகொண்டவிதம் முறைகேடானது என்ற அடிப்படையில் தாங்கள் ஒரு அரிய தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். ஆனால், தொடர்ந்து அ.தி.மு.க. சார்பிலே, இடை நீக்கம் செய்யப்பட்ட நால்வரையும் மீண்டும் அவைக்கு அழைக்க வேண்டும்; அவர்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கு, தொகுதி மக்களுக்கானப் பணிகளையாற்றுவதற்கு, சட்டமன்றத்திலே ஜனநாயகரீதியாக தங்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை அவர்கள் இரண்டு நாட்களாக வலியுறுத்தி வருகிறார்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையிலே, எதையும் பரிசீலனை செய்து, நியாயமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல முதலமைச்சர் என்பதை எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற அ.தி.மு.க.வினரும் அறிவீர்கள். அதே வேளையில், நடந்த சம்பவம் என்பது அத்துமீறிய செயல், வரம்பு மீறிய, மரபு மீறிய செயல் என்பதை அ.தி.மு.க. நண்பர்கள் தயவுசெய்து உணர வேண்டும் என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் அப்படிப்பட்ட நிகழ்வுகள் இந்த அவையிலே நடக்கக் கூடாது—யாராக இருந்தாலும், அது நாங்களாக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும்—அவையினுடைய கண்ணியத்தை மீறக்கூடிய வகையில், கட்டுப்பாடற்ற செயலிலே ஈடுபடமாட்டோம் என்ற உத்தரவாதத்தை அ.தி.மு.க. துணைத் தலைவர் எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த வாக்குறுதியின் அடிப்படையிலே தொடர்ந்து மீண்டும் அவர்கள் அவைக்கு வந்து ஜனநாயக ரீதியிலே கடமையாற்றுவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் அனுமதிக்க வேண்டும்; அந்த வாக்குறுதியோடு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து அமர்கிறேன்.

[2007 ஏப்ரல் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மன்றத்தில், பல ஆயிரக்கணக்கான மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி வகித்துக் கொண்டிருக்கின்றார்கள். சட்டமன்றத் தேர்தலுக்கு நின்று, ஜனநாயகத்தின் அடிப்படையிலே மக்களிடத்திலே வாக்குக் கேட்டு, வெற்றி பெற்று, சுமார் இரண்டு இலட்சம் மக்களுக்குப் பிரதிநிதிகளாக உறுப்பினர்கள் இங்கே வருகிறார்கள். இரண்டு இலட்சம் மக்களுக்குப் பிரதிநிதிகளாக வருகின்ற தாங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற முறையை சட்டமன்றத்திலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் அறிந்துகொள்ள வேண்டியது; தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இந்த மன்றத்திலே பல்வேறு நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இப்போது இது நடந்திருக்கிறது. சென்ற முறை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, எங்களுடைய உறுப்பினர்கள் பல முறை இதுபோன்று நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். நாங்களும் பல முறை வேண்டுகோள்கள் வைத்திருக்கிறோம். இங்கே நடைபெற்ற ஒரு நிகழ்வுக்காக எங்களுடைய உறுப்பினர் வேலூர் ஞானசேகரன் அவர்களும், அன்றைய காங்கிரஸ் உறுப்பினர் ரங்கநாதன் அவர்களும் கைது செய்யப்பட்டார்கள். இவை எல்லாம் வரலாறு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களை ஒரு மாத காலம் இந்த அவையைவிட்டு நீக்கி வைத்தார்கள். நாங்களும் இங்கிருந்து கேட்டுக்கொண்டே இருந்தோம். அவரை அனுமதிக்க வைக்க முடியவில்லை. ஒரு குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இப்போது சில நாட்கள் அவர்களை இந்த அவையைவிட்டு நீக்கி வைத்திருக்கிறீர்கள். இருந்தாலும், கருணை உள்ளம்கொண்ட முதலமைச்சர் அவர்கள் நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவருடைய கோரிக்கையை ஏற்று, அவர், இனிமேல் இப்படிப்பட்ட தகாத செயல்கள் எல்லாம் நடைபெறாது என்ற வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டு (குறுக்கீடுகள்) வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டு, நீங்கள் இந்த நான்கு உறுப்பினர்களையும் அவையிலே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.



2007 ஏப்ரல் 16]

**திரு. டி. சுதர்சனம்:** அவர்களுடைய தொகுதியினுடைய ஜனநாயக உரிமையைக் காப்பாற்றுகின்ற வகையிலே பணியாற்றுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து அமர்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இங்கு பேசியபோது இரு தரப்பிலும் அமளி துமளி ஏற்பட்டது; நான் அந்தப் பிரச்சினைக்குள்ளே போகவில்லை என்றுதான் பரந்த நோக்கத்தோடு பேசினேன். அன்று அவையில் நடந்தது என்ன என்பதை அனைவரும் நன்றாகவே அறிவார்கள். மாண்புமிகு அமைச்சர்கூட அந்த நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு, தகாத வார்த்தைகளைப் பேசியதையும், சைகைமூலமாக தெரியப்படுத்தியதையும் நாங்களும் கண்கூடாகக் கண்டு கொண்டிருந்தோம். ஏற்கெனவே நம்முடைய அனைத்துக் கட்சியினுடைய தலைவர்கள், ஐந்தாம் தேதி நாங்கள் வெளியேற்றப்பட்ட உடன், அனைவருமே இதே கருத்தைப் பதிவு செய்தீர்கள். மீண்டும் டேப்பிலே சொன்னது மாதிரி, ஒரே மாதிரி அங்கேயிருந்து இங்கே வரைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி அந்த ஒரே வார்த்தையை, முடிக்கும்போது 'துணைத் தலைவர் வருத்தம் தெரிவித்தால்' (குறுக்கீடுகள்) என்கிற ஒரே வார்த்தையைச் சொல்வதில் இவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறீர்கள் என்பதை ... (குறுக்கீடுகள்) இல்லை, என்ன இது நியாயம்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

அதுமட்டுமல்ல, ஜனநாயகத்தினுடைய ஒரு தூணாக இருக்கிற, பத்திரிகையாளர்கள்மீது மிகப்பெரிய வழக்கு. அந்த நேரத்திலே நாங்களெல்லாம் இதே மாதிரி எழுந்து கேட்டோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் கேட்டோம்—(குறுக்கீடு) வழக்கிலேகூட நான் மறந்துவிட்டேன்—கடந்த ஆட்சிக்காலத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை, 'குண்டுக்கட்டாகத் தூக்கிப்போனார்கள்', 'கூண்டிலே ஏற்றி நிறுத்தினார்கள்', "இங்கே குண்டுக்கட்டாகத் தூக்கினார்கள், அங்கே கூண்டிலே ஏற்றி நிறுத்தினார்கள்." என்பதுதான். இதெல்லாம் வரலாறு.

ஒரு பத்திரிகையாளரை, மரியாதைக்குரிய அருமை நண்பர் முரசொலி செல்வம் அவர்களை, எங்கே எல்லாம் தேடி அலைந்து பிடித்து அவரைக் கூண்டிலே நிறுத்தினார்கள் என்பது, கடந்த ஐந்து ஆண்டு கால வரலாறு; பத்திரிகையாளர்மீது தொடுத்த வரலாறு; அப்பொழுதும் இதை நாங்கள் கேட்டோம், பேரவைத் தலைவரைக் கேட்டோம், முன்னாள் முதலமைச்சர் அவர்களைக் கேட்டோம். நீங்கள் தயவுசெய்து மறுபரிசீலனை செய்யுங்கள், மீண்டும் அவைக்கு வந்து அவர்கள் பணியாற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை அன்றும் வைத்தோம், ஏற்றுக்கொள்ளவில்லை, நிராகரித்தீர்கள். ஆனால், உங்களுக்காக நாங்கள்

[திரு. ஜி.கே. மணி] [2007 ஏப்ரல் 16

கேட்கிறோம். பேரவைத் தலைவர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், இப்படி நடக்காது என்று, வாக்குறுதியாக ஒரு வார்த்தைகூட சொல்வதற்கு மனம் இல்லாத நீங்கள், எங்களைப் பார்த்து, 'சொல்வதைத் திருப்பிச் சொல்லும் கிளிப் பிள்ளை' என்று சொல்கிறீர்கள். நீங்கள் சொல்லக்கூடியவாறு 'கிளிப் பிள்ளைகளாக' இருப்போமே தவிர, 'சிறகொடிந்த பறவைகளாக' நாங்கள் இருக்கமாட்டோம்.

அதேநேரத்தில், ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும், தனிக் கொள்கை இருக்கிறது, இலட்சியங்கள் இருக்கின்றன; நிலைப்பாடுகள் இருக்கின்றன; அவரவர்கள் சுயமாகச் செயல்படுகிறோம். உங்களைப்போல அல்ல என்பதை இங்கே நான் அன்போடு தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையினுடைய பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், அவர்களே குறிப்பிட்டதைப்போன்று உணர்ச்சிவசப்பட்டு, சில சம்பவங்கள் நடந்தன என்பதை நாங்களும் உணர்ந்தோம். சட்டமன்றத்தில், இதுபோன்று சிலநேரங்களில் அவர்களை அறியாமல் ஜனநாயகம் மீறப்படுவதும் இயற்கைதான் என்பது நமக்கெல்லாம் தெரியாமல் இல்லை. அத்தகைய சூழ்நிலையில், இது மீண்டும் பரிசீலிக்கப்படவேண்டும், அந்த உறுப்பினர்களும், இந்த சபைக்கு வரவேண்டும் என்ற ஒரு நல்ல உணர்வோடுதான் இங்கே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, தோழர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் முன்னால், இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். இந்த நல்ல நோக்கத்தைக்கூட அ.இ.அ.தி.மு.க. புரிந்துகொள்ள முடியவில்லையா அல்லது இன்னும் ஆளும்கட்சி என்ற அதிகாரத்தில் இருந்தே பார்க்கிறார்களா என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர்களது கட்சிக்கு இப்படி பாதிப்பு ஏற்பட்டவுடன், ங்களை எல்லாம் அணுகியிருக்கவேண்டும். ஒரு பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில், இந்தச் சபையில் தலைமை தாங்கக்கூடிய எதிர்க்கட்சி என்ற முறையில், எங்களுக்கு இப்படியொரு சம்பவம் நடந்திருக்கிறது, முதலமைச்சர் அவர்களிடம் நீங்கள் கேளுங்கள் என்று, எங்கள்மூலமாகக் கேட்டிருந்தால்கூட, அது நன்றாக இருந்திருக்கும்.



2007 ஏப்ரல் 16] [செல்வி கே. பாலபாரதி]

*முற்பகல் 11–30*

அப்படிப்பட்ட அணுகுமுறையையும் அவர்கள் கடைப் பிடிக்கவில்லை. மாறாக, பேசியவர்களை கிளிப் பிள்ளைகள் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சென்ற சட்டமன்றத்தின்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஓ.பி.எஸ். அவர்களும் இருந்தார்கள். எழுந்து நிற்பதற்குக்கூட சபாநாயகர் அனுமதி தர வேண்டும். இப்படிச் செருப்பை எடுத்துக் காட்டியிருந்தால் நாங்கள் எல்லாம் இருந்திருக்க முடியுமா அல்லது அவரேகூட பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்திருக்க முடியுமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்யலாம்.

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் தி.மு.க.–வோ, நாங்களோ யாரும், செருப்பைக்கூட அல்ல, ஒரு பேப்பரை எடுத்துக்கூட நாங்கள் எழுந்து வீசமுடியாது. அப்படி ஆளும் அரசாங்கமாக இருக்கும்போது அவர்கள் ஜனநாயகத்தை அதிகபட்ச சர்வாதிகாரமாகப் பயன்படுத்தினார்கள். இப்போது இந்தச் சபையில் அவர்கள் செருப்பைக் காட்டியதற்குப் பிறகு தொகுதிக்குள் நாங்கள் போகவே முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் செருப்பை எடுத்துக் காட்டுவார்களா என்று வாக்காளர்கள் உணர்ச்சிவசப்பட்டால் அவர்கள் எதை எடுத்துக் காட்டுவார்கள்? ஆகவே, இப்படி கிடைக்கக்கூடிய ஜனநாயகத்தை மீறுவது என்பதை, துஷ்பிரயோகம் செய்வது என்பதை எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.இ.அ.தி.மு.க. செய்யக்கூடாது. கிளிப் பிள்ளை என்று அவர்கள் சொன்ன வார்த்தையை தயவுசெய்து அவர்கள் வாபஸ் பெற வேண்டும். நாங்கள் எல்லாம் சொல்வதைச் சொல்லக்கூடிய கிளிப் பிள்ளைகள் அல்ல. மௌனமாக இருந்தாலும் எங்கள் மௌனத்திற்கு உரக்க ஒலிக்கக்கூடிய சக்தி இருக்கிறது. அந்த வகையிலேதான் எதிர்க்கட்சியினர் மக்கள் பிரச்சினையை இங்கே ஒலித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொண்டு அந்த வார்த்தைகளை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நான்கு பேர்களை உள்ளே அழைக்க வேண்டும் என்பதற்காக நான்தான்

முதலாவதாக கோரிக்கை வைத்தேன். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதையும் உள்நோக்கத்தோடு திசை திருப்புவதற்கான முயற்சியிலே வேறுவிதமான செய்திகளை இங்கே பதிவு செய்ய விரும்புகிறார். நான் அவருடைய உரையின்மூலமாகப் புரிந்துகொண்டது, நான்கு அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியிலே இருக்கிறார்கள், அவர்களை உள்ளே அழைப்பதற்காக மிகுந்த அக்கறையோடு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், கொறடாவும் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். இப்பொழுதுதான் புரிகிறது. அவர்களை உள்ளேவிடாமல் தடுப்பதற்காகவே அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்பது. இதனை வெளியிலே இருக்கின்ற அந்த நான்கு பேர்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் அவர்களுக்கு வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, அவர் சொல்கிறபோது, "வரிசையாக எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் சொல்லி வைத்தாற்போல, கிளிப் பிள்ளை சொல்வதைப் போல ஒன்றைச் சொல்கிறார்கள்" என்கிறார். ஆனால், பாடத்தைக் கற்றுக்கொண்டு வந்து இங்கே ஒப்புவிப்பவர்களே நீங்கள்தானே? கிளிப் பிள்ளையைப்போல, சொன்னதைச் சொல்லுகிற அந்தக் காரியத்தை செய்பவர்கள் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அரசியல் கட்சிகள் என்ற முறையிலே சுயமாகச் சிந்தித்து, இங்கே இந்த அவையிலே என்ன சொல்ல வேண்டுமோ, அதை நாங்கள் சொல்வோம். சென்றமுறை என்ன நடைபெற்றது? உங்களுடைய ஆட்சிக் காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இப்படித்தான் வெளியேற்றப்பட்டார்கள். வெளியேற்றப்படுகிறபொழுது, பேசிக்கொண்டிருக்கின்ற நாங்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், அன்றையதினம் அ.இ.அ.தி.மு.க.–வினுடைய உங்களுடைய கூட்டணிக் கட்சி. ஆனால், அன்றையதினம் இந்த அவையிலே எழுந்து, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியிலே அனுப்பக்கூடாது, அவர்களையும் இங்கே உள்ளே அழைத்து, அவர்கள் ஜனநாயகக் கடமைகளை ஆற்றச் செய்வதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறோம். அதற்காக வாதாடி இருக்கிறோம். அந்த காரியத்தைச் செய்வதற்குரிய முயற்சியை எடுத்த எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள்.





அதைத்தான் நாங்கள் செய்தோம். இன்றைக்கும் அதையேதான் நாங்கள் செய்கிறோம். இதைப் புரிந்துகொள்ளவே முடியாத சூழ்நிலை இருக்கிறது என்றால், என்றைக்குத்தான் நீங்கள் வெளிச்சத்திற்கு வரப்போகிறீர்கள் என்று எங்களுக்கு புரியவேயில்லையே? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செய்திகளை ஏற்றுக்கொண்டு, அந்த உறுப்பினர்களை அழைத்து, இந்தச் சபையிலே, அவர்கள் கடமையாற்றுவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டாமா?

இங்கே பாலபாரதி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல— எங்களை எல்லாம் நீங்கள் அணுக வேண்டும் என்று கேட்டார். அந்த அளவு பெருந்தன்மையை செல்வி பாலபாரதி எதிர்பார்க்கக் கூடாது. ஆனால், நான் ஒன்றைச் செய்தேன். நீங்கள் கேட்காமலே நான்கூட மாண்புமிகு மின் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்களிடத்திலே சந்தித்துக் கேட்டேன். இப்படி இருக்கிறதே, இதைப்பற்றிப் பேசி ஏதாவது ஒரு முடிவு செய்வதற்குரிய ஒரு முயற்சியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேச வேண்டுமென்று நானாகவே முயற்சி எடுத்துக்கூட கேட்டேன். அதை இங்கே பேசுவதற்குரிய முயற்சியை அவர்கள் எடுத்தால் நீங்களும் அந்தக் கருத்தைப் பற்றிப் பேசுங்கள் என்றுதான் சொன்னார்கள். ஆகவே, இன்றைக்கு அந்தக் கருத்து வந்தது; அதன்மீது நாங்கள் பேசினோம். எது எப்படியிருந்தாலும், அந்த உறுப்பினர்கள் கடமையாற்றுவதிலிருந்து தடுத்து அவர்களை வரவிடாமல் தடுத்த பெருமை, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களையும், தலைவரையும்தான் சாரும். இதைத்தான் இன்றைக்கு நாடு தெரிந்துகொண்டிருக்கின்றது. கிளிப் பிள்ளை என்று சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். கிளிப் பிள்ளையாக நாங்கள் இருக்க மாட்டோம். சுயமாக, சொந்தமாக, அரசியலைப் பேசுவதற்குரிய ஆற்றல் உள்ளவர்களாகத்தான் இங்கே எதிர்க்கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். சொன்னதைச் சொல்பவர்களாக அவர்கள்தான் இருப்பார்கள். ஒத்த கருத்து, ஒத்த கருத்து என்ற பெயராலே, சப்தம் போட்டு, கூச்சலும் குழப்பத்தையும் ஏற்படுத்துகின்ற அந்தக் காரியத்தைத் தொடர்ந்து செய்துகொண்டேயிருக்கிறீர்கள். நாடு பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதற்குரிய தண்டனையை நீங்கள் தொடர்ந்து அனுபவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டுவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ? நீங்கள்தான் சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை என்று சொன்னீர்கள். அதை நீக்க வேண்டுமென்றார்கள். (குறுக்கீடு) சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை என்ற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. # (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளிப் பிள்ளை என்பது ஒன்றும் தவறான வார்த்தை அல்ல. இன்னும் சொல்லப்போனால், அது அழகான வார்த்தைகூட. கிளிக்குப் பிள்ளையாக இருப்பது எவ்வளவோ பெருமை உடையது. அது எழில் உடையது. எனவே, விகாரமான வார்த்தை என்று கருதி நீக்கத் தேவையில்லை. தவறான வார்த்தையைச் சொல்லிவிட்டோம் என்று தோழமைக் கட்சி நண்பர்களைப் பார்த்து, அவையிலே உள்ள மற்றக் கட்சித் தலைவர்களைப் பார்த்து, ஒரு பொறுப்புள்ள எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவராகிய தான், அதாவது நம்முடைய பன்னீர்செல்வம் அவர்கள், சொல்லத் தகாத வார்த்தையைச் சொல்லிவிட்டதாக அவர் கருதுவாரேயானால், அவர் இந்த அவையில் தங்களைப் பார்த்து, அந்தச் சொல்லை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள் என்று கூறுவாரேயானால் பிறகு நீக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையை ஆரம்பத்தில் சொன்னபொழுதே, இந்தப் பிரச்சினையினுடைய பிரதிவாதங்களுக்கு உள்ளே நான் செல்லவில்லை என்றுதான் சொன்னேன். நான் செல்லவில்லை. ஆனால், ஆளும் தரப்பிலிருந்தும் மற்றும் நம்முடைய தோழமைக் கட்சிகளிலிருந்த அத்தனைப் பேரும் பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இங்கு நான் சொன்ன வார்த்தையைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். ஆனால், நான் அந்த வார்த்தையைச் சொன்னதற்குக் காரணம், எங்களுக்கு ஆதரவாகப் பேச வேண்டும் என்று நினைத்து எழுந்து பேச முற்பட்ட நம்முடைய மற்ற கட்சிகளினுடைய தலைவர்கள் அத்துணை பேரும் என்ன பேசி இருக்க வேண்டும்? சபையிலே அன்றைக்கு ஏற்பட்ட அமளி துமளி, பிரச்சினைகள் இனிமேல் நடக்காத வகையில், அனைத்து உறுப்பினர்களும் சபையினுடைய மரபுகளைக் காக்கின்ற வகையில்

# 317 ஆம் பக்கத்திலுள்ள மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்ட பகுதி சேர்க்கப்பெற்றது.



நடந்துகொள்ள வேண்டும் என்று அவர்கள் ஒரு வார்த்தைச் சொல்லியிருந்தால், யாராவது ஒருவர், ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் (மேசையைத் தட்டும் ஒலி) நான் அதன் உள்ளே சென்றிருக்க மாட்டேன். சொல்லிவைத்தாற்போல் அனைவருமே கடைசியில் முடிக்கின்றபொழுது—நிறைய பேசினார்கள். நான் அதற்கு உள்ளே செல்லவில்லை—துணைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று நீங்கள் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டுமென்று சொல்லி, துணைத் தலைவர் அதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும், வருத்தம் தெரிவிக்க வேண்டும், வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னதையே அவர்கள் சொன்னதால்தான் நான் சொன்னதைச் சொல்கின்ற கிளிப் பிள்ளை என்ற வார்த்தையை உபயோகித்தேனேயொழிய, ஒருவர்கூட, அனைத்து உறுப்பினர்களும் இனிமேல் இம்மாதிரியான நிகழ்வுகள் நடைபெறாதவண்ணம் இங்கே (குறுக்கீடு) இல்லை, நான் பேசியது 5–1–2007 அன்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** வருத்தம் தெரிவிப்பது என்பது மன்னிப்புக்குச் சமமான வார்த்தை அல்ல. அது மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு மிகத் தெளிவாகவே தெரியும் என்று நான் கருதுகின்றேன். மன்னிப்பு என்பது வேறு, வருத்தம் என்பது வேறு. உதாரணமாக, ஒரு கூட்டத்தில் உட்கார்ந்திருக்கும்போது நாம் எங்காவது எழுந்து சென்றால், நம் கால் தவறி ஒரு நண்பருடைய காலில் பட்டுவிட்டால், sorry என்கிறோம். அந்த sorry-க்கு எவ்வளவு மதிப்போ அவ்வளவு மதிப்புதான் வருத்தம் தெரிவிப்பதற்கும். அதை உணர்ந்துகொண்டு தெரிவித்திருக்கலாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருத்தம் தெரிவிப்பதோ, மன்னிப்பு கேட்பதோ பெரிய தன்மானத்தை இழக்கக்கூடியது அல்ல என்பதை நானும் புரிந்திருக்கின்றேன். ஆனால், அன்றைக்கு நடைபெற்ற சூழ்நிலை—மீண்டும் சொல்கிறேன், நான் உள்ளே செல்ல விரும்பவில்லை—இரண்டு பக்கமும் சம்பவங்கள் சம அளவில் நடந்தன. அதுதான் நான் சொன்னதைச் சொல்கின்ற கிளிப் பிள்ளை என்ற வார்த்தையை சொன்னதற்குக் காரணமே. நம்முடைய மாண்புமிகு அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசுகின்றபோது, இனிமேல் இந்த அவையை நடத்துவதற்கு அனைத்து உறுப்பினர்களும் நல்ல முறையில், ஒத்துழைத்து, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கி, அவையை நடத்துவதற்கு ஒரு இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு வார்த்தை அவர்கள் சொல்லியிருந்தால், நான் அந்த வார்த்தையைச் சொல்லத் தேவை இல்லாமல் போய் இருந்திருக்கும். அதைத்தான் நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேனேயொழிய நீக்குவதும்,

நீக்காததும் உங்களுடைய பொறுப்பு. என்னைப் பொறுத்தவரையில் மன்னிப்பதையோ, வருத்தம் தெரிவிப்பதையோ, ஒரு பாவச் செயலாக நான் கருதவில்லை. ஏனென்றால், நான் துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்ற கொள்கையின்படி இருக்கின்றவன். எந்த ஒரு சூழ்நிலையிலும், நான் ஒரு சிறிய தவறு செய்தால்கூட மன்னித்துக்கொள்ளுங்கள், வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்கின்ற மனப் பக்குவம் எனக்கு என்றைக்கும் இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தன்னுடைய கட்சியைச் சேர்ந்த நான்கு பேர் நடந்துகொண்டதைப் பற்றிய பிரச்சினையில், அவர்கள் தண்டிக்கப்பட்ட காரணத்தால் அவர்கள் சார்பாகத்தான் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டதேதவிர, எதிர்க்கட்சித் துணைத் தலைவரே வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று அவரைப் பொறுத்து சொல்லப்பட்ட கருத்து எதுவும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், யாரைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமோ அவர்கள் இனி நாங்கள் அப்படி நடக்க மாட்டோம் என்பதைப் பேரவைத் தலைவருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சொன்னால், நீங்கள் பரிசீலனை செய்யுங்கள். ஆளுங்கட்சியினர் பெரும்பான்மையோராக உள்ள இந்த அவையில், பெரும்பான்மையோரால் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தைக்கூட இன்னொரு கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சி மைனாரிட்டி அரசு, மைனாரிட்டி அரசு என்கிறார்களே, அந்த ஆட்சியில்தான் மெஜாரிட்டியாகத்தான் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த அரசு மைனாரிட்டியாக இருந்தால், அதற்குப் பதிலாக எதிர்க்கட்சியினரே ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றி, நான்கு பேரையும் அவர்களே அவையில் சேர்த்துக்கொள்ளலாம். ஆகவே, சட்டமன்ற முறைப்படி, மெஜாரிட்டி என்னும் அடிப்படையில் பேரவைத் தலைவருடைய அனுமதியோடு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையொட்டி யார் தண்டிக்கப்பட்டார்களோ அவர்கள் வருத்தம் தெரிவித்தால் அல்லது கடிதம் தங்களுக்குத் தந்தால் அதைத் தாங்கள், தங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்து, உரிமையை வைத்து பரிசீலித்து தாங்களே முடிவு எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை என்ற அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டாம், அது அப்படியே இருக்கட்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று அந்தச் சொல் அப்படியே இருக்கட்டும்.*

## 5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 24 – சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**
**(ஆ) கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை**
**(இ) கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**
– *தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள், வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை (ப நான் இந்த மாமன்றத்திலே*

*(ப 431 முதல் 515 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக*

படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

***திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்' தன்னகத்தே பெற்றதால் தமிழர் நலம் காத்தார் தர்மத்தாய் புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) உச்சிமலை விளக்காக உலகு ஓங்கும் புகழ்கொண்ட பச்சைப் பசுந்தமிழ் நாட்டில், ஏழைகளின் ஒளிவிளக்கு புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) 'நாய்' என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத் தாய் என்று காட்ட தமிழர்க்கு வாய்த்தவரே! (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத் தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி! (மேசையைத் தட்டும் ஒலி) புண்ணிற் சரம் விடுக்கும் பொய்யர்களின் கூட்டத்தைக் கண்ணில் கனல் சிந்திக் கட்டழிக்க வந்தவரே! (மேசையைத் தட்டும் ஒலி) பெண் குலத்தை உய்விக்க வந்த உவப்பே, பேதமையை மடியச் செய்த பகுத்தறிவே! அள்ளும் வறுமை அகற்ற வந்தவரே! உள்ளும் நலமெல்லாம் தமிழர் நலமென வாழ்பவரே! இலட்சத்தால் மக்களைப் பேசுவோர் மய்யத்தில் இலட்சியத்தால் தமிழர்களைப் பிணைத்திருக்கும் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்கி, திருத்தணி சட்டமன்றத் தொகுதியினுடைய வேட்பாளராக்கி, இப்போது திருத்தணி சட்டமன்ற உறுப்பினராக்கி, என்னை இந்த மாமன்றத்திலே பேச வைத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிற, கழகத்திலே மாவட்ட கழகச் செயலாளர் முதல் பல்வேறு பொறுப்புகளை வழங்கி என் உயிர் காத்த என்னுடைய குடும்ப தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–45*

சட்டப் பேரவையில் குறைகளை எடுத்தியம்பினால் மக்கள் மன்றம் எங்களை ஆதரிக்கும் என்பதல்ல. காரணம், தாய்த்திரு நாட்டை அடிமைத்



தளையிலிருந்து விடுவிக்கும் ஆற்றல் படைத்த ஒரு படை நாங்கள்தான் என்ற முறையில் அவர்களின் ஆதரவைக் காட்டி, தங்கள் வாக்குரிமையை எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். இனியும் அவர்களுடைய வாக்குரிமையைப் பெறுவதற்குரிய அன்பை நாங்கள் இழந்துவிடமாட்டோம். இங்கே நடைபெறுகின்ற காரியங்களெல்லாம், எங்களுடைய குறிக்கோள்களைக் குந்தகப்படுத்திவிடாது என்று, 'தம்பி, உன் திருமுகத்தைக் காட்டு, தமிழகமே நம் பின்னாலே எனக் கூறி, இதயத்தில் கனியாய் வைத்து, தனக்குப் பிறகு தமிழர் நலன் காக்க நீதான்' என புரட்சித் தலைவரை அடையாளம் காட்டிய பேரறிஞர் அண்ணாவின் கூற்றை இவ்வவையிலே முன்னிறுத்தி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

வருவாய்த் துறை என்பது ஆட்சி நிருவாகத்திற்கு முதுகெலும்பைப் போன்றது. மக்களுடைய தொடர்புகள், "நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக" நீக்கமற நிறைந்திருக்கின்ற துறை, வருவாய்த் துறை. இன்றைக்கு வருவாய்த் துறை, செயல்பாட்டிலே இருக்கிறதா என்ற ஐயப்பாடு இந்த நாட்டு மக்களிடையே நிலவிக் கொண்டிருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், முதியோர்களுக்காக வழங்கப்படுகின்ற ஓய்வூதியத்திற்குரிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உரிய நேரத்திலே உதவி அளிக்காமல், ஆறு மாத காலம், ஒரு வருட காலம் தாமதப்படுத்துகின்ற சூழ்நிலை இருக்கின்றது. வட்டாட்சியர் அலுவலகத்திலே இதுபோன்ற பிரச்சினையைக் கொண்டு சென்றால், அங்கே வட்டாட்சியர் இருப்பதில்லை. அங்கே வருவாய்த் துறை அதிகாரிகள் இருப்பதில்லை. ஏனென்று கேட்டால், அவர்கள் இந்த அரசால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இலவச இரண்டு ஏக்கர் நிலம், இலவச எரிவாயு அடுப்பு போன்ற திட்டப் பணிகளுக்கு அலுவலகத்தைவிட்டு வெளியே சென்றிருக்கிற நிகழ்வுதான் இப்போது நாட்டிலே நடந்துகொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சமுதாயத்திலே சமூக அந்தஸ்திலே தாழ்ந்து பொருளாதார வசதியில்லாமல் இருக்கின்ற ஏழைத் தாய்மார்களுக்கு, வயது முதிர்ந்தோருக்கு, அவர்கள் விண்ணப்பம் கொடுத்த ஓரிரு வாரங்களுக்குள், உடனடியாக முதியோர் உதவித் தொகை, கண்டிப்பாக வழங்கப்படவேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடுதிரைக் கணினியை வட்டாட்சியர் அலுவலகங்களிலே அறிமுகப்படுத்தினார்கள்.

அந்தத் தொடுதிரைக் கணினி இன்றைக்கு வட்டாட்சியர் அலுவலகங்களிலே இருக்கிறதா என்ற கேள்வி இருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், தொடுதிரைக் கணினியைப் பொறுத்தவரை, பாமர மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே, வட்டாட்சியர் அலுவலகத்தாலே விழிப்புணர்வை ஏற்படுத்தவில்லை. அந்த விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டுமென்றால், தொடுதிரைக் கணினியைப்பற்றி ஆங்காங்கே இருக்கின்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் விளக்கி, வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டு, அந்த மக்கள் அறியச் செய்யவேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், வட்டாட்சியர் அலுவலகத்திலும், இன்றும் அவர்தம் ஈப்புகளிலும், மகிழுந்துகளிலும் Tahsildar, Collector என்ற வார்த்தைகளையே பயன்படுத்தி வருகின்றார்கள். அதை மாற்றி வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் என்று தமிழில் எழுதவேண்டும். தமிழில் எழுதாத அதிகாரிகள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றும் மொகலாயச் சொற்களையே நாம் பயன்படுத்தி வருகின்றோம். சிரஸ்ததார், ஜமாபந்தி, தபேதார், மராமத்து போன்ற பல மொகலாயச் சொற்களே பயன்படுத்தப்படுகின்றது. அதற்குத் தமிழில் தலைமை மேலாளர், தீர்வாயம், புனராள், புனரமைப்பு போன்ற ஆட்சித் தமிழ் சொற்கள் இருந்தும், புறக்கணிக்கப்படுவது வேதனைக்குரியது.

நிலவுடைமைச் சான்றைப் பொறுத்தவரையில், நிலவுடைமைச் சான்று வட்டாட்சியர் அலுவலகத்திலே விண்ணப்பிக்கப்பட்டு, இரண்டு, மூன்று மாதங்கள் காலதாமதம் ஆகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே உடனுக்குடன் வழங்கப்பட்ட ஒரு நிலைமை இருந்தது. அது இப்போது மறுக்கப்பட்டு வருகின்றது. எனவே, வட்டாட்சியர் அலுவலகத்தில் நிலவுடைமைச் சான்று விண்ணப்பிக்கப்பட்டவுடன், ஓரிரு வாரங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நிலவுடைமைச் சான்று, கண்டிப்பாக வழங்குவதற்கு இந்த அரசு உத்தரவிடவேண்டும்.

டாஸ்மாக் பணியாளர்கள் தமிழக அரசுக்கு பெரும் வருவாயை ஈட்டித் தருகின்றார்கள். தமிழ்நாடு வாணிப விற்பனைக் கழகத்தின் 6,870 டாஸ்மாக் கிளைகளில் பணிபுரியும் 7,332 மேற்பார்வையாளர்களையும், 19,171 விற்பனையாளர்களையும் காலமுறை



ஊதியத்திலே பணி நிரந்தரம் செய்யவேண்டும். இப்பணியாளர்களில் பலர் பணிக் காலத்திலே உயிரிழந்துள்ளனர். அவர்தம் குடும்பங்களுக்கு சுமார் 2 இலட்சம் ரூபாய் வரை நிதியுதவி வழங்கி, அவர்தம் வாரிசுகளுக்கு, அவர்தம் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2003 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் முறையாக மூப்பின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 15 ஆயிரம் தற்காலிக இளநிலை உதவியாளர்களை வயது வரம்பின்றி, உடனடியாகப் பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியத்திலே நியமிக்கவேண்டும். அவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றுள்ளனர். அவர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–50

ஊனமுற்றோர் உதவித் தொகையைப் பொறுத்தவரை ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவதற்கு விண்ணப்பித்த உடனே அதிகாரிகளே யார் ஊனமுற்றவர்களோ அவர்களுடைய இல்லங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று உடனடியாக அந்த ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகையை ஓரிரு நாட்களுக்குள் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

ஆழிப் பேரலை எச்சரிக்கைக் கருவியினை தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் நிறுவுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆய்வுப் பணியினை மேற்கொண்டார்கள். மீண்டும் சுனாமி என்பதுபோல் கடல் நம்மை மிரட்டும் சூழ்நிலையில் எச்சரிக்கைக் கருவி அமைக்கும் பணி குறித்து இந்தக் கொள்கைக் குறிப்பிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை.

விபத்து நிவாரணத் திட்டத்தை பொறுத்தவரையில் குடும்பத் தலைவரை மற்றும் உறுப்பினரை இழந்து தவிக்கும் ஏழை எளிய மக்களுக்கு நிவாரணத் தொகை தருவதிலே மிகப் பெரிய இடர்பாடுகள் உள்ளன. இதனால் ஆண்டுகள் கரைந்தோடுகின்றன. விபத்து நடைபெற்று காவல் நிலைய அறிக்கையைப் பெற்றவுடன் உடனடியாக முதல் தவணையாக அவர்களுக்கு நிவாரணத்தை வழங்கவேண்டும். பின்பு வருவாய்த் துறை விசாரணை செய்து அதற்குரிய அறிக்கையை

பெற்றவுடன் முழுத் தொகையும் உடனடியாக வழங்கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கிராமங்களிலே இருக்கின்ற குடிசை வீடுகள் எரிந்துபோய் அந்தக் குடும்பங்களுக்கு வருவாய்த் துறைமூலமாக ரூபாய் 2 ஆயிரம் பணம் தரப்படுகிறது. இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் 2 ஆயிரம் ரூபாய் என்பது மிகச் சொற்பமானது. அந்தக் குடும்பங்களுக்கு இந்த அரசு குறைந்தது 25 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கவேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மாநில எல்லைக் கூட்டாய்வுத் திட்டத்தின்படி புதுச்சேரி மாநில எல்லையில் 275.5 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கூட்டாய்வு முடிந்து இரு அரசுகளாலும் ஒப்புதல் வழங்கப்பட்டது. கேரள அரசுடன் 229.4 கிலோ மீட்டர் கூட்டாய்வு செய்து பணிகள் முடிக்கப்பட்டன. ஆந்திரம், கர்நாடகத்தோடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இவ்வரசின் 2006–2007, 2007–2008 செயல்பாடு முன்னேற்ற நிலை குறித்து எந்தவிதமான குறிப்புகளையும் கொள்கைக் குறிப்பில் கூறவில்லை. மாநிலப் பொது எல்லை குறித்த அக்கறை இவ்வரசுக்கு அறவே இல்லை என்பதை இது காட்டுகிறது.

கிராம நிர்வாக அலுவலகங்களில் கணினி வசதி ஏற்படுத்தித்தர வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்களே சிட்டா அடங்கல், இருப்பிடச் சான்றிதழ் போன்றவற்றை உடனடியாக வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும். கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்தவரையில் இதுவரையில் நடைமுறையில் இல்லாமல் இருந்த, புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள, நாட்குறிப்பு கொடுக்கவேண்டுமென்ற அரசு உத்தரவை உடனடியாக இந்த அரசு இரத்துச் செய்யவேண்டும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும் கைதிகளுக்கான தீர்வு மன்றங்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்டது. அது தொடர்பாக எந்தவிதக் குறிப்பும் இந்தக் கொள்கைக் குறிப்பில் இடம்பெறவில்லை. ஆசியாவிலேயே மிகப் பெரிய அளவிலே, ரூபாய் 77 கோடி செலவில் சென்னை அருகில் உள்ள புழலில் 212 ஏக்கர் நிலப்பரப்பில் நவீன சிறைச்சாலை வளாகம் தொடங்கப்பட்டு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்



முடிக்கப்பட்டது என்ற உண்மையை மறைத்து கொள்கை குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சாதிச் சான்றிதழ்களைப் பொறுத்தவரையில், 2001–2006 வரையிலான காலகட்டத்தில் இத்திட்டம் திறம்படச் செயல்படவில்லை என்று, உண்மையை மறைத்து கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இத்திட்டம் மிகவும் சிறப்பாக விரிவுபடுத்தப்பட்டு 12,60,202 மாணவ மாணவிகளுக்கு சாதிச் சான்றிதழ்கள் அவர்கள் பயிலும் பள்ளிக்கூடங்களிலே வழங்கப்பட்டது என்ற செய்தியை இந்த கொள்கைக் குறிப்பிலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் அதிகமாக interfere பண்ணமாட்டார்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வகுப்புச் சான்றிதழ்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சியிலே 1999–2000 ஆம் ஆண்டிலே கொண்டு வந்த சிறப்பானத் திட்டம். 10 ஆம் வகுப்பு 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட் வாங்கும்போதே கம்யூனிட்டி சர்டிபிகேட்டையும் வாங்கிக்கொண்டு போய்விடலாம்.

**திரு. கோ. அரி:** மழைநீர் சேகரிப்புத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை தனது ஆய்வறிக்கையில் 26 மாவட்டங்களில் F.R.P. வடிவ மழை மானிகளை கண்ணாடி ஜார்களாக மாற்றி அமைத்தல் மிகவும் அவசியம் எனக் கருத்து வழங்கியதால் 17 மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு மழை மானி நிலையத்தில் மேடை உயரம் அதிகரித்து வேலி அமைத்து ரூபாய் 3,74,730 செலவிலே தரப்படுத்தப்பட்டது. இதனால் மழையின் அளவு கண்காணிக்கப்பட்டு வறட்சியினைச் சமாளிக்கும் முன் எச்சரிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக இருந்தது. இந்த அத்தியாவசிய நடவடிக்கையை இந்த அரசு தனது கொள்கைக் குறிப்பிலே புறக்கணித்துள்ளது. 26–12–2004 அன்று காலை எட்டரை

மணிக்கு சுனாமி பேரலை தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களைக் கடுமையாக தாக்கியது. மிகப் பெரிய இழப்பினை நொடிப் பொழுதிலே உண்டாக்கியது. அந்த கன நேரத்தில் மின்னல் வேகமாகச் செயல்பட்டு தமிழர்கள் நலமே தன் நலம் என்று கருதி வாழும் அம்மா அவர்களை இந்தியாவே பாராட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்ல மனமின்றி சொல்வதுபோல், இயல்பு நிலை பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையைக் கொண்டு வர மறுவாழ்வுப் பணிகள் செய்யப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது.

முற்பகல் 11–55

சுனாமியின் கோரத் தாண்டவத்தை யாராலும் எளிதில் மறந்துவிட முடியாது. 13 மாவட்டங்களில் 373 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. 8,018 சகோதர, சகோதரிகள் இறந்து போனார்கள். 17,404 கால்நடைகள் மாண்டு போயின. 3,432 நபர்கள் மிக பலத்த காயம் அடைந்தனர். சுமார் ஒன்றரை இலட்சம் வீடுகள் கடுமையாகச் சேதமடைந்தன. 35,530 கட்டு மரங்கள், 11,118 வள்ளங்கள், 4,430 மின் விசைப் படகுகள், சுமார் 2,000 மெட்ரிக் டன் மீன்பிடி வலைகள் பாதிக்கப்பட்டன. கடற்கரைப் பகுதியே கலங்கி நின்றது. எங்கும் கூக்குரல், அழுகை ஒலி. போர்க்களம் போல் பொருட்கள் சிதறல். இந்தச் சூழலில் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரணப் பணிகளுக்காக ரூ.1,120.88 கோடி அனுமதித்து, உடனடியாக 850 கோடி ரூபாயை விடுவித்தார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், தி.மு.க. பங்கேற்றிருக்கின்ற மைய அரசு, கவலையின்றி, ரூபாய் 625.70 கோடி மட்டுமே விடுவித்தது. இதிலும் அரசியல் இலாபம் பார்க்கத் துடித்தவர்களைப் புறக்கணித்து மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை மனதில் நிறுத்தி, நண்பர்களற்ற ஏழைகளுக்கு நண்பன் நான் என்ற கூட்டணியை மெய்ப்பித்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்கள் ஆதரவினைப் பெற்று, மீண்டும் 2001–லே ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, (குறுக்கீடு) தி.மு.க. அரசால் ரூபாய் 4,711 கோடி நிதிப் பற்றாக்குறைத் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருந்த சூழல்குறித்து அன்றைய மத்திய அரசு, தி.மு.க. பங்கேற்றிருந்த மத்திய அரசு, 1995–1996 ஆம் ஆண்டிற்குப் பிறகு வருவாய்ப் பற்றாக்குறையில் ஏற்பட்ட கணிசமான உயர்வு, தமிழ்நாடு வரவு–செலவுத் திட்டத்தில் ஒரு பெரும் அமைப்பு ரீதியான பிரச்சினைக்கு



இது பெரும் நிதிப் பற்றாக்குறைக்கும், வட்டிப் பளுவிற்கும் வழி வகுக்கும் என்ற அறிக்கையைத் தந்தது. இதனால் தி.மு.க. அரசால் களஞ்சியமும் கஜானாவும் காலியானது என்ற நிலையை மத்திய அரசு அன்றைக்கு உறுதி செய்தது.

பின்னால் அதே திட்டக் குழு 2003–2004, 2004–2005 ஆகிய முதல் இரண்டு ஆண்டுகளைப் பொறுத்தவரையில் வருவாய் வரவுகள் மதிப்பீடுகளைவிட 400 கோடி ரூபாய் அதிகமாக உள்ளது; மேலும் இது இறுதியில் மதிப்பீடுகளைவிட கணிசமாக உயரும் என்ற அறிக்கையைத் தந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியை தி.மு.க. பங்கேற்றுள்ள ஆட்சியில் திட்டக் குழு பாராட்டியதை நாடே அறியும்.

நாடே பாராட்டிய மக்கள் நலப் பணிகள் பல. குறிப்பாக இந்தியாவிலே முதன்முதலாக மாணவ, மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்குவது போன்ற புரட்சிகரமான பல்வேறு திட்டங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே நடைமுறைப்படுத்தப்பட்டும், தமிழகத்தின் நிதி நிலைமையை அவர்கள் சீர்ப்படுத்தி வளப்படுத்தியதை யாவரும் அறிவீர். இதை நான் கூறுவதற்குக் காரணம் இன்று இலவசங்கள் என்ற அறிவிப்பால் ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள இந்த அரசில் உள்ளவர்களும், அவர்தம் ஆதரவாளர்களும் 2006–ல் ஆளுநர் உரையைப்பற்றிக் கூறும்பொழுது இலவசங்களும், மானியங்களும் எல்லை மீறிச் சென்றுவிட்டன, இவை எல்லாம் இலவசமாக உள்ளன என்று இந்த அவையிலே கூறினார்கள். ஆனால், இன்று இலவச வண்ணத் தொலைக்காட்சி, இலவச எரிவாயு அடுப்பு, இலவச நிலம், இலவச அரிசி இவற்றை எப்படிச் சொல்வது? நடுநிலைமையாளர்களுக்கே இது வெளிச்சம். இந்த நிலைமையிலும் இலவசக் கணினி என்ற அறிவிப்பினால் நாளைய தலைமுறை பாதுகாப்பினை ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி யசோதா அம்மா. (குறுக்கீடு) அவர்கள் Senior Member.

***திருமதி டி., யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தானேதவிர, இலவசமாக அரிசி கொடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. அரி, முடியுங்கள்.

**திரு. கோ. அரி:** இலவச வண்ணத் தொலைக் காட்சி, இலவச எரிவாயு அடுப்பு, இலவச நிலம் போன்ற இலவசத் திட்டங்கள்

கொடுத்தாலும் அவை இன்றைக்கு மக்களைச் சென்றடைகிறதா என்றால் அதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்படி இலவசமாகத் தருவதை வேண்டாம் என்று சொல்கிறாரா? அவரது கட்சியின் கொள்கை என்ன?

**திரு. கோ. அரி:** 2006 ஆளுநர் உரையைப் பற்றி இங்கே ஆளும்கட்சியாக இருப்பவர்கள் அன்றைக்குச் சட்டமன்றத்திலே இலவசங்களும், மானியங்களும் எல்லை மீறிச் சென்றுவிட்டன என்று சொன்னதன் அடிப்படையிலேதான் இன்றைக்கு இதை நான் கூறிக் கொண்டிருக்கிறேன் என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நான் கேட்பது, இப்படி இந்த அரசு இலவசமாக வழங்குகிற திட்டங்கள் தேவை என்கிறாரா, எதிர்க்கிறாரா, அவரது கட்சியின் கொள்கை என்ன?

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தேவையில்லை என்கிறார்.

**திரு. கோ. அரி:** இந்த நிலையிலும் இலவசமாக கணினி தருவோம் என்ற அறிவிப்பால் நாளை தலைமுறை பாதுகாப்பை உறுதி செய்தவர் (குறுக்கீடுகள்) என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, பேசுங்கள்.

**திரு. கோ. அரி:** உறுதி செய்து அறிவித்தவர் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவியாவார். எல்லாம் இலவசம் என்றபோது ஏன் கேபிள் இணைப்பினை இலவசமாக்க மறந்தனர்? (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா கேபிள் இணைப்பினை நாட்டுடைமையாக்கியபோது எதிர்த்தது ஏன்? ஆகவே, இந்தக் கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் நிதியாதாரத்தை ஏற்படுத்தித் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி அதிகாரம் எப்போதும் தனது குடும்ப சுகத்திற்கே என்று கருதாமல்



(குறுக்கீடுகள்) என்றைக்கும் இந்தத் தமிழகம் நன்றாக இருக்க வேண்டும் என்று விரும்பியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று பெயரை மாற்றி இந்தத் திட்டம் செயல்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) இதற்குக் காரணகர்த்தாவானவர் புரட்சித் தலைவி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார், உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரை நாங்கள் மாற்றவில்லை. 2000 ஆம் ஆண்டிலே விவசாயத் தொழிலாளர்களுக்காக, விவசாயிகளுக்காக இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்தான் – நான்கு ஆண்டுக் காலம் விவசாயத் தொழிலாளர்களை, விவசாயிகளை வஞ்சித்த ஆட்சி, அதி.மு.க. ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அரி, சீக்கிரம் பேசி முடியுங்கள். திரு. அரி, இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் உள்ளன.

**திரு. கோ. அரி:** இன்றைக்கும் உழவர் பெருமக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நன்றியோடு பாராட்டுகிறார்கள்.

'வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்!
விசைஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்!'

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடைசிப் பக்கம் வந்துவிட்டார்.

**திரு. கோ. அரி:**

'சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தொகையாக எதிர்நிறுத்தித் தூள்தூ ளாக்கும்
காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்!'

என்று இன்றைக்கு ஆட்சியாளர்களைப் பார்த்து மக்கள் ஆர்ப்பரித்து

வருகிறார்கள் என்பதை இந்த ஆட்சியாளர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும்.

திருத்தணி நகரத்தில் கடுமையான போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க திருத்தணியிலிருந்து அரக்கோணம் திருப்பதி வழியாக சித்தூர் செல்லும் புறவழிச்சாலை ஒன்றை திருத்தணி பகுதிக்கு அமைத்துத்தர வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே திருத்தணி நகரத்திற்குக் கொண்டு வரப்பட்ட திருப்பாற்கடல் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக இந்த அரசு செயல்படுத்தி திருத்தணி நகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும்.

கடம்பத்தூரிலே அரசு அறிவியல் கலைக் கல்லூரியும், திருத்தணியில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரியும், பேரம்பாக்கம் மற்றும் திருவாலங்காட்டில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையமும் தொடங்க வேண்டும்.

திருத்தணியில் சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும். திருத்தணி தொகுதியிலுள்ள பாசன ஏரிகள் அனைத்தையும் ஆழப்படுத்தி நீர்வரத்துக் கால்வாய்களைப் புனரமைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பை அப்படியே கொடுத்துவிடுங்கள்.

**திரு. கோ. அரி:** திருத்தணி நகரிலே பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைந்து செயலாற்ற வேண்டும்.

மொழிப் போர் தியாகிகள் இறந்தால் அவர்களுக்கு ஈமச் சடங்குக்குக் கொடுக்கப்படுகின்ற ஆயிரம் ரூபாய் உடனடியாகக் கொடுக்கப்படுவது மட்டுமல்லாமல், அவர்களுக்கு அந்த ஈமச் சடங்குக்கான நிதியை சுமார் 5 ஆயிரம் ரூபாய் அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணி தொகுதியிலே திருவாலங்காடு, திருத்தணி பகுதிகளிலே பயன்படாமல் இருக்கின்ற நிலங்களை எடுத்து தொழிற்பேட்டை அமைத்து, தொழிற்சாலைகளை அமைத்து அப்பகுதியிலுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பண்படுத்தித்தர வேண்டும்.

திருத்தணி தொகுதிக்குட்பட்ட வெங்கத்தூர் ஊராட்சியில் மணவாள நகர், திருவாலங்காடு பகுதியிலும், திருத்தணி ஒன்றியத்திலும், திருத்தணி



நகரத்திலும் பாறைப் புறம்போக்கு, நீர்நிலைப் புறம்போக்கு போன்ற பகுதிகளிலே சுமார் 10 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் நிலையான கட்டமைப்புகளைக் கொண்ட வீடுகளைக் கட்டி வாழ்பவர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) இந்த அரசு உடனடியாக ஆய்வு செய்து, நீர்நிலைப் புறம்போக்குகளை கிராம நத்தமாக மாற்றி, பாறைப் புறம்போக்குகளைப் பற்றி இந்த அரசு சொல்லவில்லையென்றாலும்கூட, அந்தப் பாறைப் புறம்போக்கிலே 20 ஆண்டுக் காலம் திருத்தணி நகரத்திலே–திருத்தணி நகரத்தைப் பொறுத்தவரை மலை மேடுகள் இருக்கின்ற பகுதி என்பதாலே–அந்த மலை மேடுகளிலே வாழ்கின்ற சுமார் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு பாறைப் புறம்போக்கை உடனடியாக கிராம நத்தமாக அல்லது வேறு ஏதாவதாக மாற்றி, உடனடியாக அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

வருவாய்த் துறை, மக்களின் வறுமையைப் போக்கி வளம் கூட்டும் துறையாக இருத்தல் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கோ. அரி:** சொல் ஒன்றும் செயல் வேறுமாகச் செயல்படும் இவ்வரசைக் காணும்போது பேரறிஞர் அண்ணா 1966-லே கூறிய 'வாழவிடு; விலையைக் குறை' என்ற வாசகம்தான் நினைவுக்கு வருகிறது. (மணியடிக்கப்பெற்றது)

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இந்த ஆட்சியாளர்கள் மத்தியிலே மெய்ப்பொருள் காண்பது அரிதாகிவிட்டது. வருவாய்த் துறை வெறும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Right, right. அப்படியே தொகுதிக்குத் துறைமுகம்கூடக் கேளுங்கள். அடுத்தது திரு. சேகரன்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Clarification (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் உட்காருகிறார். இன்னொருவரைக் கூப்பிட்டுவிட்டேன்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** ஒரு நிமிடம், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர். திரு. அரி, உங்களைத் தொந்தரவு பண்ணக் கூடாது என்றுதான் அவரைச் கூப்பிட்டேன்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு உறுப்பினர் அரி அவர்கள் பேசுகிறபோது மத்திய அரசு சுனாமிக்காக ஒதுக்கிய தொகை 600 சில்லறை கோடி என்று சொல்லியிருந்தார்கள். ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. பக்கம் எண் 40-லே மத்திய அரசால் ரூ.2,347.19 கோடி அனுமதிக்கப்பட்டு, தமிழக அரசுக்கு அன்றைக்கு 966.885 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு, மார்ச் வரை 1057.628 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. உடனடி நிவாரணத்திற்காக மொத்தம் 617 கோடி ரூபாய் –அன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உடனடி நிவாரணத்திற்காக ரூ.617 கோடி ஒதுக்கி, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே செலவு செய்த தொகை வெறும் ரூ.486 கோடி மட்டும்தான். இதிலே தெளிவாகப் பதிவாகி இருக்கிறது.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்காகத்தான், திரு. அரி, எதையும் அறிந்து பேச வேண்டும்.

**திரு. கோ. அரி:** நான் அறிந்து, correct–ஆகப் பேசுகிறேன். அவர் மொத்தமாக ஏதோ ஒரு தொகையைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார். புரட்சித் தலைவி அம்மாவின் பிரகடனம் ஆன "என்னுடைய உள்ளம் தூய்மையானது. ஆனால், என் வலிமைப் பத்துபேர் வலிமைக்குச் சமம் என்று சொல்லமாட்டேன்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காலம் கடந்துவிட்டது. சீக்கிரம். கடைசிப் பக்கத்திற்கு வந்துவிடுங்கள். கடைசிப் பக்கத்திற்கு வாருங்கள்.

**திரு. கோ. அரி:** "ஆறரை கோடி தமிழர்கள் வலிமையும் என் வலிமைதான் என்று சொல்வேன். இந்தப் பாசப் பிணைப்பினை எந்தக் கொம்பனாலும் பிரிக்க முடியாது" என்ற அம்மாவின் எழுச்சி வரிகளை எடுத்துரைத்து . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கூ.ந. சேகரன். (குறுக்கீடு) திரு. அரி, போதும், போதும்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரி அவர்கள் பேசும்போது, கேபிள் டி.வி. பற்றி இங்கே குறிப்பிட்டு, ஏதோ இன்றையதினம் ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்கள் பயன் அடைவதற்காகத்தான் அதை நடத்துவதுபோன்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். கேபிள் டி.வி. இந்தியாவிலே 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டிலே ஏறத்தாழ மொத்தம் 27,000 கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் இருக்கிறார்கள். இதிலே ஏதோ சன் டி.வி-யை மட்டும் குறி வைத்து அவர்கள்தான் இதை நடத்துகிறார்கள் என்பதுபோல இந்த அவையிலே ஒரு தவறான கருத்து சொல்லப்பட்டு வருகிறது. கொஞ்சம் நேரம் எடுத்துக்கொண்டு சில விவரங்களைச் சொல்கிறேன். இதை நடத்துகின்றவர்கள் பெரும்பாலோர் அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள். (குறுக்கீடுகள்) பட்டியல் தருகிறேன். (குறுக்கீடுகள்) பட்டியல் தருகிறேன், நான். ஏதோ பொத்தாம்போக்கில் சொல்ல விரும்பவில்லை. (குறுக்கீடுகள்) உதாரணத்திற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, பெயர்களை எல்லாம் இங்கே படிக்கப் போகிறார், இருங்கள் (குறுக்கீடுகள்) அமைதி, பெயர் படிக்கப் போகிறார். அப்புறம் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பெயர், ஊர் எல்லாவற்றையும் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Detail ஆகப் படித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திரு. நல்லசாமி, அம்மா டி.வி.–ஈரோடு, அவர் அ.தி.மு.க.; திரு. வெங்கடேஷ்பாபு, Translate Network– புரசைவாக்கம், அ.தி.மு.க.-வில் முன்னாள் கவுன்சிலர்; திரு. ராஜாராம், M.T.N. Cable Network– மேட்டூர், முன்னாள் அமைச்சர் திரு. செ.ம. வேலுசாமியின் மைத்துனர்; திரு. ராஜாராம், M.T.N. Cable Network–சேலம், முன்னாள் அமைச்சர் திரு. செ.ம. வேலுசாமியின் மைத்துனர். திரு. சிவசாமி, T.C.V. –திருப்பூர், முன்னாள் M.L.A., மற்றும் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்; திரு. சிவசாமி, T.C.V.—கோவை, முன்னாள் M.L.A. மற்றும் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்;

திரு. கல்யாணசுந்தரம், Polymer Cable Network–தமிழகம் முழுவதும், முன்னாள் அமைச்சர் திரு. பொன்னையனின் நெருங்கிய நண்பர், திரு. அறிவழகன், Joy Cable-அரியலூர், அ.தி.மு.க. முன்னாள் M.L.A., திரு. ஜி.ஆர். சிவா–G.R. Cable, திருச்சி, முன்னாள் M.L.A. திருமதி மாலாவின் தம்பி; தோப்பூர் திரு. சுந்தர், Jayam T.V.–சிதம்பரம், அ.தி.மு.க. நகரச் செயலாளர்; திரு. செல்வம், Vanavil Cable–மதுரை, அ.தி.மு.க. இளைஞரணி; திரு. மாரிசாமி–மதுரை, ஜெ. பேரவையின் முன்னாள் செயலாளர்; திரு. ரவி, Rayanur Cable-கரூர், ஜெ. பேரவைச் செயலாளர்; திரு. ஜூபிடர் பாஸ்கர், Anna Cable–கரூர், அ.தி.மு.க. முன்னாள் நகரச் செயலாளர்; திரு. அலெக்ஸ், J.J. Cable Network–முகப்பேர், அ.தி.மு.க. கவுன்சிலர்; இப்படி முழுப் பட்டியல் இருக்கிறது. எங்கு வேண்டுமானாலும் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆக, கேபிள் டி.வி. நடத்துகின்றவர்கள் எல்லாம் ஏதோ தி.மு.க., சன் டி.வி. குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்று எண்ணக் கூடாது. 27,000 கேபிள் டி.வி.-யிலே Sun T.V.-யைச் சேர்ந்தவர்கள் 4, 5 சானல்கள்தான் நடத்துகிறார்கள். மற்ற அனைத்தும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், மற்ற கட்சி சார்பில்லாதவர்களும் நடத்துகிறார்களே தவிர, இதற்கும் சன் டி.வி.க்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்; திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தை இங்கே சொன்னார்கள். எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை. அரசே கேபிள் டி.வியை அரசுடைமையாக்கலாம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டளை இட்டிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறதா? கேபிள் டி.வி.-யை அரசே ஏற்றுக்கொள்வதற்கு நீங்களும் தயாரா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிக் கொறடா அவர்கள்; கொஞ்சம் விவரம் தெரிந்தவர். அப்படிப்பட்ட சட்டம் கொண்டு வருவதற்கு அதிகாரத்தைத் தமிழ்நாடு அரசாங்கத்திற்குப் பெற்றுத் தருவார்களானால் நாங்கள் கொண்டு வரத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடுகள்) ஆனால், ஏற்கெனவே உங்களுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்டு,



தமிழக அரசாங்கத்திற்கு இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வர அதிகாரம் கிடையாது என்று ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பிவிட்ட காரணத்தினால்தான் உங்களாலேயே அதை அமல்படுத்த முடியவில்லை. உங்களாலே அமல்படுத்த முடியாததை, எங்களை அதற்கு மறுபடியும் ஒரு சட்டம் கொண்டுவரச் சொல்வது தேவையற்றது. அப்படியே கொண்டு வந்தாலும் அதை மத்திய அரசாங்கம் ஏற்காது. (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-10*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியிலும் நீங்கள்தான் ஆண்டு கொண்டிருக்கிறீர்கள். இங்கே தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசிலே வலியுறுத்துவதற்கு ஏன் உங்களால் முடியவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு மாநில, மத்திய அதிகாரங்கள் பங்கீடு பற்றித் தெரியும். Union List ஒன்று இருக்கிறது. Concurrent List ஒன்று இருக்கிறது. State List ஒன்று இருக்கிறது. இது Concurrent List-லேயும் கிடையாது. இது Union List-லே இருக்கிற விவகாரம். Union List-ல் இருப்பதிலே State Government சட்டமே இயற்ற முடியாது என்பதைப் பற்றித் தெரியாதவர்களிடம் பேசிக்கொண்டிருப்பதில் ஒரு பிரயோஜனமும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதெல்லாம் Jurisdiction problem. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே ஒன்றை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சன் டி.வி. என்பது ஒரு குடும்பச் சொத்து அல்ல. அது ஒரு Public Limited concern. Public Limited concern என்றால் 3 மாதத்திற்கு ஒரு முறை யார் யார் shareholder-கள், எவ்வளவு share வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற பட்டியலை நம்முடைய மும்பையிலே இருக்கக்கூடிய நிறுவனத்திலே அளித்துக் கொண்டிருக்கிறார்கள். 3 மாதத்திற்கு ஒரு முறை பத்திரிகையிலே வெளியிடுகிறார்கள். சன் டி.வி.–யைப் பொறுத்தவரையிலே கணக்கு–வழக்குகள் அனைத்தும் மேற்பார்வைச் செய்யப்பட்டு வருமான வரித் துறை, அவர்களிடமிருந்து வருமான வரியையும் பெற்றுக்

கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஜெயா டி.வி.–யினுடைய உரிமையாளர்கள் யார்? யார், யார் அதிலே Director-களாக இருக்கிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஜெயா டிவி.–யினுடைய உண்மையான விவரங்களை இந்த அவைக்குக் கொடுக்க மாண்புமிகு உறுப்பினர்கள் தயாரா? நாங்கள் சன் டி.வி.யைப் பொறுத்தவரையிலே எல்லா விவரங்களையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருமான வரித் துறை மத்திய அரசிலேதான் இருக்கிறது. நீங்கள் அங்கிருந்து தெரிந்து கொள்ளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இது முடிந்து போன விவகாரம். திரு. சேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** வருமான வரித் துறையிலேயிருந்து தெரிந்து கொண்ட காரணத்தினாலேதான், அதிலே யார் யாரோ பினாமிகளாக இருக்கின்றார்கள் என்ற விவரம் எங்களுக்குத் தெரிந்து, அதைத்தான் உங்கள்மூலமாகக் கேட்க விரும்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சேகரன். (குறுக்கீடு)

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இல்லை. (குறுக்கீடு) திரு. வேலுசாமிமீது குறைசொல்லவில்லை. திரு. வேலுசாமி அவர்களைக் குறைசொல்லவில்லை. திரு. சேகரன், வேகமாகப் பேசுங்கள்.

***திரு. கூ.ந. சேகரன்:** சாதாரண குக்கிராமத்தில் பிறந்த என்னை 1996–லே மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகவும், மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைச் செயலாளராகவும் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், போதும். உங்களுக்கு அதிக நேரம் கொடுத்து விட்டேன்.



**திரு. கூ.ந. சேகரன்:** 2000–லே திருவெறும்பூர் ஒன்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளராகவும் 2001–லிருந்து தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகவும் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு பொறுப்புகளை எல்லாம் எனக்கு அளித்து, இந்தப் பொதுப் பணி ஆற்றுகின்ற இந்த நல்ல வாய்ப்பினை வழங்கிய தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர், எங்கள் குடும்பத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களையெல்லாம் நல்வழிப்படுத்துகின்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், (குறுக்கீடு) எங்களையெல்லாம் வழி நடத்திச் செல்கின்ற உள்ளாட்சியிலே நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்த வருவாய்த் துறை, (குறுக்கீடுகள்) இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் சிறைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கான நல்ல வாய்ப்பினை வழங்கிய நமது துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் துவங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வருவாய்த் துறை என்பது மிக முக்கியமான துறை. எல்லாத் துறைகளுக்கும் தாயாக, இன்னும் சொல்லப்போனால் முதுகெலும்பாக விளங்கக்கூடிய துறை என்று சொல்லக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் பெற்ற துறை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) திரு. சேகரன், ஒரு நிமிடம். இல்லை, நான் சொல்கிறேன் இருங்கள். இப்போது திரு. வேலுசாமி உறவினர் நடத்தினார் என்று ... (குறுக்கீடு) இருங்கள், இருங்கள், நான் சொல்லி முடித்துவிடுகிறேன். திரு. வேலுசாமிமீது குற்றம் சொல்லியிருந்தால் அவருக்கு நான் வாய்ப்புத்தர வேண்டும். திரு. வேலுசாமியின் உறவினர் என்று சொல்வதிலே, அவர் என்ன உறவினர் இல்லை என்று சொல்லப் போகிறாரா? (குறுக்கீடு) சரி, அவர் பேசி முடிக்கட்டும். பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) பேசி முடிக்கட்டும். அவர் பேசி முடிக்கட்டும், நான் வாய்ப்புத் தருகிறேன். சேகரன் பேசி முடிக்கட்டும், நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கமாக இந்த அவையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள்

பேசுவது, பேசிவிட்டு வெளிநடப்புச் செய்வதற்கு ஒரு காரணத்தைத் தேடுவது, அதைத்தான் இப்போதும் தேடியிருக்கிறார்கள். அவர்கள் போகட்டும், அனுப்புங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் திரு. வேலுசாமியைக் கூப்பிடுகிறேன்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சேகரன், உட்காருங்கள். சேகரன், ஒரே ஒரு second. (குறுக்கீடுகள்) திரு. வேலுசாமி மட்டும் பேசுங்கள்.

***திரு. செ.ம. வேலுசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கேபிள் டி.வி. நடத்துவதில் செ.ம. வேலுசாமி அவர்களுடைய உறவினர் நடத்துவதாகக் கூறினார்கள். அப்படி என்னுடைய உறவினர் கேபிள் டி.வி. நடத்தினால் நான் சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிவிடுகிறேன். அப்படி இல்லை என்று சொன்னால், அமைச்சர் பதவி விலகிவிடுவாரா என்று நான் கேட்க விரும்புகிறேன். பொறுப்பேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ராஜாராம், M.T.N. Cable Network–மேட்டூர், முன்னாள் அமைச்சர் செ.ம. வேலுசாமியினுடைய உறவினர் என்பதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதைப்போலவே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். திரு. சேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்த விவரங்கள் எல்லாம், (குறுக்கீடுகள்) இந்த விவரங்கள் எல்லாம் ஏற்கெனவே யார், யார் Network–லே ஈடுபட்டிருக்கிறார்கள், என்னென்ன கம்பெனி வைத்திருக்கிறார்கள் என்ற விவரங்களை எல்லாம் சேகரித்துதான் இந்த அவையிலே சொல்கிறோமே தவிர, ஏதோ பொத்தாம் பொதுவிலே



சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். இதை எப்படி நிரூபிக்க வேண்டுமென்று சொல்கிறாரோ, அப்படி நானும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சவாலை ஏற்றுக்கொண்ட பிறகு ஒன்றும் பிரச்சினை இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். சேகரன், பேசுங்கள்.

***திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் சிறைத் துறை மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வருவாய்த் துறை என்பது எல்லாத் துறைகளுக்கும் முதன்மையான, முதுகெலும்பான துறை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிக முக்கியமான துறையாகும். மாநில அரசினுடைய நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்கும், செம்மைப்படுத்துவதற்கும், அதேபோன்று, பொது மக்களுடைய துன்பங்களையும், துயரங்களையும் நீக்குகின்ற, அதேநேரத்தில் பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படுகிறபோது, அந்த மக்களைக் காக்கின்ற துறையாக இந்தத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், சமுதாயத்திலே அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெறுகிற சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகளை எல்லாம் அமைதிப்படுத்துகின்ற ஒரு துறையாகவும் இந்தத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது. தமிழக முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு முறையும் பொறுப்பேற்கிறபோதும் இந்தத் துறையிலே பல்வேறு சீர்திருத்தங்களை எல்லாம் அமல்படுத்தி இந்தத் துறையை மிக உன்னதமான துறையாக மக்களுக்குப் பயன்படுகிற துறையாக மாற்றி அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் 1969–ல் முதல்வராகப் பொறுப்பேற்றபோது, கிராமங்களில் வாழ்கின்ற அந்த மக்களிடத்திலே நேரடியாக அரசு நிர்வாகத்தை சென்றடைய வைத்து, அவர்களுடைய குறைகளை நேரடியாக அறிந்து அந்த இடத்திலேயே தீர்வு காண்கின்ற ஒரு நல்ல திட்டத்தை, மனுநீதித் திட்டத்தை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னோடித் திட்டமாக அறிவித்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், பிறகு 1973–ல் மக்களிடத்திலே நிலச் சீர்த்திருத்தச் சட்டத்திலே திருத்தங்களைக் கொண்டுவந்து, பெரிய விவசாயிகளிடம் மிகையாக இருக்கின்ற அந்த நிலங்களை எல்லாம் கையகப்படுத்தி நிலமற்ற ஏழைத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்குகின்ற அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். 1973–ல் திருத்துறைப்பூண்டியிலே நடைபெற்ற நிலம் வழங்குகின்ற, பட்டா வழங்குகின்ற அந்த நிகழ்விலே, அன்றைய பொதுவுடைமைக் கட்சியினுடைய தலைவர் மறைந்த மணலி கந்தசாமி முதலியார் அவர்கள், மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களை அந்த நிகழ்விலே கலந்துகொண்டு பாராட்டினார்கள். நாங்கள் பல ஆண்டு காலம் இரத்தம் சிந்தி சாதிக்க முடியாத காரியத்தை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு சொட்டு (மேசையைத் தட்டும் ஒலி) பேனா மையைச் சிந்தி சாதித்திருக்கிறார்கள் என்று மனம் திறந்து பாராட்டினார்கள்.

*பிற்பகல் 12–20*

இதுபோன்று ஒவ்வொரு முறையும் ஆட்சிப்பொறுப்பேற்கிறபோது பல திட்டங்களை, முன்னோடியான திட்டங்களையெல்லாம் முதலமைச்சர் அறிவித்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த முறை ஆட்சிப்பீடத்திலே இருந்தபோது, கிட்டத்தட்ட 10 ஆண்டு காலத்திற்கும் அதிகமாக அரசுப் புறம்போக்குகளிலே குடியிருந்த மக்களுக்கு, அவர்களுக்கே அந்த மனைப் பட்டாவை வழங்குகின்ற அந்தத் திட்டத்தையும் கொண்டு வந்து தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சாதனை படைத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த முறை தேர்தலிலே மிகச் சிறந்த வாக்குறுதிகளையெல்லாம் அளித்தார்கள். ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே அரசுக்குச் சொந்தமான தேவையற்ற அந்த நிலங்களையெல்லாம் விவசாயத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்குகின்ற அந்தத் திட்டத்தைக் கொண்டுவருவோம் என்று சொல்லி, இன்றையதினம் ஏழை எளிய மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் பாராட்டுகின்ற வகையிலே அந்தத் திட்டத்தையும் இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், அந்த நிலங்களைப் பண்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற வகையிலே நீர் ஆதாரங்களையெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்து அந்தத் திட்டத்தையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் கிராமப்புறங்களிலே சென்று பார்க்கிறபோது அங்கேயிருக்கின்ற அந்த



விவசாயத் தொழிலாளர்கள் அனைவருமே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை இன்றையதினம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

1967–ல் திருச்சி துவாக்குடி பகுதியில் மண்டலப் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டது. இப்போது அந்தக் கல்லூரி தேசிய தொழில்நுட்பக் கழகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்போது, தொடங்கப்பட்டபோது கல்லூரிக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது. அன்றையதினம் அந்தக் கல்லூரி வளாகத்திற்கு நடுவிலே 7 ஏக்கர் பரப்பளவிலே கிட்டத்தட்ட நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் குங்குமபுரம் என்ற அந்தப் பகுதியிலே குடியிருந்தார்கள். அப்போது அந்தக் கல்லூரிக்கருகில் இருக்கின்ற வாழவந்தான்கோட்டை என்ற ஊராட்சிப் பகுதியில், கல்லூரிக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் அம்மக்களுக்கு மாற்று இடம் தருவதாகச் சொல்லி அங்கே 100 குடும்பத்தினர் குடியமர்த்தப்பட்டார்கள். 40 ஆண்டு காலம் ஆகியும் இன்னும் அவர்களுக்கு வீட்டுமனைக்கான பட்டா வழங்கிடவில்லை. அந்த நிலை இப்போதும் இருக்கின்ற காரணத்தினால், பல்கிப் பெருகி 400 குடும்பங்களாக வாழவந்தான்கோட்டை ஊராட்சியிலே இருக்கின்ற குங்குமபுரம் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கும் அந்த மக்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இப்போது வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசுத் துறையிலே இலாபம் ஈட்டும் துறையாக விளங்கிக் கொண்டிருக்கின்ற திருச்சி பாரத மிகு மின் தொழிலகத்தில் சுமார் 40 ஆண்டு காலத்திற்கு முன்பு அண்டை மாநிலத்தவர்தான் அதிகமாக அங்கே பணியமர்த்தப்பட்டார்கள். அந்த நிலையை தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னபோது, அதைத் தடுத்து நிறுத்துகின்ற வகையிலே தமிழகத்திலே இருக்கின்ற வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்யப்பட்டவர்களைத்தான் அங்கே வேலைக்கு எடுக்க வேண்டுமென்று சொல்லி ஓர் அரசாணையை வழங்கினார்கள். அந்த ஆணையின் மூலமாக தமிழகத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அந்த நிறுவனத்திலே தொழிலாளர்களாகப் பணியேற்று, பல்வேறு தமிழ்க் குடும்பங்களெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், 1984–க்குப் பிறகு அந்தப் பணி நியமனம் என்பது இல்லாமல் இருந்தது. இப்போது, 2005–லிருந்து இந்த 3 ஆண்டுகாலமாக பொறியாளர்கள், தொழில்நுட்ப

உதவியாளர்கள், மேற்பார்வையாளர்கள் என்ற பணிகளுக்காக பணியாளர்களைத் தேர்வு செய்யக்கூடிய ஒரு நிலையிலே, தமிழர்களுக்கு எதிராக ஒரு அநீதி இழைக்கப்படுகின்ற வகையிலே அங்கே பணியாளர் நியமனம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், இட ஒதுக்கீடும் பணி நியமனத்தில் அங்கே பின்பற்றப்படவில்லை.

அதேபோன்று, அங்கே எழுத்துத் தேர்விலே இந்தியிலும் ஆங்கிலத்திலும் மட்டுமே வினாத் தாள்கள் வழங்கப்படுகின்ற காரணத்தால் தமிழ் வழியிலே படிக்கின்ற நம் தமிழ் இளைஞர்கள் கலந்துகொண்டு சிறப்பான ஒரு வெற்றியைப் பெறமுடியாத நிலையிலே அங்கே அவர்களுக்குப் பணி மறுக்கப்படுகின்ற ஒரு நிலை உருவாகியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே அன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அகில இந்திய சர்வீஸ் தேர்வுகள் எல்லாம்கூட தமிழ் வழியிலே எழுதுவதற்கான வசதி வாய்ப்புக்கள் இருக்கின்ற இக்காலகட்டத்தில், தமிழகத்தில் இயங்குகின்ற அந்தப் பொதுத் துறை நிறுவனத்திலே தமிழ் வழியில் எழுதுவதற்கான வாய்ப்பு மறுக்கப்படுவதை நமது தலைவர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த நிலையை அகற்றி அங்கே வாழ்கின்ற நம் தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர் தோழர்கள், பணிகளில் இடம் பெறுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பினை தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தருவதற்கான சிறப்பான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12–25*

திருச்சியிலே 1981–ல் நாவல்பட்டு பகுதியிலே அண்ணா நகர் என்ற பெயரில் வீட்டுவசதி வாரியத்தால் துணை நகரம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதற்கு புறம்போக்கு நிலங்களிலே 310/7 என்கின்ற அந்த சர்வே எண்ணில் கிட்டத்தட்ட 570 ஏக்கர் நிலங்கள் வீட்டுவசதி வாரியத்திற்காக கையகப்படுத்தப்பட்டு, அந்தத் திட்டம் தீட்டி, திட்ட ஒதுக்கீட்டாளர்களுக்கு வீட்டு மனையை வழங்கினார்கள். ஆனால், இதுவரை விற்பனைப் பத்திரம் வழங்கப்படவில்லை. 1981–லே முன்னுழைவு அனுமதி வழங்கிய அந்தத் திட்டத்திற்கு 2002–லே இறுதி விலை நிர்ணயம் செய்து



அந்தத் தொகையைச் செலுத்தவேண்டுமென்று சொல்லி இதுவரை அந்த பத்திரம் வழங்கப்படாத நிலையில், நமது ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொன்னவுடன் இன்னும் இரண்டு மாதங்களுக்குள்ளாக விற்பனைப் பத்திரம் வழங்குவதாக அறிவித்து இருக்கிறார்கள். 1981–லே என்ன சந்தை மதிப்பு விலை இருந்ததோ, அதே மதிப்பில் கிரயத் தொகையாக இப்போது பெற்றுக்கொண்டு உடனடியாக (குறுக்கீடு) . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இடம் முழுவதும் ஏறத்தாழ மூன்று மணி நேரம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடன் நான் சுற்றிப்பார்த்து வந்திருக்கிறேன். 1981–லே 25 இலட்சம் ரூபாய் செலுத்திவிட்டு — மொத்த மதிப்பீடு உத்தேசமாக ரூ.28 இலட்சம். ஆனால், 5 இலட்சம் ரூபாய் மட்டும் செலுத்திவிட்டு enter upon permission–ஐ பெற்று உள்ளே போய் இருக்கிறார்கள். வாரியமும் கண்டுகொள்ளவில்லை, வருவாய்த் துறையும் கண்டுகொள்ளவில்லை. நடப்பு Guideline value–படி போடுகிறபோது இரண்டு கோடி ரூபாய் வருகிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுபோய் என்றைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டதோ அன்றைக்கு அந்த இடத்தில் என்ன Guideline value–வோ அதைமட்டும்தான் போட வேண்டும் இல்லையென்றால் பாதிக்கப்படுவார்கள் என்று கோரி திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அந்த கருத்துரு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** நமது மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதி மக்களும் 1981–ல் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த கேபிள் டி.வி.–யைப் பற்றி நான் சொல்லும்போது அ.தி.மு.க.–வினரின் பட்டியலைப் படித்தேன். அதில் திரு. ராஜாராம், மேட்டூர், வேலுசாமியின் மைத்துனர் என்று சொன்னேன், முன்னாள் அமைச்சர் திரு. செம்மலை அவர்களுடைய மைத்துனர். எதுவாக இருந்தாலும் அ.தி.மு.க.தான். அ.தி.மு.க.–வினுடைய பட்டியல்தான் படித்தேன். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** அண்ணா நகர் பகுதியிலே அந்தத் திட்ட ஒதுக்கீட்டின்மூலம் வீட்டுமனை பெற்றவர்களுக்கு 1981–லிருந்த அந்த சந்தை மதிப்பீட்டை இறுதி விலையாக நிர்ணயம் செய்து அந்தத் தொகையை பெற்றுக்கொண்டு, அந்த வீட்டுமனைக்கான விற்பனைப் பத்திரத்தை வழங்குகின்ற நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், அருகில் இருக்கின்ற எம்.ஜி.ஆர். நகர் பகுதியிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது.

**திரு. கூ.ந. சேகரன்:** 1982–ல் சர்வே எண் 34, 35 மற்றும் 41 போன்ற அந்த எண்ணுள்ள பரப்பில் சுமார் 41 ஏக்கர் நிலத்தை ஏழை மக்களுக்கு இலவசமாக நிலம் வழங்கப்படுகின்ற அந்தத் திட்டத்தின்படியிலே 53 நபர்கள் அங்கே ஒதுக்கீடாகப் பெற்றார்கள். அப்போது அந்த கும்பக்குடி கிராமத்தைச் சேர்ந்த ஏனைய பகுதியில் இருக்கிறவர்கள் அந்த ஒதுக்கீட்டிலே முறைகேடு நடைபெற்று இருப்பதாக வருவாய்த் துறை அதிகாரிகள் இடத்தில் அவர்கள் முறையிட்டனர். உடனடியாக வருவாய்த் துறை அலுவலர்கள் அதைப்பற்றி விசாரித்தபோது உண்மையிலேயே அங்கு முறைகேடு நடைபெற்று இருக்கிறது என்பதை அறிந்து கொண்டனர். வங்கி அதிகாரிகளாகவும், அரசு ஊழியர்களாகவும் பணியாற்றுபவர்களுடைய மனைவி மற்றும் உறவினர்கள் பெயரிலே நிலம் ஒதுக்கப்பட்ட அந்த முறைகேட்டைக் கண்டறிந்து அந்த ஒதுக்கீட்டை இரத்து செய்து இருக்கிறார்கள். ஆனால், 1993–ல் அந்த மாவட்ட வருவாய் அலுவலர் இரத்துசெய்த அந்த ஆணையை எதிர்த்து ஒதுக்கீடு பெற்றவர்கள் நில நிருவாக ஆணையரிடம் (C.L.A.) மேல்முறையீடு செய்தார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

பிற்பகல் 12–30

**திரு. கூ.ந. சேகரன்:** மேல்முறையீடு காரணமாக C.L.A. அவர்கள் தற்காலிகமாக D.R.O. அவர்களின் இரத்து ஆணையை நிறுத்தி வைத்து 2002–ல்தான் இறுதித் தீர்ப்பை அறிவித்தார்கள். D.R.O. இரத்து ஆணை நிறுத்திவைக்கப்பட்ட இடைக்காலத்தில் ஒதுக்கீடு பெற்றவர்கள் 41 ஏக்கர் நிலத்தினை மனைக்கட்டுகளாகப் பிரித்து விற்பனை செய்துவிட்டனர்.

அந்த வீட்டு மனைகளை வாங்கியவர்கள் அனைவரும், இப்பொழுது 6, 7 ஆண்டுக் காலமாக வங்கிகளிலும், அவர்கள் பணியாற்றுகின்ற துப்பாக்கி தொழிற்சாலை, H.A.P.P. போன்ற நிறுவனங்களிலும், கடனைப் பெற்று மிகப் பெரிய அளவிலே வீடுகளைக் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நில நிர்வாக ஆணையாளர் அவர்கள் 2002–லே ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். D.R.O. அவர்கள் ஒதுக்கீட்டை இரத்து செய்த ஆணையை உறுதி செய்து, உண்மையிலேயே அங்கே முறைகேடு நடைபெற்றிருக்கிறது, குற்றம் நிகழ்ந்திருக்கிறது என்று சொல்லி, இப்பொழுது இருக்கின்ற அந்தச் சந்தை மதிப்பின் அடிப்படையில் இரண்டு மடங்கு விலையினை கிரயத் தொகையாகப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்குப் பட்டா வழங்கலாம் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். இதனால் அந்த வீட்டுமனையைக் கிரயம் பெற்று வீடு கட்டியவர்கள்தான் இன்றையதினம் பாதிக்கப்படுகின்ற ஒரு நிலை உருவாகியிருக்கின்றது. முதலில் ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு எந்தத் தண்டனையும் வழங்காமல், வீட்டு மனையை விலைக்கு வாங்கி வீடு கட்டியவர்களுக்குத்தான் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. முறைகேடாக ஒதுக்கீடு பெற்றவர்களிடத்திலிருந்து அந்த நிலத்திற்கான உரிய தொகையைப் பெற்றுக் கொண்டு, வீட்டு மனைகளைக் கிரயம் பெற்று வீடு கட்டி வாழ்ந்து வருபவர்களைக் காப்பாற்றிட வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவெறும்பூர் என்பது மிகப் பெரிய ஒரு தொழில் நகரம். பாரத மிகு மின் தொழிற்சாலை, இரயில்வே தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, H.A.P.P. தொழிற்சாலை போன்ற பெரிய தொழிற்சாலைகளும் 300–க்கும் அதிகமான சிறிய தொழிற்சாலைகள்,

பாரதிதாசன் பல்கலைக்கழகம், அரசுத் தொழில்நுட்பக் கல்லூரி, தேசிய தொழில்நுட்பக் கழகம், அரசு கலைக் கல்லூரி, இது போன்ற கல்வி வளாகங்கள் எல்லாம் நிறைந்திருக்கின்ற பகுதி. 32 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, திருவெறும்பூரை ஒரு தாலுகா மையமாக அமைத்திடுகின்ற வகையிலே ஒரு அறிவிப்பினை நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று திருச்சி என்பது மையமாக இருக்கின்ற பகுதி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி. (குறுக்கீடு) இல்லை, நன்றி சொல்லி முடிக்கமாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு) நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. கூ.ந. சேகரன்:** திருச்சி மாநகரத்திற்கு நிறைய திட்டங்களை எல்லாம் வழங்கி, திருச்சிக்கு நிறைய நிதியை ஒதுக்கி, அந்த மாநகராட்சியிலே விடுபட்ட அந்தப் பகுதியிலே பாதாள சாக்கடை அமைக்கின்ற அந்தத் திட்டத்தை சிறப்போடு செயல்படுத்துவதற்கு தேவையான நிதியினை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, திருச்சியை மையமாகக் கொண்டு ஒரு அரசு போக்குவரத்துக் கழகத்தை அமைத்திட வேண்டும் என்பதோடு, திருவெறும்பூர் பகுதியிலே வட்டாரப் போக்குவரத்துப் பிரிவு அலுவலகம் ஒன்றை அமைத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று தீயினால் பாதிக்கப்படுகின்ற . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி, (குறுக்கீடு) இல்லை, அதேபோன்று, அதேபோன்று என்று 30 அதேபோன்று சொல்லிவிட்டீர்கள். முடிக்கமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. தண்டபாணி பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. மா. தண்டபாணி:** மாண்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சைத் தரணி ஈன்றெடுத்த எங்கள் தவப் புதல்வன் மக்கள் தலைவர் அய்யா மூப்பனார் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) எனது உரையைத் தொடங்குகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.



**திரு. மா. தண்டபாணி:** இந்தப் பேரவையிலே இரண்டாவது முறையாகப் பேசுகிற வாய்ப்பினைப் பெற்றுத் தந்த, தியாகத்தின் திருவுருவம் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், தமிழக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பெருமக்களுக்கும், எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்களுக்கும், பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற உங்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

கடந்த ஆண்டு ஐந்தாவது மாதத்தில், ஐம்பெரும் காப்பியத்தின் தலைவராம் டாக்டர் கலைஞர் அவர்கள், ஐந்து எழுத்துக்குச் சொந்தமான காங்கிரஸ் கட்சியோடு இணைந்து களம் கண்டு, ஐந்து விரல்களைக் காட்டி காங்கிரஸ் என்று சொல்லி, அதை விரித்துக் காட்டி உதய சூரியன் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) களம் கண்டு வெற்றி பெற்று இன்றைக்கு பொன் விழா காண்கின்ற அந்த மகத்தான தலைவரைப் பாராட்டுகின்ற நேரத்தில் உங்களால்தான் தமிழ் மொழி, தமிழ்ச் சமுதாயம், தமிழ்க் கலாச்சாரம் பெருமைப்படும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, சமீபத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கின்ற உறுப்பினர் அரிகூட சொல்லியிருக்கிறார்கள். எப்படி என்றால், வருவாய்த் துறையில் கடந்த கால வார்த்தைகள், முகலாய வார்த்தைகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது; நாங்கள் கடந்த 5 ஆண்டுக் காலமாக ஆட்சிப் பொறுப்பிலே இருந்து தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கவில்லை; நம்முடைய மகத்தான தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால்தான் இந்தப் பெருமையைச் சேர்க்க முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னதன் அடிப்படையில் (குறுக்கீடுகள்) அந்த மகத்தான தலைவர் பொன்விழா காண்கிற இந்த ஆண்டில் என்னைப் போன்றவர்கள் புதியவர்களாக வந்து அமர்ந்திருப்பதிலே பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகிறோம்.

பிற்பகல் 12–35

இன்றைக்குப் பழமையும், பெருமையும், சிறப்பையும் பெற்றுத் திகழ்கின்ற வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் சிறைச்சாலைத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதில் நான் பெருத்த மகிழ்ச்சி அடைகிறேன். அதிலும் எங்களுடைய மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தர் மாண்பிற்குரிய அண்ணன்

I.P. என்று எங்களால் அன்போடு அழைக்கப்படுகிற இ. பெரியசாமி அவர்கள் பொறுப்பேற்று இருக்கிற துறையின்மீது பேசுவதில் நான் இன்னும் பெருத்த மகிழ்ச்சி அடைகிறேன். நான் என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்பாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய வேடசந்தூர் தொகுதி என்பது மிகுந்த வறண்ட பகுதி. குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லாமல் இவ்வளவு காலம் இருக்கிறபொழுது, நம்முடைய அரசாங்கம் உருவானதற்குப் பின்னாலேதான் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெரும் முயற்சியால் உள்ளாட்சியில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் பெருமுயற்சியால், எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் மாண்பிற்குரிய அண்ணன் I.P. அவர்களால், எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்து இருக்கிற அரசுக் கொறடா போன்றவர்களுடைய பெருமுயற்சியால் இன்றைக்கு வேடசந்தூர் தொகுதியைப் பொறுத்த அளவில் காவிரித் தண்ணீர் இல்லை என்று சொல்லுகிற கிராமமே இருக்கக்கூடாது என்று அத்தனை கிராமங்களுக்கும் நீங்கள் தண்ணீரைக் கொடுத்த காரணத்தால் எனது சார்பிலும், எனது தொகுதி மக்கள் சார்பிலும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறை என்பது நிலம் எடுப்பு, நிலம் ஒப்படைப்பு, நில உரிமை, நில வருவாய், ஆவணங்களைப் பராமரித்தல் – மேம்படுத்துதல், பட்டா வழங்கல், நிலச் சீர்திருத்தம், நகர்ப்புற நில உச்சவரம்பு, நில வருவாய், நகர்ப்புற நில வரி, வேளாண்மை வரி வசூல், பிறப்பு–இறப்பு பதிவு செய்தல், வாரிசு சான்றிதழ், சட்டம்–ஒழுங்கு பராமரித்தல், வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணங்களை அளித்தல், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், சமூக நலப் பணிகள் மற்றும் தேர்தலை நடத்துவது போன்ற பல்வேறு பணிகளைச் செய்து இருக்கிற காரணத்தால், ஒரு மனிதனுடைய கருவறையில் இருந்து கல்லறை வரை எல்லா நிலையிலும் பின்னிப் பிணைந்து இருக்கிறது இந்தத் துறை என்று சொன்னால் அது மிகையாகாது.

நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள், கருவுற்று இருக்கிற பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் 6 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிற திட்டமானாலும் சரி, படித்து



வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு நிவாரணம் கொடுக்கின்ற திட்டமானாலும் சரி, பணி நியமனத் தடை எல்லாம் நீக்கப்பட்டு வேலைவாய்ப்பு தருகின்ற திட்டமானாலும் சரி பல்வேறு நலப் பணிகளைச் செய்து இருக்கிற காரணத்தால் இது கருவறை மட்டுமல்ல, இறந்ததற்குப் பின்னாலே இவர்தான் இவருடைய வாரிசு என்று சொல்லுகிற கருவறைக்குப் பின்னாலும் செயல்படுகிற இந்தத் திட்டம் என்பதை நாம் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்பதிலே எல்லா அரசுகளும் முனைப்போடு இருந்துகொண்டிருக்கின்றன. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கிறபொழுது 1961–ல் இங்கே நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஓராண்டுக்கு முன்பாகவே 1960–ல் இருந்து நடைமுறைப்படுத்தவேண்டும் என்று சொல்லி, ஏழைகளுக்கு, நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் கொடுத்த பெருமை எங்களுடைய அருமைத் தலைவர் பெருந்தலைவர் காமராஜரைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னாலே நம்முடைய இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1972–ல் அதிலே ஒரு மாற்றம் செய்து, 16 standard acre தரவேண்டும் என்கிற உத்தரவைப் போட்டு இன்னும் ஏழைகளுக்கு அதிகமாக கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இடையிலே வந்திருக்கிற முதலமைச்சர்கள் அதிலே அதிகம் அக்கறை காட்டவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் 2 ஏக்கர் நிலத்தைக் கொடுத்து, அதோடு மட்டுமல்ல அந்த நிலங்கள் செப்பனிடப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அவர் ஒரு நல்ல விவசாயி என்பதை எண்ணிப் பார்த்தாகவேண்டும்.

இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறபொழுது, எதிர்க்கட்சிகளைச் சார்ந்து இருக்கிற நண்பர்கள் எல்லாம் ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டே வந்தார்கள். 55 இலட்சம் ஏக்கர் நிலம் எங்கே இருக்கிறது, எங்கே இருக்கிறது என்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழக முதல்வர் மிகத் தெளிவான விளக்கம் கொடுத்து விட்டார்கள். ஆனால், என்னைப் பொறுத்த அளவில் என்ன சொல்லுகிறேன் என்று சொன்னால், எவ்வளவு நிலம் கொடுத்தீர்கள், யாருக்குக் கொடுத்தீர்கள் என்பது முக்கியம் அல்ல, எப்படிப்பட்ட மக்கள் இன்றைக்கு அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தாக

வேண்டும். இந்த நிலம் கொடுக்கிற திட்டத்தைப் பார்த்தால் ஏதோ சாதாரண ஓர் எளிய திட்டம் என்றோ அல்லது நிறைவேற்ற முடியாத ஒரு திட்டம் என்றோ எண்ணிவிடக் கூடாது.

*பிற்பகல் 12–40*

சிலர் அப்படி நினைக்கிறார்கள். உப்பரிகையிலே, உல்லாசபுரியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்களுக்கும் கோடீஸ்வர கோமான்களுக்கும், இன்னும் சொல்லப்போனால், ஆற்றிலே 100 ரூபாய், 500 ரூபாய் நோட்டுகளைப் பறக்கவிட்டவர்களுக்கும் வேண்டுமானால் இந்தத் திட்டம் என்பது மிகச் சாதாரணத் திட்டமாக இருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எனக்குத் தெரிகிறது. என்னுடைய மாவட்டத்தில், என்னுடைய தொகுதியிலே முதன்முதலாக இந்தத் திட்டத்தை மாண்பிற்குரிய அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். அங்கே குப்பன் என்ற ஒரு ஏழையெளியக் குடியானவன், இந்தப் பட்டாவை வாங்குகிறபோது என்ன உணர்வோடு இருந்தான் என்றால் என் காலத்தில், என்னுடைய தந்தை காலத்தில், என்னுடைய பாட்டன் காலத்தில், பாட்டனுக்கெல்லாம் பாட்டன் காலத்தில் இல்லாத உரிமையை இன்றைக்கு நான் பெற்றிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை நான் நிலமற்றவனாக இருந்தேன்; ஒரு நேரக் கஞ்சிக்குக்கூட வழியில்லாமல் இருந்தேன். இன்றைக்குப் பார்! என்னுடைய தந்தை, பாட்டனால் தர முடியாத ஓர் உரிமையை இன்றைக்கு நான் 2 ஏக்கர் நிலத்தைப் பெற்றிருக்கிற காரணத்தால், சமுதாயத்திலே எனக்கு ஓர் அந்தஸ்து கிடைத்திருக்கிறது; சமுதாயத்தில் எனக்கு ஒரு பெருமை கிடைத்திருக்கிறது என்று மகிழ்கிறான். எல்லோரும் இவ்வாறு எண்ணிப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பாராட்டுகள்தான் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை இன்றைக்கு வாழ்த்திக் கொண்டிருக்கிறது என்று நான் கருதுகின்றேன்.

மேலும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 5, 6 தினங்களுக்கு முன்பாக என்னுடைய தொகுதியிலே இலவச எரிவாயு அடுப்பு கொடுக்கிற நிகழ்ச்சியிலே நான் பார்த்தேன். மன்றத்திலே அங்கம் வகிக்கின்ற அன்பிற்குரிய, பெருமைக்குரிய நண்பர்களே, நான் பெருமையோடு சொல்லிக்கொள்வதெல்லாம், விவசாயிகளுக்கு 2 இலட்சம், 3 இலட்சம் ரூபாய் கடன் தள்ளுபடி என்கிற பத்திரத்தைக் கொடுக்கிறபோது நான் முகமலர்ச்சியைப் பார்க்கவில்லை. ஆனால்,



இந்த இலவச கேஸ் அடுப்பு கொடுக்கிற நிகழ்ச்சியிலே பார்த்தேன். தாயோடு 7 அல்லது 8 வயது நிரம்பியிருக்கிற ஒரு பெண் குழந்தை வந்திருந்தது. நான் அந்தத் தாய்க்கு இலவச கேஸ் அடுப்பு கொடுக்கிறபோது பக்கத்தில் இருந்த அந்தப் பெண் குழந்தையினுடைய முகத்தைப் பார்த்தேன். எவ்வளவு பரவசம் அடைந்திருந்தது தெரியுமா? இல்லாத ஒன்றை நாம் பெற்றிருக்கிறோமே, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெரியவருக்கு லாட்டரி சீட்டில் ஆயிரம் கோடி ரூபாய் விழுந்தால் எந்த அளவிற்குப் பெருமைப்படுவாரோ அதுபோல இங்கே பெற்றிருக்கிறோம் என்று நினைத்து, இன்றைக்கு அந்தக் குழந்தைகள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கின்றன.

நான் ஏதோ மேடைப் பேச்சுக்கு சொல்ல வேண்டுமென்பதற்காகவோ அல்லது யாரையும் புகழ வேண்டுமென்பதற்காகவோ சொல்லவில்லை. நிதர்சனமான உண்மை. என்னுடைய உள்ளத்தை அன்றைக்கு ஈர்த்த அந்தக் காட்சியை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை என்று சொல்கிற அளவிற்கு, அந்தக் காட்சி இருந்ததை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கிற தமிழக அரசாங்கம் இவ்வளவு நல்ல பல திட்டங்களை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், கோடானுகோடி ஏழையெளிய மக்கள் இந்த நலத் திட்டங்களினால் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இவ்வாறு சொல்கிறபொழுது, எங்களைப் பார்த்து 'ஜால்ரா கூட்டம்' என்று சொல்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவில், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த அளவில், ஜால்ரா அடிப்பதில் தவறே இல்லை. எங்களுடைய அருமைக்குரிய அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் சொன்னதைப்போல, ஓர் ஏழைக் குடியானவன் 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வாங்குவது, விவசாயக் கடனையெல்லாம் தள்ளுபடி செய்திருப்பது, இந்த இலவச கேஸ் அடுப்பு கொடுத்திருப்பது, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கொடுத்திருப்பது ஆகியவற்றைப் பாராட்டிச் சொல்வதைக் காரணம் காட்டி ஜால்ரா என்று சொன்னால் அந்த ஜால்ராவை என்றைக்கும் நாங்கள் தட்டுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) தயாராக இருக்கிறோம். ஏனென்று சொன்னால், ஒரு ஓட்டப் பந்தயத்திலே ஓடுகிறவன் உயிரைப் பணயமாக வைத்து ஓடிக் கொண்டிருக்கிறான். அப்படி ஓடுகிறவனைப் பார்த்து, வெளியிலே வேடிக்கைப் பார்ப்பவன் என்ன சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவன் வேகமாக ஓடுகிறானே, உயிரைப் பணயம் வைத்து ஓடுகிறானே என்பதை மனதில்கொண்டு அவனைப் பாராட்ட வேண்டும்,

உற்சாகமூட்ட வேண்டும் என்பதற்காக வெளியிலே இருக்கிறவன், உணர்ச்சிவயப்பட்டவன் என்ன சொல்வான் என்று சொன்னால் Hurry up, Hurry up, வேகமாக ஓடு, ஓடு என்று சொல்வான். ஆனால், உணர்ச்சியற்றவன் அங்கே பிணமாக இருப்பான். அதுபோல, இன்றைக்கு அரசாங்கம், ஏழையெளிய மக்களுக்குக் கொடுத்து ஆட்சிப் பயணம் செய்கிற நேரத்தில், வெளியிலே இருக்கிற நாங்கள் உற்சாகமாக 'ஓடுங்கள், ஓடுங்கள்' என்று சொல்வதை (மேசையைத் தட்டும் ஒலி) ஜால்ரா போடுவது, ஜிங்சக் போடுவது என்று சொன்னால் அந்த ஜால்ரா தட்டுவதிலும், ஜிங்சக் போடுவதிலும் நாங்கள் என்றைக்கும் உறுதியாக இருப்போம் என்பதை மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது நான் இந்த மாமன்றத்திலே பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆளுகிற கட்சியில் இருந்து இன்று எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 'எல்லாம் எங்களுடைய காலத்தில் செய்யப்பட்டது. செய்யப்பட்டது. நடைமுறைப்படுத்தப்பட்டது' என்று சொல்கிறார்கள். பெருமையடைகிறோம். ஆனால், செய்யப்பட்ட செயல் யாருக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தாக வேண்டும். நான் இன்னும் சொல்கிறேன். இன்றைக்கு ஆளுகிற ஆட்சியைவிட கடந்த ஆட்சியில் நீங்கள் பல்வேறு திட்டங்களை அதிகமாகக்கூட கொடுத்திருக்கலாம். ஆனால், முறைப்படி பயன் அவர்களைப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்றால் இல்லை என்பதை என்னாலே இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய தொகுதியான வேடசந்தூரிலே ஒரு மருத்துவமனை இருந்துகொண்டிருக்கிறது. அந்த மருத்துவமனைக்கு கடந்த ஆட்சியில் 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்த மருத்துவமனையில் கடந்த 5 ஆண்டுக் காலமாக அங்கு இருக்கிற உபகரணங்கள் அத்தனையும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன; துருப்பிடித்துப் போய் கிடக்கின்றன. ஏனென்று சொன்னால், நீரே இல்லை. ஒரு மருத்துவமனை நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று சொன்னால் பிரதானமாக வேண்டியது நீர். ஆனால், 27 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு, நீர் வசதி செய்வதற்கான செயல் திட்டமே அங்கே நடைபெறவில்லை. என்ன செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், கதவுகளை ரிப்பேர் பார்த்திருக்கிறார்கள்.



பிற்பகல் 12–45

இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால் என்னாலே உறுதியிட்டுச் சொல்ல முடியும். 27 இலட்சம் ரூபாயும் ஒரு பைசாகூட செலவழிக்காமல் அத்தனையும் கொள்ளையடித்துவிட்டிருக்கிறார்கள். அது நிதர்சனமான உண்மை; (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் இது நடந்தது. ஆனால், கழக அரசு ஏற்பட்டதற்குப் பின்னாலே, கிட்டத்தட்ட ரூ.47 இலட்சம் என்று கருதுகிறேன். ரூ.47 இலட்சம் கொடுத்து நேற்றையதினம் முதன்முதலாக இரண்டு பக்கங்களிலிருந்து அந்த மருத்துவமனைக்குக் குடிநீர் வருகிறது என்ற நல்ல செய்தியை எண்ணுகிறபோது, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசில் யாருக்குச் செய்ய வேண்டுமோ, யாருக்கு இந்த நலத் திட்டங்கள் போக வேண்டுமோ, (மணியடிக்கப்பெற்றது) அங்கு போய்க்கொண்டிருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம். ஆகவே, இந்த அரசாங்கம் எதை மையப்படுத்திச் செய்கிறது என்று சொன்னால், எவ்வளவு திட்டங்கள் போடுகிறோம் என்பது முக்கியமல்ல; யாருக்குப் போய்ச் சேர்கிறது என்று எண்ணிப் பார்த்து, ஏழை, எளிய மக்களுக்கு இந்த அரசு நல்ல பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது. அதை நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்; வாழ்த்த நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

அன்புக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த வருவாய்த் துறையின் மூலமாக ஏழை விவசாயிகளுக்கு நீண்ட நெடு நாட்களுக்கு முன்பாக, அவர்களுடைய அனுமதியே இல்லாமல், கரைகளைச் செப்பனிட்டுவிட்டார்கள். கரைகளைப் போட்டுவிட்டு, மண்வள மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையிலே கடன் அதிகமாக இருப்பதாகக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். நான் அருள்கூர்ந்து வேண்டுவதெல்லாம் இதுதான். அரசாங்கம், நம்முடைய முதல்வர் அவர்கள் எவ்வளவோ நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிற நேரத்தில், விவசாயிகளுக்குச் சலுகைகள் கொடுக்கிற நேரத்தில், இந்த மண்வள மேம்பாட்டுக் கடனை இரத்து செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அரசாங்கத்தினுடைய நல்ல திட்டங்கள், சலுகைகள் ஆகியவற்றின் பயனைப் பெற வேண்டுமென்று சொன்னால், வருமானச் சான்றிதழ் ரூ.12,000 என்று நிர்ணயித்திருக்கிறீர்கள். நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இன்றைக்கு வளர்ந்து வருகிற

பொருளாதார நிலையில் ரூ.12,000/– என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அதைக் குறைந்தபட்சம் ரூ.24,000/– ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, முதியவர்களுக்கான ஓய்வூதியத்தை நீங்கள் ரூ.200/–லிருந்து ரூ.400/–ஆக உயர்த்தியிருக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பாக அதற்காக எங்களுடைய நெஞ்சார்ந்த பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில், அந்த முதியோர் பென்ஷன் பெறுகிறவர்களுக்கு ஒரு வீடு அல்லது ரூ.4,000 மதிப்புக்கு மேலே உடைமை இருந்தால் அவருக்கு பென்ஷன் கொடுக்கக் கூடாது என்று அரசு அலுவலர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், ரூ.4,000 மதிப்பு என்பது மிகக் குறைந்ததாக இருக்கிறது. அதை அருள்கூர்ந்து பத்தாயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இத்தனைக்கும் மேலாக ஊனமுற்றவர்கள், வறியோர்கள், முதியவர்களுக்கு நீங்கள் உதவி கொடுக்கிற நேரத்தில், துரிதமாக உதவி வழங்க அரசு அலுவலர்களுக்கு ஓர் ஆணை பிறப்பிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்களை அலைக்கழித்து, இந்த நிதியே பெறாமல் போய்விடலாமே என்ற நிலைப்பாட்டோடு அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்போது சில வட்டாட்சியர் அலுவலகங்கள் எல்லாம் நூறாண்டு காலமாக இருந்துகொண்டிருக்கின்றன. அதையெல்லாம் புதுப்பிக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய கோரிக்கையிலேகூட சொல்லப்பட்டிருப்பது எல்லாம், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. மா. தண்டபாணி:** தலைவர் அவர்கள் வந்தவுடனே எங்கள் பேச்சை முடித்துவிடுகிறீர்கள். எங்கள் உறுப்பினர்கள் எல்லாம் எழுந்து சத்தம் போட்டதனாலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சார். முடியுங்கள். நேரம் இல்லை. இன்னும் எத்தனை பேர் பேச வேண்டியிருக்கிறது?

**திரு. மா. தண்டபாணி:** இல்லை. நீங்கள் மற்ற எதிர்க்கட்சியினர் சத்தம் போட்டால் வாய்ப்பு கொடுக்கிறீர்கள். எங்களுக்குக் கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. மா. தண்டபாணி:** அரசுக் கட்டடங்களில் இயங்கும் வட்டாட்சியர் அலுவலகங்களைத் தவிர, மீதி இடங்களில் இருப்பதற்கு புதிய கட்டடம் கட்டப்படும் என்று சொல்கிறீர்கள். எங்களுடைய கோரிக்கையெல்லாம் வேடசந்தூரில் இருக்கிற வட்டாட்சியர் அலுவலகம், கிட்டத்தட்ட 100 வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட பழமையான கட்டடத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அது இடிந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அருள்கூர்ந்து அதற்கு இவ்வாண்டே புதிய கட்டடம் கட்டுவதற்குரிய வாய்ப்பை நீங்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட அளவிலே இப்போது பல்வேறு நிர்வாக மாற்றங்களை நீங்கள் ஏற்படுத்துகிறீர்கள். பெரிய பெரிய மாவட்டங்களையெல்லாம் இரண்டாகப் பிரிக்கிறீர்கள். பெரிய வட்டாட்சியர் அலுவலகங்களையெல்லாம் இரண்டாகப் பிரிக்கிறீர்கள். அதேபோல, கிராம ஊராட்சிகள் அதிகமாக இருக்கிறபோது, அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு நலத் திட்டங்கள் எவ்வளவு அறிவித்தாலும், முறைப்படுத்தி நடத்தப்பட வேண்டுமென்று சொன்னால், அரசு அலுவலர்கள் சிறப்பாக இருக்க வேண்டும். அந்த வகையிலே, அடிப்படையிலே பணியாற்றுகிற வி.ஏ.ஓ.–க்கள் இன்றைக்கு வட்டாட்சியர் பொறுப்பை வேண்டுமானால் 3 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறோம். ஆனால், கிராம நிர்வாக அலுவலர்களை எடுத்துக்கொண்டால், கடந்த காலத்தில் நாட்டாண்மை என்றும் கர்ணம் என்றும் இருந்த இரண்டு பதவிகளை ஒழித்துவிட்டு, ஒரே ஒரு பதவிதான் போட்டிருக்கிறோம். இன்றைக்கு நிர்வாக வசதியின் காரணமாக அவர்களுக்கும் இன்னும் அதிகமான பதவி உயர்வு ஒதுக்கீடு தரவேண்டுமென்று சொல்லி, பணியாற்றுகின்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 10 சதவிகிதம்தான் உயர்வு தந்திருக்கிறீர்கள். அதைக் குறைந்தபட்சம் 30 சதவிகிதமாவது பதவி உயர்வு கொடுத்து, இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் போன்ற பணியிடங்களில் வட்டாட்சியர் அலுவலகத்திலே நிரப்ப வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தண்டபாணி, 17 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. மா. தண்டபாணி:** கடந்த ஆட்சியில் தவறாகப் போடப்பட்டிருக்கிற கொப்பரைத் தேங்காய் வழக்குகளில் அப்பாவி வி.ஏ.ஓ.-க்கள் அதிகம் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்பாவி அலுவலர்களும் அதிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அருள்கூர்ந்து நீங்கள் எண்ணிப் பார்த்து அந்த வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–50*

இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், வட்டாட்சியர்களுக்கு நாம் அதிகப் பணிச் சுமையைக் கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு ஒதுக்கப்படுகிற எரிபொருள், டீசல் 98 லிட்டராக இருந்தது. அது 83 லிட்டராக, அண்ணா தி.மு.க. ஆட்சியில் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்போது நீங்கள் அதை 150 லிட்டராகக் கொடுத்தால், அவர்கள் சிறப்பாகப் பணியாற்ற ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சிறைச்சாலைகளை எடுத்துக்கொண்டால், சென்னையிலே இருக்கிற சிறைச்சாலையை ஒதுக்குப்புறத்திலே கொண்டு வைத்திருக்கிறீர்கள். வேலூரிலே இருக்கிற சிறைச்சாலையை ஒதுக்குப்புறத்திலே கொண்டு வைத்திருக்கிறீர்கள். ஆனால், கோயம்புத்தூரிலே இருக்கிற சிறைச்சாலை மையப் பகுதியில் இருந்து கொண்டிருக்கிறது. அதையும் அருள்கூர்ந்து வெளியே, ஓர் ஓரத்தில் வைத்தால், ஒதுக்குப்புறமாக வைத்தால் சிறப்பாக இருக்கும். இன்னும் அங்கேயிருக்கிற பெரியவர்கள் சொல்கிறார்கள்; அதற்கான கட்டடம் கட்டுவதுகூட, பெரிய கடினமான வேலை இல்லை. ஏனென்றால், அங்கு ஒரு ஏக்கர் நிலம் என்பது 10 கோடி ரூபாய் மதிப்புள்ளது. ஏற்கெனவே 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதை விற்றாலே 100 கோடி ரூபாய் வந்துவிடும். ஆகவே, அது வருவாய்க்கும் ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கேயிருக்கிற ஏரிப் புறம்போக்கு, வாரிப் புறம்போக்கு, வண்டிப் பாதைப் புறம்போக்கு, இவையெல்லாம் கல்விக் கூடங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்குப் பட்டா மிக விரைவில் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.



**திரு. மா. தண்டபாணி:** கிராம நிர்வாக அலுவலர்கள், தாலுகா விட்டு தாலுகா மாறுகின்ற வாய்ப்பினையும் பெற்றுத் தரவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இதுபோன்ற பல்வேறு பணிகளைப் பற்றியும், சுனாமி பற்றியும் சொன்னார்கள்; தெளிவாகச் சொல்லிவிட்டேன். எங்களுடைய அருமை நண்பர் சொல்லிவிட்டார். மத்திய அரசாங்கம், தமிழகத்திலே சுனாமி ஏற்பட்டபோது, 1,000 கோடி ரூபாயை முதலிலே கொடுத்திருக்கிறார்கள். ஆனால், தவறான செய்தியை இங்கே சொல்லி, மத்திய அரசு எதையுமே செய்யாததைப்போல நீங்கள் கருதிவிடக் கூடாது. அன்னை சோனியா காந்தியின் வழிகாட்டுதலில் நடைபெறுகிற மத்திய அரசாங்கம், 2,400 கோடி ரூபாய் ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) முதல் பகுதியாக 1,000 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தளவில், டாக்டர் கலைஞருடைய தயவால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அந்த அரசாங்கம், நிச்சயம் தமிழகத்திற்கு எல்லா நிலைகளிலும் உறுதுணையாக இருக்கும் என்று சொல்லி, பேசுகிற வாய்ப்பைக் கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன். 10 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையில், பாரம்பரியமிக்க, எல்லாத் துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், முதன்மைத் துறையாகவும் திகழ்கின்ற, வருவாய்த் துறை குறித்த மானியக் கோரிக்கையின்மீது நடைபெறும் விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த சமூக நீதிக் காவலர், மக்கள் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் அய்யா அவர்களின் எண்ணங்களுக்கு அரசியல் வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், ஓய்வறியா உழைப்பாளி எங்கள் தலைவர் திரு. கோ.க. மணி அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்த எனது தொகுதி மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

50 ஆண்டு காலமாகச் சட்டமன்றத்தில் தொடர்ந்து பணியாற்றக்கூடிய, அதிலும் தனது கடின உழைப்பால் மெல்ல மெல்ல வளர்ந்து, தொடர்ந்து பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சட்டமன்றப் பொன்விழா ஆண்டில், அதே மன்றத்தில்

முதன்முறையாகச் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுவதை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

நல்ல செயல்கள் எவையும் எளிதாக நடந்துவிடுவதில்லை. பெரும் போராட்டத்தின் பின்னரே, அவை நிறைவேற்றப்படும்; கல்வெட்டுகளாக்கப்படும். அந்தப் போராட்ட உணர்வு பலருக்கும் தனிப்பட்ட வகையிலும் இருக்கும்; பொது வாழ்க்கையிலும் இருக்கும். அந்த வித்தியாசமான போராட்ட உணர்வு கொண்டவர் எங்கள் நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள். அவர் உடன்பட்டுப் போவார்; உறுதியாக எடுத்துரைப்பார்; ஓங்கிக் குரல் கொடுப்பார்; அதற்கு மேல் மக்கள் சக்தியைத் திரட்டி, நியாயத்திற்காகப் போராடுவார். மக்களிடம் மங்கிக் கிடக்கும் நியாயமான போராட்ட உணர்வுகளை எல்லாம் ஒன்று திரட்டி, உருவம் கொடுத்தால், அவர்தான் எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள்.

விழுப்புரம் மாவட்டம், 12 சட்டமன்றத் தொகுதிகள் கொண்டதும். மக்கள் தொகையில் அதிகமாக இருக்கின்ற பெரிய மாவட்டமுமாக இருக்கின்றது. அந்த மாவட்டத்தினை இரண்டாகப் பிரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். உழவர்கள் தாங்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு உரிய விலை பெறவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகமெங்கும் உழவர் சந்தைகளை மீண்டும் உருவாக்கி, அவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இதனால், இடைத்தரகர்கள் கொள்ளை இலாபம் அடிப்பது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. எங்கள் இயக்கத்தின் சார்பில் அதை வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். On-line வர்த்தகத்தின்மூலம் ஒருபுறம் விலை உயர்வு. மேலும், காய்கறி விற்பனை, மளிகைப் பொருட்கள் விற்பனை போன்ற சில்லறை வணிகத்தில் பெரிய தொழில் நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு இறங்கியுள்ளன. பெரிய நிறுவனங்கள் சில்லறை வணிகத்தில் இறங்கினால், நமது பொருளாதாரத்தின் அஸ்திவாரமே ஆடிப்போகும்.

*பிற்பகல் 12–55*

காய்கறி விற்பனையில் ரிலையன்ஸ் நிறுவனம் இறங்கியுள்ளதால் ஆயிரக்கணக்கான சில்லரை வணிகர்கள் தங்கள் தொழிலுக்கு முழுக்குப் போடும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இதுபோன்ற நிலையைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.



மளிகைப் பொருட்களை நியாயவிலைக் கடைகளில் விற்க நடவடிக்கை எடுத்துள்ளதைப்போல், வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்தின்மூலமாகக் காய்கறிகளை மொத்தமாகக் கொள்முதல் செய்து பெருநகரங்களிலுள்ள அரசுத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும், அமுதம், காமதேனு, டி.யு.சி.எஸ்., காவேரி போன்ற விற்பனை அங்காடிகளில், குறைந்த விலையில் விற்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உழவர் சந்தையைப்போல் விவசாயிகள் உற்பத்தி செய்யும் தானிய வகைகள், பயறு வகைகள், வெங்காயம், மஞ்சள் போன்ற அனைத்துக்கும் உரிய விலை கிடைக்கும் வகையில், வேளாண்மை விற்பனைத் துறை என்று தனியாகக் கொண்டு வந்து விவசர்யிகளுக்கு உதவ வேண்டும். இதுபோன்று கர்நாடகா, பஞ்சாப், அரியானா மாநிலங்களில் உள்ளது.

தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முந்தைய அ.தி.மு.க. அரசு உடனடி நிவாரணம் என்ற பெயரில், யானைப் பசிக்குச் சோளப் பொரி போன்று, அப்போதைய அரசியல் நிலைக்கு ஏற்ப உடனடிப் பண உதவிகளைச் செய்ததே தவிர, வீடுகள், சொத்துகள் மற்றும் தொழில்களை இழந்தவர்களுக்கு நிரந்தரமான உதவிகளைச் செய்வதில் சரிவர அக்கறை காட்டவில்லை. ஆனால், தற்போதைய அரசு அவர்களுக்கு நிரந்தரமாக வசிப்பதற்கு குடியிருப்புகளைக் கட்டி வருகிறது. அவர்களுடைய மறுவாழ்வுக்குத் தேவையான உதவிகளைச் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அதற்காக நமது அரசைப் பாராட்டுகிறேன். இந்த சுனாமி நிவாரணம், மறுவாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேலும் துரிதப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பல்வேறு சூழ்நிலைகளில் பூமி வெப்பமடைந்து வருவதால், global warming ஏற்படுவதால், இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் இதற்கு முன்பு எப்போதுமில்லாத அளவுக்கு வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்படும் என்று வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து பல்வேறு பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. எனவே, global warming–ஆல் தமிழகத்தில் பாதிப்புகள் ஏற்படுமா என்பதுகுறித்து ஆராயவும், பாதிப்புகள் ஏற்பட்டால் அதனைச் சமாளிக்க அரசு தயார் நிலையில் இருப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வல்லுநர்களை, அரசு அதிகாரிகளைக் கொண்ட

ஓர் உயர்மட்டக் குழுவினை அமைத்து, இந்தியாவிற்கே ஒரு முன்னோடி மாநிலமான தமிழகம் இதிலும் முன்னின்று செயல்பட வேண்டுமென்ற எனது ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னை நகரை அச்சுறுத்தும் முக்கியமானப் பிரச்சினை நில விற்பனை. சென்னையில் நிலத்தின் மதிப்பு கிடுகிடுவென ஏறிக்கொண்டே போகிறது. பல மாநிலத் தொழில் நிறுவனங்கள் சென்னையையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் முற்றுகையிடுவதால் நிலத்தின் மதிப்பு வரலாறு காணாத வகையில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதுகுறித்து எங்கள் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களும், பல்வேறு கட்சித் தலைவர்களும் பேரவையில் எடுத்துரைத்தார்கள். சென்னையே பறிபோய்விடுமோ என்கிற அளவுக்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகின்றது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட கவலை தெரிவித்தார். சென்னை நகரிலும், சென்னையைச் சுற்றி நீண்ட தொலைவில் உள்ள பகுதிகளிலும் நிலங்களை வெளி மாநிலத்தைச் சேர்ந்த கறுப்புப் பண முதலைகளும், வெளி நாட்டுப் பணத் திமிங்கலங்களும் பகல் கொள்ளையடித்து வைத்துள்ளனர். சென்னையில் வாழும் ஏழையெளிய நகரத்துக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தனியார் நிறுவனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள், தங்கள் ஓய்வுக் காலத்தில் ஒரு வீட்டு மனை வாங்க நினைத்தால், தனது மகன்களுக்கெல்லாம் திருமணமாகி, குடும்பம் பெரிதாகிவிட்டது என்று வீடு கட்ட மனை வாங்க வேண்டுமென்று முயற்சித்தால் ஒரு செண்ட் நிலம்கூட வாங்க முடியாத நிலை உள்ளது. கறுப்புப் பண முதலைகள், வெளி மாநிலத்திலிருந்து வந்து வரி செலுத்தாமல் நாட்டை ஏமாற்றிக் கொண்டு, தங்கள் கறுப்புப் பணத்தால் சென்னையையும், சுற்றியுள்ள நிலங்களையும் அபகரித்து வைத்துள்ளனர். இதன் உண்மை நிலவரங்களைக் கண்டறிய வேண்டுகிறேன்.

ஆந்திர மாநில எல்லையில் பாலாற்றில் குடிதண்ணீர் தர மறுத்து அணை கட்டுகிற முயற்சியில் அம்மாநிலத்தினர் ஈடுபடுகின்றனர். ஆனால், கோதாவரியில் உரிமை கொண்டாடுகின்றனர். அங்கு ஒரு நிலை, இங்கு ஒரு நிலை என்று இரட்டை வேடம். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த இப்படிப்பட்டவர்கள், இங்கு வந்து சொத்துகளை வாங்கிக் குவிக்கின்றனர். ரியல் எஸ்டேட் என்ற பெயரால் நிலங்களைப் பறித்து, விற்பனையில் பல கோடி ரூபாய் கொள்ளை அடிக்கின்றனர். வாங்கிய நோக்கத்திற்காக இரண்டு ஆண்டுகளில்



நிலம் பயன்படுத்தவில்லையென்றால், ஆந்திர மாநிலத்தில் உள்ளதைப்போல, காலிமனை வரி (Vacant land tax) போட வேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் ஏழையெளியவர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும். ரியல் எஸ்டேட் கொள்ளையில் Hedge funds என்ற பெயரில் வெளிநாடுகளிலிருந்து பணம் வருவதாகச் சொல்லப்படுகிறது. இது யாருடைய பணம், யார்மூலம் வருகிறது என்றும் தெரியவில்லை என்று சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசு ஆராய வேண்டும். அம்பத்தூர் பத்திரப் பதிவு அலுவலகத்தில் மூன்று மாதத்தில் 7 முறை ஒரே வீட்டு மனை பதிவு செய்யப்பட்டதாகத் தகவல் வருகிறது. ரியல் எஸ்டேட் தொழிலில் புழங்குவது கறுப்புப் பணம்தான். இதை அரசு கண்காணிக்க வேண்டும். கடந்த ஓராண்டு காலத்தில் தமிழகம் முழுவதும் நிலம் வாங்கியோர் பட்டியலைத் தயாரித்து ஆய்வு செய்ய வேண்டும். ஓராண்டில் நிலம் வாங்கியோர் யார் என்பதிலே கவனம் செலுத்தினால் ஆந்திரா, குஜராத், மராட்டியம், மும்பை நகரங்களைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1–00*

சென்னையில் அடையாறு, மத்திய கைலாஷ் பகுதிகளில் சாலையில் உள்ள மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. அவை நீண்ட ஆயுட்காலம் உள்ள மிகப் பெரிய மரங்கள். சென்னை பெருநகரைப் பசுமை நகராகக் காக்கும் இம்மரங்கள் ஏன் வெட்டப்பட்டன; மரம் வெட்ட அரசு அனுமதி பெற்றார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

நிலம் சம்பந்தமாகப் போலிப் பத்திரங்கள், ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு மோசடி அதிக அளவில் நடந்து வருகிறது. உண்மையான நிலச் சொந்தக்காரர்கள் மிரட்டப்படுவதும், ரவுடிகளால் அச்சுறுத்தப்படுவதும் பல இடங்களில் நடைபெற்று வருகிறது. இதைத் தடுத்து நிறுத்த கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட மோசடிக்கு ஒரு சில வருவாய்த் துறை அதிகாரிகள், பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகள், சில காவல் துறை அதிகாரிகள் உடந்தையாக இருந்து வருகின்றனர். அரசு அதிகாரிகள் சிலர் இப்படிச் செய்வது மிகுந்த கண்டனத்திற்குரியது. இப்படிப்பட்ட சில அதிகாரிகள்மீது கடுமையாக நடவடிக்கை எடுத்து வழக்குப் பதிவு செய்ய வேண்டும்; பணி நீக்கம் செய்ய வேண்டும்.

பெரிதாக உள்ள கிராமங்களைக் கண்டறிந்து அவற்றை நிர்வாக வசதிக்கு ஏற்றவாறு பிரிக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் உடனடியாகச் சென்றடையும்.

பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் உடனடியாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஈமச் சடங்கிற்காக கொடுக்கப்பட்ட ரூபாய் 500/– தற்போது வழங்கப்படவில்லை. அதனை உயர்த்தி 1,000/– ரூபாயாக மீண்டும் வழங்க வேண்டும். கிராம உதவியாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி வழங்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

தரிசு நிலங்களைக் கண்டறிந்து, விளை நிலங்களாக மாற்றம் செய்யும் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அது ஏழை, எளிய மக்கள் பயனடையும் வகையில் இருக்க வேண்டும். வருவாய்த் துறையில் உள்ள அனைத்து நிலை காலிப் பணியிடங்களையும் நிரப்ப வேண்டும். வருவாய்த் துறையில் வெள்ளையர் நிர்வாகத்திற்கும் முன்னிருந்த 'பூஷ்வா' முறையையே நாம் இன்றும் பின்பற்றி வருகிறோம். அது தற்போதைய கணினி யுகத்திற்கு ஏற்றதாக இல்லை. வட்டாட்சியரிடம் ஒரு மனுவை அளித்தால் 15 நாட்கள் ஆகியும் அந்த மனு வருவாய் ஆய்வாளரிடமே உள்ளது. கிராம நிர்வாக அலுவலரிடமும் வராமல் ஏன் தேங்குகிறது என்றே தெரியவில்லை. கிராம நிர்வாக அதிகாரிகளைக் கேட்டால் வட்டாட்சியரிடம் கேளுங்கள் என்கிறார்; வட்டாட்சியரைக் கேட்டால் கிராம நிர்வாக அதிகாரியைக் கேளுங்கள் என்கிறார். இவ்வாறு ஏழை, எளிய மக்களை, முதியோர்களை மாறி மாறி அலைக்கழிக்கும் பரிதாபகரமான நிலையிருக்கிறது. ஜமாபந்தியில் அளிக்கப்படும் பல மனுக்கள் தீர்வு காணப்படாமல் மீண்டும் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கே அனுப்பப்படுகின்றன. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை நிறைவு செய்யுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து நிமிடங்கள் எல்லாம் இல்லை. ஒரு நிமிடத்தில் உரையினை நிறைவு செய்யுங்கள்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சம்பந்தப்பட்ட வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக



அலுவலர் ஆகிய மூன்று பேரும் ஒரே அலுவலகத்தில் வாரம் ஒருநாள் அமர்ந்து சம்பந்தப்பட்ட மனுதாரரை அழைத்து ஆவணங்களைச் சரிபார்த்து முடிவுகளை எடுக்கலாம். தீர்வு சரியாக இல்லாத நிலையில் மனுதாரர் கோட்டாட்சியரை அணுகும் சூழ்நிலையை உருவாக்கலாம். இதுகுறித்து அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரைப் படங்களுக்குத் தமிழில் பெயர் வைத்தால் கேளிக்கை வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிக்கப்படும் என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். இது தமிழ்த் திரை உலகை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது என்பது உண்மைதான். கறுப்புப் பணத்தையும், கோடிக்கணக்கான ரூபாயையும் வியாபாரமாக்கும் படங்களுக்கு வரி விலக்கு அளிப்பதால் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் என்ன இலாபம்? தமிழில் பெயர் வைத்து அவர்கள் ஆபாசமாகப் படமெடுத்தாலும் வரிவிலக்கு கொடுக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். தமிழகத்தின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் சீரழிக்கும்விதத்தில் எடுக்கப்படும் படங்களுக்கு வரிவிலக்கு அளிக்கக்கூடாது. மேற்கத்திய கலாச்சாரத்தை படிப்படியாக ஊக்குவிக்கும் திரைப்படங்கள் நமக்குத் தேவையில்லை. தொலைக்காட்சிகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளும் இதேநிலையில்தான் இருக்கின்றன.

குடிப் பழக்கத்தின்மூலமாக அரசுக்கு ஒரு ரூபாய் வருவாய் வருகிறது என்றால்கூட அந்த வருவாய் அரசுக்குத் தேவையில்லை. அதனால் ஏற்படும் வருவாய் இழப்புக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் விற்பனை வரி வசூலை முடுக்கிவிட்டும், மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய தொகையினை காலந்தாழ்த்தாமல் பெற்றும் மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தும் அரசே சிறந்த அரசாக இருக்க முடியும்.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட சென்னை மத்திய சிறைச்சாலையை புழலுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைக்கு வித்திட்டவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். இப்போது அதனைத் திறந்து வைத்தவரும் நமது முதலமைச்சர் அவர்கள்தான். ஆனால், சென்னை மத்திய சிறைச்சாலையில் என்னென்ன அத்துமீறல்கள் நடைபெற்றனவோ, அவை அங்கும் தொடர்வதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். ஒரு குற்றத்தைச் சந்தர்ப்ப சூழ்நிலையால் செய்துவிட்டு சிறைச்சாலைகளுக்குச் செல்பவர்கள் வெளியே வந்து மேலும் பல குற்றங்களைச் செய்யும் நிலை சிறைச்சாலைகளில் உருவாக்கப்படக் கூடாது. சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்டு வெளியே வரும் குற்றவாளிகளின் நடத்தையை சிறைத்

துறையும், காவல் துறையும் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்குக் கண்காணிக்க வேண்டும். அதன் அடிப்படையில் அவர்களுக்கு மறுவாழ்வுப் பணிகளைச் செய்ய வேண்டும்.

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை. முடித்துவிடுங்கள்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** எனது தொகுதியைப் பற்றி ஓரேயொரு நிமிடம். எனது முகையூர் தொகுதி, தென்பெண்ணையாற்றின் ஓரம் இருக்கிறது. ஆனால், 90–க்கும் மேற்பட்ட கிராமங்களில் தண்ணீர் இல்லாமல், மக்கள் ஆழ்துளைக் கிணறுகள்மூலம் தண்ணீர் பெற்றுக் குடித்து வருகின்றனர். கோடைக் காலங்களில் குடிதண்ணீர் சரியாகக் கிடைப்பதில்லை. எனவே, மணலூர்பேட்டை, விளந்தை, தேவனூர், அருமலை, வீரசோழபுரம், அருளவாடி ஆகிய கிராமங்களின் ஓரம், தென்பெண்ணையாற்றில் ஆழ்துளைக் கிணறுகளை வெட்டி, அனைத்துக் கிராமங்களுக்கும் pipe line மூலம் குடிநீர் வழங்க வேண்டுமாய் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தேவனூர் முதல் கோட்டமருதூர் வரை செல்லும் வழியில் உள்ள துறிஞ்சல் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று பல முறை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கோரப்பட்டும், இன்னும் அது அமைக்கப்படாமல் உள்ளது. எனவே, அந்தப் பாலத்தை அமைத்துத்தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலியவரதன், எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர், திரு. மாரிமுத்து. (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிற்பட்டோர் நலத் துறையின் மூலமாக, ஈமக் கிரியைக்கு வழங்கப்படும் 500 ரூபாய் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். அது கடந்த ஆட்சியாளர்களால் நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை வழங்க உத்தரவிட்டு, மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** அதைத்தான், 500 ரூபாய் என்றிருப்பதை 1,000 ரூபாயாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து. (குறுக்கீடு) மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தி வைக்கப்பட்ட தொகை, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இப்போது வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலியவரதன், பேசியது போதும். நேரமில்லை. இன்னும் நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன், ஐயா. எனக்குப் பேசுவதற்கு இப்போதுதான் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஓரே ஒரு நிமிடம். முக்கியமான விஷயம். சிறுமதுரையிலிருந்து பையூர் செல்லும் வழியிலுள்ள கோரையாற்றின் குறுக்கே பாலம் அமைப்பதற்கு, நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்த்து, 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதாக அறிவித்தார்கள். ஆனால், நிதி ஒதுக்கப்பட்டும், இதுவரையில் டெண்டர் விடப்படவில்லை. எனவே, உடனடியாக டெண்டர் விட்டு—அது ஒரு தீவுபோல் காட்சியளிக்கக்கூடிய, 10 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்டித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல, வசந்தகிருஷ்ணாபுரம் முதல் கொடுக்கப்பட்டு கிராமம் வரையுள்ள பாதையில் பாலத்தைக் கட்டுவதற்கு, கடந்தகால அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், பாலம் கட்டப்படவில்லை. நமது அரசு, மக்களுடைய நலத்தைப் பேணக்கூடிய நல்ல அரசு. எனவே, அந்தப் பாலத்திற்கு மீண்டும் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பாலத்தைக் கட்டித்தரவேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து. திரு. மாரிமுத்து, நேரம் அதிகம் இல்லை. எனவே, 7 நிமிடங்களுக்குள் உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறை, வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளின்மீது, நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைப் பதியவைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, மனிதனுக்கு அடிப்படையான தேவை என்பது உணவு, உடை, இருப்பிடம். இந்த மூன்றையும் நிறைவேற்றக்கூடிய துறையாக வருவாய்த் துறை இருக்கிறது. இந்த 10 மாதக் காலத்தில், ஏறத்தாழ 71, 755 பயனாளிகளுக்கு, ஏறத்தாழ 77,117.25 ஏக்கர் நிலம் இன்றைக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், இந்தத் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும். பயனாளிகளுக்கு தரிசு நிலம் வழங்குகிற அந்தத் திட்டம் என்பது மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்குத் தரிசு நிலங்களை வழங்குகிற அந்தப் பணியை வருவாய்த் துறை மேலும் தீவிரப்படுத்த வேண்டுமென நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

அடுத்து, உடை என்று வருகிறபொழுது, இலவசச் சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டத்தின்மூலமாக, 2007 ஆம் ஆண்டு மட்டும், ஏறத்தாழ 155.41 இலட்சம் சேலைகளும், 155.27 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளதாகக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது; பாராட்டுகிறோம்.

பிற்பகல் 1–10

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினை, குடிமனைப் பட்டா கோருபவர்கள் எண்ணிக்கை தமிழகத்திலே நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அரசாணை எண் 854, வருவாய் துறை, நாள் 31–12–2006–ன்படி, 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி, குடியிருந்து வரக்கூடிய மக்களுக்கு, அதற்கான ஆதாரங்களை வழங்கினால், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு பரிசீலித்து, தகுதியானவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், இந்த பணி ஆறு மாத காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், தேவை



ஏற்பட்டால், கால நீட்டிப்பு என்பது வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடந்த கால தி.மு.க. அரசில், 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்தால், அவர்களுக்குப் பட்டா என்று அறிவித்து, அரசாணை எண் 168 வெளியிடப்பட்டது. அதற்குப் பின்னால் வந்த அ.தி.மு.க. அரசு அந்த அரசாணை அடிப்படையிலே, 10 ஆண்டுகளுக்கு மேலே குடியிருந்தவர்களுக்குப் பட்டா வழங்குகிற அந்தப் பணியைத் தொடங்காத காரணத்தினாலே, மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இந்த அரசு, இந்தப் பணியை, இப்போது தொடங்கியிருக்கிறது.

இந்த அரசிடம் தமிழக மக்கள் ஏராளமாக எதிர்பார்க்கிறார்கள். பல இலட்சக்கணக்கான மக்கள் 10 ஆண்டுகள், 20 ஆண்டுகளாக பல்வேறு புறம்போக்கு நிலங்களிலே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசின் வெவ்வேறு துறைகள் வசம் உள்ள நிலங்கள் உட்பட, அனைத்து வகையான அரசு நிலங்களும், வருவாய் துறைமூலம்தான் இன்றைக்கு நிர்வகிக்கப்படுகின்றன. நிலங்களின் பயன்பாட்டிற்கேற்ப கடந்த காலங்களில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, நத்தம், தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசு, தீர்வை ஏற்பட்ட நஞ்சை தரிசு, தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு, நீர் வழிப் புறம்போக்கு, குட்டை, குளம், ஓடை, ஆறு, மேய்க்கால் புறம்போக்கு, மந்தைவெளிப் புறம்போக்கு, தோப்பு, பாதை, வண்டிப் பாதை, கல்லான்குத்து, கோயில் புறம்போக்கு மற்றும் மயானப் புறம்போக்குகள் என்பவை முக்கியமானவை ஆகும். இப்படிப்பட்ட புறம்போக்குகளில், 10 ஆண்டுகளுக்கு மேலே குடியிருந்து வரக்கூடிய அனைவருக்கும், குடிமனைப் பட்டா கிடைக்க வேண்டும். நான் மேலே குறிப்பிட்டுள்ள அத்தனை இடங்களிலும், இன்றைக்கு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மேற்கண்ட இடங்கள் எந்தப் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டதோ, அந்தப் பயன்பாடு என்பது கடந்த காலங்களில் இல்லாத காரணத்தினாலே, 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அந்த மக்களுக்கு குடியிருப்பு மனைப் பட்டா கிடைக்க வேண்டுமென்று சொன்னால் அதை வகை மாற்றம் செய்ய வேண்டும். வருவாய்த் துறை இந்த புறம்போக்குகளை எல்லாம் வகை மாற்றம் செய்தால்தான் குடியிருக்கக்கூடிய சாதாரண மக்களுக்கு குடிமனைப் பட்டா கிடைப்பதற்குரிய வாய்ப்பு இருக்கிறது.

மேலும், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு பட்டா வழங்குகின்ற அந்த முடிவை எடுக்கும் என்று கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அரசைக் கேட்டுக்கொள்ள

விரும்புவது எல்லாம், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழுவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும் இணைக்க வேண்டும்.

அதேபோல, சாதாரண மக்கள் தமிழகத்திலே பயன் பெறவேண்டும் என்று இந்த அரசு கருதினால்—கோயில், மடம், அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மக்கள் குடியிருந்து வருகிறார்கள்—மடம், அறக்கட்டளை, கோயிலுக்குச் சொந்தமான இந்த நிலங்களுக்கு உரிய நஷ்டஈட்டை அரசே அவற்றுக்கு வழங்கிவிட்டு, அந்த மனைகளிலே குடியிருக்கக்கூடிய மக்களுக்கு குடியிருப்பு மனைப் பட்டா கொடுப்பதற்குண்டான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டும்.

இயற்கைச் சீற்றம் என்று வருகிறபோது, நான் இங்கே குறிப்பிட விரும்புவது—சமீபத்திலே மத்திய தணிக்கைத் துறையின் அறிக்கை வெளியிலே வந்திருக்கிறது— தமிழகத்திலே கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியின்போது, மத்திய அரசு சுனாமி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கிய தொகையில், ஏறத்தாழ 27 சதவிகிதத் தொகை செலவு செய்யப்படவில்லை என்று தணிக்கைத் துறை சுட்டிக்காட்டியிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) மேலும், விதிகளுக்குப் புறம்பாக ஏறத்தாழ 10.51 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் தணிக்கைத் துறை சுட்டிக்காட்டியிருக்கிறது. எனவே, சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, கடந்த கால அரசு செய்திருக்கக்கூடிய நிவாரணப் பணிகள் சம்பந்தமாக ஒரு வெள்ளை அறிக்கையை, இந்த அவையில், இந்த அரசு, தாக்கல் செய்ய வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தீ விபத்தால், வெள்ளத்தால், சுனாமியால், இதர இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு அரசு வழங்கக்கூடிய 2,000 ரூபாய் என்பது போதுமானதாக இல்லை. இன்றைய விலைவாசி உயர்விற்கு ஏற்ப குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாய் வழங்குகிற ஏற்பாட்டை அரசு தொடங்க வேண்டும். அதேபோல, சுனாமி பணிகளுக்காக மாநிலம் முழுவதும் நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்.

*பிற்பகல் 1–15*

வருவாய்த் துறையில் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள் ஆகிய நிலைகளில் ஏறத்தாழ 1,286



பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இவற்றை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகை போன்ற பகுதியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், 2006–2007 ஆம் ஆண்டுக்குரிய மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய அந்தக் கல்விக் கட்டணச் சலுகை அரசிடமிருந்து இன்னும் விடுவிக்கப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாக அரசு விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைத் துறையைப் பொறுத்தவரையில், கடந்த ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு முன்பு வரை சிறைக் காவலர்களும் காவல் துறை காவலர்களும் ரூ. 825/- என்ற விகிதாச்சார அடிப்படையில் அடிப்படைச் சம்பளமாகப் பெற்று வந்தனர். ஆறாவது ஊதியக் குழு பரிந்துரையின்போதும், சிறைக் காவலர்களுக்கும் காவல் துறைக் காவலர்களுக்கும் ஒரே ஊதிய விகிதம் ரூ. 2,750/- என்ற அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. (மணியடிக்கப்பெற்றது) ஆனால், 1–9–1998 முதல் காவல் துறைக் காவலர்களுக்கு மட்டும் அடிப்படை ஊதியத்தில் ரூ. 300/- அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் காரணமாக காவல் துறைக் காவலர்களுக்கு ஊதியம் ரூ. 3,050/- என நிர்ணயம் செய்யப்பட்டது. சிறைத் துறைக் காவலர்களுக்கு, (மணியடிக்கப்பெற்றது) அடிப்படை ஊதியம் ரூ.2,750/- என்ற நிலையிலேயே தொடருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், திரு. மாரிமுத்து. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. வே. மாரிமுத்து:** இதைச் சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றியைக் கூறிக்கொண்டு, வருவாய்த் துறை இன்றைக்கு நாட்டின் முக்கியமான பணிகளைக் கவனிக்கின்ற ஒரு துறை. சட்டம்–ஒழுங்கு பாதுகாப்பு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, பாயிண்டை மட்டும் சொல்லுங்கள். உங்களுக்கு ஐந்து நிமிடங்கள்தான் நேரம்.

**திரு. தி. இராமசாமி:** சரி. அரசு அறிவிக்கின்ற அனைத்து சலுகைகளையும், நடைமுறைச் சட்டங்களையும் அமல்படுத்துகின்ற துறை வருவாய்த் துறை. கடந்த கால ஆட்சியில் கைவிடப்பட்ட விவசாயத் தொழிலாளர் நல வாரியம், நமது ஆட்சியில் கொண்டு வரப்பட்டு சிறப்பான முறையில் அமல்படுத்துவதற்கான முயற்சி நடந்துகொண்டிருக்கின்றது. ஒரு கோடிக்கு மேற்பட்ட குடும்பங்கள் கண்டறியப்பட்டு, கிட்டத்தட்ட 50 இலட்சம் குடும்பங்களுக்கு அந்த அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், அதை நாங்கள் முழுமையாக வரவேற்பதோடு, அந்த வாரிய அட்டை நபர்வாரியாக வழங்கப்பட வேண்டும். குடும்பத்திற்கு ஓர் அட்டை என்பது கடந்தகால முறை. எனவே, நபர்வாரி அட்டை வழங்க வேண்டும். அதோடு இந்த வாரியத்தை நடத்துவதற்குத் தனியாக ஒரு துறையை ஏற்படுத்தி அதனைச் செயல்படுத்தவேண்டும்.

இன்றைக்கு நமது கலைஞர் அரசு நாட்டில் நல்லாட்சியை நடத்தவேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். குறிப்பாக, கிராமப்புற மக்கள் முன்னேற வேண்டும்; இந்த ஆட்சியினுடைய பலன்கள் கிராமப்புறம் வரை சென்றடையவேண்டும் என்பதில், முழுக் கவனமாக இருக்கிறார்கள். ஆனால், அதிகாரிகளைப் பொறுத்தவரையில், கிராம மக்களுக்கு, ஒரு கடுமையான நெருக்கடியைத் தொடர்ச்சியாக உருவாக்கி வருகிறார்கள். சாதாரணமாக ஆண்டாண்டு காலமாக, கிராமப்புறங்களில் வீடுகள் கட்டுவதற்கு, வீடுகளைப் பூசுவதற்கு, ஆங்காங்கு இருக்கின்ற ஓடைகள், கண்மாய்கள் போன்ற இடங்களில் இருந்து மணல் எடுத்து சின்னச் சின்ன வேலைகளில் ஈடுபட்டு வந்தார்கள். அவர்கள் எல்லாம் மணல் கடத்தல்காரர்கள் அல்ல. பாலாற்றிலும், தாமிரபரணி ஆற்றிலும், வைகையிலும் பொக்லைன் இயந்திரங்களை வைத்து, மணலை அள்ளி விற்பவர்கள்மீது, நமது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கலாம்; ஆட்சேபனையில்லை. ஆனால், சாதாரணமாக மாட்டு வண்டிகளில் ஒரு 10 நடை மணலை மண்வெட்டியில் எடுத்து, சுரண்டி அள்ளிவருகின்ற மாட்டு வண்டிகளைக்கூடப் பிடித்து வைத்துக்கொண்டு, மாட்டைப் பட்டினி போட்டு கொடுமைப்படுத்துகின்ற செயலை சில அதிகாரிகள் செய்கிறார்கள். குறிப்பாக, புளியங்குடியிலே, 7 ஆம் தேதி 8 மாட்டு வண்டிகளைப் பிடித்து, இன்று வரை அந்த மாட்டு வண்டிகள் விடப்படவில்லை. எனவே, இப்படி மாட்டு வண்டிகளில், மணல் அள்ளுவதற்குக் கொஞ்சம் விதிவிலக்கு கொடுக்க வேண்டும். அதைப்போல, கண்மாய்களில் உள்ள வண்டல்களை உரமாகப் பயன்படுத்துவார்கள். இன்றைக்கு இயற்கை உரம் பயன்படுத்தவேண்டுமென்று எல்லோரும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இயற்கை உரத்தைப் பயன்படுத்துவதற்கு கண்மாய்களில் வண்டல் அள்ள வேண்டும். அனுமதி பெறுவதற்கு விண்ணப்பித்தால், அனுமதி கிடைப்பதற்கு மூன்று மாதங்கள் ஆகின்றன. அதற்குள்ளே பருவ நிலை மாறி விடுகிறது. எனவே, கண்மாய்களில் மாட்டு வண்டிகளில் வண்டல் அள்ளி விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்யவேண்டும்.



பிற்பகல் 1–20

அதேபோல, ஆக்கிரமிப்பை அகற்றுவது என்ற பெயரில் பல்வேறு இடங்களிலே ஏழை எளிய மக்களுடைய குடிசைகள், வீடுகள் இப்போது இடிக்கப்படுகின்றன. அவற்றை ஒரு வரன்முறைப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் நமது கலைஞர் அரசு பட்டா இல்லாதவர்களுக்குப் பட்டா கொடுக்கின்ற ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. இது மிக வரவேற்கத் தகுந்தது. ஆனால், இன்றைக்கு மதுரையினுடைய உயர் நீதிமன்றமே உலகனேரி கண்மாயிலேதான் கட்டப்பட்டிருக்கிறது. மதுரையினுடைய மாவட்ட கோர்ட்டே செங்குளம் கண்மாயில் கட்டப்பட்டிருக்கிறது. உலகனேரி கண்மாயில் கோர்ட்டைக் கட்டி, அதிலே அமர்ந்து நீதி வழங்கக்கூடிய நீதிபதிகள், சாதாரண ஏழை எளிய மக்களுடைய வீட்டை இடித்துத் தள்ளுங்கள் என்று உத்தரவிடுகிறார்கள். அப்படிப்பட்ட சாதாரண மக்களுக்கு விரோதமான அந்த வேலைகளைத்தான் அதிகாரிகள் ஓடோடி செய்துகொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் நமது ஆட்சிக்கு, நமது தலைவருக்கு பிடிக்காத ஒரு விஷயம் என்பதை அதிகாரிகளுக்கு உணர்த்த வேண்டும்.

இயற்கைச் சீற்றங்கள், சுனாமி, மழை–வெள்ளம், அடுத்து வறட்சி போன்ற சீற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த அரசு, இந்த 10 மாத காலத்திற்குள்ளே தீவிரமான நடவடிக்கை எடுத்து நூற்றுக்கணக்கான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதில் மிக முனைப்போடு செயல்பட்டு வருகிறது என்பது அனைத்து அறிக்கைகளிலும் இன்றைக்கு வந்துகொண்டிருக்கிறது. அதேசமயத்தில் கிராமப்புறங்களில் வீடுகள் தீப்பிடித்தாலோ அல்லது வெள்ளத்தில் பாதிக்கப்பட்டாலோ, வழங்கப்படுகின்ற அந்த 2 ஆயிரம் ரூபாய் என்ற தொகையை உயர்த்த வேண்டும்.

எங்களுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் 1984–ல் ஒரு பெருவெள்ளம்; 1991–ல் ஒரு பெருவெள்ளம், அதேபோல 1997–ல் ஒரு பெரிய தீவைப்புச் சம்பவம். இப்படிப்பட்ட சம்பவங்களின்போது அரசாங்கத்தின் சார்பில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டு வீடுகள் கட்டி இருக்கிறார்கள். இயற்கைச் சீற்றத்தின்போது அரசாங்கத்திலிருந்து கடன் பெற்று வீடுகளைக் கட்டியவர்களுக்கு அந்தக் கடனை இயற்கைச் சீற்ற (மணியடிக்கப்பெற்றது) நிவாரண நிதியாகக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்கள் வாங்கிய அந்தக் கடனை இரத்துச் செய்ய வேண்டும்.

கலைஞர் அரசு பொறுப்பேற்ற 13–5–2006 அன்று தமிழகத்தினுடைய பெரும் பகுதிகளில் சூறைக்காற்று பலமாக வீசி, வாழை, தென்னை, மிளகாய், சூரியகாந்தி போன்ற பயிர்களெல்லாம் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின. உடனடியாக நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இழப்பு கணக்கீடு செய்யப்பட்டு நிவாரணம் உரியவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி கணக்கெடுக்கப்பட்டது. நிவாரணம் வழங்குவதற்கான அந்த வேலையை உடனடியாகச் செய்ய வேண்டும். நமது கலைஞர் அரசு உறுதியாக நமக்கு (மணியடிக்கப்பெற்றது) நிவாரணம் வழங்கும் என்ற முழு நம்பிக்கையோடு பாதிக்கப்பட்ட விவசாயிகளெல்லாம் இருக்கிறார்கள்.

கிராமப் பணியாளர்கள் 2,500 பேர் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்படும்போது, ஏற்கெனவே 20 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம். (குறுக்கீடு) திரு. செல்வம், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. இராமசாமி, முடியுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய அந்த கிராம உதவியாளர்களிலிருந்து கிராம நிர்வாக அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

T.V. என்பது இன்றைக்கு எல்லா இடங்களிலும் சிறப்பாக வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், முடியுங்கள். திரு. செல்வம், பேசுங்கள். (குறுக்கீடு) முடியுங்கள் என்றால் முடிக்கமாட்டேன் என்கிறீர்களே?



**திரு. தி. இராமசாமி:** T.V. வாங்கியவர்களுக்கு இன்னும் சில இடங்களில் அந்த மின்னிணைப்பு வழங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது. அதை உடனடியாகக் குறிப்பிட்ட கால வரையறைக்குள் வழங்கவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, அடுத்தபடியாக எங்களது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வத்திராயிருப்பை தனித் தாலுகாவாக மாற்றிக் கொடுக்க வேண்டும்.

*பிற்பகல் 1–25*

உள்ளாட்சித் துறை மானியத்தின்போது, பல சலுகைகள் மழைபோல் வழங்கப்பட்டன. எங்களுக்கும் கோடை மழை மனதிற்கு இதத்தை உருவாக்கும் என்று நாங்களும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். எங்களுடைய விருதுநகர் மாவட்டம் முழுவதுமே தாமிரபரணி தண்ணீர்வந்து தாகத்தைத் தீர்த்துக்கொண்டிருக்கிறது, மக்களெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய சின்ன வேண்டுகோள், எங்களுடைய வத்திராயிருப்பு ஒன்றியத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமல் நடத்துவது ஒன்றுதான் விடுபட்டிருக்கிறது. மாவட்டம் முழுவதும் அனைத்துத் தாலுகாக்களிலும் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. அதையும் நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவு செய்து கொடுப்பார்கள் என்றவொரு (மணியடிக்கப்பெற்றது) வலுவான நம்பிக்கையோடு நாங்கள் இருக்கிறோம். பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் வருவாய் மற்றும் சிறைத் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேரவை நிறைவு பெறும் தறுவாயில் பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்னும் இரண்டு பேர் இருக்கிறார்கள். திரு. செல்வம், உங்களுக்கு 5 நிமிடங்கள்தான். பாயிண்டை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கு. செல்வம்:** நிறைவு பெறும் தருவாயில் என்று சொன்னேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு, மனைப் பட்டா, நிலப் பட்டா என்று வழங்கி வருகிறது. மனைப் பட்டா

என்பதும், நிலப் பட்டா என்பதும் மண்ணைச் சார்ந்தது. நம்முடைய முத்தமிழறிஞர், சமத்துவப் பெரியார் கலைஞர் அவர்கள் பொன் விழா காண்கின்ற இந்த வருடத்தில் அந்த மனைப் பட்டா, நிலப் பட்டா என்பதை மண்ணுரிமைச் சான்றிதழ் என்று அழைக்க முடியுமா என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கையை வைக்கிறேன். ஆதி திராவிடர் மக்களுக்கு மனைப் பட்டாவில், நிலப் பட்டாவில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று ஏற்கெனவே நம்முடைய கலைஞர் அவர்கள் ஆட்சியிலே அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஐந்தாண்டு காலமாக இந்த ஆணையைப் பின்பற்றாமல் ஆதி திராவிட மக்களைப் புறக்கணித்திருந்த அரசு போய் இப்போது நல்லரசு வந்து, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞருடைய அரசில் ஆதி திராவிட மக்களுக்கு முன்னுரிமை அளித்து, நிலப் பட்டா, மனைப் பட்டாவை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆறு மாதத்திற்குள் மனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிட்ட ஆணையை ஏற்று, உடனடியாக. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வப் பெருந்தகை அவர்கள் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது புறக்கணிக்கப்பட்டதாக இங்கே பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய ஐந்தாண்டுக் கால ஆட்சியில் ஆதி திராவிட மக்கள் உள்பட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் தொடர்ந்து ஐந்தாண்டுக் காலமும் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், பேசுங்கள்.

**திரு. கு. செல்வம்:** இந்த விவரங்கள் அனைத்தையும் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிட்டால் நாட்டு மக்கள் அதைப் புரிந்துகொள்வார்கள் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



நம்முடைய கிராம நிர்வாக அலுவலர்கள் இப்போது தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள். ஏறக்குறைய 2,000–க்கும் மேற்பட்ட V.A.O. பதவிகளை நிரப்புகையில் ஆதி திராவிடர்களுக்குரிய அந்த backlog vacancy–ஆக இருக்கிற 800 V.A.O.–க்களுக்கு முன்னுரிமை அளித்து தேர்வு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். I.A.S. அதிகாரி பதவிக்கு தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தியாவில் இருந்து இரண்டு இலட்சம் பேர் மனு செய்கிறார்கள். இந்தக் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு இதுவரை 10 இலட்சம் பேர் மனு செய்ததாக நமக்குத் தெரிய வருகிறது. ஆக, இப்படிப்பட்ட இந்த உயரிய பதவிகளைப் பொறுத்தவரை, உடனடியாக நம்முடைய தமிழக அரசு ஆதி திராவிட மக்களுக்குச் சேர வேண்டிய பின்னடைவு இடங்களைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த முறை ஆட்சி செய்தபோது வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் ஆணையைப் பிறப்பித்தார்கள். உள் துறையின் 21–12–2000 நாளிட்ட அரசாணை எண் 1371–ன்படி Victim Compensation Fund என்று உருவாக்கி யார், யார் எல்லாம் ஆயுள் தண்டனைக் கைதியாக இருக்கிறார்களோ அவர்கள் சிறைவாசிகளாக சிறையிலே பணியாற்றும்போது அவர்கள் ஊதியத்திலிருந்து 20 சதவிகிதத்தைப் பிடித்து, யார் குற்றம் இழைக்கப்பட்டு நடுத்தெருவில் அனாதையாக நிற்கிறார்களோ, அந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அந்த நிதியைப் பிரித்துத் தரவேண்டுமென்று இந்த Victim Compensation Fund என்ற ஒரு நிதி நிறுவப்பட்டது.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. கு. செல்வம்:** ஆனால், கடந்த ஐந்தாண்டுக் காலமாக கோடிக்கணக்கில் குவிந்திருக்கின்ற பணத்தை இதுவரையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பிரித்துத் தந்ததாக எந்தச் சான்றிதழும், செய்தியும் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் தொகையை உடனே சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே 10 வருடங்களுக்கு மேல் யார், யார் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்தச் சிறைவாசிகளை விடுதலை செய்யவேண்டுமென்று ஓர்

ஆணையைப் பிறப்பித்திருந்தார்கள். ஆனால், தண்டனை பெற்று இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 224–ன்படி, Parole-ல் வந்தவர்கள், வீட்டிலிருந்து திரும்பும்பொழுது இரண்டு நாட்களோ, மூன்று நாட்களோ தாமதமாகச் சென்றதால், இதுவரையில் நூற்றுக்கணக்கான சிறைவாசிகள் விடுதலை செய்யப்படாமல் சிறையிலேயே இருக்கின்றார்கள். அமைச்சரவர்கள் கனிவுடன் கவனித்து, அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை, கலைஞர் பொன் விழா ஆண்டிலே விடுதலை செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், H.I.V.–ஆல் பாதிக்கப்பட்ட சிறைவாசிகளுக்கு குருதிப் பரிசோதனை செய்து, அவர்களுக்கு மருத்துவம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சிறை அதிகாரிகளுக்கு 8 மணி பணி நேரத்தைக் கொண்டு வந்தார்கள். ஏற்கெனவே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே நேரம் குறிப்பிடப்படாமல், நாள் முழுவதும் பணியாற்றுகின்ற நிலை அங்கே இருந்தது. முத்தமிழறிஞர், கலைஞர் அவர்கள் முதல் முறையாக முதல்வராகப் பதவியேற்றவுடன், அனைத்துத் துறைகளிலும் உள்ளதைப்போல, சிறைத் துறையிலும் 8 மணி நேரப் பணி என்ற விதியைக் கொண்டு வந்தார்கள். ஆனால், தற்பொழுது சிறைத் துறை அதிகாரிகளும், காவலர்களும், அனைத்துத் துறைகளிலும் பணியாற்றுகின்ற அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு இணையான ஊதியம் பெற இயலாத நிலை இருக்கிறது. அவர்களுக்கும் காவல் துறையில் உள்ளதைப்போலவே ஊதியம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே நிறுவப்பட்ட சிறைவாசிகளுக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் தறி நெய்தலும், book binding செய்வதும் அடங்கும். அந்த நிலையை மாற்றி, தற்பொழுது நவீன விஞ்ஞான காலத்திற்கேற்றதுபோல மகிழுந்து ரிப்பேர் செய்வதும், குளிர்சாதனப் பயிற்சி போன்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** இப்படிப்பட்ட பயிற்சிகளைக் கொடுத்தால் அவர்கள் வெளியில் வந்து, அவர்களின் வாழ்வாதாரத்தை நல்லவிதமாக அமைத்துக்கொள்ள உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புழல் சிறைச்சாலையை தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைக்கும்போது 'சிறைக் கோட்டத்தை, அறக் கோட்டமாக மாற்றுவோம்' என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் அனைத்து சிறைச்சாலைகளையும் நவீனமயமாக்க வேண்டும்.



என்னுடைய தொகுதியில் மனைப் பட்டா கொடுக்க முடியாமல் நிறைய ஊர்களிலே தடையாணையை வாங்கி வைத்திருக்கிறார்கள். அந்தத் தடையாணையை அகற்றி, உரிய ஆதி திராவிட மக்களுக்கு மனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன். நீங்கள் 5 நிமிடங்களில் பேசி முடிக்கவேண்டும்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவர்னர் உரைமீதும், நிதிநிலை அறிக்கைமீதும், 3 மானியக் கோரிக்கைகளின்மீதும் பேசவேண்டுமென்று எழுதிக் கொடுத்திருந்தேன். ஆனால், நீங்கள் அனுமதிக்கவில்லை. எனவே, குறைந்தபட்சம் எனக்கு 15 நிமிடங்களாவது பேச அனுமதிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், இன்னொரு நாளைக்குப் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடு) திரு. இராமச்சந்திரன், 5 நிமிடங்கள் தருகிறேன், பேசுகிறீர்களா? 5 நிமிடங்கள் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) நேரம் இல்லை.

**திரு. டி. இராமச்சந்திரன்:** 3 மானியக் கோரிக்கைகளில் பேச எழுதிக் கொடுத்திருந்தேன். நீங்கள் அனுமதிக்கவில்லை. எனவே, 15 நிமிடங்கள் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை. வேறொரு மானியக் கோரிக்கையில் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை– மானியக் கோரிக்கை எண் 41, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு–மானியக் கோரிக்கை எண் 51 ஆகிய தலைப்புகளின்கீழ், நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துகளை இங்கே பதிய வைக்க விரும்புகிறேன். தமிழகம் 30 மாவட்டங்கள், 73 வருவாய்க் கோட்டங்கள்,

206 வட்டங்கள், 1,120 குறு வட்டங்கள் 16,563 கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. நிலயற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டம், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், விவசாயத் தொழிலாளர்களுக்கு வாரியம் அமைக்கும் திட்டம் என்று பல புதிய திட்டங்களையெல்லாம் நாம் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். இன்றைக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதைப்பற்றிகூட, அது ஆளும் கட்சிக்காரர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகிறது என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால், என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும் எதிர்க்கட்சி வரிசையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்கும் சேர்த்துத்தான் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை, தமிழக அரசினுடைய உதவிகளை நான் கொடுத்துக்கொண்டு வருகின்றேன். அதிலே எந்த வகையிலும், எந்த இடத்திலும் குறை இருக்க முடியாது என்பதை இங்கே பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 1–35*

உதவியாளர்கள் முதல் காவலர் வரை தற்போது 3,173 பணியிடங்களை நிரப்ப அரசாணை வெளியிட்டிருப்பது உண்மையிலேயே மிகவும் பெருமைக்குரியது. ஐந்து ஆண்டுகாலம் விதிக்கப்பட்ட தடை இந்த அரசால் உடைக்கப்பட்டு தற்போது புதிய உத்தரவால் மக்கள் புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்கள் என்றுச் சொன்னால் அது மிகையாகாது. பணியில் இருக்கும்போது இறப்பு ஏற்பட்டால் அந்தக் குடும்பத்திற்கு கருணை அடிப்படையில் பணி வழங்கவேண்டுமென்ற அரசாணை மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது. 10 ஆண்டுகளுக்கும் மேலாக தினக்கூலியாகப் பணியாற்றி வருபவர்களை நிரந்தரம் செய்யவேண்டுமென்கிற முடிவு உண்மையிலேயே வரவேற்கக்கூடியதுதான்.

முதியோர் ஓய்வூதியம், உடல் ஊனமுற்றோர் பென்ஷன், ஆதவற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம், ஆதரவற்ற பெண்களுக்கு ஓய்வூதியம் போன்ற ஐந்து வகையாக ஓய்வூதியங்களைப் பிரித்து 200 ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருப்பதை 400 ரூபாயாக மாற்றி இருப்பதை உண்மையிலேயே பாராட்டுகின்றேன். அனாதைகளாக, ஆதரவற்றவர்களாக, இந்தச் சமுதாயத்திலே கேட்பாரற்று இருக்கின்ற அத்தனை பேருக்கும் 200 ரூபாய் என்பதை 400 ரூபாயாக



மாற்றியதோடு மட்டுமல்லாமல், அவர்கள் சத்துணவுக் கூடங்களிலே சாப்பிடக் கூடியவர்களாக இருந்தால் அவர்களுக்கு 2 கிலோ அரிசி மாதமும், சத்துணவுக் கூடங்களிலே சாப்பிடாதவர்களாக இருந்தால் அவர்களுக்கு 4 கிலோ அரிசியையும் கொடுக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்களை அந்த ஏழையெளிய மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஊர் மக்களைத் தம் மக்களாக எண்ணி, அம்மக்களுக்கு தந்தை நிலையிலிருந்து நல்லது செய்யும் முதல்வரை கவிஞர் வாலியினுடைய கருத்திலே நான் பாராட்டுகிறேன்.

'Gandhiji - Father of Nation, Kalaignarji - Father of Ration' என்றுச் சொன்னால் மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வார்த்தைகள் அனைத்தும் பொன் எழுத்துக்களாலே பொறிக்கப்பட வேண்டியவை. 1971 குடியிருப்பு அனுபோகதாரர்கள் உடைமை உரிமை வழங்குதல் சட்டத்தின்படி—வீட்டுமனை இல்லாதவர்கள் பிறர் நிலத்தில் குடியிருந்து அனுபவித்து வந்தால் அவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதால் ஏழை மக்கள் நிம்மதியாக வாழமுடியும்—பறவைக்கென்று கூடு பாம்புக்கென்று புற்று இருக்கின்றபோது, சிங்கம், புலி போன்ற கொடுமையான விலங்குகள் வசிப்பதற்கென்று குகை இருக்கின்றபோது இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் வசிப்பதற்கென்று வீடு இல்லாமல் இருக்கின்றச் அந்தச் சூழ்நிலையை மாற்றி, வீடற்ற அந்த ஏழைகளுக்கு நிலத்தையும் கொடுத்து அந்த நிலத்தை அவர்கள் பயன்படுத்தி வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு வகை செய்திருக்கின்ற இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகின்றேன்.

கிராம நிர்வாக அலுவலர்களும், R.I. ஆக இருக்கின்றவர்களும் சிறப்பானவர்களாக இருப்பார்கள் என்றுச் சொன்னால் ஓர் அரசாங்கத்திற்கு அதைவிட கௌரவம் வேறு எதுவும் இருக்கமுடியாது. சுனாமிக்கும் என்னுடைய தொகுதிக்கும் சம்பந்தமே கிடையாது. ஆனால், ஒரு V.A.O. நினைத்து அவருக்கு வேண்டிய ஒருவருக்கு அங்கு வீடுகட்டி வைக்கிறார். இவர் எப்படி இங்கு வருகிறார் என்று கேட்கும்போது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுத்த வீடு என்று சொல்கிறார். என் தொகுதியில் சுனாமியே கிடையாது. இருப்பது செம்பரம்பாக்கம் ஏரிதான். அந்தச் செம்பரம்பாக்கம் ஏரிக்கும் ஒருவேளை எனக்குத் தெரியாமல் சுனாமி வந்ததா? படப்பை பகுதியிலே சுனாமிக்கு என்று ஒருவருக்கு வீடு கொடுத்திருக்கிறார்கள்.

அதற்கு V.A.O. ஒரு B.Memo notice கொடுத்திருக்கிறார். அதுபோன்ற தவறுகளை அடிமட்டத்திலே இருக்கின்ற அந்த கிராம நிர்வாக அதிகாரிகளும், R.I.-களும் செய்யவில்லை என்றுச் சொன்னால், அதுவே அரசாங்கத்திற்கு உதவியதாக, சிறப்பிற்குரியதாக, எடுத்துக்காட்டாக, உருவாக முடியும்.

*பிற்பகல் 1–40*

அதேபோல பட்டா கொடுப்பதிலே belt area, non-belt area என்று இருக்கிறது. Belt area–க்களிலே 10 ஆண்டு காலம் குடியிருந்தால் அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்த அறிவிப்புக்குப் பிறகுகூட பணிகள் இன்னும் வேகமாக நடைபெறவில்லை. அந்த belt area–விலேயே பல காலமாக, 20 வருடங்களுக்கு மேலாகவே அவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அது மேய்க்கால் புறம்போக்கு, அதனாலே அங்கே கொடுக்கப்படக் கூடாது என்கிற நிலை இருக்கிற காரணத்தினாலே பல ஆண்டு காலம் அங்கேயே குடியிருந்த அந்த மக்களுக்கு, அதிலே ஒரு விதிவிலக்கை ஏற்படுத்தி, விதியைத் தளர்த்தி, மேய்க்கால் புறம்போக்காக இருந்தாலும் பட்டா கொடுப்பதற்குரிய ஆணையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 ஆண்டு காலம் இருந்தவர்களுக்குப் பட்டா கொடுக்கலாம் என்று சொன்ன காரணத்தினாலே இப்போது புதிது, புதிதாக இடங்களைத் தேர்வு செய்து குடியேறுகிறார்கள். என்ன காரணம் என்று கேட்டால் இப்போது நுழைந்தால்தான் இன்னும் 10 வருடத்திற்குப் பிறகாவது எங்களுக்குப் பட்டா கிடைக்கும் என்ற ஓர் ஆதங்கம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படுகின்றன. V.A.O.–க்கும், R.I.–க்கும் தெரியாமல் யாருமே கொட்டகை போட முடியாது, அங்கே அவர்கள் குடி அமரவும் முடியாது.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட எங்களுடைய பகுதிக்கு, செம்பாம்பாக்கம் ஏரிக்கு வந்தார்கள். வருகின்றபோது, போரூர் ஏரியிலே மீண்டும் குடிசைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், அது அகற்றப்பட வேண்டும், துரிதமாகச் செய்யுங்கள் என்று சொன்னார். அங்கே இருக்கின்ற V.A.O.–க்கு தெரியாதா குடிசை போடுவது. அங்கே இருக்கிற R.I.–க்குத் தெரியாதா குடிசை போடுவது.' உள்ளாட்சித் துறை அமைச்சர் அந்தப் பகுதிக்கு வந்ததனாலே அதைப் பார்க்கிறார். பார்க்கவில்லை என்று சொன்னால் அதைக் கேட்பதற்கு ஆள் இல்லை. மறுபடியும் அவர்கள் வளர்ந்துவிடுவார்கள்.



அவர்களை அகற்றுவதற்கு எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறோம்? போரூர் ஏரியையே ரியல் எஸ்டேட் பிளாட் போட்டு விற்று விட்டார்கள். அங்கே தண்ணீர் இருக்கிற பகுதியெல்லாம்கூட அவர்கள் கல் போட்டு அந்தந்த ஏரியா ஆட்களுக்குப் பிரித்துக் கொடுத்து விற்று விட்டார்கள். வாங்கிய மக்கள் பாவம் வயிறெரிந்து நிற்கிறார்கள். ஆனாலும்கூட, அந்த மக்களை அம்போ என்று விட்டுவிடாமல் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணையின் அடிப்படையிலே, அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட காஞ்சிபுரம் மாவட்டத்திலே, எங்களுடைய தொகுதிக்குள்ளே நல்லூர் என்ற பகுதியில் அவர்களுக்கு எல்லாம் ஒரு சென்ட் நிலம் கொடுத்திருக்கிறோம். அந்த ஒரு சென்ட் இடம் போதாது. 400 சதுர அடியிலே அவர்கள் ஒரு வீடு கட்டிக் கொண்டு இருக்க முடியாது. அங்கே இன்னும் இடம் இருக்கிற காரணத்தினாலே அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் இடத்தை அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இதோ முடித்துவிடுகின்றேன். நான் 15 நிமிடம் கேட்டேன். 10 நிமிடங்கள் இருக்கின்றது. மாவட்டங்களை நாம் பிரித்தோம். உள்ளாட்சித் துறை மானியத்திலேகூட நான் குறிப்பிட்டுப் பேசினேன். மாவட்டங்களைப் பிரித்து இருக்கிறோமே தவிர, அதற்குரிய பணிக் கட்டமைப்பு இன்றுவரையிலே உருவாக்கப்படவில்லை. பழைய மாவட்டத்திலேயிருந்து ஒரு 4, 5 பேரை மாற்றி புதிய மாவட்டத்திலே போட்டிருக்கிறோம். அங்கேயும் வேலை கெட்டு, இங்கேயும் வேலை கெடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, புதிய மாவட்டத்திற்கு நீங்கள் விரைவாகப் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாய நிலங்களை, நஞ்சை நிலங்களை தொழிலுக்காக, தொழிற்சாலைகளை அமைப்பதற்காகக் கையகப்படுத்துகின்ற அந்தத் தன்மையினை நீங்கள் தயவுசெய்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

சுனாமிக்காக இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின்மூலம் கிட்டத்தட்ட ரூ.1,057.628 கோடி செலவிடப்பட்டிருக்கின்றது. இந்த நிதி அத்தனையும் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காகவும், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்திற்காகவும், மீனவர்களுக்கு மானியத் தொகை அளிப்பதற்காகவும், வங்கிகள்மூலம் கடனுதவி கொடுப்பதற்காகவும், மீன்பிடித் துறைமுகங்களில்

பழுதுபார்க்கும் பணிகளைச் செய்வதற்காகவும், வீடுகள் கட்டித் தருவதன்மூலமாக ஆகக்கூடிய செலவினங்களுக்கும் செலவிடப்பட்டிருக்கின்றது.

மத்திய அரசு கொடுக்கவில்லை, கொடுக்கவில்லை என்று கூறுவதைவிட தட்டினால் திறக்கப்படும், கேட்டால் கொடுக்கப்படும், தேடினால் கிடைக்கும் என்கின்ற அந்த முதுமொழிக்கு ஏற்ப—முன்னாலே இருந்த அரசாங்கம் தட்டவில்லை, கேட்கவில்லை—இப்போது இருக்கின்ற அரசாங்கம் தட்ட வேண்டிய நேரத்திலே தட்டுகின்றது. கேட்க வேண்டிய நேரத்திலே கேட்கின்றது. பெற வேண்டிய நேரத்திலே பெற்று இந்த நாட்டு மக்களுக்கு நல்லதைச் செய்து கொண்டு இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது மத்திய, மாநில அரசின் உறவுகள் பலப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே தமிழகத்தினுடைய கோட்டைக் கதவுகளை மத்திய அரசாங்கத்தினுடைய நிதி வந்து தட்டிக் கொண்டிருக்கின்றது. இது இந்த அரசினுடைய அணுகுமுறையினால் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, இந்திரா ஆவாஸ் யோஜனா, பிரதம மந்திரி கிராம யோஜனா திட்டத்தின்கீழாகக் கடன் மற்றும் மானியம் சார்ந்த கிராமப்புற வீடுகளைக் கட்டுகின்ற அடிப்படையான அந்தத் திட்டத்தினை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். பட்டா இருந்தாலே போதும் அதைக் காட்டி கடன் பெற்று, அவர்கள் வீடுகளை அமைப்பதற்கு இந்தத் திட்டத்தின்மூலமாக உதவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 1–45*

இராணுவ வீரர்களுக்கு, (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன். இரண்டே வரிகள். இராணுவ வீரர்களுக்கு ஓய்வு பெற்றதற்குப் பிறகு, அவர்களுக்கென்று 5 ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டுமென்ற முறை இருக்கின்றது. அது இதுவரையிலும் நடைமுறையிலே இல்லாதது போன்று இருக்கின்றது. அது நிறுத்தப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகின்றேன்.

நான் ஏற்கெனவே அமைச்சரிடத்திலே பேசியிருக்கின்றேன். தலையாரி பணிக்கு நீங்கள், பெண்களுக்கு நேர்முகத் தேர்வுக்காகக் கடிதங்கள்



அனுப்புகின்றீர்கள். அதைப் பெற்றுக்கொண்டு அவர்கள் போனால், தலையாரி வேலையைப் பெண்கள் செய்ய முடியாது, அதனாலே அந்தப் பணி கிடையாது என்று சொன்னால், இது நியாயமில்லை. தலையாரி பணியையும் பெண்கள் செய்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பணிகளை அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். மத்திய அரசாங்கம், தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற அரசாங்கத்தை கண்ணின் இமை போலக் காத்துக்கொண்டிருக்கிறது. நேரம் அதிகம் இல்லையென்ற காரணத்தினாலே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். செய்யாறில் சிறைச்சாலை மூடிக் கிடக்கின்றது. அந்தச் சிறப்பான சிறைச்சாலையைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தம்பி தண்டபாணி அவர்கள் குறிப்பிட்டது போல, கோவைச் சிறைச்சாலை நகரத்தினுடைய மையப் பகுதியிலே இருக்கின்றது. 100 ஏக்கர் நிலம் அதற்குச் சொந்தமானதாக இருக்கிறது. 10 ஏக்கரை விற்றாலே 100 கோடி ரூபாய் வரும். புறநகரிலே இதே சிறைச்சாலைக்கு 50 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அங்கே, அந்த 100 கோடி ரூபாயிலே சிறைச்சாலை அமைப்பீர்கள் என்று சொன்னால், கிட்டத்தட்ட மீதமுள்ள இந்த 90 ஏக்கர் நிலத்திலே தகவல் தொடர்பு மையத்தை கோவை நகரத்திலே உருவாக்கிக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைக் கூறி, வாய்ப்பு தந்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2–5–2007 புதன்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை, 3–5–2007 வியாழக்கிழமை அன்றும், 3–5–2007 வியாழக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 44–சிறு தொழில்கள் துறை ஆகியன 2–5–2007 புதன்கிழமை அன்றும்

பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 24 - சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 41 - வருவாய்த் துறை**

**(இ) கோரிக்கை எண் 51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

— *தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, சிறைத் துறை மற்றும் இயற்கைப் பேரிடர் துயர் துடைப்பு ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள் விவாதத்திலே பங்கேற்று உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிய பதிலை வழங்குவதற்கு முன்னர், இந்த அவையிலே மானியத்தின்மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கின்ற வாய்ப்பினைத் தந்த எங்களுடைய உயிரினும் மேலான தலைவர், தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு எங்களுடைய கழகத்தினுடைய எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் அண்ணன் தளபதியார் அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இனமான பேராசிரியர் அவர்களையும் வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

காவியத் தலைவனாக, கவிதை நாயகனாக, அரசியல் துறையில் ஆசானாக, இராஜதந்திரத்தின் முதல்வனாக, மனிதாபிமானத்தினுடைய முன்னோடியாக, கொள்கையின் கொற்றமாக மிளிர்ந்து, பல முகங்கள்



ஒரு சேரப் பெற்று, நினைவாற்றல், உழைப்பாற்றல், உணர்வாற்றல், படைப்பாற்றல், தமிழாற்றல் இவற்றின் மொத்த உருவமாக விளங்குபவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாம் முறையாக அரியணை ஏறி, இப்போது பொன் விழா கண்டுகொண்டிருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞரை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

இங்கே பேசிய உறுப்பினர்களில் பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த உறுப்பினர்கள், பல்வேறு கருத்துகளை இங்கே வழங்கியிருக்கின்றார்கள். அரசு அலுவலகங்களிலே, நடைமுறையில் இருக்கின்ற அலுவல்கள் தமிழிலே இடம் பெறவேண்டும் என்பதற்காக அத்தனைச் சீர்திருத்தங்களையும் கொண்டு வந்த பெருமை, தலைவர் கலைஞர் அவர்களைச் சாரும் என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–50*

தமிழகத்திலே 1969 ஆம் ஆண்டு இந்தியத் திருநாட்டிலேயே முதலில் மனு நீதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கோட்டாட்சித் தலைவர்கள், வட்டாட்சியர்கள், வருவாய்த் துறையிலே பணியாற்றுகின்ற அத்துணை பேரும் மக்கள் வசிக்கின்ற இடங்களுக்குச் சென்று, அவர்களுக்குச் செய்ய வேண்டிய வசதிகள் குறித்த மனுக்களைப் பெற்று அங்கேயே உடனே தீர்வு காண்கிற முறையைக் கொண்டு வந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கேகூட சான்றிதழ்கள் வழங்குவதிலே, வகுப்புச் சான்றிதழும் சரி, இருப்பிடச் சான்றிதழும் சரி, அவற்றை வழங்குவதிலே, தாமதம் ஆவதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்தத் தாமதத்தைப் போக்குவதற்காகத்தான், பள்ளி மாணவர்கள் துன்பப்படக்கூடாது, கஷ்டப்படக்கூடாது என்பதற்காகத்தான், 10 ஆம் வகுப்பு முடிக்கின்ற மாணவர்களுக்கும், plus 2 முடிக்கின்ற மாணவர்களுக்கும் அவர்கள் தங்களுடைய பள்ளியை விட்டுச் செல்கின்ற நேரத்திலே வகுப்புச் சான்றிதழ் வழங்குகிற முறையை எளிதாக்கி, எல்லோரும் எளிதாகப் பெறக்கூடிய முறையை 1999 ஆம் ஆண்டு உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் இப்போது நிறைவேற்றி இருக்கின்றார்கள். அதிலே வருவாய்த் துறையின்மூலமாக நிலமற்ற

ஏழைகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்குகின்ற திட்டத்தைப்பற்றிக்கூட பல்வேறு விமர்சனங்கள் இந்த அவையிலே இடம்பெற்று இருக்கின்றன. கடந்த 10 மாத காலத்திலே 3 முறை, மூன்று மாதத்திற்கு ஒரு முறையாக நிர்ணயம் செய்து, தமிழகத்திலே தலைவர் கலைஞர் அவர்கள், நிலமற்ற ஏழைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 77,117 ஏக்கர் நிலங்கள் 71,752 ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற உண்மையான செய்தியை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே குறிப்பாக இங்கே பேசிய, இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் ஜெயக்குமார், நம்முடைய செல்வப் பெருந்தகை, இவர்கள் எல்லாம் ஆதி திராவிட மக்களுக்கு இந்தத் திட்டத்திலே முன்னுரிமை வழங்கப்பட்டு இருக்கிறதா என்ற வினாவை எழுப்பினார்கள். தலைவர் கலைஞர் ஆட்சி நடக்கின்றபோதெல்லாம், ஆதி திராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு பொற்காலம் என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த 2 ஏக்கர் நிலத் திட்டத்திலே ஏறத்தாழ வழங்கி இருக்கின்ற 71 ஆயிரம் பேரிலே, குறிப்பாக நம்முடைய ஆதி திராவிட மக்களுக்கு மட்டும், நிலம் வழங்கி இருக்கின்ற எண்ணிக்கை 20,678 பேர். இந்த 2 ஏக்கர் நிலம் அவ்வளவு ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், பழங்குடியினர் வகுப்பினருக்கு 1,255 பேருக்கு 1,510.27 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆக மொத்தம், தமிழகத்திலே வழங்கப்பட்டிருக்கின்ற நிலத்திலே ஏறத்தாழ 35 சதவிகிதத்திற்கு மேலாக ஆதி திராவிட மக்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல, தலைவர் கலைஞர் அவர்கள், நம்முடைய 2000 ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர், விவசாயிகள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதைக் கொண்டு வந்து சிறு, சிறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் பயன்பெறுகின்ற வகையிலே கல்வி வளர்ச்சி, இன்னும் சொல்லப் போனால், அவர்களுடைய வாழ்க்கையிலே ஏற்படுகின்ற இடர்பாடுகளுக்கு, மரணம் ஏற்பட்டாலும் சரி, காயங்கள் ஏற்பட்டாலும் சரி, திருமண உதவித் திட்டம், திருமண உதவித் தொகை, அதுமட்டுமல்லாமல், முதியோர் உதவித் தொகை, மகப் பேறு, கருச் சிதைவு, கருக் கலைப்பு இப்படிப் பல்வேறு இனங்களிலே



விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவும்வகையில், விவசாயிகளுக்குப் பல சலுகைகளை அறிவித்து அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள்.

பிற்பகல் 1-55

பின்னர் என்ன காரணத்தாலோ ஒரு 4 ஆண்டு காலம், $4\frac{1}{2}$ ஆண்டு காலம் அ.தி.மு.க. ஆட்சியிலே அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டு, பெயர் மாற்றம் செய்யப்பட்டு, கடைசியிலே ஒரு 6 மாத காலம் அந்த திட்டம் தமிழகத்திலே நடைமுறைப்படுத்தப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு மீண்டும் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பீடம் ஏறிய உடனே இந்தத் திட்டத்திற்காக அதிகபட்சமாக 252 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். இந்தத் திட்டத்திற்கு சட்ட வடிவம் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். இனிமேல் எதிர்காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அரசு அமைந்தாலும், யார் தலைமையிலே ஆட்சி அமைந்தாலும், தமிழகத்திலே பல்வேறு நிலைகளிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு—குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு வாரியம் இருக்கிறது. அதுபோல் பல அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் வாரியத்தை உருவாக்கியவர் தலைவர் கலைஞர்தான் என்பதை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்துணை வாரியங்கள் இருந்தாலும் இந்த நாட்டிலே பெரும்பான்மையாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு கோடானுகோடி விவசாயத் தொழிலாளர்களுக்கு வருமான அடிப்படையில் ஜாதி, இனம், மதம் என்ற எந்தக் கட்டுப்பாடும் இல்லாத நிலையிலே, அவன் சிறு விவசாயியாக இருந்தால் இந்த உதவிகள் அத்துணையும் கிடைக்கும். அதற்கு வருமானச் சான்றிதழ்கள் தேவையில்லை. சாதிச் சான்றிதழ் வேண்டியதில்லை. வகுப்புச் சான்றிதழ் வேண்டியது இல்லை. இந்தத் திட்டத்திலே விவசாயத் தொழிலாளர்களும், சிறு விவசாயிகளும், குறு விவசாயிகளும் பயன்பெறவேண்டி பல கோடி பேர் இதிலே இடம் பெற்றாலும் அவர்களுக்கும் என்னால் உதவி செய்ய முடியும் என்று உதவிக் கரத்தை 2000 ஆம் ஆண்டு நீட்டியவர்தான் தலைவர் கலைஞர் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அடிப்படையிலேதான் ஏறத்தாழ ரூ.252 கோடி கடந்த ஆண்டும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ரூ.152 கோடி ரூபாயும் வழங்கியிருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் உறுப்பினர்கள்

சேர்க்கின்ற பணி டிசம்பர் திங்கள் 22 ஆம் நாள் துவங்கி, ஏறத்தாழ 3 மாத காலத்திலே கடந்த மார்ச் மாதம் வரை ஏறத்தாழ 63 இலட்சம் குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். தலைவர் கலைஞர் முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை முதன்முதலாக தஞ்சையிலே துவக்கி வைத்த ஒரு மாத காலத்திலே, ஏறத்தாழ இதன்மூலம் வழங்கியிருக்கின்ற நிதி மட்டும் சுமார் 7 கோடியே 62 இலட்சம் ரூபாய் என்ற செய்தியை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் இந்த விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகளுக்குத் உதவி அளிக்கின்ற திட்டத்திலே ஆதி திராவிட மக்களுக்கு எந்த அளவிற்கு உதவி வழங்கப்பட்டிருக்கிறது என்று அவர் இங்கே உரையாற்றும்போது கேட்டார்கள். அந்த வகையிலே மொத்தம் இதுவரை ஒரு மாத காலத்திலே வழங்கப்பட்டிருக்கின்ற பயனாளிகளினுடைய எண்ணிக்கை 25,618. இதிலே ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்த சகோதரர்களுக்கு 7,481 பேருக்கு 2 கோடியே 25 இலட்சத்து 62 ஆயிரத்து 260 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் வழங்கிய தொகை 7 கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரத்து 695 ஒரு மாத காலத்திலே. இதிலே, ஆதி திராவிட சமுதாயத்திற்காக வழங்கப்பட்டிருக்கின்ற தொகை சுமார் ரூ.2¼ கோடி, 294 பழங்குடியின மக்களுக்கு ரூபாய் 12 இலட்சத்து 14 ஆயிரத்து 480. இதிலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, 10,950 பேருக்கு ரூபாய் 2 கோடியே 92 இலட்சத்து 63 ஆயிரத்து 481. (மைனாரிட்டி இஸ்லாமியச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு 529 பேருக்கு ரூபாய் 13 இலட்சத்து 95 ஆயிரத்து 980, கிறிஸ்துவ சமுதாயத்திற்கு 1,367 பேருக்கு ரூ.23 இலட்சத்து 90 ஆயிரத்து 510). 6,453 மிகவும் பிற்பட்டவர்களுக்கு 1 கோடியே 91 இலட்சத்து 18 ஆயிரத்து 949 மற்றும் பொதுவாக 440 பேருக்கு 41 இலட்சத்து 21 ஆயிரத்து 525. இப்படி வகுப்பு வாரியாக இப்போது இந்தத் திட்டத்தினுடைய பலனை மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 2-00

நம்மை வளர்த்து ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணாவினுடைய வழியிலே இன்றும் தடம்புரளாமல்



நடைபோட்டுக் கொண்டிருக்கின்ற எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், 20 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருகின்றவர்களுக்கு அவர்களுடைய உடைமைகளை அவர்களுக்குப் பட்டா வழங்கி சொந்தமாக்க வேண்டுமென்ற உன்னதமான திட்டத்தை 2000 ஆம் ஆண்டு, கொண்டுவந்தார்கள். இந்தத் திட்டத்தைக் கடந்த 2000 ஆம் ஆண்டு கொண்டுவந்தபோது தமிழகத்திலே—இங்கே பேசிய பல உறுப்பினர்கள் சொன்னார்கள்—இந்தத் திட்டம் வேகமாகச் செயல்படவில்லை, இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த 2000 ஆம் ஆண்டு, ஓராண்டு காலத்திலே தமிழகத்திலே சுமார் 2 இலட்சம் பேருக்கு பட்டா வழங்கியவர்தான் தலைவர் கலைஞர் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தைப்பற்றி இங்கே பல்வேறு ஐயப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தினுடைய முன்னேற்றம் என்ன என்று பல பேர் இங்கே வினா எழுப்பினார்கள். நான் ஒன்றை இந்த அவையிலே குறிப்பிட விரும்புகின்றேன். இந்தத் திட்டத்திற்கான அரசாணை போடப்பட்டு 3 மாதங்கள்தான் ஆகின்றன. இருந்தாலும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே நான் தமிழகத்திலே இருக்கின்ற பெரும்பான்மையான மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கின்றேன். அறிவுரை வழங்கியதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு வாரமும் இந்தத் திட்டத்தினுடைய முன்னேற்றம் குறித்தும் நான் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றேன். ஒன்றை இந்த அவையிலே சொல்ல விரும்புகின்றேன். பல அரசுகள் வரும், போகும். அவர்கள் சொன்னார்கள், குடியிருப்பதற்கு ஒரு வீடு நிச்சயம் நாங்கள் வழங்குவோம் என்று இதே அவையிலே பறைசாற்றியிருக்கின்றார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கெல்லாம் வீடு தருவோம் என்று முழக்கமிட்டிருக்கின்றார்கள். ஆனால், உழுபவனுக்கே நிலம் சொந்தம், குடியிருப்பவனுக்கே வீடு சொந்தம் என்பதை ஆட்சிக்கு வந்த உடனே, 1970 ஆம் ஆண்டு தஞ்சை மண்ணிலே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, பொதுவுடைமைக் கட்சியினுடைய தலைவராக இருந்த கல்யாண சுந்தரம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, (குறுக்கீடு) மணலி கந்தசாமி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, பல பேர் இரத்தம் சிந்தி பெற முடியாத உரிமையை ஒரே துளி பேனா மையினால் அளித்து, ஏறத்தாழ பல இலட்சம் பேருக்கு

அவர்கள் குடியிருந்து வந்த வீடுகளை உரிமையாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, வீடு சொந்தம் என்று பேசிவிட்டால் போதாது. ஒருவருக்கு வீடு கொடுப்பது—இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டித் தருகின்றீர்கள். அதேபோல தமிழகத்தில் இருக்கின்ற வீடு இல்லாதவர்களுக்கும் கட்டித்தர வேண்டுமென்று பல பேர் கோரிக்கை வைத்தார்கள். அந்த அடிப்படையிலேதான், இடம் வாங்குவதற்கே வசதி இல்லாதவர்கள், இன்னும் சொல்லப்போனால், வாய்ப்பில்லாதவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதைப்போல, வலியோரிடமிருந்து பெற்று மெலிந்தோருக்கு வழங்குகின்ற கொள்கையை நடைமுறைப்படுத்தி, இல்லாமையை இல்லாமை ஆக்குவோம் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தி தலைவர் கலைஞர் அவர்கள் இல்லாதவர்களுக்காக இந்த பட்டா வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். வகைப்பாடு மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் யசோதா அம்மையார் அவர்கள்கூடச் சொன்னார்கள். இந்த வகைப்பாடுகள் மாற்றம், பல்வேறு மேய்க்கால் புறம்போக்காக இருந்தாலும் சரி, வேறு வகையிலே தடை செய்யப்பட்டிருக்கின்ற புறம்போக்குகள் எல்லாம் இந்த அரசாணையின்மூலமாக நீக்கப்பட்டு, ஆட்சேபகரமற்ற இனங்களிலே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நீர்நிலைப் புறம்போக்குகள் விவசாயத்திற்குப் பயன்படும் என்று இருப்பதால் அவை தவிர, மற்ற இனங்கள் அத்தனையிலுமே இந்தத் துறையின் மூலமாக பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்களுக்கே ஒரு சந்தேகம் இருக்கும். எப்படி, எந்த அளவுக்கு இதில் முன்னேற்றம் இருக்கின்றது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகின்றேன். இதுவரையில் தமிழகத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எனக்குக் கொடுத்திருக்கின்ற தகவலின்படி, ஏறத்தாழ 6 இலட்சம் இனங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. அதிலே 79 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதற்கு மனுக்கள் பெறப்பட்டு, அளவைகள் முடிக்கப்பட்டு கொடுக்கின்ற தறுவாயிலே இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சித் தலைவர்கள் கொண்ட குழுவில் மக்கள் பிரதிநிதியும் இடம்பெற



வேண்டுமென்று கேட்டீர்கள். இந்த அரசைப் பொறுத்த அளவில் வெளிப்படையாக இருக்கின்றது. உறுப்பினர்கள் இடம் பெறுவதிலே இந்த அரசுக்கு ஆட்சேபனை இருக்காது. மாண்புமிகு முதல்வரோடு கலந்து, நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும் அதிலே இடம் பெறுவதற்குரிய வாய்ப்பை (மேசையைத் தட்டும் ஒலி) நான் உருவாக்கித் தருவேன் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 2–05*

இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள். இந்தத் துறையிலே பல திட்டங்களின் வாயிலாக, ஏழை எளிய மக்களுக்கு தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற நேரத்திலே, அவையெல்லாம் இலவசம் என்ற பெயராலே வழங்குவதால், இங்கே ஏதோ நிதிநிலைமை மோசமாகிவிட்டதைப்போல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அரி அவர்கள் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கெல்லாம் தலைவர் கலைஞர் ஆட்சி வந்த காரணத்தால், இலவச டி.வி.யோடு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கிடைக்கின்றது. அதுமட்டுமல்லாமல், இலவச gas மற்றும் அடுப்பு, இலவசமாக இரண்டு ஏக்கர் நிலம், இலவசமாக வீட்டு மனைப்பட்டா ஆகியவற்றால் மகிழ்ச்சியின் வெள்ளத்திலே மக்கள் இருக்கின்றார்கள். அரசு எல்லோருடைய வயிற்றிலும் பால் வார்த்திருக்கின்றது. ஆனால், ஏனோ ஒரு சிலருக்கு வயிற்றெரிச்சலாக இருக்கின்றது என்றுதான் நாம் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எதுவும் சொல்வதற்கில்லை.

தமிழகத்திலே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தையும் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இங்கே முதியோர் உதவித் தொகை பெறுவதில் இருக்கின்ற சிரமங்களை எடுத்துச் சொன்னார்கள். அவற்றை வெகு விரைவாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளைப் பற்றி மக்கள் சாசனத்திலே இந்த அரசு தெரிவித்திருக்கிறது. கோடைக் காலத்திலே . . . (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், நீங்கள் அமைச்சர் பதிலுரையை முடித்துவிட்ட பிறகு கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) தமிழகத்திலே குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குகின்ற வகையிலே கிருஷ்ணகிரி, பெரம்பலூர் மற்றும் வேலூர் மாவட்டங்களுக்கு ரூ. 28.3 கோடி வழங்கி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், நீங்கள் கடைசியாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** ரூ. 28.3 கோடி வழங்கி அரசாணை பிறப்பித்திருக்கிறது இந்த அரசு. சுனாமியைப் பொறுத்த அளவில் இங்கே பேசிய நண்பர்கள் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள். சுனாமியைப் பொறுத்த அளவில், இந்த அரசு பொறுப்பேற்று, 13 கடலோர மாவட்டங்களிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து மத்திய அரசு இராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரால் அமைத்திருக்கின்ற திட்டத்தின்கீழ் உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி இவற்றின்மூலமாக பெறப்பட்ட பணத்தின்மூலமாக நிரந்தரமான வீடு கட்டித் தருகின்ற பல்வேறு திட்டங்கள் விவாதிக்கப்பட்டன.

அதுமட்டுமல்லாமல், மீனவர்களுக்கு அவர்களுடைய வாழ்வாதார உரிமைகளை வழங்குவதற்காகப் பெறப்பட்ட அந்தப் பணத்தை வைத்து அடிப்படை வசதிகளை முழுமையாக அமைப்பதற்கு, குடி தண்ணீர் வசதி, சாலைகள் வசதி, பாலங்கள் மற்றும் கடலோரப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுக்கு வீடு கட்டித் தருகின்ற பணியை நிறைவேற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே, கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பதைப்போல சுமார் 8,000 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே அவற்றை விரைந்து முடிப்பதற்காக எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக ஏறத்தாழ 22,000 வீடுகள் கட்ட எண்ணி 21,000 வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக, மீதமுள்ள வீடுகளைக் கட்டுவதற்காக, இடங்களைப் பெறுவதற்காக 30 கோடி ரூபாய் ஒதுக்கி அந்தப் பணிகளும் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசுசாரா தொண்டு நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஏறத்தாழ 3,000 வீடுகள் கட்டப்படாத நிலை இருந்ததை மாற்றி அரசே ஏற்றுக்கொண்டு இராஜீவ் காந்தி



திட்டத்தின்மூலமாக மத்திய அரசின் உதவியோடு அந்த வீடுகளையெல்லாம் ரூ.62 கோடி ரூபாயிலே கட்டுவதற்கும் இந்த அரசு ஒப்பளிப்பை அளித்திருக்கின்றது.

குடிசை வீடுகள், மண் வீடுகள் ஆகியவற்றை அகற்றி புதிதாக 52,000 நிரந்தரக் குடியிருப்புகள் கட்டுவதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டு, அதில் ஏறத்தாழ 22,000 வீடுகள் கட்டுவதற்காக இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுத்திருக்கின்றது. உள்ளாட்சித் துறையின்மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வாழ்வாதார உரிமைக்காக, அவர்களுடைய தொழிலை வளப்படுத்துவதற்காக சுய உதவிக் குழுக்களின்மூலமாகச் செய்யப்பட்ட பணிகளைப் பற்றி நம்முடைய உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் அவர்களுடைய பதிலுரையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதுவரை இல்லாத அளவிற்கு, மிகப் பெரிய அளவிற்கு, கடலோர மாவட்டங்களிலே வாழ்கின்ற மீனவர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியையும் நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 2–10

இந்த அவையிலே இருக்கின்ற பல மாண்புமிகு உறுப்பினர்கள் புதிய வட்டங்கள், மாவட்டங்கள் பிரிப்பதைப் பற்றி இங்கே உரையாற்றினார்கள். நம்முடைய இந்தியத் திருநாட்டினுடைய தேர்தல் ஆணையம் (குறுக்கீடு) தொகுதி வரையறை ஆணையத்தினுடைய பணி முடிவடையும் தறுவாயிலே இருக்கின்றது. அது முடிவடைந்தவுடனே புதிய வட்டங்களைத் தோற்றுவிப்பது, புதிய மாவட்டங்களை உருவாக்குவது என்ற நிலையை நிச்சயமாக அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்த அளவிலே, கிராம நிர்வாக அலுவலர்கள் 2,500 பேர் புதிதாகத் தேர்வு செய்வதற்காகத் தேர்வாணையத்திடம் கேட்டிருக்கிறோம். வெகுவிரைவிலே, ஓரிரு மாதங்களில், அவர்கள் நியமிக்கப்படுவார்கள். கிராம உதவியாளர்கள் 3,674 பேர்கள் மாவட்ட வேலைவாய்ப்புத் துறை அலுவலகத்தின்மூலமாக கேட்கப்பட்டு வெகு விரைவிலே அவர்களை நியமிக்கின்ற அந்தப் பணியும் நிறைவுபெறுகின்ற அளவிலே இருந்துகொண்டிருக்கின்றது. குறிப்பாக இந்தத் துறையிலே இருக்கின்ற

காலிப் பணியிடங்களையெல்லாம் நிரப்புவதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் இருந்துகொண்டிருக்கின்றன.

இன்னொரு செய்தியையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த காலத்திலே இல்லாத அளவிற்கு ஏழையெளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்திலே எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் உண்டு என்கிற நிலையை உருவாக்கி, ஏறத்தாழ மூன்று கோடியே பத்து இலட்சத்திற்கும் மேலான இலவச வேட்டி சேலைகள் வழங்கியிருப்பது தலைவர் கலைஞர் அரசு என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சிறைத் துறையைப் பொறுத்தவரையில், முதல் வகுப்பிலே இருக்கின்ற சிறைக் கைதிகளுக்குத்தான் கடந்த காலத்தில் கோழிக்கறி வழங்கப்பட்டு வந்தது. அந்த நிலையை மாற்றி ஏறத்தாழ அனைத்து சிறைவாசிகளுக்கும்—சுமார் 20 ஆயிரம் பேர் இருக்கிறார்கள்—அனைவருக்குமே ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி அதை வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டவர் நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதுபோக சிறையிலே ஏறத்தாழ 14 ஆண்டுகாலம், 15 ஆண்டுகாலம், 16 ஆண்டுகாலம் வாடிய கைதிகளுக்கு அண்ணா பிறந்த நாளிலே கடந்த ஆண்டு பொது மன்னிப்பு வழங்கி, முதிரா விடுதலை வழங்கி, அவர்கள் வாழ்விலே மறு ஒளியேற்றி வைத்தவர் தலைவர் கலைஞர் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக அருமைச் சகோதரர் தண்டபாணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் யசோதா அவர்களும் கோவை சிறை பற்றிப் பேசினார்கள். அதேபோல், நம்முடைய உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களும் நேற்று கோவை சென்றிருந்தபோது அங்கு இருக்கின்ற மத்திய சிறைச்சாலை, வேறு பணிகளுக்குத் தேவை என்பதை அங்கே இருக்கின்றவர்கள் வைத்த கோரிக்கையை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து, அதுபற்றி நிச்சயமாக எதிர்காலத்திலே



முடிவு எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வோர் அமைச்சரும் எந்த அளவிற்கு இன்றைக்கு பணியாற்றுகின்றார்கள் என்று ஆய்வு செய்கின்ற ஒரு முதலமைச்சர் இந்தியத் திருநாட்டிலே இருக்கிறார் என்றால் அது தலைவர் கலைஞராகத்தான் இருக்க முடியும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஒரு கருத்தைச் சொல்லி என்னுடைய அறிவிப்புக்கு வரலாம் என்று கருதுகிறேன். 'Let the workers of the world unite, and you have nothing to lose but your chains and have a world to win' என்ற கருத்து நூற்றுக்கு நூறு ஒப்புக்கொள்ளப்படவேண்டிய கருத்து என்பதிலே ஆட்சேபனை இல்லை. அதுதான் நமது கருத்து என்று தெளிவாக எடுத்துச் சொன்னவர் கலைஞர் ஆவார்கள். தொழிலாளர்களுடைய நலன் காப்பது இவ்வரசு என்று சொன்னேன். விவசாயிகளின் நலனைக் காக்கவும் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறது என்று நான் சொன்னேன். அதைச் சொல்கிறபோது இன்னொரு கருத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். எதேச்சாதிகாரமான ஒரு அரசாக இருந்தால், கொடுமையான அரசாக அது அமைந்தால், மக்களை ஒடுக்கப்படவேண்டிய அரசாக அது அமைந்தால், மக்களை வாழவிடாத அரசாக அது அமைந்தால், தங்களை மட்டும் வளர்த்துக்கொள்ளவேண்டிய முறையிலே அந்த அரசு அமைந்தால், அதன்மூலம் ஏராளமான தோட்டங்களை உருவாக்கிக்கொள்கிற அரசாக அது அமையுமானால் அதை எதிர்த்துப் போராட வேண்டியவை இரண்டு சக்திகள். அவை எவை என்று சொன்னால், ஒன்று தொழிலாளர்கள், மற்றொன்று விவசாயிகள். ஆக, அந்த விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் வேண்டிய உதவியைச் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 2–15*

அதுமட்டுமல்லாமல், நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே கொள்கையிலே எந்த அளவிற்குப் பரிமளிக்கிறார்கள் என்பதற்காக நான் ஒரு கருத்தைச் சொல்லி முடிக்கின்றேன். குறிப்பாக, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் devotion, dedication, determination and direction உடையவர். தீர்க்கமான குறிக்கோள்,

கொள்கையிலே முழுமையான ஈடுபாடு, இலட்சியத்திற்காக தம்மையே அர்ப்பணித்துக்கொள்ளுதல், தடம் மாறாது மக்களை வழிநடத்தும் உறுதி என்ற குணநலன்களைக் கொண்டுள்ள தமிழக முதல்வரின் ஒப்பற்ற வழிகாட்டுதலோடு வருவாய்த் துறை தன் பணிகளைத் தொடர்கிறது. இனியும் தொடரும் என்பதைச் சொல்லி, அறிவிப்புகளுக்கு வருகின்றேன்.

வருவாய்த் துறையினுடைய அறிவிப்புகள். தமிழ்நாட்டிலே மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். பொதுமக்கள், தங்களுக்கு வேண்டிய சான்றிதழ்கள் பெறுவதற்கும், பிற காரியங்களுக்காகவும் கிராம நிர்வாக அலுவலர்களை தினமும் சென்று சந்திக்கின்றனர். கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகம் கட்டித் தரப்பட்டிருந்தும், அலுவலகத்தில் போதுமான மேஜை, நாற்காலிகள் இல்லாமல் உள்ளது. அவ்வாறு பொதுமக்கள் கிராம நிர்வாக அலுவலர்களிடம் செல்லும்பொழுது, அவர்கள் அமர்வதற்குத் தேவையான நாற்காலிகள், பெஞ்ச் போன்ற தளவாடப் பொருட்கள் வழங்கினால், கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். மேலும், பொது மக்களுக்கும் வசதியாக இருக்கும். எனவே, முதற்கட்டமாக தமிழகத்தில் 3,000 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களுக்குத் தலா ரூ.10,000 வீதம், ரூபாய் மூன்று கோடி செலவில் மேஜை, நாற்காலிகள், (மேசையைத் தட்டும் ஒலி) பெஞ்ச், பீரோ ஆகியவற்றை இந்த நடப்பு நிதியாண்டிலேயே வாங்கித்தர முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாய்த் துறையில் இதுவரையில் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு செல்போன் இணைப்புகளுக்காக மாதாந்திர தொடர் செலவினம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையில் களப் பணியாற்றும் மண்டலத் துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல், இயற்கை இடர்பாடுகளின்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிவாரண உதவி வழங்குதல் போன்ற பணிகளை உடனுக்குடன் மேற்கொள்வதால், வருவாய்த் துறை உயர் அலுவலர்களையும் பொது மக்களையும் உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளதால், மண்டலத் துணை வட்டாட்சியர்களுக்கும், வருவாய் ஆய்வாளர்களுக்கும் செல்லிடத் தொலைபேசிக் கட்டணம் வழங்கப்பட உள்ளது. இதன்



செலவினம் மாதம் ரூபாய் 225/– வீதம் 370 மண்டலத் துணை வட்டாட்சியர்களுக்கும், 1,120 வருவாய் ஆய்வாளர்களுக்கும் ஒரு வருடத்திற்கான செலவு ரூ.40.23 இலட்சம் ஆகும்.

மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் இம்மாமன்றத்திற்கு வருவதற்குக் காரணமாக இருந்த குளித்தலையில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட்டு 120 ஆண்டுகளுக்கு மேலாவதால், இந்தப் பொன் விழா ஆண்டிலே, மிகவும் பழமையான அந்த குளித்தலை வட்டாட்சியர் அலவலக கட்டடத்தைப் புதிதாகக் கட்டித்தர வருவாய்த் துறை முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நம்முடைய மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சருடைய கோரிக்கையை ஏற்று, பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் புதிய கட்டடம் கட்டித்தர முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ஆகும் செலவு ரூபாய் இரண்டு கோடியே எண்பது இலட்சம் ஆகும்.

நடப்பு நிதியாண்டிலே காரியாப்பட்டி, பந்தலூர், கெங்கவல்லி, குந்தா, இலுப்பூர், வாழப்பாடி, தொட்டியம், வீரகேரளம்புதூர் ஆகிய இடங்களிலே வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் புதிதாகக் கட்டப்படவுள்ளன. தமிழகத்திலே சொந்தக் கட்டடம் இல்லாத வட்டாட்சியர் அலுவலகங்களே இல்லை என்ற நிலையை தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். இதைத் தவிர, பத்மநாபபுரம் தொகுதியில் பழுதடைந்த நிலையிலுள்ள கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தினைப் புதிதாகக் கட்டித்தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

குடியிருப்பு வசதியில்லாத மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியர் ஆகியோருக்கு இந்த ஆண்டு குடியிருப்புகளைக் கட்டித்தர முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 3 மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்புகளும், 7 வருவாய்க் கோட்ட அலுவலர் குடியிருப்புகளும் ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சம் செலவில் புதியதாகக் கட்டித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அடுத்து, சிறைத் துறை. சிவகங்கை மாவட்டம், முத்துப்பட்டி கிராமத்திலே 150 சிறைவாசிகள் அடைப்பு வசதி கொண்ட ஒரு திறந்த வெளிச் சிறை அமைக்கப்படும். இதற்காக ரூ.204.55 இலட்சம் செலவாகும்.

இதில், தொடராச் செலவினம் ரூ.178.78 இலட்சம் மற்றும் தொடர் செலவினம் ரூ.25.77 இலட்சம் ஆகும்.

பிற்பகல் 2–20

சிறைத் துறையில், கிளைச் சிறைகளில் பணியாற்றும் காவலர்களுக்கு வழங்குவது போன்று, மத்திய சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டையில் பணியாற்றும் காவலர்களுக்கும் மாதாந்திர சலவைப்படி ரூ.100/– வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.25.43 இலட்சம் கூடுதல் செலவாகும்.

மத்திய சிறைகளில் இரவு நேரங்களில் காவல் பணிபுரியும் காவலர்களுக்கு வழங்குவது போல மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் திறந்த வெளிச் சிறைகளில் இரவு நேரங்களில் பணிபுரியும் காவலர்களுக்கும் இரவு உணவு மற்றும் காலை தேநீருக்குப் பதிலாக இரவு உணவுப் படி நாளொன்றுக்கு ரூ.12/– வீதம் வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.23.30 இலட்சம் செலவாகும்.

9 பெண்கள் கிளைச் சிறைகள் மற்றும் 2 பெண்கள் தனிக் கிளைச் சிறைகளுக்கு மருத்துவ ஊர்தி (மாருதி ஆம்னி வேன்) வாங்கி வழங்கப்படும். இதற்காக தொடராச் செலவினம் ரூ.23.82 இலட்சம் மற்றும் தொடர் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.14.82 இலட்சம் ஆகும்.

புழல் மத்திய சிறை வளாகம் தவிர, இதர அனைத்து மத்திய சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் உள்ள சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக ரூ.126.14 இலட்சம் செலவில் 6,307 மின் விசிறிகள் பொருத்தப்படும்.

அனைத்துச் சிறைகளிலுமுள்ள, மகளிர் மற்றும் ஆண் சிறைவாசிகள் 18,000 பேருக்கும் காலையில் ஒரு வேளை தேநீர் வழங்கப்படும் என்ற செய்தியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் முழுமையாக இந்த அரசு படித்து, கவனத்திலே கொண்டு இருக்கின்றது. எனவே, அவற்றைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) சொல்லுங்கள்.



***திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் அறியும் உரிமைச் சட்டம் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டு, ஒவ்வொரு மாநில அரசும் அதை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையில், மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் கடந்த 2005 ஆம் ஆண்டு நான் சட்ட அமைச்சராக இருந்த நேரத்தில் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இன்றைக்கு அது அமல்படுத்தப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவலைத் தந்து mislead செய்ய வேண்டாம். பேரவை விதி 220–ன்கீழ் உரிமை மீறல் தீர்மானம் அவர்மீது கொண்டு வரலாம் என்று சொல்லி, ஒரேயொரு கோரிக்கை என்னுடைய இராயபுரம் தொகுதியிலே வட்டம் எண் 22 இருக்கின்றது. ஆதி திராவிட மக்கள் அங்கே குடியிருப்புகள் கட்டி, கிட்டத்தட்ட நீண்ட நெடு நாட்களாக வாழ்ந்து வருகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்திலே அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று சொல்லி proposal சென்னை மாநகராட்சி மன்றம்மூலமாகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு, இப்பொழுது அரசாங்கத்தில் நிலுவையிலே இருக்கின்றது. பட்டாவோடு குடியிருப்பையும் அவர்களுக்குச் சொந்தமாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அறிவிப்பு மட்டும் செய்துவிட்டுச் சென்றுவிடுவார்கள், நிதி ஒதுக்கி நிறைவேற்றுவது கலைஞர் அரசுதான் என்று ஒத்துக்கொண்டதற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24– சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.89,99,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.6,37,47,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,349,10,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.94,60,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (இ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

பிற்பகல் 2–25

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 278,46,03,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17–4–2007) செவ்வாய்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

45. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

81. மானியக் கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

82. மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

83. வருவாய்த் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2007. (தமிழ், ஆங்கிலம்)

84. நீதி நிருவாகம் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007–2008. (தமிழ்)



## இணைப்பு-I

*(347 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### மானியக் கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

### தமிழ்நாடு சிறைத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

### I. முன்னுரை

சிறைச்சாலைகள், குற்றவியல் நீதி முறையின் முக்கியமான ஓர் அங்கமாகும். சிறைக் கைதிகளை சீர்திருத்தி, அவர்களுக்குப் புதுவாழ்வு அளித்து அவர்களை மீண்டும் சமுதாயத்தில் இணைத்து மறுவாழ்வைத் துவக்கச் செய்வதும், மீண்டும் குற்றம் இழைக்காவண்ணம் அவர்களைத் தடுப்பதும் சிறைத் துறையின் இரட்டைக் குறிக்கோள்களாக உள்ளன. அதன்படியே மாநில அரசு சிறைச்சாலைகளின் உள் கட்டமைப்பு வசதிகளை அதிகரித்து வந்துள்ளது. தெற்காசியாவிலேயே மிகப் பெரிய நவீன சிறை வளாகம் ஒன்று 26-11-2006 அன்று புழலில் திறந்து வைக்கப்பட்டது.

### II. சிறைச்சாலைகள்

2. சிறைத் துறை நிருவாகத்தின்கீழ் மொத்தம் 135 சிறைச்சாலைகள் உள்ளன. அவைகளில் இளங்குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப் பள்ளி ஒன்று, திறந்தவெளிச் சிறை ஒன்று, பண்ணைச் சிறை ஒன்று, மத்தியச் சிறைகள் 9, பெண்களுக்கான சிறப்புச் சிறைகள் 3, ஆண்களுக்கான கிளைச் சிறைகள் 103, பெண்களுக்கான கிளைச் சிறைகள் 10, ஆண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள் 4, பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள் 3 ஆகியவை உள்ளன. இத்துறை, கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவித் தரத்தில் உள்ள அதிகாரி ஒருவரின் தலைமையின்கீழ் இயங்குகிறது. இவருக்கு உதவியாக, தலைமை அலுவலகத்தில் சிறைத் துறைத் துணைத் தலைவர் ஒருவரும் சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நான்கு சரகங்கள் ஒவ்வொன்றிலும்

சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் உள்ளனர். சிறைக் கண்காணிப்பாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில், மத்தியச் சிறைகளும் அதன் அதிகார வரம்பிற்குட்பட்ட கிளைச் சிறைகளும் இயங்குகின்றன. பெண்களுக்கான சிறைகள் முழுவதும் பெண் பணியாளர்களாலேயே நிருவகிக்கப்படுகின்றன. அனைத்து சிறைகளிலும் சேர்த்து 19,749 சிறைக் கைதிகளை தங்கவைக்க இடவசதி உள்ளது.

## III. நன்னடத்தைப் பிரிவு

*3.* சிறைத் துறையின் நன்னடத்தைப் பிரிவில், தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளரின் தலைமையின்கீழ் 96 நன்னடத்தை அலுவலர்களும், 12 வட்டார நன்னடத்தை அலுவலர்களும் உள்ளனர். நன்னடத்தை அலுவலர்கள் குற்றவாளிகளின் நடத்தை மற்றும் அவர்களின் வாழ்க்கை நிலைகள் குறித்து நீதிமன்றத்திற்காக விசாரணை செய்கிறார்கள். அவர்கள், நன்னடத்தையின்பேரில் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளைக் கண்காணித்து அவர்களுடைய மறுவாழ்வையும் கவனிக்கின்றனர். மேலும், முதன்முதலாக குற்றம் செய்யும் குற்றவாளிகளுக்குத் தண்டனை அளித்து சிறைக்கு அனுப்புவதற்கு பதிலாக குறிப்பிட்ட சில நிபந்தனைகளின் அடிப்படையில் நன்னடத்தைபேரில் அவர்களை விடுவிக்கும் பணியில் அவர்கள் பெரிதும் ஈடுபடுகின்றனர். காவல் நிலைய சிறை வைப்பு அறைகளில் மனித உரிமை மீறல் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்வதற்காக அவற்றைப் பார்வையிட வேண்டுமென நன்னடத்தை அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

## IV. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல்

*4.* சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்காக 75 : 25 விகிதத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் நிதி உதவியைக் கொண்டு சிறை நிருவாகத்தை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தகவல் தொடர்பு சாதனங்கள், பதிவு வசதி கொண்ட வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Televisions) செல்லிடத்துத் தொலைபேசியைச் செயலிழக்கச் செய்யும் கருவிகள். மின்கம்பி வேலி அமைத்தல், மின்விளக்கு வசதிகள் அமைத்தல், வெடிகுண்டு கண்டுபிடிப்புக் கருவிகள், ஆயுதங்களைக் கண்டறியும்





கருவிகள், இரவு நேர இரட்டை தொலைநோக்காடிகள் (Night Vision Binoculars) கண்காணிப்பு கோபுரம், நுணுக்கமாகத் தேடி ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் கருவி, செயல் விரைவு மிக்க சிறு ஆயுதங்கள் (Small Arms Stimulatar) போன்ற நவீன சாதனங்களுக்கு வகை செய்ய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சிறைப் பணியாளர்கள் மற்றும் சிறைக் கைதிகளின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு சிறைப் பணியாளர்களுக்கு நவீன முறையில் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, சேலம், கோவை, வேலூர், புழல் ஆகிய இடங்களில் உள்ள ஐந்து மத்தியச் சிறைகளில் உயர் பாதுகாப்பு அடைப்புகள் கட்டப்பட்டுள்ளன.

## V. மனித வள மேம்பாடு

### சிறைக் காவலர்களுக்குப் பயிற்சியளித்தல்

*5.* தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுவின் மூலம் நியமனம் செய்யப்படும் சிறைக் காவலர்களுக்கு (நிலை-II) வேலூரில் உள்ள காவலர் பயிற்சி மையத்தில் ஆறு மாதங்களுக்கு உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, மேலாண்மை சீர்திருத்த முறைகள் ஆகியவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சிறைக் கைதிகளின் மனித உரிமைகள் பற்றி அறியச்செய்வதும் வலியுறுத்தப்படுகிறது. அவர்களுக்கு நவீனப் படைக்கலன்களைக் கையாளுவதைக் கற்பிப்பதுடன் அந்தப் படைக்கலன்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இவை தவிர. தலைமைக் காவலர்கள் மற்றும் முதல் நிலை சிறைக் காவலர்களுக்கு குறித்த காலத்திற்கொருமுறை புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

*6.* வேலூரில் உள்ள சிறைக் காவலர் பயிற்சி மையத்தில் ஒரே நேரத்தில் 111 இரண்டாம் நிலை ஆண் சிறைக் காவலர்களுக்கும் 25 இரண்டாம் நிலை பெண் சிறைக் காவலர்களுக்கும் பயிற்சி அளிக்க முடியும். இது தவிர, திருச்சி, கோவை ஆகிய மத்தியச் சிறைச்சாலைகளில் தற்காலிக காவலர் பயிற்சி மையங்களும் செயல்பட்டு வருகின்றன. ஆயுதமில்லாமல் தனித்து நின்று போராடுதல், வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் அவற்றைச் செயலிழக்கச் செய்தல் போன்ற பல்வேறு பயிற்சிகள் பெறுவதற்காகவும் சிறைக் காவலர்கள் சென்னை காவல் துறை அதிரடிப்படைப் பயிற்சிப் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

[2007 ஏப்ரல் 16

**மண்டல நிர்வாக சீர்திருத்தப் பயிற்சி நிறுவனம், வேலூர்**

7. இந்த நிறுவனம் 1979 ஆம் ஆண்டிலிருந்து, ஆந்திர பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த சிறை அதிகாரிகளுக்கு சிறை மேலாண்மை மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்தம் குறித்து பயிற்சி அளித்துவருகிறது. இந்த நிறுவனத்தின் செலவினத்தை இதில் பங்குகொள்ளும் நான்கு தென் மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்துகொள்கின்றன.

**தேசிய அளவிலான பயிற்சி**

8. புதுடில்லியில் உள்ள நிறுவனங்களான காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், தேசிய மனித உரிமைகள் ஆணையம், தேசிய தடய அறிவியல் நிறுவனம், தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனம் மற்றும் தேசிய குற்ற ஆவண மையம் ஆகியவற்றால் நடத்தப்படும் மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை குறித்த தேசிய அளவிலான பயிற்சி வகுப்புகளுக்கு சிறைத் துறை அதிகாரிகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

**பணியாளர் தேர்வு**

9. சிறைத் துறையின் ஆண் மற்றும் பெண் இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வு செய்யும் முகவரமைப்பாக தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழு உள்ளது.

## VI. சிறை ஒழுங்கு முறை

**உயர் பாதுகாப்பு சிறைக் கைதிகளைக் கையாளுதல்**

10. அரசின் கொள்கை முடிவிற்கேற்ப, தீவிரவாத சிறைக் கைதிகளை அடைப்பதற்காக தொடக்கத்தில், கோவை, சேலம் மற்றும் திருச்சியில் உயர் பாதுகாப்பு கட்டடத் தொகுதிகள் கட்டப்பட்டன. பின்னர் பெருகிவரும் தீவிரவாத சிறைக் கைதிகளைக் கையாளவும், அவர்களைப் பிரித்து தனிமைப்படுத்தி வைப்பதற்கும் ஏதுவாக இத்தகைய உயர் பாதுகாப்பு கட்டடத் தொகுதி முறை ஏனைய மத்தியச் சிறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அடிப்படைவாத மற்றும் தீவிரவாத சிறைக் கைதிகள் தற்பொழுது பல்வேறு சிறைகளில் உள்ள உயர் பாதுகாப்புத் தொகுதிகளில் அடைக்கப்படுகின்றனர். இந்த உயர் பாதுகாப்புத் தொகுதிகளின் உட்புறம் சிறைக் காவலர்களாலும், வெளிப்புறம் தமிழ்நாடு



2007 ஏப்ரல் 16]

காவல் துறையினராலும் பாதுகாக்கப்படுகின்றன. மேற்கண்ட சிறைக் கைதிகள் அன்றாடச் சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் குறித்த காலத்திற்கொருமுறை உயர் அலுவலர்களாலும் ஆய்வு செய்யப்படுகின்றனர். சிறை விதிகளின்படி இச்சிறைக் கைதிகள் பிற கைதிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர்.

11. இச்சிறைக் கைதிகளைக் காண வரும் பார்வையாளர்கள், கைதிகளைக் காண்பதற்கு முன்னரும், பின்னரும் சிறை மற்றும் காவல் துறையினரால் தீவிரமாகப் பரிசோதிக்கப்படுகின்றனர். சிறைகளில் விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும், சிறைக் கைதிகள் தப்பித்து விடாமல் பாதுகாக்கவும், அழிவுச் செயல் தடுத்தல் குறித்த பரிசோதனைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முறையான வெளிச்சத்திற்கான மின்சார விளக்குகள், பதிவு வசதி கொண்ட வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத் தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Televisions), வெடிகுண்டு கண்டுபிடிப்புச் சாதனங்கள், சிறை மதிற்சுவர்களில் மின் கம்பி வேலிகள் முதலியன பாதுகாப்பு நடவடிக்கையாக அனைத்து மத்தியச் சிறைச்சாலைகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. சிறைக் கைதிகள் அனைவரும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து பரிவுடனும் உரிய கண்ணியத்துடனும் நடத்தப்படுகின்றனர்.

## VII. சிறைவாசிகளின் நலன்

**உணவு மற்றும் உடை**

12. தமிழ்நாடு சிறை நடைமுறை நூலில் வரையறுக்கப்பட்ட அளவின்படி சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் சமச் சீரான உணவு சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது. நோய்வாய்ப்பட்ட சிறைக் கைதிகளுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில், மருத்துவ உணவாக பால், ரொட்டி, முட்டை முதலியன வழங்கப்படுகின்றன. சென்ற ஆண்டு இந்த அரசால் அறிவிக்கப்பட்டவாறு, அசைவ உணவு சாப்பிடும் சிறைக் கைதிகளுக்கு வாரம் ஒரு முறை கோழிக்கறியும், சைவ உணவு சாப்பிடும் சிறைக் கைதிகளுக்கு வாரம் ஒரு முறை கேசரி, உருளைக்கிழங்கு கறி மற்றும் ஒரு வாழைப்பழம் வழங்கப்பட்டு வருகிறது. ஆரோக்கியமான மற்றும் சுகாதாரமான நிலையை உறுதிப்படுத்த சிறைக் கைதிகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் குவளைகள் வழங்கப்பட்டுள்ளதோடு எவர்சில்வர் சமையல் பாத்திரங்களும், உணவினை எடுத்துச் செல்ல தள்ளு வண்டிகளும்

சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட உணவே பெண் சிறைக் கைதிகளுக்கும் வழங்கப்படுகிறது. ஆனால், பாலூட்டும் பெண் சிறைக் கைதிகளுக்கு கூடுதலாகப் பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைக் கைதிகளுடன் உள்ள குழந்தைகளுக்குப் பால், ரொட்டி, வாழைப்பழம் மற்றும் குழந்தைகளுக்கான உணவும் வழங்கப்படுகிறது. வரையறுக்கப்பட்ட அளவின்படி உடைகள் மற்றும் படுக்கைகள் வழங்கப்படுகின்றன.

13. சிறைக் கைதிகளுக்கு டெரிகாட்டன் சட்டை, அரைக்கால் சட்டை மற்றும் பெரிய அளவிலான தரைவிரிப்பும் வழங்கப்படுகின்றன. போதுமான உடை இல்லாத விசாரணை சிறைக் கைதிகளுக்கும் உடைகள் வழங்கப்படுகின்றன.

**மருத்துவப் பாதுகாப்பு**

14. சிறைக் கைதிகளுக்குப் போதுமான மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. மருத்துவ முகாம்களும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. தொழுநோயால் அவதிப்படும் சிறைக் கைதிகளுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மனநலம்குன்றிய சிறைக் கைதிகள் சென்னை அரசு மனநலக் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குப் போதுமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. உடல் நலப் பாதுகாப்பு நடவடிக்கையாக சிறைகளில் புகை பிடிப்பதை அரசு தடை செய்துள்ளது. அனைத்து மத்தியச் சிறைகளுக்கும் நோயாளி அவசர ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய சிறைகளில் மருத்துவப் பரிசோதனைமூலம் நோய் கண்டறியும் சோதனையை மேற்கொள்வதற்காக, மருத்துவப் பரிசோதனைக் கூடங்கள், இதயத் துடிப்பை அறிய உதவும் சாதனங்கள், E.C.G, இரத்தத்தை ஆய்வு செய்யும் தானியங்கிக் கருவிகள், எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய எக்ஸ் - கதிர் படமெடுக்கும் கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளின் சுகாதாரத்தைப் பேணுவதற்காக அவர்களுக்கு பற்பொடி மற்றும் குளியல் சோப்பு ஆகியவை வழங்கப்படுவதுடன் தேவையின் அடிப்படையில் பெண் சிறைக் கைதிகளுக்கு 'நாப்கின்களும்' வழங்கப்படுகின்றன.

**நேர்காணல் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள்**

15. சிறைக் கைதிகள் தங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களை நேரில் சந்தித்துப் பேசுவதற்கான வசதிகள் உள்ளன. கைதிகளை சந்திப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுவதுடன், இப்படிவத்தினை சிறைத் துறை இணைய



தளத்திலிருந்தும் பெறலாம். செய்தித் தாள்களும், குறித்தகால வெளியீடுகளும் சிறைக் கைதிகளுக்கு அரசு செலவில் வழங்கப்படுகின்றன. கல்வித் தரம் மற்றும் இலக்கியத் தரம் வாய்ந்த புத்தகங்கள் சிறை நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளதுடன், சிறைக் கைதிகளின் பயன்பாட்டிற்காக மாவட்ட நூலகங்களில் இருந்தும் கடனாகப் புத்தகங்கள் பெறப்படுகின்றன. சிறைக் கைதிகளுக்கு உள்ளரங்கு மற்றும் வெளியரங்கு விளையாட்டு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**கல்வி**

16. சிறைக் கைதிகளுக்கு அரசு செலவில் அஞ்சல் வழிக் கல்வி பயிலும் வசதி வழங்கப்பட்டுள்ளது. முதியோர் கல்விக்காக தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள் சிறைகளில் செயல்பட்டு வருகின்றன. இந்திரா காந்தி தேசிய திறந்த வெளிப் பல்கலைக்கழகம், கீழ்க்கண்ட பாடப் பிரிவுகளை நடத்தி வருகிறது.

1. உணவு மற்றும் ஊட்டச் சத்தில் சான்றிதழ் படிப்பு
2. இளங்கலை ஆயத்தப் பயிற்சி
3. கணினிப் பயன்பாட்டுப் பயிற்சியில் சான்றிதழ் படிப்பு
4. தொழில் நிருவாகத்தில் முதுகலைப் பட்டப் படிப்பு
5. கணினிப் பயன்பாட்டில் முதுகலைப் பட்டப் படிப்பு

17. மத்திய சிறைகளிலுள்ள கைதிகளுக்கென்றே மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பிற்கான பாடப் பிரிவுகளை சிறையிலேயே நடத்தி வருகிறது. நாட்டிலேயே முதன்முறையாக தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ், பாடத் திட்டங்கள் திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தால் வரையறுக்கப்பட்டபடி நடத்தப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் 53 தண்டனைக் கைதிகள் சிறைத் தண்டனையை அனுபவிக்கும்போதே பல்வேறு பாடங்களைப் படித்துள்ளனர்.

**சிறைக் கைதிகளுக்கு இலவச சட்ட உதவி**

18. சிறைக் கைதிகளுக்கு இலவச சட்ட உதவி வசதிகள் உள்ளன. சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக் குழு அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் இலவச சட்ட உதவி தனிப் பிரிவை அமைத்துள்ளது.

### குறை தீர்த்தல்

19. சிறைக் கைதிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் பொருட்டு, அனைத்து மத்திய சிறைகளிலும் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று இந்தப் புகார் பெட்டிகளைத் திறந்து புகார்களை உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறார். அமர்வு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்கள் மாதம் ஒரு முறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர வசதிகளை சரி பார்ப்பதுடன் அவர்களின் குறைகள் குறித்தும் விசாரணை மேற்கொள்கின்றனர்.

### அலுவல் மற்றும் அலுவல் சாரா பார்வையாளர்கள்

20. சிறந்த நிருவாகம் மற்றும் சிறைக் கைதிகள் நடத்தப்படும் முறை குறித்து உறுதி செய்துகொள்வதற்காக அலுவல் சார்ந்த பார்வையாளர்கள், குறித்த காலத்திற்கொருமுறை சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். மேலும், சிறைக் கைதிகளுக்கு அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும், அவர்கள் முறையாக நடத்தப்படுகின்றனரா என்பதையும் உறுதி செய்துகொள்வதற்காக மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கியப் பிரமுகர்களும் சிறைகளைப் பார்வையிடுகின்றனர்.

21. முக்கியமாக சிறை சீர்திருத்தத்தில் ஈடுபாடு உள்ள, சிறந்த சமூக சேவை பின்னணி உள்ள பொதுமக்கள் துறைத் தலைவரால் அலுவல் சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் சிறைக் கைதிகளை சந்திப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். விதிகள் மற்றும் விதிமுறைகள் உரியவாறு நடைமுறைப்படுத்துவதை நேரில் பார்த்து மனநிறைவு அடைவதற்காக அவர்கள் சிறைகளின் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிடுகின்றனர். இந்த அலுவல் சாரா சிறைப் பார்வையாளர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

### மனித உரிமைகள்

22. சிறைக் கைதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்பொருட்டு அனைத்து சிறைகளிலும் அடிப்படை வசதிகளும் தேவைகளும் செய்துதரப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளின்



நியாயமான குறைகளை உணர்ந்து அதனைத் தீர்க்கவும் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் ஏதுவாக தகுந்த பண்புகளை வளர்த்துக் கொள்ள சிறை அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

23. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாண்புமிகு நீதிபதிகளும் தமிழ்நாட்டில் உள்ள சிறைகளுக்கு வருகை புரிந்து சிறைகளின் நிருவாகத்தை பாராட்டி உள்ளனர். தேசிய மனித உரிமை ஆணையம், சிறைகளில் பொதுவாக இடநெருக்கடி இருப்பது குறித்த தனது கவலையை அடிக்கடி தெரிவித்து வருகிறது. தற்போது திண்டுக்கல், நாகர்கோவில், ஸ்ரீவைகுண்டம் ஆகிய மூன்று இடங்களில் மாவட்ட சிறைகள் செயல்பட்டு வருகின்றன. விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட சிறைகளின் கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. இந்த மாவட்ட சிறைகள் மத்திய சிறைகளின் நெருக்கடியைக் குறைக்கும். மேலும் மாவட்ட அளவில் அதிக வசதிகளை ஏற்படுத்துவதால் கைதிகளைத் தேவை இல்லாமல் இடமாற்றம் செய்வதையும் தவிர்க்க உதவும். இதனைத் தவிர நாங்குநேரி கிளைச் சிறையை தனிக் கிளைச் சிறையாக அரசு அறிவித்துள்ளது. இச்சிறையில் அதிக கைதிகளை அடைப்பதற்காக ரூ. 15 இலட்சம் செலவில் கட்டமைப்பு மாற்றுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## VIII. கைதிகளின் மறுவாழ்வு

### ]சு சாரா நிறுவனங்களின் பங்கேற்பு

24. சிறைக் கைதிகளின் உடல் நலன் மற்றும் மன நலத்தினை மம்படுத்த சிறைகளில் யோகாசனம், தியானப் பயிற்சி ஆகியவை –த்தப்பட்டு வருகின்றன. சிறைகளில் யோகாசனம், தியானம், லந்துரையாடல், ஒழுக்கவியல் குறித்த விரிவுரை, இலவச மருத்துவ கிச்சை முகாம் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி போன்றவற்றை அளிக்க னியார் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி ழங்கி உள்ளது.

### சிறை தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்பயிற்சிப் பிரிவுகள்

25. சிறைக் கைதிகளிடையே உழைக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக சிறைகளில் பல்வேறு தொழில்கள் மற்றும் தொழிற்

பயிற்சிப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விடுதலைக்குப்பின் சுய வேலைவாய்ப்பை மேற்கொள்ள இயலும் வகையில் செங்கல் தயாரித்தல், குழாய் பொருத்துதல், விளம்பரப் பலகை எழுதுதல், மின்கம்பி இணைப்பு, நெசவுத் தொழில், புத்தகம் கட்டுதல், தையல் வேலை, கூர்நாடா தயாரித்தல், மெழுகு, பாதணிகள், பினாயில், நாடாக்கள், சோப்பு, கம்பளம், கோப்பு அட்டைகள் தயாரித்தல் போன்ற சிறு தொழில்களில் சிறைக் கைதிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் மாநில வாழ்க்கை தொழில் கல்வி மற்றும் பயிற்சிக் குழுவினரால் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

26. சிறைத் துறை 'சேவைத் துறை'யாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிறைத் துறை பிற அரசுத் துறைகளுக்கு தேவைப்படும் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை இலவசமாக வழங்குகிறது. சிறைத் தொழிற் பிரிவுகளின் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி உற்பத்தி மதிப்பு ஆண்டொன்றுக்கு சுமார் ரூபாய் நான்கு கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது,

27. இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மத்தியச் சிறைகள், இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, மகளிருக்கான தனிச் சிறைகள் ஆகியவற்றில் சிறைக் கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிறைக் கைதிகளுக்கு தினசரி ஊதியமாக பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ.60/- வீதமும், ஓரளவு பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ.50/- வீதமும், பயிற்சி பெறாதவர்களுக்கு ரூ.45/- வீதமும் வழங்கப்படுகிறது.

## IX பணியாளர்கள் நலன்

### பதக்கங்கள்

28. கடமைகளை நிறைவேற்றும்போது வீரம் மற்றும் போற்றத் தக்க வகையில் சிறப்பாகப் பணிபுரியும் சிறைப் பணியாளர்களுக்கு வழங்க கீழ்க்காணும் பதக்கங்கள் அரசால் நிறுவப்பட்டுள்ளன :

**(i) முதலமைச்சரின் பதக்கம்**

***(அ) தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயல்களுக்கான சிறைப் பணி பதக்கம்***

இப்பதக்கம் பெறுவோருக்கு ரூ.100/— மாதாந்திரப் படியாக வழங்கப்படுகிறது.



***(ஆ) நிகரற்ற பணி ஈடுபாட்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப் பணி பதக்கம்***

இச்சேவைக்கு, பதக்கமும் கீழ்கண்டவாறு ரொக்கப் பரிசும் ஒரு முறை வழங்கப்படும்:

* சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரை - ரூ.5,000/-
* உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர் - ரூ.3,000/-
* சிறைக் காவலர்கள் முதல், முதன்மை தலைமைக் காவலர் வரை - ரூ.2,000/-

***(இ) நற்சேவைக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப் பணி பதக்கம்***

இப்பதக்கம் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறுவோருக்கு கீழ்கண்டவாறு மாதாந்திரப் படி வழங்கப்படுகிறது:

* முதல் நிலை சிறைக் காவலர் - ரூ.50/-
* இரண்டாம் நிலை சிறைக் காவலர் - ரூ.40/-

**(ii) குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணி பதக்கம்**

**(அ) வீரதீரச் செயல்களுக்கான பதக்கம்**

இப்பதக்கம் பெறுவோருக்கு ரூ.60/- மாதாந்திரப் படியாக வழங்கப்படுகிறது.

**(ஆ) பாராட்டத்தகுந்த சேவைக்கான பதக்கம்**

பதக்கம் மட்டும் வழங்கப்படுகிறது.

**(இ) நிகரற்ற சேவைக்கான பதக்கம்**

பதக்கம் மட்டும் வழங்கப்படுகிறது.

### கருணைத் தொகை வழங்குதல்

29. சிறைத் துறை பணியாளர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினருக்கு குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளில் கருணைத்

தொகை வழங்கப்படுகிறது. சிறைப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால் அவரின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு, இறந்த பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதியம் அவர் (ஆண் / பெண் ) உயிரோடு இருந்தால் பணிமூப்பில் ஓய்வு பெறும் நாள் எதுவோ அதுவரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர், தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**குறை தீர்க்கும் நாள்**

*30.* சிறைத் துறையின் உயர் அதிகாரிகளால் கீழ்க்கண்டவாறு குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | கூடுதல் சிறைத் துறை இயக்குநர் | - மூன்று மாதங்களுக்கு ஒருமுறை |
| 2. | சிறைத் துறை சரக துணைத் தலைவர் | - மாதமொருமுறை |
| 3. | சிறைக் கண்காணிப்பாளர் | - வாரமொருமுறை |

சிறைப் பணியாளர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு அவை விரைவாகத் தீர்க்கப்படுகின்றன.

**மிகை நேரப் பணி ஊதியம்**

*31.* சென்ற ஆண்டு இந்த அரசால் அறிவிக்கப்பட்டவாறு சிறைக் காவலர்களுக்கு அரசாணைகளின்படி மிகை நேரப் பணி ஊதியம் நாளொன்றுக்கு ரூ. 150/- வீதம் வழங்கப்படுகிறது.

**இதர படிகள்**

*32.* அவசர காலங்கள் மற்றும் பெருமளவில் சிறைவாசிகள் கைது செய்யப்படும் காலங்களில் மத்திய சிறையில் பாதுகாப்புப் பணிகளில் அமர்த்தப்படும் நிருவாகப் பணியாளர்களுக்கு சென்னை தவிர பிற இடங்களில் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு ரூ.35/- வீதமும், முதல் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் முதன்மை தலைமை சிறைக் காவலர்களுக்கு ரூ.40/- வீதமும், துணைச் சிறை அலுவலர் பதவி வரையில் உள்ள மற்ற அனைவருக்கும் ரூ.50/- வீதமும், சென்னை மாநகரில் உள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் ரூ.80/- வீதமும் உணவுக் கட்டணங்கள் வழங்கப்படுகிறது. இதனைத் தவிர, இரவு





நேரத்தில் மத்தியச் சிறைகளில் பணிபுரியும் சிறைக் காவலர்களுக்கு இரவு உணவு மற்றும் காலை தேநீர் ஆகியவை வழங்கப்படுகின்றது. சிறைக் காவலர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு ஜோடி சீருடைகள் தைப்பதற்காக ரூ.200/- தையற் கட்டணமாக வழங்கப்படுகிறது. இந்த அரசால் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டவாறு கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறை, தனிக் கிளைச் சிறைகள், மாவட்டச் சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் பணிபுரியும் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களின் மாதாந்திர சலவைப் படி ரூபாய் 30/-இல் இருந்து ரூ.100/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**பதவி உயர்வு வாய்ப்புகள்**

*33.* இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு அளிப்பதற்கு ஏதுவாக 2006-2007 ஆம் ஆண்டில் 300 இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் முதல் நிலை சிறைக் காவலர்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளனர். 2007-2008 ஆம் ஆண்டில் மேலும் 300 இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் முதல் நிலை சிறைக் காவலர்களாக நிலை உயர்த்தப்படுவர்.

## X. புதிய முயற்சிகள்

**தகவல் தொழில்நுட்பம்**

*34.* அனைத்து மத்தியச் சிறைகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய தகவல் மையத்தின் உதவியுடன், நம் நாட்டிலேயே முதன்முறையாக "சிறைவாசிகளின் தகவல் அமைப்பு முறை" குறித்த ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் சிறை பதிவுருக்களைக் கணினிமயமாக்குவதற்காக தேசிய தகவல் மையம் மென்பொருளை உருவாக்கி வருகிறது. சிறைவாசிகளுக்கு கணினியில் பயிற்சி அளிக்க, ஒவ்வொரு மத்திய சிறை மற்றும் பெண்கள் தனிச் சிறையில் கணினி மையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

*35.* சிறைத் துறையில் வெளிப்படையான நிருவாகத்திற்காகவும், சிறைத் துறையின் செயல்பாடுகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்காகவும் தேசிய தகவல் மையத்தினரால் வடிவமைக்கப்பட்ட பின்வரும் தகவல் தளம் சிறைத் துறையால் தொடங்கப் பெற்றுள்ளது:-

www.tn.nic.in/prisons
www.tn.gov.in/prisons

## புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு

36. காவல் துறை ஆய்வாளர் ஒருவர், காவல் துறையின் இரண்டு சார் ஆய்வாளர்கள், தலைமைக் காவலர் ஒருவர் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் ஒருவர் ஆகியோர் அடங்கிய புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு ஒன்று இத்துறையில் இயங்கி வருகிறது.

## தொலைநோக்குத் திட்டம்

37. சிறைகளைக் குறைந்தபட்ச அளவு தரங்களுடன் நிருவகிக்கும் நோக்கத்துடன் புதுடில்லி இந்திய அரசின் உள் விவகாரங்கள் அமைச்சகம், சிறை சீர்திருத்தங்கள் குறித்த தொலைநோக்குத் திட்டம் ஒன்றையும் ஆண்டு செயல் திட்டத்தையும் தயாரித்து உள்ளது. இத்திட்டத்தின்கீழ் மைய அரசு 2002-2007 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு உத்தேசமாக ரூ.95.34 கோடியை (இதில் மாநில அரசின் 25% பங்களிப்புத் தொகை அடங்கும்) கீழ்க்கண்ட நான்கு முக்கியப்பணிகளைச் செயற்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ளது :

(அ) புது சிறைச்சாலைகள் கட்டுதல்

(ஆ) தற்போதுள்ள சிறை கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

(இ) சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கல்

(ஈ) சிறைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்

38. இந்தத் தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் 7 கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக நிலை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. திருச்சி மற்றும் கடலூரில் மகளிருக்கான இரண்டு சிறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளை விரிவுபடுத்துவதன்மூலம் தற்போது சிறைகளில் நிலவும் இட நெரிசலைக் களைவதுடன், குடிநீர் விநியோகம், சுகாதாரம், பணியாளர்களுக்கான குடியிருப்பு போன்ற வசதிகளைக் கூடுதலாக ஏற்படுத்தித் தருவதும் இத்தொலைநோக்கு திட்டத்தின் குறிக்கோள் ஆகும். 2002-2003; 2003-2004; 2004-2005 ஆம் ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 2005-2006 ஆம் ஆண்டு செயல் திட்டங்களுக்காக ரூ. 18.31 கோடி வழங்குவதற்குத் தேவையான நிருவாக மற்றும் நிதி அனுமதி அக்டோபர் 2006-இல் வழங்கப்பட்டது. இப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. விரைவில் முடிக்கப்படும். 2004-2005 ஆம் ஆண்டு செயல்திட்டத்தில் எஞ்சியுள்ள பணிகளுக்கு, உள் (சிறைகள்.4) துறையின் 12-1-2007 ஆம் நாளிட்ட 61 ஆம் எண் அரசாணையில்



ரூ.913/- இலட்சம் வழங்க அரசு அனுமதித்துள்ளது. மேலும் 2006-2007 ஆம் ஆண்டு செயல்திட்டத்தின்கீழ் வருகின்ற பின்வரும் திட்டப் பணிகளை ரூ. 1906.30 இலட்சத்தில் மேற்கொள்ள அரசு தேவையான நிர்வாக மற்றும் நிதி ஒப்புதலை வழங்கியுள்ளது.

| தொடர் எண். | பணியின் பெயர் | மதிப்பிடப் பட்ட மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சிறைக் கட்டடங்களை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 263.24 |
| 2. | சிறைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் | 1360.00 |
| 3. | சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதல் | 92.06 |
| 4. | நவீன இயந்திரங்களான கதவில் பொருத்தக்கூடிய உலோகங்களை கண்டறியும் கருவி, எக்ஸ்–ரே ஸ்கேனர் மற்றும் செல்லிடத்துப் பேசிகளை கண்டறியும் கருவி ஆகியவை வாங்குதல் | 93.76 |
| 5. | சிறைவாசிகளின் சீர்திருத்தப் பணிகளுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்– கோவை மத்திய சிறைக்கு கூடுதல் தறிகள் மற்றும் பிற துணைக் கருவிகள் வாங்குதல் மற்றும் நிறுவுதல். | 97.24 |
| | மொத்தம் | 1906.30 |

## புழலில் புதிய சிறை வளாகம்

39. விசாரணைக் கைதிகளுக்கு ஒன்றும், தண்டனைக் கைதிகளுக்கு ஒன்றுமாக 1,250 கைதிகளைத் தங்கவைக்கும் திறனளவு கொண்ட இரண்டு மத்திய சிறைகள் மற்றும் 500 பெண் சிறைவாசிகளைத் தங்கவைக்கும் திறனளவு கொண்ட பெண்களுக்கான தனிச் சிறை

அடங்கிய புதிய சிறை வளாகம் ஒன்று 26-11-2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதில் ஆண்களுக்கான சிறைகள் 18-12-2006 ஆம் நாள் முதற்கொண்டும் பெண்களுக்கான சிறைகள் 18-1-2007 ஆம் நாள் முதற்கொண்டும் செயல்படத் தொடங்கியுள்ளன. சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்களால் தண்டிக்கப்படும் குற்றவாளிகள், கைதிகளாக இங்கு தங்க வைக்கப்படுகின்றனர். இச்சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகளின் மறுவாழ்விற்கு உதவும் வகையில், தியான அறை, மறுவாழ்வு மையம், திறந்தவெளித் திரை அரங்கு, தொழில் பணிக் கொட்டகைகள், உடற்பயிற்சிக் கூடம், கணினி பயிற்சி மையம், பள்ளி மற்றும் நூலகம் போன்ற பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இங்குள்ள அனைத்து அறைகள், தொகுதிகள் மற்றும் மருத்துவமனைகளில் மின் விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளுக்கு சுகாதாரமான முறையில் உணவு வழங்குவதற்காக நவீன சமையற்கூடம் கட்டப்பட்டுள்ளது. பெண்கள் சிறையில், பெண் சிறைக் கைதிகளின் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காக மழலையர் பள்ளி மற்றும் குழந்தைகள் காப்பகமும் நிறுவப்பட்டுள்ளன.

## XI. பகுதி II திட்டங்கள்

*40. 2006-2007* ஆம் நிதியாண்டில் ரூ.*90.24* இலட்சம் செலவில் எட்டு புதிய திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பின்வரும் முக்கியத் திட்டங்களும் அடங்கும் :

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. | அலுவலகப் பணிகளை இயந்திரமயமாக்குவதற்காக கூடுதல் சிறைத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு கூடுதல் கணினிகள் மற்றும் சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் பாளையங்கோட்டை ஆகியவற்றில் உள்ள மத்திய சிறைகளுக்கு துணைப் பாகங்கள் வாங்குதல் | 10.00 |



| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 2. | சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள மத்திய சிறைகளுக்கும் சென்னை மாநகர மண்டல நன்னடத்தை அலுவலர் அலுவலகத்திற்கும் ஸ்டெபிலைசருடன் கூடிய 9 டிஜிட்டல் ஒளி நகலி, டோனர்கள் மற்றும் ஏனைய துணைப் பாகங்கள் ஆகியவற்றை வாங்குதல் | 10.80 |
| 3. | வேலூர், கடலூர், திருச்சி, சேலம், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி, வேலூர் மற்றும் திருச்சியில் உள்ள மகளிருக்கான தனிச் சிறைகள், நாகர்கோவில், திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் ஸ்ரீவைகுண்டத்திலுள்ள மாவட்டச் சிறைகளுக்கு உபரி மின்கலங்களுடன் கூடிய கூடுதல் கைகொள் வாக்கி–டாக்கி சாதனங்கள் வழங்குதல் | 39.00 |
| 4. | மத்திய சிறைகள் 7, மகளிருக்கான தனிச் சிறைகள் 2, திறந்தவெளிச் சிறை 1, பண்ணைச் சிறை 1, தனி கிளைச் சிறைகள் 7 மற்றும் 113 கிளைச் சிறைகளுக்கு எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய நவீன தீயணைப்புக் கருவிகள் வழங்குதல் | 13.34 |
| 5. | சென்னை, பாளையங்கோட்டை மத்திய சிறைகளுக்கு பணியாளர் ஊர்தியும், திருச்சி, கோவை, மதுரை மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறைகளுக்கு 4 மோட்டார் சைக்கிள்களும், திருச்சி மத்திய சிறைக்கு ஒரு அவசர சிகிச்சை ஊர்தியும் வழங்குதல் | 15.00 |

[2007 ஏப்ரல் 16

41. 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.137.84 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 12 புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பின்வரும் முக்கியத் திட்டங்களும் அடங்கும்.

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம், அடுக்கம்பாறை, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கைதிகளுக்கென 20 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பிரிவு கட்டுதல் | 30.87 |
| 2. | புழல் மத்திய சிறை–1 , புழல் மத்திய சிறை–2 மற்றும் புழல் பெண்கள் தனிச் சிறை மருத்துவமனையில் உள்ள கைதிகள் பயன்படுத்தத் தேவையான கட்டில், மெத்தை, தலையணைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் போர்வைகள் வாங்கி வழங்குதல் | 10.62 |
| 3. | திண்டுக்கல் மற்றும் நாகர்கோவில் மாவட்ட சிறைகளுக்குத் தேவையான சிவில் பண்டகப் பொருட்கள், அறைகலன்கள், மருத்துவ சாதனங்கள், அவசர சிகிச்சை ஊர்திகள் மற்றும் சமையல் பாத்திரங்கள் வாங்கி வழங்குதல் | 30.26 |
| 4. | ஆறு மாவட்டச் சிறைகள் மற்றும் 6 தனிக் கிளைச் சிறைகளுக்கு தேவையான கணினி, பிரிண்டர் மற்றும் யு.பி.எஸ் கருவிகள் வாங்கி வழங்குதல் | 5.40 |
| 5. | வேலூர், பெண்களுக்கான தனிச் சிறையில் தற்போதுள்ள பழைய மற்றும் பயனற்றுப்போன அவசர சிகிச்சை ஊர்திக்குப் பதிலாக துணைக் கருவிகளுடன் கூடிய புதிய அவசர சிகிச்சை ஊர்திகள் வழங்குதல் | 6.50 |



2007 ஏப்ரல் 16]

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 6. | கோவை மத்திய சிறையில் தற்போதுள்ள பழைய மற்றும் பழுதுற்ற டிராக்டருக்குப் பதிலாக புதிய டிராக்டர் வாங்கி வழங்குதல் | 5.05 |
| 7 | மதுரை மத்திய சிறையின் உற்பத்திப் பிரிவில் தற்போதுள்ள பழைய மற்றும் பழுதுற்ற லாரிக்குப் பதிலாக புதிய லாரி வாங்கி வழங்குதல் | 8.25 |
| 8 | புழல், மத்திய சிறை–1, 2 மற்றும் பெண்களுக்கான தனிச் சிறைக்கு தேவையான இரண்டு ஜீப்கள், இரண்டு அவசர சிகிச்சை ஊர்திகள் மற்றும் ஒரு டிப்பர் லாரி வாங்கி வழங்குதல் | 30.10 |
| 9 | சென்னையில் உள்ள தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு மகேந்திரா போலேரோ ஜீப் ஒன்று வாங்கி வழங்குதல் | 5.00 |

## XII. முடிவுரை

42. சிறைத் துறையின் சீரிய நிருவாகத்திற்கு அரசு உரிய முன்னுரிமை அளித்து வருகிறது. சிறைவாசிகளின் நலன், சிறைப் பணியாளர்களின் நலன், அடிப்படை கட்டமைப்பு வசதிகள், சிறைகளின் பாதுகாப்பு, சுகாதார வசதி, மனித உரிமைகளைப் பேணுதல் போன்றவற்றை மேம்படுத்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சிறைவாசிகளின் தேவைகள் எப்போதும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. சிறை சீர்திருத்தம் குறித்த பல்வேறு குழுக்களின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட சிறைகள் அமைத்தல் என்ற புதிய கோட்பாடு இம்மாநிலத்தில் முதல் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. பெண் கைதிகளுக்கு மட்டும் 10 கிளைச் சிறைகள் மற்றும் 3 தனிக் கிளைச் சிறைகள்

தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இது நாட்டிலேயே முன்னோடி நடவடிக்கையாகும். தமிழ்நாட்டில் உள்ள சிறைகள் அனைத்தும், அரசின் முழுமையான ஆதரவுடன் எண்ணத்தாலும் எழுத்தாலும் சீர்திருத்த நிலையங்களாக அமையவும், கைதிகளின் மனித உரிமைகளை முறையாகச் செயல்படுத்தவும் இத்துறை சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.



# இணைப்பு-II

*(347ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

## மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

### அத்தியாயம்-I

**முன்னுரை**

வருவாய்த் துறை அரசின் நிருவாகத்தில் இன்றியமையாத பங்கு வகிக்கிறது. நிருவாக அமைப்பின் மிகப்பழமை வாய்ந்த துறை என்ற பெருமைக்குரிய இத்துறை அரசு நிர்வாகத்தின் முதுகெலும்பாகத் தொடர்ந்து செயல்பட்டு சீரான சமுதாய வளர்ச்சிப் பணியில் அதிக பங்கேற்று வருகிறது. வெள்ளம், புயல் சுனாமி, வறட்சி போன்ற இயற்கை இடர்ப்பாடுகளினால் பாதிக்கப்படும் மக்களின் துயரைத் துடைப்பதில் வருவாய்த் துறை முன்னோடியாகத் திகழ்கிறது.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு அரசு பல நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், நலிவுற்ற பிரிவினரை உயர்த்துவதற்கும் இலவச வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம், நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம் போன்ற உன்னதமான திட்டங்கள் வருவாய்த் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை மட்டுமல்லாமல், முதியோர், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், உடல் ஊனமுற்றோர் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் போன்ற பிற துறைத் திட்டங்களையும்கூட வருவாய்த் துறையே களநிலையில் செயல்படுத்தி வருகிறது.

மாநிலம் முழுவதும் பரந்த அளவில் களப் பணியாளர் தொடர்பு உள்ளதால், மேலே சுட்டிக்காட்டப்பட்ட திட்டங்கள் முழுவதையும், வருவாய்த் துறையே செயல்படுத்தி வருகிறது.

[2007 ஏப்ரல் 16

வருவாய்த் துறையின் தலையாய பணிகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

**வருவாய் பணிகள்**

நில வருவாய் வசூலித்தல், தலவரி, தொடர்பான வரி விதிப்புகள், குத்தகை வசூலித்தல் மற்றும் வருவாய் வசூல் சட்டம் செயல்படுத்துதல்.

**சட்டம் மற்றும் ஒழுங்கு பணிகள்**

சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் இடங்களுக்கு முதலில் மக்களிடம் சென்று சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுதல் மற்றும் படைக்கலச் சட்டம், வெடிபொருள் சட்டம் விதிகளின்கீழ் உரிமம் வழங்குதல்.

**சமூக வளர்ச்சிப் பணிகள்**

பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், முதியோர், ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவை, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஏழை விவசாயக் கூலிகள் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்குதல், குடும்ப துயர் துடைப்பு திட்டம் / விபத்து நிவாரண திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துதல்.

மாநிலத்திலுள்ள அனைத்து நிலங்களுக்கும் வருவாய்த் துறையே பாதுகாவலனாகத் திகழ்கிறது. நில ஒப்படை, குத்தகை, நில மாற்றம், நில உரிமை மாற்றம் போன்றவைகளின் மூலம் தொழிற்துறை உபயோகங்களுக்காக நிலத்தை வருவாய்த் துறை வழங்கி வருகிறது. இதன்மூலம் மாநிலத்திலுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகவும், மாநிலத்தின் தொழில் வளர்ச்சி ஏற்படவும் வருவாய்த் துறை உதவுகிறது.

**பேரிடர் மேலாண்மை பணிகள்**

வறட்சி, புயல், வெள்ளம் போன்ற இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும் போது, சேதம் எதிர்பார்க்கப்படும் காலங்களில் பொது மக்களுக்கு முன் எச்சரிக்கை விடுத்தல் மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுதல்.

பாதிக்கப்பட்ட மக்களை உடனுக்குடன் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து சென்று உணவு, உறைவிடம், அத்தியாவசியப் பண்டங்கள் மற்றும் நிதி உதவி வழங்குவதில் இத்துறையின் பங்கு மகத்தானது.



2007 ஏப்ரல் 16]

**தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகள்**

நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தல் தொடர்பான பணிகள் மற்றும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகள் வருவாய்த் துறைக்கே ஒதுக்கப்பட்டுள்ளன.

வருவாய்த் துறையின் பல்வேறு பணிகள், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் கண்காணிப்பின்கீழ், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இவர்களுக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர், துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் ஆகியோர் கொண்ட விரிவான ஓர் அமைப்பு உள்ளது.

செயலாளரின் தலைமையில் கூடுதல் செயலாளர், இணைச் செயலாளர், துணைச் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட ஒரு அமைப்பான வருவாய்த் துறையின்மூலம் அரசு, வருவாய் நிர்வாகத்தை கண்காணித்து வருகிறது.

## அத்தியாயம்-II

## வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை நிர்வாக அமைப்பு

இம்மாநிலம் 30 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மாவட்டங்கள் 73 வருவாய்க் கோட்டங்கள், 206 வட்டங்கள், 1,120 குறு வட்டங்கள் மற்றும் 16,563 கிராமங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டம், விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைத்தல் போன்ற புதிய நலத் திட்டங்களை இத்துறை திறம்பட செயல்படுத்தத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கூடுதல் பணியாளர்கள் ஆகியவற்றை அரசு அளித்துள்ளது.

அரசு ஆணை எண் 212, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, நாள் 29-11-2001 மற்றும் அரசு கடித எண் 6770/P/01-1, பணியாளர் மற்றும் நிருவாக சீர்த்திருத்தத் துறை, நாள் 19-12-2001 ஆகியவற்றின் செயல்பாட்டிலிருந்து வருவாய்த் துறைக்கு மட்டும் அரசாணை (நிலை) எண் 634, வருவாய் துறை, நாள் 22-9-2006-இன்மூலம் விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி எதிர்பாரா நிகழ்வுகளினால் ஏற்படும்

காலியிடங்களை நிரப்ப வேண்டி பட்டியல் தயாரிப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

இதற்கேற்ப 437 வட்டாட்சியர் மற்றும் 682 துணை வட்டாட்சியர் பணியிடங்களை நிரப்ப 2006 ஆம் ஆண்டிற்கான பட்டியல்கள் வெளியிட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் பொதுமக்களுக்கு சிறப்பாக சேவை செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## 2.2. வருவாய் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

அரசுத் துறைகளில் காலியாக இருந்த பணியிடங்களை நேரடி நியமனம் மூலமாக நிரப்பிட அரசால் விதிக்கப்பட்டிருந்த தடையாணை கடந்த 5 ஆண்டுகளாக அமலில் இருந்த காரணத்தால், இத்துறையிலும் அமைச்சுப் பணியில் அடங்கும் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள், போன்ற பதவிகளும், மற்றும் இதர பணிகளில் அடங்கும் ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், காவலர்கள், தொலைபேசி இயக்குபவர்கள் முதலான பணியிடங்களும் நிரப்பப்படாமல் இருந்தன. வருவாய்த் துறையில் பல்வேறு பணியிடங்கள் பெருமளவு காலியாக இருந்ததால் அரசின் நலத் திட்டங்கள் செயலாக்குதல் உள்ளிட்ட முக்கியப் பணிகளைத் தங்கு தடையின்றி மேற்கொள்ள இயலாமலிருந்தது. வருவாய்த் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியத்தை கருத்திற்கொண்டு, உதவியாளர் முதல் காவலர் வரையிலான 3,173 பணியிடங்களை 2006-07 ஆம் ஆண்டில் நிரப்பிட அரசு ஆணை (நிலை) எண் 697, வருவாய்த் துறை, நாள் 20-10-2006 மற்றும் அரசாணை (நிலை) எண் 62, வருவாய்த் துறை, நாள் 1-2-2007 ஆகியவற்றில் அரசின் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, 224 உதவியாளர் பணியிடங்கள், 486 இளநிலை உதவியாளர் பணியிடங்கள், 561 தட்டச்சர் பணியிடங்கள் மற்றும் 62 சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்கள் ஆகியவற்றை நேரடி நியமனம் மூலமாக நிரப்பிட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு மாவட்ட ஆட்சியர்களால் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட பதவிகளில் 773 காலிப் பணியிடங்களை பதவி உயர்வுமூலம் நிரப்பிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ் 467 நபர்களுக்கு பணி நியமனம் வழங்க மாவட்ட ஆட்சியர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஜூலை 2003இல் நடைபெற்ற அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தப்





போராட்டத்தின் போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் முன்னுரிமையுடன் பணி நியமனம் வழங்க உத்தரவிட்ட அரசு ஆணை (நிலை) எண் 123, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 8-9-2006இன் படி கோவை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தலா ஒரு நபருக்கு சிறப்பினமாக மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பதிவுரு எழுத்தர்கள், ஓட்டுநர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், அலுவலக உதவியாளர்கள், காவலர்கள் போன்ற பதவிகளில் காலியாக உள்ள 600 பணியிடங்களைப் பதவி உயர்வு மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பகங்கள்மூலம் 10 வருடங்களுக்கு மேற்பட்டு தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களை நிரந்தரம் செய்தல் ஆகிய வழிவகைகளின்கீழ் நிரப்பிடவும் அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.3. கிராம நிர்வாகம்

(i) கிராம நிருவாகமே மாவட்ட நிருவாகத்தின் அச்சாணியாக தொன்று தொட்டு விளங்குகிறது.

2,500 கிராம நிருவாக அலுவலர் காலிப் பணியிடங்களை கணக்கில் கொண்டு அப்பணியிடங்களை நிரப்புவதற்கு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அனுப்பிய முன்மொழிவுகளின் அடிப்படையில் நேரடி நியமனம்மூலம் தெரிவு செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அதிகாரம் அளித்து அரசாணை (டி) எண் 23, வருவாய்த் துறை, நாள் 12-1-2006இல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அதன்படி காலிப் பணியிடங்கள் தொடர்பான அறிவிக்கையை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 30-12-2006 அன்றைய நாளிதழ்களில் வெளியிட்டுள்ளது.

### (ii) கிராம உதவியாளர்கள்

அரசாணை (நிலை) எண் 625, வருவாய்த் துறை, நாள் 6-7-1995 இல் பகுதி நேர கிராமப் பணியாளர்களை 1-6-1995 முதல் முழுநேர அரசுப் பணியாளர்களாக மாற்றி ஆணையிடப்பட்டது.

கிராம நிருவாகத்தைத் திறம்பட செயல்படுத்த ஏதுவாக ஒரு கிராம உதவியாளர்கூட இல்லாத வருவாய் கிராமங்களில், கிராம உதவியாளர்களைப் பணி நியமனம் செய்ய ஏதுவாக, அரசாணை நிலை

எண் 787, வருவாய்த் (பணி.7-1) துறை, நாள் 6-12-2006இல் புதியதாக 3,674 கிராம உதவியாளர்கள் பணியிடங்களை வேலை வாய்ப்பகம் மூலம் நிரப்ப ஆணையிடப்பட்டுள்ளது.

## 2.4. வருவாய்த் துறைமூலம் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

உற்றார் உறவினர் ஆதரவின்றி, வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு முதியோர் ஓய்வூதிய (சாதாரணம்) திட்டம் (OAP), உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம், கைம்பெண்கள் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் ஆகிய ஐந்து இனங்களின்கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது. அரசாணை பல்வகை எண் 98, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை (ச.ந.6), நாள் 5-9-2006இன்படி இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் அனைத்து பயனாளிகளுக்கும் ஆகஸ்ட் 2006 முதல் ஓய்வூதியத்தினை ரூ. 200/-லிருந்து ரூ. 400/-ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டு, அதன்படி ஆகஸ்டு 2006 முதல் ரூ. 400/- ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர பெண் பயனாளிகளுக்கு தலா ஒரு சேலை வீதமும் மற்றும் ஆண் பயனாளிகளுக்கு தலா ஒரு வேட்டி வீதமும் வருடத்திற்கு இருமுறை பொங்கல், தீபாவளி விழாக் காலங்களில் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2 கிலோ இலவச அரிசியும், உணவு உட்கொள்ளாதவர்களுக்கு 4 கிலோ இலவச அரிசியும் வழங்கப்படுகிறது. மேற்கண்ட ஐந்து திட்டங்களின்கீழ் 31-3-2007 தேதியில் 12,52,822 பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் இதுவரை ரூபாய் 479.80 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### (i) இலவச சேலைகள்/வேட்டிகள் வழங்கும் திட்டம்

2007 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இலவச சேலைகள் / வேட்டிகள் வழங்கும் திட்டம் தொடர்ந்திடவும் அதற்கான தகுதியாக குடும்ப வருமானம் மாதம் ரூ. 2000/- மற்றும் அதற்குக் குறைவாக உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச சேலைகள் / வேட்டிகள் வழங்க அரசு ஆணையிட்டது.



கடந்த 5 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத அளவில் 2007-ஆம் ஆண்டு பொங்கலுக்கு மிகவும் அதிகபட்சமாக 155.41 இலட்சம் சேலைகளும் 155.27 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. சென்ற ஐந்து ஆண்டுகளில் வழங்கப்பட்ட இலவச வேட்டி / சேலைகள் விவரம் பின் வருமாறு:-

| ஆண்டு | பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட விபரம் (லட்சத்தில்) | |
|---|---|---|
| | சேலைகள் | வேட்டிகள் |
| 2002 | இல்லை | |
| 2003 | இல்லை | |
| 2004 | 105.47 | 104.39 |
| 2005 | 109.75 | 109.08 |
| 2006 | 100.60 | 84.56 |
| 2007 | 155.41 | 155.27 |

### (ii) நலிந்தோர் உதவித் திட்டம்

அரசாணை எண் 470, நிதி (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி), நாள் 23-5-1989-ன்படி இத்திட்டம் தொடங்கப்பட்டது. குடும்பத்தில் வருமானம் ஈட்டும் ஆண் அல்லது பெண் இறந்துவிட்டால் அந்த குடும்பத்திற்கு உதவித் தொகையாக 1-8-1998 முதல் ரூ. 10,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 2006-2007 நிதியாண்டிற்கு ரூ.50.94 கோடி மற்றும் ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறு திட்டத்தின்கீழ் ரூ. 5.71 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 31-3-2007 வரை ரூ.50.11 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### (iii) விபத்து நிவாரணத் திட்டம்

அரசாணை எண் 171, நிதி ((மு.அ.பொ.நி.நி)த் துறை, நாள்: 23-5-1989-ன்படி தமிழ்நாட்டில் கிராம கைவினைஞர்கள் உட்பட 44 வகையான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் விபத்தினால் இறக்க நேரிட்டாலோ காயம் ஏற்பட்டாலோ, அங்கங்களை இழக்க நேரிட்டாலோ அவர்களது குடும்பத்திற்கு உதவித் தொகையாக

ரூ. 15,000/- 1-8-98 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 2006-2007 நிதியாண்டிற்கு ரூ.1.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 31-3-2007 வரை ரூ.1.13 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.5. மனுநீதித் திட்டம்

மனுநீதித் திட்டம் 1969ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் மனுநீதி நாளன்றே மக்களின் குறைகளை அவர்கள் வீடு தேடிச் சென்று நிவர்த்தி செய்கிறது. மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர் மற்றும் துணை ஆட்சியர்கள் பல்வேறு துறைத் தலைவர்களுடன் தமது ஆளுமைக்குட்பட்ட கிராமங்களில், மாதம் ஒரு கிராமம் வீதம் மூன்றாண்டு கால சுழற்சி முறையில் அனைத்து கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்து இயன்றவரை அவ்விடத்திலேயே அவர்களுடைய குறைகளைக் களைய முயற்சிப்பதே இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டம் பிரதி மாதம் இரண்டாவது புதன்கிழமையன்று நடத்தப்படுகிறது. மூன்றாண்டு காலத்திற்குள் எல்லா கிராமங்களிலும் நடத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 31-3-2007 வரை தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 2,08,239 ஆகும்.

## 2.6. பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்

1986ஆம் ஆண்டு முதல் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் அனைத்து துறையின் உயர் அதிகாரிகளுடன், அவரது அலுவலகத்தில் பொதுமக்களைச் சந்தித்து, அவர்களது குறைகள் மற்றும் கோரிக்கைகளை நேரடியாகக் கேட்டறிந்து தீர்த்து வைக்கிறார். மாண்புமிகு முதலமைச்சரின் தனிப் பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்கள் 15 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு நேரடியாக பதிலும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 31-3-2007 வரை தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 5,17,938 ஆகும்.



## 2.7. மாண்புமிகு அமைச்சர்கள் / நாடாளுமன்ற உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்

மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களது தொகுதிகளைப் பார்வையிட செல்லும்போது பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. இதற்கென தனிப் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு, மனுக்களின் விவரங்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதி வாரியாக பதியப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இவற்றின் முடிவுகள் மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 31-3-2007 வரை தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 94,017 ஆகும்.

## 2.8. சான்றுகள்

வருவாய்த் துறை அலுவலர்கள் சமுதாயத்தில் இரண்டறக் கலந்துள்ளதால் பொதுமக்கள் தங்களது குறைகளை விரைவில் தீர்த்துக் கொள்ள அவர்களை எளிதில் அணுக இயலுகிறது. சமுதாயத்தில் எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் முதலில் உதவிக்கு வருபவர்கள் வருவாய்த் துறையினரே ஆகும். வருவாய்த் துறை அலுவலர்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாத பங்கை வகிப்பதாலும், வருவாய்த் துறை மட்டுமே மக்கள் தொடர்பை அதிகம் கொண்டு அவர்களைப் பற்றி அதிகம் அறிந்துள்ள துறையாக விளங்குவதாலும், மக்களுக்குத் தேவையான சான்றிதழ்களை வழங்கும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறையின் மூலம் பொதுமக்களின் தேவையை முன்னிட்டு கீழ்க்கண்ட சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன :

1. வகுப்புச் சான்று
2. பிறப்பிட/இருப்பிடச் சான்று
3. வருமானச் சான்று
4. நாட்டினச் சான்று
5. வாரிசுச் சான்று

6. சொத்து மதிப்புச் சான்று
7. பிறப்பு/இறப்புச் சான்று
8. ஆதரவற்ற குழந்தைச் சான்று
9. ஆதரவற்ற விதவைச் சான்று
10. கலப்புத் திருமணச் சான்று
11. பள்ளிச் சான்றுகள் தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று
12. கணவனால் கைவிடப்பட்டவர் சான்று
13. வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகைப் பெற ஒருங்கிணைந்த சான்று
14. பட்டதாரியில்லாத குடும்பச் சான்று
15. வறுமையிலுள்ள குடும்பச் சான்று

### (i) வகுப்புச் சான்று

பொதுமக்களின் தேவையற்ற அலைச்சலைக் குறைக்கவும், வருவாய்த் துறையின் வேலைப் பளுவை குறைக்கவும், 1988 ஆம் ஆண்டு முதல் அச்சடிக்கப்பட்ட நிரந்தர வகுப்புச் சான்று அட்டைகள் வழங்கும் முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அனைத்து கல்வி நிறுவனங்களிலும் சேரவும், வேலைவாய்ப்பு பெறவும் இச்சான்றுகள் பெரிதும் உதவியாக உள்ளன.

பளளிப் படிப்பை முடித்த பின், மேற்படிப்புக்காகவும், வேலை வாய்ப்பு பெறவும், வகுப்புச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை மாணவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

வட்டாட்சியர் அலுவலகங்களில் இத்தகைய சான்றிதழ்களைப் பெறுவதற்காக மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும்பொருட்டு பள்ளிகள் மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறையை, அரசாணை எண் 165, வருவாய்த் துறை, நாள் 1-4-1999-ன் மூலம், அறிமுகப்படுத்தியது. இந்த முறையின்படி 10 அல்லது 12 ஆம் வகுப்பில் அரசு படிக்கும்பொழுதே அதுவரையில் வகுப்புச் சான்றிதழ் பெறவில்லை எனில், சான்றிதழ் கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தலைமை ஆசிரியர்களால் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு, தலைமை ஆசிரியரின் சான்றொப்பத்துடன் சம்பந்தப்பட்ட



வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்படும். வருவாய்த் துறை அலுவலர்களின் உரிய விசாரணைக்குப் பின் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு மொத்தமாக அனுப்பப்படுகின்றன. பள்ளிப் படிப்பு முடிந்தவுடன், அந்த சான்றிதழ்கள் பள்ளி மாறுதல் சான்றிதழ் (Transfer Certificate) வழங்கும் போது சேர்த்து மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 6,09,797 வகுப்புச் சான்றுகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 2,88,710 வகுப்புச் சான்றுகளும், சீர் மரபினருக்கு 62,477 வகுப்புச் சான்றுகளும், ஆதி திராவிடர் வகுப்பினருக்கு 3,63,393 வகுப்புச் சான்றுகளும் மற்றும் பழங்குடியினர் வகுப்பினருக்கு 13,184 வகுப்புச் சான்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் 2001 முதல் 2006 வரையிலான காலகட்டத்தில் திறம்பட செயல்படுத்தப்படவில்லை. மீண்டும் இத்திட்டம் புதுப்பிக்கப்பட்டு இத்திட்டத்தை செயல்படுத்தும்முகமாக வருவாய் நிர்வாக ஆணையருக்கும், பள்ளிக் கல்வி இயக்குநருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை மாவட்ட அளவில் செயல்படுத்த வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் மாவட்ட ஆட்சியர்களுக்கும், மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும் முறையே தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளனர்.

### (ii) பிறப்பிட/ இருப்பிடச் சான்று

பிறப்பு மற்றும் இருப்பிடச் சான்றுகள் பள்ளிகளில் சேரவும், வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறவும் உதவுகின்றன. இருப்பிடச் சான்று பெற வேண்டுமாயின் ஒருவர் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அந்த இடத்தில் வசித்திருக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் ரூ.10/- கட்டணம் செலுத்தி இச்சான்றினைப் பெற வேண்டும்.

### (iii) வருமானச் சான்று

கல்வி உதவித் தொகை பெறுவதற்கும், பள்ளி/ கல்லூரிகளிலும், மாணவர் விடுதிகளிலும் சேரவும், இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் ரூ. 10/- கட்டணம் செலுத்தி இச்சான்றினைப் பெற வேண்டும்.

### (iv) நாட்டினச் சான்று

கடவுச் சீட்டு, நுழைவிசைவு ஆகியவை பெறுவதற்காக, வருவாய் ஆய்வாளரின் முறையான விசாரணைக்குப் பிறகு ஒருவர் இந்த நாட்டைச் சார்ந்தவர் என்று வட்டாட்சியரால் வழங்கப்படும் சான்றாகும் நாட்டினச் சான்று.

### (v) வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற ஒருங்கிணைந்த சான்று

மேற்கூறிய சான்றுகள் தவிர, படித்து வேலை வேண்டி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை அரசாணை (நிலை) எண் 72 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்-2) துறை, நாள் 25-8-2006-ன் மூலம் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் 150/- ரூபாயும், மேல்நிலைப் பள்ளி படிப்பு நிறைவு செய்தவர்களுக்கு மாதம் 200/- ரூபாயும், பட்டதாரிகளுக்கு மாதம் 300/- ரூபாயும் உதவித் தொகை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்படி உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயன்பெற மனுதாரர்கள் சமர்ப்பிக்கவேண்டிய, வருமானம், வேலையில் இல்லாமை, தமிழ்நாட்டிலேயே கல்வி கற்றிருத்தல் அல்லது பெற்றோர் அல்லது பாதுகாவலர், கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டில் குடியிருத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய சான்றுகள் வருவாய்த் துறையின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

## 2.9. வருவாய்த் துறை கட்டடங்கள்

மாவட்ட நிருவாகத்தை திறம்பட செயல்படுத்துவதில் முக்கியப் பங்கு வருவாய்த் துறையைச் சார்ந்ததாகும். அதற்குத் தேவையான அலுவலகக் கட்டடங்கள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஊர்திகள் முன்னுரிமைப்படி வருவாய்த் துறைக்கு வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், வருவாய் கோட்டாட்சியர்கள், வருவாய் வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர் ஆகியோருக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள், கால்நடைப் பட்டிகள் மற்றும் கிராமச் சாவடிகள் ஆகியவை வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. மேலும், மாவட்ட நிருவாகத்திற்குத் தேவையான அலுவலக மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டவும், உள்கட்டமைப்பு வசதிகளை





ஏற்படுத்தவும், வருவாய்த் துறை கட்டடங்களை பழுதுபார்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் ஒவ்வோர் ஆண்டும் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

### (i) அலுவலகக் கட்டடங்கள்

#### (அ) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்திலுள்ள 30 மாவட்டங்களில் 29 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் நிரந்தரமாக செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கட்டடம் கட்டும் பணி இன்னும் இரு மாதங்களில் முடிவுறும் சேலம் மாவட்டாட்சியர் அலுவலக வளாகம் மற்றும் பிற துறை அலுவலகங்கள் கட்டுவதற்காக ரூ. 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### (ஆ) வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்திலுள்ள 73 வருவாய் கோட்ட அலுவலர்களுக்கான அலுவலகங்கள், அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

#### (இ) வட்டாட்சியர் அலுவலகங்கள்

மாநிலத்தில் உள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில் 188 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 2005-2006 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் மூன்று வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. மீதமுள்ள 15 வட்டாட்சியர் அலுவலகங்களில் 2006-07 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் 7 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. மீதமுள்ள 8 வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டும் பணி ரூ.11.40 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் தமிழ்நாட்டில் சொந்த கட்டடம் இல்லாத வட்டாட்சியர் அலுவலகங்கள் எதும் இல்லை என்ற நிலை உருவாக்கப்படும்.

#### (ஈ) கிராம நிருவாக அலுவலர்களுக்கான கட்டடங்கள்

மாநிலத்தில் மொத்தம் 12,506 கிராம நிருவாக அலுவலர்கள் உள்ளனர். அவற்றில் 226 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 12,074 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. மீதமுள்ள

206 கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

### (ii) வருவாய்த் துறை அலுவலர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்கள்

வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடியிருப்புக் கட்டடங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (i) | மாவட்ட ஆட்சியர் | 27 |
| (ii) | மாவட்ட வருவாய் அலுவலர் | 25 |
| (iii) | வருவாய் கோட்டாட்சியர் | 66 |
| (iv) | வட்டாட்சியர் | 179 |
| (v) | வருவாய் ஆய்வாளர் | 1,084 |

மீதமுள்ள வருவாய் அலுவலர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்கள் கட்டும் பணிகள் இனி வரும் ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்படும்.

## 2.10 நிலவரி (பசலி 1416)

ஒரு நிலத்தின் மண் வளம், தரம் மற்றும் நீர் வளம் ஆகியவற்றின் அடிப்படையில் அடிப்படைத் தீர்வை நிர்ணயிக்கப்படுகிறது. அவ்வாறு நிர்ணயிக்கப்படும் அடிப்படைத் தீர்வையை ஆதாரமாகக் கொண்டு தல வரி, தலமேல் வரி, கூடுதல் மேல் வரி, தண்ணீர் தீர்வை, கூடுதல் தண்ணீர் தீர்வை போன்ற பிற வரிகள் கணக்கிடப்படுகின்றன.

(2) நிலப் பட்டாதாரர்களிடமிருந்து நில வரி வசூல் செய்யும் முறையில், எந்தவித கடுமையான நடவடிக்கையும் இல்லாமல் வசூல் செய்யப்படுகிறது.

(3) 2005 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்தில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 22 மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளால் பசலி 1415-க்கு செலுத்தப்படவேண்டிய நில வரி, தண்ணீர் வரி, தல வரி, தலமேல் வரி, கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர் வரி மற்றும் கூடுதல் மேல் வரி ஆகியவற்றை அரசாணை (நிலை) எண். 539, வருவாய்த் துறை, நாள் 22-8-2006-இல் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.





அதன்படி கனமழையால் பாதிக்கப்பட்ட 4,92,722 ஹெக்டேர் பரப்பளவிற்கு உண்டான நில வரி, தல வரி, தலமேல் வரி மற்றும் இதர வரிகள் உள்ளடக்கிய மொத்த வரித் தொகை ரூ.11.52 கோடி முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(4) பசலி ஆண்டு 1416-ல் (1-7-2006 முதல் 30-6-2007), வசூலிக்கத்தக்க நிலுவைக் கேட்பு ரூ.46.56 கோடியில், 31-03-2007 வரை ரூ.8.83 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. பசலி 1416-க்கான உத்தேசக் கேட்பு நடப்பு நில வரியான ரூ.52.89 கோடியில் 31-3-2007 வரை ரூ.34.32 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

## 2.11 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்

மகளிருக்கு பொழுதுபோக்கிற்காகவும், அவர்கள் பொது அறிவை மேம்படுத்தவும் வீடு தோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, அவை இல்லாத குடும்பங்களுக்கு அரசு வழங்க முடிவு செய்தது. இத்திட்டத்தை செம்மையாக நிறைவேற்ற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. ஒளிவுமறைவற்ற வகையில் இத்திட்டத்திற்கான கிராம ஊராட்சி /மாநகராட்சி/நகராட்சி மற்றும் தேர்வுநிலை கிராம ஊராட்சிகளில் உள்ள பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் களப் பணியாளர்களைக் கொண்ட குழுக்களும் மற்றும் தொழில்நுட்ப உயர்மட்டக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயனாளிகளுக்கு வழங்க அரசு உத்தரவிட்டது. அதனடிப்படையில் 15-09-2006 அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளின்போது அனைத்து வகுப்பினரும் வசிக்கும் பெரியார் சமத்துவபுரங்களில் உள்ள பயனாளிகள், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து மலைவாழ் குடும்பத்தினர் மற்றும் தென் சென்னை மற்றும் வட சென்னையில் உள்ள தலா ஒரு குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் 15-02-2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு 31-3-2007 வரை அனைத்து

[2007 ஏப்ரல் 16

மாவட்டங்களில் உள்ள 3,23,323 தகுதியுள்ள பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

## 2.12. இயற்கை இடர்ப்பாடுகள்

இடர்ப்பாடுகள் இரு வகைப்படும் (1) இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் (2) விபத்து மற்றும் மனிதனால் ஏற்படும் இடர்ப்பாடுகள்.

(1) புயல், மழை வெள்ளம், வறட்சி, நில நடுக்கம், நிலச் சரிவு, சுனாமி போன்றவை இயற்கை இடர்ப்பாடுகளாகும்.

(2) தீ விபத்து, குண்டு வெடிப்பு, இரயில் விபத்துகள், படகு கவிழ்தல், தொழிற்சாலைகளில் ஏற்படும் இரசாயன கசிவுகள் மற்றும் கடலில் எண்ணெய் கலத்தல் போன்ற அசாதாரண நிகழ்வுகளானவை விபத்து மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் இடர்ப்பாடுகளாகும்.

தமிழ்நாட்டில் ஓராண்டின் சராசரி மழையளவு 977 மி.மீ. ஆகும். இதில் தோராயமாக 33 சதவிகிதம் தென்மேற்கு பருவ காலத்திலும் 18 சதவிகிதம் வடகிழக்கு பருவ காலத்திலும் பெறப்படுகிறது.

### (i) முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

இயற்கை இடர்ப்பாடுகளால் மக்களுக்கு ஏற்படும் துயரங்களைத் தணித்தல் அரசின் தலையாய பொறுப்பாகும். இயற்கை இடர்ப்பாடுகளை தணிக்க தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து மக்களின் வாழ்க்கையை சீரமைத்து மறுவாழ்வு அளிப்பது தொடர்பாக அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் செவ்வனே செயல்படுத்துவது வருவாய்த் துறையே ஆகும். இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படும் பேரிடர் விளைவுகளை செவ்வனே மேலாண்மை செய்யும் பொறுப்பு வருவாய்த் துறையைச் சார்ந்ததால், வருவாய் நிருவாகத் துறையின் பெயர் வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை என மாநில அரசால் மாற்றம் செய்யப்பட்டது.

மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், தலைமைச் செயலர் மற்றும் வருவாய்த் துறை செயலர், மற்றும் மாநில நிவாரண ஆணையர் ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் இயற்கை இடர்ப்பாடுகள் மேலாண்மைப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.



2007 ஏப்ரல் 16]

இயற்கை இடர்ப்பாடுகள் குறித்து நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் மாநில அளவில் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரால் "மாநில நிவாரண ஆணையர்" என்ற வகையில் கண்காணிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. இந்தப் பணிகள் வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையில் மாநில நிவாரண ஆணையரின் கட்டுப்பாட்டில் இணை ஆணையர் (நில வருவாய்) மற்றும் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவ மழையால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளைச் செவ்வனே சமாளிக்கும் பொருட்டு பருவ காலத்திற்கு முந்தைய கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை. அரசின் உத்தரவுகள் மற்றும் செயல் திட்டங்களின்படி எடுக்கவும் அரசுத் துறைகள், பாதுகாப்புப் படையினர் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் சேர்ந்து அவர்களது ஒருங்கிணைப்பை பலப்படுத்தவும் தலைமைச் செயலாளர் தலைமையில் அனைத்து துறைத் தலைவர்கள் அடங்கிய கூட்டம் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாதவாக்கில் வடகிழக்குப் பருவ மழை துவங்குவதற்கு முன்பாகக் கூட்டப்பட்டு, மாவட்டாட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினருக்கு தக்க அறிவுரைகள் / ஆணைகள் வழங்கப்படுகின்றன.

அதே அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டாட்சியர் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் (District Co-ordination Committee Meeting) நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் இயற்கை சீற்றத்தினைச் சமாளிக்கும்பொருட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அனுபவங்களைக் கொண்டும், ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பெறப்படும் ஆலோசனைகளின்படியும் மாவட்ட அளவில் அவசரகால திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன்படி மாவட்ட பேரழிவு தடுப்புத் திட்டம் (District Disaster Management Plan) மாவட்ட ஆட்சியர்களால் தயாரிக்கப்படுகின்றன. மேலும், பருவ மழைக் காலத்திற்கு முன்பாக பாதுகாப்பு நோக்குடன் சீருடைப் படையினரின் உதவியுடன் அனைத்துத் துறைகள், அரசு தொண்டு சாரா நிறுவனங்கள், சுய நிதிக் குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் மாதிரி பயிற்சி ஒத்திகை (Mock Drill) மாவட்ட ஆட்சியர்களால் நடத்தப்படுகிறது.

### (ii) பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சி

வடகிழக்குப் பருவ மழைக் காலம் தொடங்குவதற்கு முன்பாக வருவாய், காவல், தீயணைப்பு, பொதுப் பணி, நெடுஞ்சாலைத் துறைகள் மற்றும் இதர துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கும்பொருட்டு மாநிலத்தில் உள்ள அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கும் (Anna Institute of Management) மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையத்திற்கும் (State Institute of Rural Development) மற்றும் பிற மாநிலங்களில் நடத்தப்படும் பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சிகளுக்கும் அனுப்பப்பட்டு, அவர்களுக்கு பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சி அவ்வப்போது அளிக்கப்படுகிறது. இதற்கென ஒவ்வோர் ஆண்டும் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### (iii) கட்டுப்பாட்டு அறைகள்

இயற்கை சீற்றங்களை, தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணிக்க, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்தில் கணினி 28593990 என்ற நேரடி தொலைபேசி இணைப்பு, இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் பொது மக்கள் கட்டணமின்றி தொடர்பு கொள்ள 1070 என்ற நான்கு இலக்க தொலைபேசி மற்றும் இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் மற்றும் கட்டுப்பாட்டு அறைக்கும் இடையே ஒரு ஹாட் லைன் தொலைபேசி, நிகரி, 13 கடலோர மாவட்டங்களை உடனுக்குடன் தொடர்பு கொள்ள இரு வழி தொலை தொடர்பு சாதனம் (வி.எச்.எப். மற்றும் எச்.எப்) ஆகிய உபகரணங்களைக் கொண்ட நிரந்தர கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு அறையில் சுழற்சி முறையில் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இக்கட்டுப்பாட்டு அறை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் நேரடிப் பார்வையில் இணை ஆணையர் (நில வருவாய்) அவர்களின் பொறுப்பில் இயங்கி வருகிறது.

அதேபோன்று, ஒவ்வொரு மாவட்டத்திலும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த தகவல்களைத் தெரிவிக்க பொதுமக்கள் கட்டணமின்றி தொடர்பு கொள்ள 1077 என்ற நான்கு இலக்கம் கொண்ட தொலைபேசி நிறுவப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு அறை மாவட்ட ஆட்சியரின் நேரடிக் கண்காணிப்பில், அவாது நேர்முக உதவியாளர்



(பொது) பொறுப்பில் இயங்கி வருகிறது. இந்தக் கட்டுப்பாட்டு அறைகளில் இந்திய வானிலை ஆராய்ச்சி மையம், மத்திய அரசு, மாநில அரசு மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் உடனுக்குடன் முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (iv) கடலோர மாவட்ட மற்றும் வட்ட அளவிலான இரு வழி தொலைத் தொடர்பு சாதனங்கள் (வி.எச்.எப்.)

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 13 கடலோர மாவட்டங்களில் இயற்கை இடர்ப்பாடுகள் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக் கொள்ள மாவட்டங்களின் தலைமையிடத்தில் வி.எச்.எப். மற்றும் எச்.எப். இரு வழி தகவல் தொடர்பு சாதனங்களும், கடலோர வருவாய் கோட்டங்கள் மற்றும் வட்டங்களில் வி.எச்.எப். வயர்லெஸ் சாதனங்களும் நிறுவப்பட்டுள்ளன. மேலும், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்திலும் இவ்விருவழி தொலைத் தொடர்பு சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

### (v) இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்

காற்றழுத்த தாழ்வு நிலைகள், தாழ்வு மண்டலங்கள் மற்றும் புயல் சின்னங்கள் ஆகியவை குறித்து இந்திய வானிலை ஆராய்ச்சி மையம், தான் செயற்கைகோள் மூலம் பெறும் தகவல்களை நிகரி, ஹாட் லைன் தொலைபேசி மூலமாக சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகக் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்புகிறது. அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியர்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. கடுமையான இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் வேளைகளில் அத்தகவல்கள் நேரடியாக இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தால் அரசுக்கும், சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் குறிப்பாக பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது.

மேலும், இவ்வலுவலகக் கட்டுப்பாட்டு அறையில் இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்திலிருந்து ஹாட் லைன் தொலைபேசி மூலமும்,

தொலைபேசி, நிகரி மூலமும் புயல் மற்றும் கனமழை தொடர்பாக பெறப்படும் தகவல்கள் உடனுக்குடன் அரசுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

### (vi) தினசரி மழை விவர அறிக்கை

தமிழ்நாட்டில் உள்ள 378 மழைமானிகளின் மூலம் மழை அளவு கணக்கிடப்பட்டு, ஆண்டு முழுவதும் மழை விவர அறிக்கை பெறப்படுகிறது. மாவட்ட ஆட்சியர்கள் தினமும் மழைப் புள்ளி விவரங்களை வட்டாட்சியர்களிடமிருந்து பெற்று சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையருக்கு தினந்தோறும் அனுப்புகின்றனர். மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்திலிருந்து இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்திற்கும், அரசுக்கும் பெறப்பட்ட மழையின் அளவு குறித்த விவரங்கள் தினந்தோறும் அனுப்பப்படுகின்றன. தினசரி நிலவர அறிக்கையின் அடிப்படையில் மாநில நிவாரண ஆணையரால் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் கண்காணிக்கப்படுகின்றன.

### (vii) புயல் பாதுகாப்பு இல்லங்கள்

தமிழ்நாட்டில் உள்ள 124 புயல் பாதுகாப்பு இல்லங்களில் 114 புயல் பாதுகாப்பு இல்லங்கள் உலக வங்கி உதவியுடன் சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின்கீழ் ரூ. 251.05 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

### (viii) பேரிடர் நிவாரண நிதி (Calamity Relief Fund)

புயல், வெள்ளம், வறட்சி மற்றும் தீ விபத்துகள் ஆகியவை நேரிடும்போது அவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு வழங்குவதற்கான செலவினத்தை மேற்கொள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் பேரிடர் நிவாரண நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### (ix) பன்னிரண்டாவது நிதிக் குழு

2005 முதல் 2010 ஆம் ஆண்டு (1-4-2005 முதல் 31-3-2010) வரையிலான காலத்திற்கு 12-வது நிதிக் குழு கீழே குறிப்பிட்டுள்ளவாறு பேரிடர் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்துள்ளது :



| நிதியாண்டு | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) | மாநில அரசின் பங்கு (25%) (ரூபாய் கோடியில்) | மைய அரசின் பங்கு (75%) (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 2005–2006 | 209.08 | 52.27 | 156.81 |
| 2006–2007 | 219.53 | 54.88 | 164.65 |
| 2007–2008 | 230.51 | 57.63 | 172.88 |
| 2008–2009 | 242.03 | 60.51 | 181.52 |
| 2009–2010 | 254.13 | 63.53 | 190.60 |
| மொத்தம் | 1155.28 | 288.82 | 866.46 |

### (x) தேசிய பேரிடர் எதிர்பாரா செலவின நிதி (National Calamity Contingency Fund)

புயல், வெள்ளம், நில நடுக்கம், சுனாமி, ஆலங்கட்டி மழை, நிலச் சரிவு, வறட்சி மற்றும் தீ விபத்துக்கள் ஆகிய இயற்கைச் சீற்றங்களினால் அசாதாரண பாதிப்புகள் ஏற்படும்போது அவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு வழங்குவதற்கான செலவினத்தை மேற்கொள்ள மாநில அரசிடம் பேரிடர் நிவாரண நிதியில் போதுமான அளவு நிதியில்லாத நிலையில் மத்திய அரசால் தேசிய பேரிடர் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து (National Calamity Contingency Fund) மாநில அரசுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள நிதி வழங்கப்படுகிறது. இந்த நிதி மத்திய அரசால் நிருவகிக்கப்படுகிறது.

### (xi) பேரிடர் நிவாரண நிதிக்கான மாநிலக் குழு (State Level Committee on Calamity Relief Fund)

1997 ஆம் ஆண்டு பேரிடர் நிவாரண நிதியை நிர்வகிக்க மாநில தலைமைச் செயலரை தலைவராகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட மாநில அளவிலான குழு 2000 ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது. இக்குழுவில் தலைமைச் செயலர் தலைவராகவும், வருவாய்த் துறை

செயலர் உறுப்பினர்-செயலராகவும், நிதித் துறை, பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் செயலர்கள், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமனம் செய்யப்பட்டனர். இக்குழு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்கிறது :

* நிவாரணத்திற்கான செலவினத் தொகையை ஒதுக்கீடு செய்தல்
* மைய அரசு மற்றும் மாநில அரசுகளிடமிருந்து தொகைகளை பெற்று இந்த நிதியில் சேர்த்து பேரிடர் நிவாரண நிதியை நிர்வகித்தல்.
* பேரிடர் நிவாரண நிதியிலிருந்து எந்தக் காரணத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அதற்காக அத்தொகை செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணித்தல்.
* பேரிடர் நிவாரண நிதி திட்டம் சுமுகமாகச் செயல்பட மத்திய அரசால் அவ்வப்போது வழங்கப்படும் நெறிமுறைகளைச் செயல்படுத்துவதும் மாநில அளவிலான குழுவின் பல்வேறு பணிகளில் ஒன்றாகும்.
* பேரிடர் நிவாரண நிதித் திட்டத்தை செவ்வனே செயல்படுத்த மைய அரசு அவ்வப்போது வழங்கும் அறிவுரைகளின்படி செயல்படுதல்.

### (xii) வடகிழக்குப் பருவ மழை 2006

தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழைக்காலம் பொதுவாக அக்டோபர் மாதம் 20 ஆம் தேதி தொடங்கும். 2006 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழை முன்கூட்டியே அதாவது 19-10-2006 அன்று தொடங்கிவிட்டது. இவ்வாண்டு மாநிலத்தில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் 522.45 மி.மீ. மழை பெய்தது. இது இயல்பான மழையான 459.22 மி.மீ. காட்டிலும் 14 சதவிகிதம் அதிகமாகும். வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் பெரும்பான்மையான மாவட்டங்களில், கடுமையான மழை பெய்ததால் சேதங்கள் ஏற்பட்டன. இருந்தாலும், கரூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் இயல்பைவிட பற்றாக்குறையான மழையளவு பதிவாகியுள்ளது. கிருஷ்ணகிரி, பெரம்பலூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஏற்பட்ட குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க ரூ.28.37 கோடி வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் கோடைக் காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை மற்றும் இதர வறட்சி நிலையால் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகளை அரசு உன்னிப்பாக கவனித்து உடனடி நடவடிக்கை எடுக்க, அரசு இயந்திரம் தயார் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.



### (xiii) பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

அரசாணை எண் 826, வருவாய், நாள் 18-12-2006-இல் 2006 வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மழையினால் பாதிக்கப்பட்ட குறுவைப் பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.7,500/- வீதம் மொத்தம் ரூ.21,91,988/- பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பேரிடர் நிவராண நிதியில் மற்றும் தேசிய எதிர்பாரா செலவின நிதி ஆகியவற்றின் வரைமுறைகளின்படி, குறிப்பிட்ட அளவிற்கும் மேலாக மூன்று மடங்கு கூடுதலாக நிவாரணம் வழங்கப்பட்டது.

புயல், வெள்ளம், இடி-மின்னல், தீ போன்ற இயற்கை இடர்ப்பாடுகளினால் உயிரிழந்தோரின் குடும்பத்தாருக்கு இதுவரை மாவட்ட ஆட்சியர் அளவில் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக ரூ.15,000/- மட்டும் நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. மேலும், ரூ.35,000/- நிவாரணம் வழங்க சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு, தனியாக வழங்கப்பட்டது. இதனால் உயிரிழந்தோரின் குடும்பத்தாருக்கு நிவாரணம் சிறிய கால இடைவெளிக்குப் பிறகு வழங்கப்பட்டு வந்தது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிரமங்களைக் குறைக்க அரசாணை எண் 714, வருவாய், நாள் 30-10-2006-இன்படி 2006 வடகிழக்குப் பருவ மழைக் காலம் முதல் இயற்கை இடர்ப்பாடுகளினால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணத் தொகையை ரூ.50,000/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இத்தொகையினை மாவட்ட ஆட்சியர் அளவிலேயே உடனடியாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டோருக்கு எவ்வித சிரமும் இன்றி நிவாரண உதவி உடனடியாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில், இயற்கை இடர்ப்பாடுகளால் 106 நபர்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தோரின் குடும்பத்தாருக்கு ரூ.50,000/- வீதம் நிவாரணமாக ரூ.53.00 இலட்சம்

வழங்கப்பட்டது. மேலும், 119 கால்நடை இறப்பு ஏற்பட்ட கால்நடை உரிமையாளருக்கு நிவாரணமாக மொத்தம் ரூ.4,35,000/- மற்றும் முழுவதுமாக மற்றும் பகுதியாக பாதிக்கப்பட்ட மொத்தம் 5,318 குடிசைகளுக்கு அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்திற்கு நிவாரணமாக மொத்தம் ரூ.64,94,000/- வழங்கப்பட்டது.

2006 வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய 6 மாவட்டங்களில் சேதமடைந்த உள்கட்டமைப்பு வசதிகளை சீர் செய்ய ரூ.10.89 கோடி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட உள்ளது. மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி, வடகிழக்குப் பருவ மழையால் சேதமடைந்த மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி சாலைகளை சீர் செய்ய ரூ.25.00 கோடி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட உள்ளது.

### (xiv) தேசிய புயல் இன்னல் தணித்தல் திட்டம் (National Cyclone Risk Mitigation Project)

மத்திய அரசு உள் துறை, உலக வங்கி உதவியுடன் நாட்டில் உள்ள அனைத்து கடலோர மாநிலங்களிலும் மழை மற்றும் புயல் அபாயத்தினை தணித்திட தேசிய புயல் இன்னல் தணிப்புத் திட்டம் என்ற திட்டத்தினை அமல்படுத்தவுள்ளது. புயலுக்கு அவ்வப்போது இலக்காகும் மாநிலங்களை இரு பிரிவுகளாக பிரித்துள்ளது. அதாவது வகை-1 அதிகமாக புயலுக்கு இலக்காகும் பகுதி, வகை-2 குறைவாக புயலுக்கு இலக்காகும் பகுதி. தமிழ்நாடு பிரிவு-1-ல் தற்போது வகைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் 75% நிதியுதவி ரூ.176.00 கோடி மற்றும் மாநில அரசின் 25% நிதியுதவி ரூ.58.66 கோடி ஆக, மொத்த திட்ட மதிப்பு ரூ.234.66 கோடி ஆகும். இத்திட்டம் 2006-2007-ல் தொடங்கி 2009-2010-ல் முடிவடையும் நான்காண்டுகளுக்கான திட்டமாகும். இத்திட்டத்தினைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தும்பொருட்டு பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட ரூ.341.40 கோடிக்கான கருத்துருக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, 2 பகுதிகளாக (ரூ.235.06 கோடி மற்றும் ரூ.106.34 கோடி என) முன்னுரிமைப்படுத்தப்பட்டு மத்திய அரசுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேலும், பகுதி-1-ல் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்கள் ஏதேனும் வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளுக்குள் வரவில்லையெனில் அதற்கு மாற்றாக பகுதி-2-ல் உள்ள திட்டங்களை சேர்த்துக் கொள்ளும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.





## 2.13. சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

2004-ல் தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலை தமிழ்நாட்டை உலுக்கிய மிகப் பெரிய இடர்பாடாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழில், விவசாயம் மற்றும் கடலோரப் பகுதிகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவரத் தேவையான அனைத்து நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் உடனடியாக செய்யப்பட்டன. குறிப்பாக, சுனாமியால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பாதிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டித் தருதல் முதன்மையான பணியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடலோர மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சியர்களையும் இதர துறை அலுவலர்களையும் அழைத்து ஆய்வு செய்தார்கள். அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான முடிவுகள் பின்வருமாறு:

* அரசு சாரா நிறுவனங்கள்மூலம் கட்டித்தரும் வீடுகளை அனைத்து வசதிகளுடன் விரைந்து முடித்துத் தர விரைவுபடுத்துதல்.
* அரசு சாரா நிறுவனங்களால் கட்டுமானம் செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்ட வீடுகளை அரசின் நிதியுதவியுடன் கட்டித் தருதல்.
* ஏற்கெனவே மீனவர்களுக்கு அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட உதவிகளுடன் கூடுதலாக மீன்பிடி வலைகள், உயிர் காக்கும் கவச உடை, ஐஸ் பெட்டிகள், திறன் வாய்ந்த ஒளி விளக்குகள் மற்றும் சைக்கிள்கள் முதலானவற்றைக் கூடுதலாக வழங்குதல்.
* சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகிற பள்ளிக் கட்டணம், சிறப்புக் கட்டணங்கள் ஆகியவற்றை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்தல்.
* கடலோரப் பகுதிகளில் உள்ள கூரை வீடுகள் மற்றும் பழுதடைந்துள்ள வீடுகளை மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக கணக்கெடுப்பு செய்து தேவையானவற்றை மீண்டும் கட்டித் தருதல்.

### (i) வீட்டுவசதி

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இப்பணியினை 24-06-2006 அன்று ஆய்வு செய்தபோது, கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை

8,406 ஆகும். 19-3-2007 வரையில் 22,420 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 31-03-2007 வரையில் தற்போது கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 26,125 ஆகும். இவற்றில் 20,779 வீடுகள் அரசு சாரா நிறுவனங்கள் மூலமாகவும், 5,346 வீடுகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலமாகவும் கட்டப்பட்டுள்ளன.

குடியிருப்புப் பகுதிகளில் இதர வசதிகளான தண்ணீர் வசதி, தெரு விளக்கு, இணைப்பு சாலைகள், உட்புற சாலைகள், சுகாதார வசதி, ஒவ்வொரு வீட்டிற்கும் மின் வசதி ஏற்படுத்தித் தருதல் போன்றவற்றை ஏற்படுத்தித்தரும்பொருட்டு அரசின் சார்பில் இதுவரையில் ரூ.110.71 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசு சாரா நிறுவனங்களால் கட்டித்தர இயலாது என தெரிவித்துள்ள 3,000 வீடுகளைக் கட்டி முடிக்கவும் இந்த அரசு கூடுதலாக ரூ.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக சென்னையிலும் சென்னையைச் சுற்றியும் 16,302 அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரப்பட உள்ளன.

### (ii) கடலோரப் பகுதிகளில் தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய பகுதிகளில் உள்ள வீடுகளைப் புதுப்பித்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடலோரப் பகுதிகளில் குடிசை வீடுகள் மற்றும் பழுதடைந்த வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு அனைத்து பேரிடர்களையும் தாங்கக்கூடிய வலிமையான வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளதன் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர்கள் கடலோரப் பகுதிகளில் விரிவான கணக்கெடுப்புப் பணியை மேற்கொண்டு, ஏறத்தாழ 52,000 வீடுகளை பாதிப்புக்குள்ளாகக் கூடியவை எனக் கண்டறிந்துள்ளனர். இக்கணக்கெடுப்புப் பணி மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணிக்காக அரசு ரூ.30.12 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், மத்திய அரசு உதவியுடன், 11 மாவட்டங்களில் 22,000 வீடுகளைக் கட்டுவதற்கு ரூ.552 கோடி நிதி வழங்கி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட வீடுகள் அனைத்தும் கிராமப்புற பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை மூலமாகவும், நகர்ப்புற பகுதிகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாகவும் கட்டப்பட உள்ளன. இவை தவிர, உலக வங்கியின் நிதியுதவியுடன் ஏறத்தாழ 30,000 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



### (iii) சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடு கட்டுவதற்காக நில எடுப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உடனடி மறுவாழ்விற்காக போர்க்கால அடிப்படையில் நிலம் அளிப்பதற்காக அரசு, தனியாரிடம் இருந்து நிலத்தை அதிகபட்சமாக சந்தை மதிப்பில் அல்லது வழிகாட்டு மதிப்பில் 200 விழுக்காடு, இதில் எது குறைவாக உள்ளதோ அந்த மதிப்பில் எவ்வித நிதி உச்சவரம்புமின்றி வாங்குவதற்கு தனி சிறப்பினமாக அதிகாரம் அளித்து மாவட்டக் குழுக்களை அமைத்துள்ளது. இந்த ஆணை சுனாமி சீரமைப்பு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் நில எடுப்பிற்கு மட்டும் பொருந்தும். முன்னர் தனியாரிடம் இருந்து நிலத்தை வாங்குவதற்கு அதிகபட்சமாக சந்தை மதிப்பில் அல்லது வழிகாட்டு மதிப்பில் 150 விழுக்காடு அதில் எது குறைவாக உள்ளதோ அம்மதிப்பு ரூ.20 இலட்சத்திற்கு மிகாமல் நிலத்தை வாங்குவதற்கு அரசு மாவட்டக் குழுக்களுக்கு அதிகாரம் அளித்திருந்தது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றும் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய கடலோரப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குப் பதிலாக புதிதாக வீடுகள் கட்டுவதற்கென நிலம் கையகப்படுத்துவதற்காக அரசாணை (நிலை) எண் 708, வருவாய்த் துறை, நாள் 28-10-2006-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.30 கோடி உட்பட, இதுவரை மொத்தம் ரூ.79.13 கோடி தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### (iv) மீன்வளம்

அரசின் சார்பில் வழங்கப்பட்ட பல்வேறு நிவாரண உதவிகளில், விடுபட்ட மீனவர்களுக்கு உதவிடும்பொருட்டு, 784 மீனவர்களுக்கு கூடுதலாக ரூ.2.29 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கெனவே பயனடைந்தோருக்கு கூடுதலாக மீன்பிடி வலைகள், உயிர் காக்கும் கவச உடைகள், ஐஸ் பெட்டிகள், திறன் வாய்ந்த ஒளி விளக்குகள், சைக்கிள்கள் முதலியன வழங்கிட ரூ.110.36 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த உதவிகள் நடப்பாண்டில் வழங்கப்படும்.

### (v) இதர உள்கட்டமைப்புப் பணிகள்

கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறிய துறைமுகங்களில் உள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், கடலூர் மாவட்டத்தில் இரண்டு, நாகப்பட்டினம்

[2007 ஏப்ரல் 16

மாவட்டத்தில் இரண்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் ஒன்று என ஆறுகளின் குறுக்கே ஐந்து உயர்நிலைப் பாலங்கள் கட்டவும், கடலூர் மாவட்டத்தில் 21 கி.மீ. கடலோரச் சாலைகளை மேம்படுத்தவும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் தூர் வாருதல், வாய்க்கால்களை அகலப்படுத்தி கரைகளை உயர்த்தவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுனாமியால் பாதிப்படைந்த கடலோர மாவட்டங்களில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட 28 கால்நடை நிலையங்கள்/ கால்நடை மருத்துவமனைகள் / மருந்தகங்கள், 20 மருத்துவமனைகள், 51 பொது சுகாதார நிலையங்கள், 114 புயல் பாதுகாப்பு மையங்கள். 5 அரசுக் கட்டடங்கள், 2 நினைவுச் சின்னங்கள் மற்றும் 33 அரசு உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளி / ஆரம்பப் பள்ளி கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் மறு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட கால்நடை நிலையங்கள் மற்றும் தீவன சேமிப்புக் கிடங்குகள் ஆகியவற்றுக்குத் தேவையான தளவாடங்கள் மற்றும் அறைகலன்கள் வாங்கிடவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் வடிகால்களை சீரமைத்திடவும் குடிநீர் விநியோகம் மற்றும் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளவும், கடலோரப் பகுதிகளில் கரையோரக் காடுகள் மற்றும் சதுப்பு நிலக் காடுகளில் வனப் பயிர்களை உற்பத்தி செய்து பராமரித்தல் போன்ற பிற பணிகளும் சம்பந்தப்பட்ட துறைகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணிகளுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.422.19 கோடி ஆகும்.

### (vi) வாழ்வாதாரம்

இந்த அரசு பதவியேற்றவுடன் தீவிர முனைப்புடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான வாழ்வாதாரங்களை வழங்கிட விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த எட்டுமாத காலத்தில் 29,593 சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, சுழல் நிதியாக ரூ.77.84 கோடியும், பொருளாதார உதவியாக ரூ.18.59 கோடியும், பயிற்சி மற்றும் இதர இனங்களுக்காக ரூ.1.97 கோடியும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வசிக்கின்ற உடல் ஊனமுற்றோர்களுக்கு என இவ்வரசு சிறப்பு உதவித் திட்டம் ஒன்றைத் தொடங்கி அதன்மூலம் 26,400 நபர்களுக்கு ரூ.26.40 கோடி நிதி உதவி வழங்கியுள்ளது.



2007 ஏப்ரல் 16]

## 2.14. சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களுக்கான நிதி ஆதாரங்கள்

### (i) இராஜிவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக மத்திய அரசின் இராஜிவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் மூலமாக உடனடி நிவாரணம், விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கு திட்டம், சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா–கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், மீனவர்களுக்கான மானியத் தொகை, வங்கிகளிடமிருந்து கடனுதவி, மீன்பிடித் துறைமுகங்களை பழுதுபார்ப்பதற்கான மானியம் மற்றும் ஆழிப் பேரலையால் தாக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளைக் கட்டும் பணிக்காக ரூ.2,347.19 கோடி அனுமதிக்கப்பட்டு, மைய அரசால் தமிழக அரசுக்கு ரூ.966.885 கோடி விடுவிக்கப்பட்டு மார்ச் 2007 வரை ரூ.1,057.628 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

| வ. எண் | விவரங்கள் | அனுமதிக்கப் பட்ட தொகை தொகை | மைய அரசு விடுவித்துள்ள தொகை | செலவிடப் பட்டுள்ள |
|---|---|---|---|---|
| | | (ரூ. கோடியில்) | | |
| 1 | உடனடி நிவாரணம் | 617.20 | 617.20 | 486.42 |
| 2 | விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டம் (ARWSP) | 8.50 | 8.50 | 6.49 (31–3–2007 வரை) |
| 3 | சம்பூர்ண கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (SGRY) | 54.00 | 52.76 | 52.76 |
| | | 54.000 மெட்ரிக் டன் அரிசி | 52.760 மெட்ரிக் டன் அரிசி | |
| 4 | மீனவர்களுக்கான மானியத் தொகை | 356.54 + 84.54 (*) | 179.668 | 185.918 |
| 5 | வங்கிகளிடமிருந்து கடனுதவி | 566.47 | – | 62.39 (**) |

| வ. எண் | விவரங்கள் | அனுமதிக்கப் பட்ட தொகை தொகை | மைய அரசு விடுவித்துள்ள தொகை | செலவிடப் பட்டுள்ள |
|---|---|---|---|---|
| | | (ரூ. கோடியில்) | | |
| 6 | மீன்பிடித் துறைமுகங்களில் பழுதுபார்க்கும் பணிகள் | 9.94 | 9.94 | 11.26 |
| 7 | வீடுகள் கட்டும் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | 650.00 | 98.817 | 252.39 |
| | **மொத்தம்** | **2347.19** | **966.885** | **1057.628** |

(*) கூடுதல், மானியம்

(**) இக்கடன் தொகை வங்கிகளால் பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது.

### (ii) உலக வங்கி—அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்

உலக வங்கி கீழ்க்கண்ட பணிகளுக்காக ரூ.1852.71 கோடி (423 மில்லியன் அமெரிக்க டாலர்) ஒதுக்கீடு செய்துள்ளது. [அரசாணை எண் 384, வருவாய் (என்சி-4—(I) துறை, நாள் : 01-07-2005]

*தற்காலிகக் குடியிருப்புகளை மேம்படுத்தி, நிரந்தர வீடுகளைக் கட்டும்போது, தங்குவதற்கான தற்காலிகக் குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் குடியிருப்புகள் புதிய குடிநீர், தெரு விளக்குகள், சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்தல் ஆகியவற்றுக்கு ரூ.1,551.39 கோடி.

* வேளாண்மை, தோட்டக்கலை ஆகிய தொழில்களில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவி செய்தல். கால்நடை பராமரிப்பு நிலையங்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல். மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் படகு நிறுத்தும் இடங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.122.202 கோடி.

* மருத்துவமனைகள், துணை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள், புயல் பாதுகாப்பு மையங்கள், நினைவகங்கள்



ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்கும், மேம்பாடு செய்வதற்கும், மேலும் நதிகளின் கரைகள் மற்றும் வடிகால்களைச் செப்பனிடுதல் மற்றும் கடற்கரையோர காடுகள், சதுப்பு நிலக் காடுகள் ஆகியவை அமைப்பதற்கு ரூ.85.410 கோடி.

* மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு விதமான ஆய்வுகள், தொழில்நுட்ப ஆராய்ச்சிகள், கலந்தாய்வு ஆகியவை மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் பயிற்சிகள் ஆகியவற்றுக்கு ரூ.41.172 கோடி.

* மேற்கண்ட பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற திட்ட மேலாண்மை அலகு அமைத்தல், கூடுதலாக அலுவலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் நியமித்தல், அலுவலகச் செலவுகள் ஆகியவற்றுக்கு ரூ.52.56 கோடி.

உலக வங்கித் திட்டத்திற்கான ஒப்பந்தம் தமிழக அரசு, மைய அரசு மற்றும் உலக வங்கியிடையே மே 12, 2005 அன்று கையெழுத்தாகியது.

9-8-2005 முதல் இத்திட்டம் செயலாக்கத்திற்கு வந்தது. இத்திட்டத்திற்கான காலம் 30-4-2008 வரையாகும். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதிக்கு வட்டி ஏதும் இல்லை. எனினும், சேவைக் கட்டணமாக ஆண்டுக்கு 0.75 விழுக்காடு உலக வங்கிக்கு தமிழக அரசு செலுத்தவேண்டும். இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்ட தொகை 2015 ஆம் ஆண்டு முதல் 2040 ஆம் ஆண்டு வரையிலான 25 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

இதுவரை இத்திட்டத்தின்கீழ் தமிழக அரசால் ரூ.436.49 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2007 முடிய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ள ரூ.138.10 கோடியையும் சேர்த்து ரூ.220.45 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### (iii) ஆசிய வளர்ச்சி வங்கி—சுனாமி அவசர உதவித் திட்டம்

இத்திட்டத்திற்கான தமிழ்நாடு அரசு, மைய அரசு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி இடையிலேயான ஒப்பந்தம் மே 12, 2005 அன்று கையெழுத்தாகியது. ஆசிய வளர்ச்சி வங்கி கீழ்க்கண்ட பணிகளுக்காக ரூ.629.64 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது. [அரசாணை (நிலை) எண் 379, வருவாய் (என்சி 4-1) துறை, நாள்:27-06-05):—

* பாதிக்கப்பட்ட ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க ரூ.218.96 கோடியும்,

* பாதிக்கப்பட்ட சாலைகள் பாலங்கள் சீரமைப்பதற்கு ரூ.39.86 கோடியும், நாகப்பட்டினம், கடலூர் துறைமுகங்களை சீரமைக்கவும், கடலோர மாவட்டங்களில் 12 மீன்பிடி துறைமுகங்களை செப்பனிடவும் ரூ. 77.53 கோடியும்,

* குடிநீர் மற்றும் வடிகால் வசதிகளுக்கு ரூ.100.74 கோடியும், நகராட்சி பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை பழுது பார்ப்பதற்கு ரூ. 35.04 கோடியும், கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளுக்கு ரூ. 143.45 கோடியும், ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் அலுவலகம் சார்ந்த செலவுகளுக்காக ரூ.9.68 கோடியும், மேலாண்மை செலவினமாக ரூ.4.38 கோடியும், ஆக மொத்தம் ரூ.629.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* ஆசிய வளர்ச்சி வங்கித் திட்ட ஒதுக்கீட்டின் வாயிலாக 90,000 குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு வாழ்வாதாரப் பயிற்சி அளிக்கவும் புதிய வாழ்வாதார நிறுவனங்களை அமைப்பதற்கும் நிதி உதவி அளிக்கப்படும். தயாரித்த பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவி செய்யப்படும். 3,90,000 பயனாளிகளுக்கு பொருள் காப்புறுதி செய்யப்படும்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் மொத்த நிதியுதவி ரூ. 629.64 கோடியில் கடன் தொகை ரூபாய் 295.88 கோடியும் மானியத் தொகை ரூ. 333.76 கோடியும் ஆகும். கடன் தொகை 2013 ஆம் ஆண்டிலிருந்து 2037 ஆம் ஆண்டிற்குள் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

இதுவரை இத்திட்டத்தின்கீழ் தமிழக அரசால் ரூ. 592.90 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2007 முடிய ரூ. 209.29 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் காலம் ஏப்ரல் 2008 வரையாகும்.

### (iv) பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி நிறுவனம்

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் வாழ்வாதாரத் திட்டங்களுக்காக ரூ.67.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படும். இத்திட்டம் காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவள்ளூர், கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம்



செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் தொகைக்கும் சேவைக் கட்டணம் ஆண்டுக்கு 0.75 விழுக்காடு மட்டுமே இருக்கும். இத்திட்டம் 8 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் 11-11-2005 அன்று கையெழுத்திடப்பட்டது. இக்கடன்தொகை அக்டோபர் 15, 2015-ல் தொடங்கி ஏப்ரல் 15, 2045-க்குள் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

### (v) வறுமைக் குறைப்பிற்கான ஜப்பான் நிதி

தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏழை மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தைச் சீரமைக்கவும், வாழ்வாதாரங்களை உருவாக்கும் பொருட்டு ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் ஆசிய வளர்ச்சி வங்கி வாயிலாக ரூ.16.70 கோடி மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேற்படி நிதியிலான இத்திட்டங்கள் 4 ஆண்டுகளில், அதாவது . அக்டோபர் 2010 வரை செயல்படுத்தப்படும். இது தொடர்பான ஒப்பந்தம் 27-9-2006 அன்று தமிழக அரசால் கையொப்பமிடப்பட்டது. இதே ஒப்பந்தத்தில் மத்திய அரசும் 4-10-2006 அன்று கூட்டாகக் கையொப்பமிட்டது. அரசாணை (நிலை) எண் 118, வருவாய்த் துறை நாள்: 8-3-2007-ல் இதற்கான நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

## 2.15. மத்திய அரசு மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பின் ஆதரவுடனான பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம்.

பல்முனை இன்னல்களுக்கு உள்ளாகும் தன்மை கொண்ட பகுதிகளின் மக்கள் எதிர்கொள்ளும் இயற்கை இடர்பாடுகளைக் குறைக்கும் நோக்குடன் மத்திய அரசும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பும் "பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம்" என்ற திட்டத்தைப் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டம் தமிழ்நாட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு இன்னல்களுக்குட்படும் இம்மாவட்டங்களில் இயற்கை இன்னல்களை முடிந்தவரை குறைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். விழிப்புணர்வு, கல்வி, பயிற்சி, பேரிடர் மேலாண்மை, ஆயத்த நிலை மற்றும் இன்னல்களிடமிருந்து மீளுதல்

[2007 ஏப்ரல் 16

ஆகியவற்றில் மாநிலம், மாவட்டம், சமுதாயம் ஆகிய நிலைகளில் சமுதாயத்தின் திறன் வளர்த்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் முழுமைக்கும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பு நிதி வழங்குகிறது. மொத்த நிதி அளிப்பு ரூ. 6.71 கோடியாகும். (14,75,022 அமெரிக்க டாலர்கள்).

இத்திட்டத்தின்கீழ் பல்வேறு அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்பு உறுப்பினர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோர் கூர் உணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களது எண்ணிக்கை சுமார் 27,000 ஆகும். மேலும், சுமார் 51,000 கிராம தன்னார்வத் தொண்டர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 4,100 ஆசிரியர்களும் மற்றும் 37,200 நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஊரக மற்றும் கிராம அளவில் 5,393 பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. வட்டார அளவில் 52 வட்டாரங்களிலும், 6 மாவட்டங்களில் மாவட்ட அளவிலும் பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அவசரகால பேரிடர் மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டம் மற்றும் மாநில அளவிலான அவசர கால பேரிடர் மையங்களின் கட்டுமானப் பணிகள் மேம்பட்ட நிலையில் உள்ளன.

மத்திய அரசும், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பும் விழுப்புரம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய கடலோர மாவட்டங்களைப் பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டத்தில் சேர்க்க முடிவு செய்துள்ளன.

## அத்தியாயம்-3

## நில நிர்வாகத் துறை

பல்வேறு துறைகள் வசம் உள்ள அரசு நிலங்கள் உட்பட, தமிழகத்தில் உள்ள அனைத்து நிலங்களும் வருவாய்த் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட முக்கியப் பொருட்களான ஒப்படை (வீட்டுமனை/விவசாய நிலம்), குத்தகை நில உரிமை மாற்றம், நில மாற்றம்,



2007 ஏப்ரல் 16]

நில எடுப்பு, ஜமீன்/இனாம் ஒழிப்புச் சட்டம், திரையரங்கச் சட்டம் ஆக்கிரமணம் அகற்றுதல் மற்றும் பாசனச் சட்டங்கள் ஆகியவை நில நிர்வாகத் துறையால் நிர்வகிக்கப்படுகின்றன.

அரசு நிலங்கள், தனியாருக்கும், அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் குத்தகை, நில மாற்றம், நில உரிமை மாற்றம் நில எடுப்பு மற்றும் ஒப்படைப்புமூலம் வழங்கப்படுகின்றன.

### 3.2. நில ஒப்படை

அரசு நிலங்கள் வீட்டு மனைக்காகவும், விவசாயம் செய்வதற்காகவும் ஒப்படை செய்யப்படுகின்றன.

### (i) வீட்டுமனை நில ஒப்படை

சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை வழங்குவது அரசின் தலையாய கொள்கையாகும். ஊரகப் பகுதிகளில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.16,000/-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மகளிர்க்கும் பொறுப்பளிப்பதைக் கருத்தில் கொண்டு, குடும்பத் தலைவி, அதாவது மனைவி அல்லது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. தற்போது கிராமங்களில் மூன்று சென்ட் அளவிலும், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் அளவிலும், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவிலும் வீட்டுமனைக்காக நிலம் வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ் ஒப்படை செய்யப்படுகிறது.

"இந்திரா ஆவாஸ் யோஜ்னா", "பிரதம மந்திரி கிராமோதய யோஜ்னா" போன்ற கடன் மற்றும் மானியம் சார்ந்த கிராமப்புற வீடு கட்டும் திட்டங்களின்கீழ் ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களை அடமானம் வைத்துக் கடன் உதவி பெற்று வீடு கட்டுவதற்கு ஒப்படைதாரர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

[2007 ஏப்ரல் 16

வீட்டுமனை ஒப்படை செய்வதில் கீழ்க்காணும் முன்னுரிமை பின்பற்றப்படுகிறது:—

(அ) எல்லைப்புற பாதுகாப்புப் படை, இராணுவப்படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் அல்லது செயலிழந்தவர்களின் குடும்பங்கள்;

(ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்;

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்;

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்;

(உ) நிலமற்ற ஏழை மக்கள்.

ஒப்படை செய்வதன் பலன் ஏழை மக்களுக்கு விரைவில் சென்றடையும் வகையில், வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு கீழ்க்கண்ட வகையில் நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | ரூ.10,000/- |
| 2 | கோட்டாட்சியர் | ரூ.20,000/- |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000/- |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.2,00,000/- |
| 5 | நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000/- |
| 6 | அரசு | ரூ.2,50,000/-க்கு மேல் |

2006-2007 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 60,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 31-3-2007 முடிய 76,622 வீட்டுமனைப் பட்டாக்கள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன:—



2007 ஏப்ரல் 16]

| வகுப்பினர் | பயனாளிகள் |
|---|---|
| ஆதி திராவிடர் | 23,900 |
| பழங்குடியினர் | 2,488 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 23,452 |
| பிற்படுத்தப்பட்டோர் | 25,197 |
| ஏனையோர் | 1,585 |
| மொத்தம் | 76,622 |

**(ii) ஆக்கிரமணம் வரண்முறைப்படுத்துதல்**

அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 31-12-2006-ல் அரசு நிலங்களில் பத்தாண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தை புலத் தணிக்கை செய்து அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணையை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து தகுதியின் அடிப்படையில் 2007 ஜனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேவைப்பட்டால் இக்கால அளவு மேலும் நீட்டிக்கப்படும்.

**(iii) விவசாய நிலம் ஒப்படை**

கிராமங்களில் வாழும் மக்கள் சொந்த நிலங்கள் இல்லாத காரணத்தினால் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையும் அதைச் சார்ந்த வேலைகளையும் நம்பி வாழ்ந்து வருவதால், நிலமற்ற ஏழைகளுக்கு நிலங்களை வழங்கி, விவசாயத்தையும் அதனைச் சார்ந்த வேலைகளையும் தொழிலாக மேற்கொள்வது மற்றும் நிலத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வது ஆகிய இரு குறிக்கோள்களை அடைவதற்கு அரசு உதவி வருகிறது. விவசாய நிலம் வருவாய் நிலை

ஆணை எண் 15-ன்கீழ் ஒப்படை செய்யப்படுகிறது. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை கருத்தில் எடுத்துக்கொள்ளாமல், குடும்பத்தின் ஆண்டு வருமானம் கிராமப்புறத்தில் ரூ.16,000/-க்கும் நகர்ப்புறத்தில் ரூ.24,000/-க்கும் குறைவாக இருப்பவர்களுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. வீட்டுமனை ஒப்படை செய்வதற்குப் பின்பற்றப்படும் அதே முன்னுரிமை வரிசை, மற்றும் நிதி அதிகார வரம்பு விவசாய நில ஒப்படைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

## 3.3. நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் வீதம் நிலம் வழங்கும் திட்டம்

**[அரசாணை (நிலை) எண் 555, வருவாய்த் துறை, நாள்: 26–8–2006]**

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலம் வழங்கும் அரசின் சிறப்புத் திட்டம் கீழ்க்கண்ட மூன்று வகைகளில் செயலாக்கப்படுகிறது:—

1. எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்தல்,

2. சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்தல், மற்றும்

3. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு பட்டா நிலங்களை பண்படுத்துதல்/மேம்பாடு செய்தல்.

இத்திட்டத்தில் பயனாளிகளைத் தேர்வு செய்து ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக இருக்கும்பொருட்டு, கிராம அளவிலான குழு மற்றும் கிராம சபைகள் மூலம் பயனாளிளைத் தேர்வு செய்ய சில சிறப்பு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின் கீழ்வரும் நிலங்கள் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின் திட்டங்கள்மூலம் பண்படுத்தப்பட்டு விவசாயத்திற்குத் தகுதியானதாக மேம்படுத்தப்பட்ட பின்னரே பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

இந்தத் திட்டம் 17-9-2006 ஆம் நாளன்று திருவள்ளூரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும், இதர மாவட்டங்களில் ஏனைய அமைச்சர்களாலும் தொடங்கி வைக்கப்பட்டது. இரண்டாம் கட்ட





விநியோகம், 17-12-2006 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விழுப்புரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. மூன்றாம் கட்ட விநியோகம், 17-3-2007 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திருவண்ணாமலையில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த இலவச நில விநியோகம் வழங்கப்பட்டது பற்றிய புள்ளிவிவரங்கள் பின்வருமாறு:—

| விநியோக நிலைகள் | பயனாளிகள் | வழங்கப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| முதல் கட்டம் (17–9–2006) | 23,440 | 24,271.14 |
| (மதுரை) 11–11–2006 | 918 | 1,010.97 |
| இரண்டாம் கட்டம்(17–12–2006) | 26,749 | 25,805.53 |
| மூன்றாம் கட்டம் | 20,648 (17–3–2007) | 26,029.61 |
| மொத்தம் | 71,755 | 77,117.25 |

கடந்த ஐந்தாண்டுகளில், அதாவது 2001 முதல் 2006 வரையிலான காலகட்டத்தில் 51,509 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 29,074 ஏக்கர் விவசாய நிலம் வழங்கப்பட்டது. ஆனால் கடந்த 10 மாதங்களில் 71,755 ஏழை நிலமற்ற விவசாயிகளுக்கு 77,117 ஏக்கர் விவசாய நிலம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.4. நிலக் குத்தகை

அரசு நிலங்கள், தனி நபர்கள், தனியார் அமைப்புகள், நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்காக, ஒரு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு, குறைந்தபட்சமாக 3 ஆண்டுகளுக்கும், அதிகபட்சமாக

30 ஆண்டுகளுக்கும் வருவாய் (நிலை)-ஆணை எண் 24ஏ-ன்கீழ் குத்தகை அடிப்படையில் தரப்படுகின்றன.

வணிக நோக்கம் மற்றும் வணிகமற்ற நோக்கம் இதை அடிப்படையாகக் கொண்டு, நிலமதிப்பில் ஆண்டு குத்தகைத் தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய வரம்பிற்குள் வரும் நிலங்களுக்கு நடைமுறையில் உள்ள ஆண்டு குத்தகை விகிதங்கள் பின்வருமாறு:—

| நோக்கம் | ஆண்டு குத்தகை (நில மதிப்பில்) | தல வரி | தல மேல்வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வணிகமற்ற நோக்கம் | 1% | 1% | 5% | 7% |
| வணிக நோக்கம் | 2% | 2% | 10% | 14% |

மாநகராட்சி மற்றும் நகராட்சி வரம்பிற்குள் வரும் நிலங்களுக்கு நடைமுறையில் உள்ள ஆண்டு குத்தகை விகிதங்கள் பின்வருமாறு:—

வணிகமற்ற நோக்கத்திற்கு ...... நிலமதிப்பில் 7% (கூடுதல் மேல்வரி உட்பட)

வணிக நோக்கத்திற்கு ... நிலமதிப்பில் 14% (கூடுதல் மேல்வரி உட்பட)

ஆண்டு குத்தகைத் தொகை, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்படும் என்கிற நிபந்தனைக்கு உட்பட்டதாகும்.

மேலும், சிறப்பு நேர்வுகளில் பெயரளவு ஆண்டு குத்தகை தொகையும் அரசால் நிர்ணயிக்கப்படுகிறது.

குத்தகை ஒப்பாவணத்தில் கண்டுள்ள நிபந்தனைகளை மீறும்போது, குத்தகை நிலம் மீளப் பெறப்படும்.

## 3.5. நில மாற்றம்

அரசுப் புறம்போக்கு நிலங்கள், வருவாய் நிலையாணை எண் 23-ன்கீழ் சந்தை மதிப்பினை வசூலித்த பின்னர் நிலமாற்றம் செய்யப்படுகின்றன. சென்னையில், துரித இரயில் போக்குவரத்து முதல்



கட்ட திட்டத்திற்கான நிலங்கள் இரயில்வே துறைக்கு நிலக் கிரயம் ஏதும் வசூலிக்கப்படாமல் நில மாற்றம் செய்யப்பட்டுள்ளன. திருமயிலை - வேளச்சேரி வரையிலான இரண்டாம் கட்ட துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்குத் தேவைப்படும் புறம்போக்கு நிலங்கள் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் இரயில்வே துறைக்கு வழங்கப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1000/- என குத்தகைத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசுத் துறைகளுக்கு, வருவாய் நிலை ஆணை எண் 23(அ)-ன்கீழ், பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற வணிக நோக்கமல்லாத பயன்பாட்டிற்காக நிலக் கிரயம் வசூலிக்கப்படாமல் நிலமாற்றம் செய்யப்படுகிறது. வணிக நோக்கங்களுக்காக நிலங்கள் கோரப்படும்பொழுது, நில மாற்றம் செய்வதற்கு முன்பாக நில மதிப்பு வசூலிக்கப்படுகிறது.

போக்குவரத்து, சுகாதாரம், கல்வி மற்றும் காவல் துறை போன்ற அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்கான ஆட்சேபணையற்ற, குறைந்தபட்ச அளவு அரசுப் புறம்போக்கு நிலங்களை நில மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நில மாற்றம் எந்நோக்கத்திற்காகச் செய்யப்பட்டதோ, அவற்றிற்காக நிலங்கள் முழுமையாக பயன்படுத்தப்படாத நிலையில், அத்தகைய நிலங்கள் மீளப் பெறப்பட்டு தேவைப்படும் பிற துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

## 3.6. நில உரிமை மாற்றம்

பல்வேறு மாவட்டங்களில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் தகவல் தொழில்நுட்பப் பூங்கா/தொழில் வளாகம் அமைக்கும் பொருட்டு நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அதன் விளைவாக, தொழில் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் மாநிலத்தின் பொருளாதாரமும் வளர்ச்சி அடைகிறது.

பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை முன்னேற்றுவதற்காகவும் வருவாய் நிலையாணை 24-ன்கீழ் அரசு புறம்போக்கு நிலங்கள் அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு,

உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு, குடிசைவாழ் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக் கிரயமின்றியும், இதர காரியங்களுக்கு மனை ஒன்றுக்கு பெயரளவு நிலக் கிரயமாக ரூ. 5000/- வசூலித்த பின்னர் அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்திற்கும் மற்றும் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு கட்டுவதற்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு இலவசமாக நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதர கேட்பு நிறுவனங்களுக்கும் மற்றும் இதர காரியங்களுக்கும் சந்தை மதிப்பு அல்லது அதற்குமேல் நிலக் கிரயம் வசூலிக்கப்பட்டு நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பேருந்து முனையம் மற்றும் பயணியர் பேருந்து நிறுத்துமிடங்கள் அமைக்கத் தேவைப்படும் நிலத்தின் சந்தை மதிப்பில் 50 சதவிகிதம் நிலக் கிரயம் வசூலித்த பின்னர் உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. உரிமை மாற்றம் நிபந்தனைகள் மீறப்படின் எந்தவிதமான இழப்பீட்டுத் தொகையும் வழங்காமல் நிலங்கள் அரசால் மீளப் பெறப்படுகின்றன.

## 3.7. ஆக்கிரமணங்களை அகற்றுதல்

வருவாய்த் துறை அனைத்து அரசு நிலங்களுக்கும் பாதுகாவலனாக இருக்கும் ஒரு துறையாகும்.

அரசு வசம் உள்ள நிலங்களைத் தகுதிவாய்ந்த ஏழைகளுக்கு ஒப்படை செய்வதற்கும், இதர வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் பொது நோக்கங்களுக்கு வழங்குவதற்கும், வழி செய்யும் வகையில் அரசு நிலங்களில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகள் தடுக்கப்படவேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். பொது நோக்கங்களுக்கு ஒதுக்கப்படாத அரசு நிலங்களில், ஆட்சேபணையற்றது எனக் கண்டறியப்பட்டால் அவற்றின் ஆக்கிரமண தன்மை கண்டறியப்பட்டு அதற்கேற்றாற்போல் வரண்முறைப்படுத்தப்படுகிறது.

அரசின் மதிப்புவாய்ந்த இந்த நிலங்களை ஆக்கிரமணத்திலிருந்து தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு ஆக்கிரமணம் சட்டம், 1905 உருவாக்கப்பட்டது. பொது நோக்கங்களுக்கு எனக் குறிப்பாகக் குறிக்கப்படாத அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் ஆட்சேபகரமற்றவை எனக் கருதப்படுகின்றன. அத்தகைய ஆக்கிரமிப்புகளின் தன்மைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் வரண்முறைப்படுத்தப்படுவதற்கு தகுதியுடையவை ஆகின்றன.





நீர்ப்பரப்பு, நீர்வழிப் புறம்போக்குகள், மேய்க்கால் நிலங்கள், கோயில் நிலங்கள், களம் போன்றவற்றில் ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபணைக்குரியவை எனக் கருதப்படுவதால் அவை அகற்றப்படவேண்டும். தமிழ்நாடு ஆக்கிரமணச் சட்டம், 1905-ன்படி முன்அறிவிப்பின் பேரில் முறையற்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி மற்றும் மாநகராட்சித் துறை அலுவலர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 2021, வருவாய்த் துறை, நாள்: 25-9-1976-ல் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுக்கு தமிழ்நாடு ஆக்கிரமணச் சட்டம், 1905 பிரிவு 7-ன்கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலும், மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் ஆக்கிரமணங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண் 15673 முதல் 15686/2002 வரை நாள்: 6-6-2002-ல் சட்ட விரோதமான ஆக்கிரமணங்களுக்கு, உள்ளூர் பிரதிநிதிகளையே பொறுப்பாக்கவேண்டும். இதனைக் கண்காணிக்க ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கிணங்க அரசாணை (நிலை) எண் 771, வருவாய்த் துறை, நாள்: 27-11-2006-ன்படி மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் சிறை) அவர்களை தலைவராகக் கொண்டும் அலுவல்/அலுவல்சாரா நபர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது.

இக்குழு, மாநில அளவிலான ஆக்கிரமணங்களை அகற்றுவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும்.

உயர்மட்டக் குழுவின் முதற்கூட்டம், மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் சிறை) அவர்கள் தலைமையில் 16-2-2007 அன்று நடந்தேறியது.

28-2-2007 வரை 41,635 ஆக்கிரமணங்கள் அரசு நிலங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

[2007 ஏப்ரல் 16

## 3.8. மரப் பட்டா திட்டம்

"2சி பட்டா" என அழைக்கப்படும் மரப் பட்டா வழங்கும் திட்டம், மாநிலத்தில் பல ஆண்டுகளாகச் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ், அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் இலைகள், கனிகள் மற்றும் இதர பயன்படும் பொருட்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமை அருகில் உள்ள நில உரிமையாளருக்கோ அல்லது அம்மரங்களைப் பராமரிக்கக்கூடிய அல்லது பிறருக்கோ வழங்கப்பட்டு வருகிறது. ஆயினும், அரசு நிலங்கள் மற்றும் அவற்றில் நிற்கும் மரங்களின் மீதான உரிமை அரசிடமே தொடர்ந்து இருக்கும். மரப் பட்டா வழங்குவதில், நலிந்த பிரிவினைச் சார்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

புதிய சிறப்பு மரவளர்ப்புத் திட்டத்தின்கீழ், வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள ஊரக நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கி இத்திட்டத்தின் மூலம் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்களில் மரம் வளர்ப்பதற்கு இரண்டு ஆண்டு காலத்திற்குள் அவர்கள் மரங்களை நடுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவர்களுக்கு மரம் நடுவதற்காக உரிமம் வழங்கப்படுகிறது. உரிமம் வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பின், மரம் நடப்பட்டுள்ளது சரிபார்க்கப்பட்டு, இவ்வுரிமைதாரர்களுக்கு மரப் பட்டா வழங்கப்படுகிறது.

## 3.9. நில எடுப்பு

மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களுக்காக, நில எடுப்பு சட்டம், 1894, தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம், 34/2002 மற்றும் தொழிலியல் நோக்க சட்டம், 10/99 ஆகியவற்றின்கீழ் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன.

தொழிற்சாலை, நீர்ப் பாசன குளம், அணை, கால்வாய் போன்றவற்றை உருவாக்கத் தேவையான நிலத்தையும், வறுமையிலுள்ள வீட்டு மனையற்ற மிகவும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வீட்டுமனை வசதிக்காகவும், நில எடுப்புச் சட்டத்தின்கீழ் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. தொழிலியல் நோக்க சட்டத்தின்கீழ் படித்து வேலையற்ற நபர்களுக்கு நேரடியாகவும் / மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்க தொழிற்சாலைகள் அமைக்க நிலங்கள் கையகம் செய்யப்படுகிறது. மேற்சொன்ன சட்டங்களின்கீழ் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளும் வழிகாட்டுதல்களும் மிகக் கவனமாகக் கடைப்பிடிக்கப்பட்டு நிலச் சொந்தக்காரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.



2007 ஏப்ரல் 16]

### (i) தீர்வத்திற்கான நிதி ஆதார வரம்பு

நில எடுப்பு தீர்வாணைப் பிரகடனம் செய்வதற்கான நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு உள்ளது:

| வ.எண் | அலுவலர்கள் | தற்போதுள்ள நிதி வரம்பு |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர்/தனி வட்டாட்சியர் மட்டும்) | ரூ.2,50,000 வரை (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் |
| 2 | கோட்டாட்சியர்கள்/ துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் | ரூ.2,50,000 (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்) மேல் ரூ.7,50,000 (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்) வரை |
| 3 | மாவட்ட ஆட்சியர்/ கூடுதல் மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.7,50,000 (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்) மேல் ரூ.20,00,000 (ரூபாய் இருபது இலட்சம்) வரை |
| 4 | நில நிருவாக ஆணையர் | ரூ.20,00,000 (ரூபாய் இருபது இலட்சம்)–க்கு மேல் |

இதுமாதிரியான நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள சிறப்புப் பணியாளர்களை நியமனம் செய்ய அரசாணை (பல்வகை) எண் 2556, வருவாய்த் துறை, நாள் 10-12-1975, அரசாணை (பல்வகை) எண் 205, வருவாய்த் துறை, நாள் 10-3-1993, அரசாணை (பல்வகை) எண் 285, வருவாய்த் துறை, நாள் 10-2-1996 ஆகியவற்றில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை (பல்வகை) எண் 885, வருவாய்த் துறை, நாள் 21-9-95 மற்றும் அரசாணை (பல்வகை) எண் 1246, வருவாய்த் துறை, நாள் 22-11-1996 ஆகியவற்றில் தனியார் நிலங்களை மாவட்டம் மற்றும் மாநில அளவிலான குழுக்கள் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்துவதற்காக வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் துறை நோக்கங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/99)-ன்கீழ் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்காக நிலங்களைக் கையகப்படுத்தும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 16

இதைத் தவிர, பாலங்கள் கட்டுவதற்கும், சாலைகளை விரிவுபடுத்துவதற்காகவும், சாலை ஓர மேம்பாலங்களை ஏற்படுத்தவும், இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே சுரங்கப் பாதைகள் கட்டுவதற்கும் நிலங்கள் கையகம் செய்யப்படுகின்றன. இதன்மூலம் பொதுமக்களுக்கு எவ்வித இடைஞ்சலுமின்றி போக்குவரத்து தங்கு தடையின்றி செல்ல வழிவகை பிறப்பிக்கிறது.

நில எடுப்பால் பாதிக்கப்படும் மக்களுக்கு, மத்திய அரசால் வகுக்கப்பட்டுள்ள தேசிய மறுவாழ்வுக் கொள்கையை (2000) தமிழ்நாட்டிலும் கடைப்பிடிக்கலாம் என்ற பிரேரணையை அரசு சிறப்பு ஆணையர் (ம) நில நிருவாக ஆணையருடன் கலந்து ஆய்வு செய்து வருகிறது.

## அத்தியாயம்-4

## நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்

மிகச் சிறந்த நில அளவை முறை மற்றும் வரைபட தொழில்நுட்பம் கொண்டு விளங்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். நில அளவைப் பதிவேடுகள் துறை நில அளவை மேற்கொள்வதுடன் நில ஆவணங்கள் மற்றும் வரைபடங்களையும் தயார் செய்கிறது.

### 4.2. நகரளவை திட்டப் பணி

தமிழ்நாட்டில் 6 மாநகராட்சிகளும், 152 நகராட்சிகளும் உள்ளன.

நகரளவைப் பணி 85 நகராட்சிகளிலும், 6 மாநகராட்சிகளிலும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நகரளவை பணிமூலம் அளவை செய்யப்பட்ட மொத்தப் பரப்பு-1,774 ச.கி.மீ.

| வ.எண் | நகர நிலஅளவைப் பணி விவரம் | நகராட்சி | மாநகராட்சி |
|---|---|---|---|
| 1 | மொத்த நகரங்கள்/மாநகராட்சிகள் | 152 | 6 |
| 2 | பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவை | 85 | 6 |
| 3 | பணி முடிக்கப்பட்டவை | 82 | 5 |
| 4 | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 3* | 1* |
| 5 | பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை | 67 | – |



2007 ஏப்ரல் 16]

* ஜி.ப்பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் போன்ற நவீன நில அளவைக் கருவிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நில அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 4.3. நில ஆவணங்களைக் கணினிமயமாக்கும் திட்டம் (மத்திய அரசின் நிதி உதவியைப் பெற்றது)

கணினிமயமாக்கத்தால், அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையேயான தகவல் பரிமாற்றம் திறம்படவும் விரைவாகவும் செயல்பட்டுவரும் இக்காலகட்டத்தில் நில அளவை, நிலப் பதிவேடுகள், துறையில் நிரந்தர கிராமப்புற ஆவணங்களான பட்டா, நில வரைபடங்கள் மற்றும் புலப்படச் சுவடிகளை பொது மக்களுக்கு வழங்குவதில் கணினிமயமாக்குதல் அவசியம் என இத்துறை கருதி, நிர்வாகத்தினை வலுப்படுத்தவும், நிலப் பதிவுருக்களை மேம்படுத்தவும் கணினிமயமாக்கும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

#### (i) எழுத்து வடிவிலான விவரங்களை கணினியில் பதிவு செய்தல்

கீழ்க்காணும் நிரந்தர கிராமப்புற ஆவணங்கள் 201 வட்டங்களில் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன—

*(அ) 'அ' பதிவேடு மற்றும் (ஆ) 10(1) சிட்டா*

அடங்கல் ஆவணங்களை கணினியில் பதிவு செய்யும் பணி நிறைவு பெற்றுள்ளது. இது மேற்குறிப்பிட்ட நிரந்தர கிராம ஆவணங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட பின்னர், கணினி மூலம் ஜமாபந்தி பணி மேற்கொள்ளப்படும்.

கைப் பிரதியாக நில ஆணை நகல்களை வழங்குதல் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கணினி மூலம் தயாரிக்கப்பட்ட 72.40 இலட்சம் நில ஆவண நகல்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

127 வட்டாட்சியர் அலுவலங்களில் நிறுவப்பட்டுள்ள தொடுதிரைக் கணினிகள் மூலமாக நில ஆவண விவரங்களை எளிதாகப் பார்வையிட ஏதுவாகும்.

கூடுதலான பணியாளர்கள் ஏதுமின்றி, ஏற்கெனவே உள்ள பணியாளர்களால் வட்டாட்சியர் அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ள கணினிகள் கையாளப்படுகின்றன. வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்களுக்கு கணினிப் பயிற்சியும், 'தமிழ்நிலம்' மென்பொருளில் பயிற்சியும் அண்ணா மேலாண்மை நிலையத்தின்

[2007 ஏப்ரல் 16

மூலமாகவும் வருவாய்த் துறை மற்றும் நில அளவைத் துறையில் உள்ள இதர பணியாளர்களுக்கு மாவட்ட அளவில் தனியார் தொழில்நுட்ப நிறுவனங்கள் மூலமாகவும் வழங்கப்படுகிறது.

**(ii) வரைபடங்களைக் கணினியில் பதிவு செய்தல் (புலப்படச் சுவடிகளைக் கணினி மயமாக்குதல்)**

புவியியல் விவரங்களை அறிந்து கொள்வதற்கு நில வரைபடங்களை கணினிமயமாக்குதல் அவசியமாகும். வரைபடம் இல்லாத நில ஆவண விவரங்களை வரைபடத்துடன் இணைப்பதால் நிலம் தொடர்பான சரியான விவரங்களைப் பெற வழிவகை செய்யும்.

'கொலாப்லேண்ட்' எனும் மென்பொருளைக் கொண்டு புலப்படச் சுவடிகளை கணினிமயமாக்கும் முன்னோடித் திட்டம் பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளது. புலப்படச் சுவடிகளை கணினிமயமாக்குவதற்கு அரசு ரூ. 866.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள வட்டங்களில் இப்பணி எல்காட் நிறுவனத்தின் மூலமாக தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும். புலப் படங்கள் கணினி மயமாக்கப்பட்டவுடன், புல எண்களை அடிப்படையாகக் கொண்டு புலப்படங்களும், இதர நில ஆவணங்களும் ஒருங்கிணைக்கப்படும். இவ்வாறான ஒருங்கிணைப் பிறகு பின்னர், புலப் படங்களைக் கொண்ட நில உரிமை ஆவணங்கள் வழங்கப்படும்.

**(iii) டிஜிட்டல் ஒப்புதல் அடிப்படையிலான கட்டமைப்பு (PKI) மற்றும் தகவல் களஞ்சியம் அமைத்தல்**

தற்போது நில ஆவண விவரங்கள் வட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள கணினிகளில் மட்டுமே உள்ளதால், அந்தந்த வட்டத்திற்குரிய ஆவணங்களை அந்தந்த வட்டத்தில் மட்டுமே பார்வையிட இயலும். நில ஆவண விவரங்களை தடையின்றி அறிந்து கொள்ள ஏதுவாக மத்திய தகவல் களஞ்சியத்தினை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் எந்தவொரு கிராமத்திற்கான நில விவரத்தினையும், மாநிலத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் பொது மக்கள் அறிந்து கொள்ள இயலும். மத்திய தகவல் களஞ்சியத்தினை உருவாக்க டிஜிட்டல் ஒப்புதல் அடிப்படையிலான இந்த கட்டமைப்பு மிகவும் அவசியமாகும். இதன் மூலம் இணைய தளம் வாயிலாக பரிவர்த்தனைகளை பாதுகாப்புடன் மேற்கொண்டு, நில உரிமை ஆவணங்களை வழங்கவும் இயலும். இத்திட்டத்தினை மேற்கொள்ள ரூ. 10.25 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கக் கேட்டு மத்திய அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு ஆணைகள் எதிர்நோக்கப்படுகின்றன.



2007 ஏப்ரல் 16]

**(iv) பெரம்பலூர் முன்னோடித் திட்டம்**

கணினியின்மூலம் வட்டத்திலிருந்து கிராமத்திற்கும், மாவட்ட மற்றும் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் இடையே இணைப்பு ஏற்படுத்த இத்திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மற்றும் அரியலூர் வட்டங்களில் சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் இடையே இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எளம்பலூர் கிராமத்திலிருந்து பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சில கிராமங்களுக்கு இணைப்பு ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### 4.4. வருவாய் நிர்வாகத்தினை வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்களை மேம்படுத்தும் திட்டம்

*(மத்திய மற்றும் மாநில அரசுகளால் 50 : 50 எனும் விகிதாச்சாரத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவை)*

**(i) கிராம வரை படங்களை ஸ்கேன் செய்தல்**

அனைத்து மாவட்டங்களில் கிராம வரைபடங்கள் ஸ்கேன் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மாநில ஆவணக் காப்பகத்தில் உள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆவணங்களை ஸ்கேன் செய்யும் பணி விரைவில் எல்காட் நிறுவனம் மூலமாகத் தொடங்கப்படவுள்ளது.

**(ii) நவீன தொழில் நுட்பக் கருவிகளைக் கொண்டு நில அளவை மேற்கொள்ளுதல்**

தற்போது பயன்பாட்டிலுள்ள நில அளவைச் சாதனங்களும், நில அளவை முறைகளும் ஒரு நூற்றாண்டுக்கு மேல் பழமையானவை.

எனவே, நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்த வேண்டிய அவசியம் உணரப்பட்டு நவீன தொழில்நுட்பக் கருவிகளான ஜி.ப்பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகியவற்றைக் கொண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த கோனாதி கிராமத்தில் நவீன நில அளவை முறை, முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் பெறப்பட்ட அனுபவத்தைக் கொண்டு சென்னை மாநகரத்தில் ஜி.ப்பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் மறு நில அளவை

செய்ய வேண்டியதின் அவசியம் மத்திய அரசால் வலியுறுத்தப்பட்டு, மறு நில அளவைக்கான பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மறு நில அளவைப் பணி மேற்கொள்ள, 50:50 என்ற விகிதாச்சாரத்தில் முதல் தவணையாக ரூ. 400.00 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மறு நில அளவைப் பணி கட்டம் கட்டமாக விரைவில் துவங்கப்பட உள்ளது.

நில அளவைப் பணியாளர்களுக்கு நவீன நில அளவைக் கருவிகளில் சிறப்புப் பயிற்சி வழங்கும் நோக்கத்துடன் நில அளவைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அண்ணா பல்கலைக்கழகத்தின் கூட்டமைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. இது மறு நில அளவைப் பணி மேற்கொள்ள மிகவும் உபயோகமானதாக இருக்கும்.

## 4.5. மாநில பொது எல்லைக் கூட்டாய்வு

மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டதை முன்னிட்டு, தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களுக்கிடையே எல்லைகளில் கூட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மற்றும் கீழ்க்காணும் மாநிலங்களுக்கிடையேயான எல்லைக் கூட்டாய்வு முன்னேற்றத்தில் உள்ளது:

(1) தமிழ்நாடு-கேரளா (2) தமிழ்நாடு - கர்நாடகா (3) தமிழ்நாடு-புதுச்சேரி

தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கிடையேயான எல்லைகளில் கூட்டாய்வு மேற்கொள்வது தொடர்பாக ஆந்திர அரசின் ஆணைகள் எதிர்நோக்கப்படுகின்றன.

## 4.6. நிலவரித் திட்டத் துறை

சுதந்திரம் அடைந்த பின்னர், அரசு பெருமளவில் வேளாண்மை சீர்திருத்தத்தினை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு நிலவரித் திட்டச் சட்டங்களை இயற்றி அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை நீக்கி அந்த எஸ்டேட்டுகளில் ரயத்துவாரி நிலவரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. அனைத்து நிலவரித் திட்ட சட்டங்களின்கீழ் ரயத்துவாரி நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தப்படவேண்டிய கிராமங்களில், தமிழ்நாடு சட்டம், 26/1963, 30/1963, 24/1969 ஆகியவற்றின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட கிராமங்களைத் தவிர, இதர கிராமங்களில் நிலவரித் திட்டம் முடிக்கப்பட்டுவிட்டது.





தமிழ்நாடு சட்டம், 26/1963 மற்றும் 30/1963 ஆகியவற்றின்கீழ் பணி நிலுவையிலுள்ள 16 கிராமங்களில், 3 கிராமங்களில் நிலவரித் திட்டப் பணிகளும் 3 கிராமங்களில் நில அளவைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு சட்டம், 24/1969-ன்கீழ் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட 324.10 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள ஜென்மம் நிலங்களில் 146.18 சதுர கிலோ மீட்டர் பரப்பு நிலங்களுக்கு நிலவரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சில ஜென்மிகள் மற்றும் நிலக் குத்தகைதாரர்கள் புது தில்லி உச்ச நீதிமன்றத்தின்முன் உரிமையியல் மேல்முறையீடுகள் தாக்கல் செய்தனர். அவர்களில் சிலர் மேல்முறையீட்டு மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டதனால் அவர்களது மனுக்களைத் தள்ளுபடி செய்தும், அவர்களது கோரிக்கைகள் குறித்து மேற்படி சட்டத்தின் பிரிவு 9 அல்லது 17-ல் தக்க ஆணை பிறப்பிக்கும்படியும் உச்ச நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டது. மேலும், சில உரிமையியல் மேல் முறையீடுகள் மற்றும் ஒரு நீதிப் பேராணை மனு தொடர்பான வழக்குகளை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9-வது இணைப்பில் சேர்க்கப்பட்டதன் செல்லத்தக்க தன்மையினைப் பரிசீலிக்க 9 நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது. மேலும் மற்றொரு ரிட் மனு எண் 408/2003 எனும் வழக்கு நீலாம்பூர் கோவிலகம் எனும் ஜென்மியால் உச்ச நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்யப்பட்டது. 9 நீதிபதிகள் அடங்கிய குழு சி.ஏ. 1344-45/1976, நாள் 11-1-2007 அன்று வழங்கிய தீர்ப்பில் இம்மனுக்கள்/மேல்முறையீடுகள் தீர்ப்பில் வழங்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கிணங்க முடிவு செய்யும் பொருட்டு மூன்று நீதிபதிகளடங்கிய குழுவிற்கு அனுப்பப்படுவதாக உத்தரவிட்டுள்ளது. நிலுவையிலுள்ள நிலவரித் திட்டப் பணிகளை செயல்படுத்த மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு நிலவரித் திட்ட அலுவலர் உதகமண்டலத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாணை (நிலை) எண் 1971, வருவாய்த் துறை, நாள் 14-10-1988-ன்படி, நத்தம் நிலவரித் திட்டப் பணி, கிராமங்களில் வீட்டுமனைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் (நத்தம் வகைபாடு) மனை நிலங்களுக்குப் பட்டா வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு 10 வட்டங்களில் மட்டும் இப்பணி நிலுவையிலுள்ளது. அவற்றில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களில் தற்போது பணி நடைபெற்று வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம், குன்னூர், தோ[illegible] கூடலூர் மற்றும் பந்தலூர் ஆகிய 6 வட்டங்களில் [illegible] நிலுவையிலு[illegible]:

227656

அரசாணை (நிலை) எண் 113, வருவாய்த் துறை, நாள் 2-2-1995 மற்றும் அரசு கடித எண் 67861/நி.அ.2(1)98-21 மற்றும் 22, நாள் 5-2-2004 ஆகியவற்றின்படி 67 மலைக் கிராமங்களில் வருவாய் பின் தொடர்பணி தொடங்கப்பட்டு 58 கிராமங்களில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அடுக்கம், புதுக்கோம்பை (நாமக்கல்), சித்தூர் நாடு (நாமக்கல்), பெலாப்பாடி (நாமக்கல்), குண்டினி நாடு (நாமக்கல்), ஆலத்தூர் நாடு (நாமக்கல்), பச்சைமலை (சேலம்), ஆனைமலை (கோவை), ஏலகிரி (வேலூர்), வண்ணாடு (திருச்சி) ஆகிய 9 கிராமங்களில் பணி நடைபெற்று வருகிறது.

ஆறு மாநகராட்சிகள் (பழைய சென்னை நகரம் தவிர) மற்றும் அனைத்து நகராட்சிகளில் வருவாய் பின் தொடர்பணி மேற்கொள்ள, அரசாணை (நிலை) எண் 1177, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 30-10-1987-ல் கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை பிரசுரிக்கப்பட அரசு ஆணை (டி) எண் 103, வருவாய்த் துறை. நாள் 1-3-2007-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

வக்ஃபு சொத்துக்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## அத்தியாயம் - 5

### நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நில உடைமைகளில் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிட நில உடைமைக்கு ஓர் உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்பிற்கு மேல் உபரியாக உள்ள நிலங்களை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கும் நோக்கத்திற்காக 1961ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது.

ஆரம்பத்தில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 30 தர ஏக்கரும் (Standard Acres) ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் கூடுதலாக ஐந்து தர ஏக்கரும், ஆனால், ஒரு குடும்பத்திற்கு மொத்தம் 60 தர ஏக்கர் என உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டது. அதுதவிர, குடும்பத்தின் பெண் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 10 தர ஏக்கர் சீதன நிலம் உச்சவரம்பு அளிக்கப்பட்டது. இந்தச் சட்டம் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு, முன்னர் அளிக்கப்பட்ட உச்சவரம்பு பரப்பு மற்றும் விதிவிலக்குகள் முறைப்படுத்தப்பட்டது.



1970 ஆம் ஆண்டில், திருத்தச் சட்டம், 1970-ன்படி (தமிழ்நாடு சட்டம் 17/70) ஒரு குடும்பம் வைத்திருக்கக்கூடிய நில உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. மேலும், முதன்மைச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 58/61) ஒரு குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவை, தமிழ்நாடு சட்டம் 20/72-ன்மூலம் 40 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. பின்னர் இதுவும் 30 தர ஏக்கராக தமிழ்நாடு சட்டம் 39/72-ன்மூலம் குறைக்கப்பட்டது.

இன்றைய தேதியில் பின்வருமாறு உச்சவரம்பு அமலில் உள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு | 15 தர ஏக்கர் |
| | (i) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | 5 தர ஏக்கர் |
| | (ii) மொத்த உச்சவரம்பு | 30 தர ஏக்கர் |
| 2 | 1–3–1972–ல் இருந்த தர்ம ஸ்தாபன நம்பகங்களுக்கு (Charitable Trusts) | 5 தர ஏக்கர் |
| 3 | 1–3–1972–க்கு பிறகு எந்த நம்பகமும் விவசாய நிலங்கள் பெறுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. | – |

1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் மற்றும் திருத்தப்பட்ட சட்டத்தின்கீழ் அரசு கையகப்படுத்தும் மிகை நிலங்கள், 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தகுதியுடைய நிலமற்ற நபர்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது.

மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்த பரப்பின் விவரம், அதில் ஒப்படை செய்யப்பட்டது, பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து 31-3-2007 வரையில் நீதிமன்ற வழக்குகளில் நிலுவையில் உள்ள நிலப் பரப்பு மற்றும்

[2007 ஏப்ரல் 16

ஒப்படை வழங்கப்படவுள்ள மீதமுள்ள நிலப் பரப்பு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

*1961* முதல் *31-3-2007* வரை மிகை நிலமென அறிவிக்கப்பட்ட மொத்த நிலப் பரப்பு, ஒப்படை செய்யப்பட்ட நிலப் பரப்பு மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்—

| வ.எண் | | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | மிகை வெற்று நிலமென அறிவிக்கப்பட்ட மொத்த நிலங்கள் | 2,08,006 |
| 2 | ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் | 1,99,245 |
| 3 | பயனாளிகளின் எண்ணிக்கை | 1,49,559 |

உபரி நிலம் ஒப்படைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கையை குறிக்கும் விவரப் பட்டியல் *(31-3-2007)*—

| பயனடைந்தோர் இனவாரியாக | நபர்கள் | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஆதி திராவிடர் | 66,104 | 70,999 |
| பழங்குடியினர் | 236 | 320 |
| மற்றவர்கள் | 83,219 | 1,17,741 |
| **மொத்தம்** | **1,49,559** | **1,89,060** |

ஒப்படை வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள நிலங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட நிலப் பரப்புகளைக் காண்பிக்கும் விவரப் பட்டியல்:—



2007 ஏப்ரல் 16]

**(31–3–2007–ல் உள்ளபடி)**

பரப்பு (ஏக்கரில்)

| | | |
|---|---|---|
| 1. | மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலப் பரப்பு | 2.08,006 |
| 2. | உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், நில ஆணையர், நிலத் தீர்ப்பாயம் மற்றும் சார் நீதிமன்றங்கள் ஆகியவை பிறப்பித்துள்ள தடையாணைக்குட்பட்ட பரப்பு | 8,520 |
| 3. | ஒப்படை செய்வதற்கான மொத்த நிலப் பரப்பு | 1,99,486 |
| 4. | ஒப்படை செய்யப்பட்ட நிலப் பரப்பு | 1,99,245 |
| 5. | (a) 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13—ன் கீழ் பொது நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப் பரப்பு. | 10,185 |
| | (b) தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டது | 1,89,060 |
| 6. | நிலுவை | 241 |

*2006-2007ஆம் நிதியாண்டில் 1000 ஏக்கர் மிகை நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதில் 31-3-2007 வரை 773 நபர்களுக்கு 1011 ஏக்கர் மிகை நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. இதில் 301 ஆதி திராவிட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 428 ஏக்கர் நிலமும் அடங்கும்.*

## 5.2. குடிவாரச் சட்டங்கள்

### (i) 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/55)

இச்சட்டம், குத்தகைதாரர்களின் குத்தகை பாக்கி நிலுவை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், நிலத்தில் பயிர் விளைவிக்காமல் இருத்தல், வேளாண்மை அல்லது தோட்டப் பயிர் அல்லாத காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையைப் பறித்தல் தவிர வேறு காரணங்களுக்காக அவர்கள்

[2007 ஏப்ரல் 16

குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடை செய்து பாதுகாப்பு அளிக்கிறது. வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களினால் குத்தகைதாரர்கள் பாதிக்கப்படும்பொழுது, குத்தகை பாக்கித் தொகையை வசூலிப்பதை தள்ளி வைத்து தனிச் சட்டத்தின்மூலம் அவர்களுக்கு அவ்வப்பொழுது நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

**(ii) 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/56)**

இச்சட்டம் தற்போது ஆண்டொன்றுக்கு மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நிலச் சொந்தக்காரருக்கோ அல்லது நம்பகங்களுக்கோ (Trusts) பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகைசெய்கிறது. குத்தகையை பணமாகவோ, விளை பொருளாகவோ செலுத்தலாம். ஆனால், நில உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய நிலவரி தவிர, பயிரிடுவதற்கான மற்ற செலவுகள் முழுவதையும் குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**(iii) 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது நம்பகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/61)**

இச்சட்டத்தில் நம்பகங்கள் (Trusts) தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளவும், அதற்கு மேலுள்ள நிலத்தை கட்டாயமாக பிறருக்கு குத்தகைக்கு விடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

**(iv) 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/69)**

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு ரூ. 54 முதல் ரூ. 100 வரை ஆண் தொழிலாளர்களுக்கும், 5 மணி நேர வேலைக்கு ரூ. 45 பெண் தொழிலாளர்களுக்கும் வழங்க உறுதி செய்யப்பட்டுள்ளது.

**(v) 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்து கொள்வதன்மூலம் அவர்களின்



2007 ஏப்ரல் 16]

உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது. வருவாய் வட்டாட்சியர்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு அலுவலர்களாகச் செயல்படுவர். அவர்களுக்கு உதவிபுரிய அலுவல் சார்பற்றவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. 31-3-2007 நிலவரப்படி, 2,59,655 நபர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**(vi) 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71) திருத்தியவாறு**

இச்சட்டத்தில் 19-6-1971 அன்று சொந்த வீட்டுமனை இல்லாத, ஆனால், பிறர் நிலங்களில் குடியிருப்பு அமைத்து அனுபவித்து வருபவர்களுக்கு குடியிருப்பு உரிமை வழங்க உறுதி செய்யப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 38/76) 1-7-1975-ல் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு சட்டங்களின்கீழும் முன்னர் அறிவிக்கப்பட்ட 1-4-1990 வரை நீட்டிக்க சட்டம் 39/90-ன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. 31-3-2007 வரையில் உடைமை உரிமை வழங்கப் பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:—

| வரிசை எண் | இனம் | நபர்களின் எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | சட்டம் 40/71 | சட்டம் 38/76 | சட்டம் 39/90 | |
| 1 | ஆதி திராவிடர் | 1,00,127 | 62 | 1,038 | 1,01,227 |
| 2 | பழங்குடியினர் | 2,317 | 17 | 412 | 2,746 |
| 3 | ஏனையோர் | 80,017 | 363 | 288 | 80,668 |
| மொத்தம் | | 1,82,461 | 442 | 1,738 | 1,84,641 |

## 5.3. நிலத் தீர்ப்பாயங்கள்

சார்பு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள நிலச் சீர்திருத்த வழக்குகளை விரைந்து முடிவு செய்வதற்காக 1980 ஆம் ஆண்டில் மாவட்ட வருவாய் அலுவலர்களின் தலைமையில் நிலத் தீர்ப்பாயங்கள் நிறுவப்பட்டன. தற்போது மாநிலம் முழுவதற்குமாக ஒரு நிலத் தீர்ப்பாயம் மட்டும் சென்னையில் இயங்கி வருகிறது.

## 5.4. வருவாய் நீதிமன்றங்கள்

தற்போது மாநிலம் முழுவதும் 6 வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித் துணை ஆட்சியர்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர்கள் 1969ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமை ஆவணச்) சட்டத்தின்கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராக தொடரப்படும் வழக்கு மனுக்களை விசாரணை செய்யும் பணியில் மேல்முறையீட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். மேலும், மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு குடிவாரச் சட்டங்களையும் அவர்கள் கவனித்து வருகின்றனர்.

## 5.5. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம்

சட்டப்பேரவையில் மேதகு ஆளுநரின் உரையில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 509, வருவாய் [நி.சீ. 1(2)] துறை, நாள் 7-8-2006-ன்படி "தமிழக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம்" என்ற திட்டத்திற்கு பதிலாக 'தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006' என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம், அதாவது 'தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம் 2006 தமிழ்நாடு அரசிதழ் எண் 265, சிறப்பு வெளியீடு நாள் 20-9-2006-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டத்திற்கான 'விதிகள்' 'தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம்' மற்றும் 'தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் நல வாரியம் அமைத்தல்' ஆகியவை முறையே அரசாணை (நிலை) எண் 852, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள் 29-12-2006, அரசாணை (நிலை) எண் 853, வருவாய் [நி.சீ.1(2)] துறை,





நாள் 29-12-2006 மற்றும் அரசாணை (நிலை) எண் 42, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள் 18-1-2007 ஆகியவற்றில் வெளியிடப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் 22-12-2006 முதல் அமலுக்கு வந்துள்ளது.

### (i) திட்டத்தின் உறுப்பினர்களைப் பதிவு செய்தல்

(1) இதுதொடர்பாக அரசு நியமித்த கிராம அளவிலான குழுக்கள் க்ணக்கெடுத்து அடையாளம் கண்டறிந்த அனைத்து விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் அந்தந்த வட்டங்களின் தனி வட்டாட்சியர்களிடம் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) படிவம் எண் 1-ல் விண்ணப்பம் செய்து கொள்வதன்பேரில் இத்திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவர்.

(2) 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் வைத்துக்கொண்டு, நேரடியாக அந்நிலத்தில் சாகுபடி செய்யும், 18 வயது நிரம்பிய ஆனால், 65 வயது நிரம்பாத யாதொரு விவசாயத் தொழிலாளர் அல்லது விவசாயி (பயிரிடும் குத்தகைதாரர் உட்பட) இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குத் தன் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

(3) இத்திட்டத்தின்கீழ் உறுப்பினராகப் பதிவு செய்வதற்குத் கட்டணம் ஏதும் கிடையாது.

(4) கிராம அளவிலான குழுக்கள் கண்டறிந்தவாறு 23-3-2007 அன்று வரை 57.30 இலட்சம் குடும்ப அடையாள அட்டைகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 31-3-2007 வரை 63.73 இலட்சம் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையின்கீழ் வட்ட அளவில் வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) இத்திட்டத்தைச் செயல்படுத்துவார். மாநில அளவில் நிலச் சீர்திருத்த ஆணையர் / உறுப்பினர்-செயலர், தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் நல வாரியம் இத்திட்டத்தின் செயலாக்கத்தைக் கண்காணிப்பார். கல்வி மற்றும் மகப்பேறு/கருச்சிதைவு/உதவிகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் செயல்படுத்துகிறார்கள்.

இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களுக்கு, தகுதியின் அடிப்படையில், திருமணம், பிள்ளைப்பேறு மற்றும் கருச்சிதைவு, விபத்தால் ஏற்படும்

மரணம் மற்றும் உடல் உறுப்புகள் இழப்பு, இயற்கை மரணம், ஈமச் சடங்கு, முதலியவற்றுக்கான உதவித் தொகையும் 60 வயதை அடைந்த உறுப்பினர்களுக்கு ஓய்வூதியமும் வழங்கப்படுகிறது. உறுப்பினர்களைச் சார்ந்தவர்களுக்கு திருமணம் மற்றும் 10 ஆம் வகுப்பு முதல் முதுகலைப் பட்டப் படிப்பு வரையிலும், தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழில் கல்வி ஆகிய படிப்புகளுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:-

| வ. எண். | நிவாரணம் அல்லது உதவி | தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | விபத்து தீர்வழி (நிவாரணம்) விபத்தினால் மரணம் | 1,00,000 (ஒரு இலட்சம்) |
| | (i) இரண்டு கைகள் இழப்பு | 1,00,000 (ஒரு இலட்சம்) |
| | (ii) இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 (ஒரு இலட்சம்) |
| | (iii) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | 1,00,000 (ஒரு இலட்சம்) |
| | (iv) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 (ஒரு இலட்சம்) |
| | (v) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 50,000 (ஐம்பதாயிரம்) |
| | (vi) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடப்படாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | 20,000 (இருபதாயிரம்) |
| 2 | இயற்கை மரணம் | 10,000 (பத்தாயிரம்) |
| 3 | ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |





| 4 | உறுப்பினரின் மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கிப் படிப்பவர் | |
|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | (i) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | ... | ... |
| | (ii) பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | ... | ... |
| | தொழிற் பயிற்சி [I.T.I. மற்றும் பல்தொழில் நுட்பப் பயிற்சி (Polytechnic)] (ஆண்டு ஒன்றுக்கு) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | (iii) இளங்கலைப் பட்டப் படிப்பு (ஆண்டு ஒன்றுக்கு) | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | (iv) முதுகலைப் பட்டப் படிப்பு (ஆண்டு ஒன்றுக்கு) | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | (v) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழில் கல்விகள் இளங்கலை (ஆண்டு ஒன்றுக்கு) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| | (vi) முதுகலை தொழில் கல்விகள் (ஆண்டு ஒன்றுக்கு) | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 5 | திருமண உதவி<br>(அ) உறுப்பினரின் திருமணம்<br>(i) ஆண்<br>(ii) பெண் | 3,000<br>5,000 | | | |

| | | |
|---|---|---|
| | (ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம் | |
| | (i) ஆண் | 3,000 |
| | (ii) பெண் | 5,000 |
| 6 | மகப்பேறு/கருச்சிதைவு/கருக்கலைப்பு உதவித் தொகை | |
| | (i) மகப்பேறு | 6,000 (மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 வீதம் ஆறு மாதங்கள்) |
| | (ii) கருச்சிதைவு | 3,000 |
| | (iii) கருக்கலைப்பு | 3,000 |
| 7 | முதியோர் ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | 400 |

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தஞ்சாவூரில் 22-2-2007 அன்று இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**31-3-2007 வரை நிதி ஒதுக்கீடு, செலவினம் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை**

| வரிசை எண் | விவரங்கள் | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | கல்வி | மொத்தம் |
| 1 | 2006-2007 ஆம் நிதியாண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு | 120.10 | 32.46 | 152.56 |
| 2 | 22-2-2007 முதல் 31-3-2007 வரை செலவினம் | 6.70 | 0.71 | 7.41 |
| 3 | நிலுவை | 113.40 | 31.75 | 145.15 |
| 4 | பயனாளிகளின் எண்ணிக்கை | 21,874 | 3,313 | 25,187 |



**5.6. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966**

அரசுக்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், மக்கள் அதிக நிலங்களை வாங்கி வைத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டும் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன் முதலில் 1-7-1963 முதல் சென்னை நகரில் அறிமுகம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் எல்லா நகர்ப்புற நிலங்களுக்கும் சந்தை மதிப்பில் 0.4 சதவீதம் நகர்ப்புற நிலவரியாக விதிக்கப்பட்டது. மதுரை, கோயம்புத்தூர், சேலம், மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதல் இச்சட்டம் விரிவுபடுத்தப்பட்டது. சென்னை நகர எல்லையிலிருந்து 16 கி. மீட்டருக்கு உட்பட்ட புறநகரப் பகுதிக்கு 1-7-1975 முதல் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. பின்னர் இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கு 1-7-1981 முதலும் மேலும் 23 நகராட்சிகளுக்கு 1-7-1991 முதலும் விரிவுபடுத்தப்பட்டது.

நகர்ப்புற நிலவரிச் சட்டம் அமலில் உள்ள எல்லா பகுதிகளுக்கும் 1-7-1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1-7-1991 முதல் வரி விதிக்கப்படுகிறது.

**வரி விதிப்பு விகிதங்கள் பின் வருமாறு :—**

| | சென்னை புறநகர்ப் பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் | | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள நிலங்கள் | |
|---|---|---|---|---|
| 1 | முதல் இரண்டு மனைகள் | வரி இல்லை | முதல் மூன்று மனைகள் | வரி இல்லை |
| 2 | இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3 | ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |

| | சென்னை புறநகர்ப் பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் | | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள நிலங்கள் | |
|---|---|---|---|---|
| 4. | பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5. | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

அறக்கட்டளைகள், மத சம்பந்தமான நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் தங்கள் நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அதிகமான சிரமம் இருப்பின், அரசுக்கு மனு செய்து கொண்டால் பரிசீலனை செய்யப்பட்டு உரிய இனங்களில் அரசு, 1966 ஆம் ஆண்டின் நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் பிரிவு 27(1)—ன்கீழ் நகர்ப்புற நிலவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கலாம். மேலும்,

(i) சொந்த குடியிருப்பு வீடுகள் உள்ள நிலங்களுக்கும், இசை அரங்குகள், பொழுது போக்குக் கூடங்கள் மற்றும் திரைப்பட படப்பிடிப்பு அரங்குகள் ஆகியவற்றுக்கு 50 சதவீதம் வரிச் சலுகையும் வழங்கப்படுகிறது.

(ii) திரை அரங்குகளுக்கும் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கும் 10 சதவீதம் வரிச் சலுகை வழங்கப்படுகிறது.

(iii) சிறு தொழில் சான்று பெற்ற நில உரிமையாளர்கள் நடத்தும் தொழிற்சாலைகளுக்கு 25 சதவீதம் வரிச்சலுகை வழங்கப்படுகிறது.

இம்மாநிலத்தில், தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம், 1991-ன்கீழ் 28-2-2007 வரை 1,83,386 இனங்களில் வரி விதிப்பு செய்யப்பட்டு ரூ. 39.46 கோடி நகர்ப்புற நிலவரியாக நிர்ணயம் செய்யப்பட்டது. இவற்றில் பல பிரிவுகளில் விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிர நடப்பு ஆண்டு வரித் தொகை ரூ. 18.91 கோடி ஆகும். ஏப்ரல் 2006 முதல் பிப்ரவரி 2007 வரை ரூ. 13.59 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 1-3-2007 நாள் நிலவரப்படி வசூல் செய்யப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 76.90 கோடி ஆகும்.



## 5.7. தமிழ்நாடு நகர்ப்புற நில [உச்சவரம்பு (ம) முறைப்படுத்துதல்] சட்டம் 1978

நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் நகர்ப்புற நிலம் ஒரு சிலரிடம் குவிந்து கிடந்து அவர்கள் இலாப நோக்கத்துடன் வாங்குவது மற்றும் விற்பதைத் தடுத்து நிறுத்தும் வகையில் நகர்ப்புற வெற்று நிலங்களுக்கான உச்சவரம்பு நிர்ணயிக்கும் நோக்குடன் தமிழ்நாடு நகர்ப்புற நில [உச்சவரம்பு (ம) முறைப்படுத்துதல்] சட்டம், 1978 (1976 ஆம் ஆண்டின் மைய அரசுச் சட்டம் 24—ஐ அடிப்படையாகக் கொண்டது) இயற்றப்பட்டது. 3-8-1976 முதல் இச்சட்டம் அமலாக்கம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978, நீக்கறவுச் சட்டம் 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)—ன் மூலமாக 16-6-1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது.

இச்சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் 1168 ஹெக்டேர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்வதற்காக உள்ளது.

227656